278

MLA Debates

Official Report

Vol. 3. No. 4

1967

D
V211, 31 'N67
N67. 3.4
64970

வெளியீடு—2—2—1968]
Issued—2—2—1968]

# தமிழகச் சட்டப் பேரவை நடவடிக்கைகள்
# MADRAS LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு
## OFFICIAL REPORT

*சனிக்கிழமை, 1967 ஜூலை 1*

**Saturday, 1st July 1967**

தொகுதி III—எண் 4

**Volume III—No. 4**

©
தமிழக அரசு
1968
©
GOVERNMENT OF MADRAS
1968

V211,31 N67
N67.3.4
64970

சட்டப் பேரவைத் துறை
சென்னை-9.
*Legislative Assembly Department*
*Fort St. George, Madras-9*

விலை, 50 காசுகள்]
**Price, 50 Paise]**

**உள்ளடக்கம்.**


| | | பக்கங்கள். |
|---|---|---|
| 1 | வினாக்கள்—விடைகள் .. .. .. .. .. | 305–332 |
| 2 | ஒழுங்குப் பிரச்சினை— | |
| | நடவடிக்கைக் குறிப்பில் வெளியேற்றப்பட்ட உறுப்பினர் வெளிநடப்புப் பற்றிக் குறிப்பிடப்படாமை .. .. | 332–334 |
| 3 | 1967–68-ம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி— | |
| | மானியக் கோரிக்கை எண் XIII—கல்வி .. .. | 334–411 |
| 4 | அமைச்சரின் அறிக்கை— | |
| | மேட்டூர் அணையிலிருந்து பாசனத்திற்குத் தண்ணீர் விடுதல் .. .. .. .. .. .. | 377–378 |
| 5 | பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் .. .. .. | 411 |


64970

# தமிழகச் சட்டப் பேரவை

## சனிக்கிழமை, 1967 ஜூலை 1.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. சி. பா. ஆதித்தனர் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இப்பேரவைக் கூட்டத்தில் முதல் அலுவல் "வினாக்கள் — விடைகள்". மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்கிற வினாக்களுக்கு மாண்புமிகு அமைச்சர்கள் விடை அளிப்பார்கள்.

### கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்.

***126 வினா —திரு. எஸ். ஜே. ராமசாமி :** [illegible] தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்டவற்றிற்குப் பதிலளிப்பாரா—

(அ) 1967-ம் ஆண்டு சென்னை மாநில கூட்டுறவு நெசவாளர் சங்கத் [illegible] மாநில மத்திய வங்கியின் பிரதிநிதியாக இருந்த [illegible] நியமனம் செய்யப்பட்டது [illegible] என்று அறிவிக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அவர் மேற்படி சங்கத்தில் இன்னும் பதவி வகிப்பதற்கான காரணங்கள் யாவை ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம்.

(ஆ) திரு. எஸ். [illegible] முதலியாரை, மாநில மைய கூட்டுறவு வங்கியின் பிரதிநிதியாக அனுப்பியது [illegible] கூட்டுறவுச் சங்கத்தின் [illegible] (நெசவாளர்) வேலூர், வட ஆர்க்காடு [illegible] மத்திய வங்கி உறுப்பினர்களுக்கும் தமிழ்நாடு [illegible] கூட்டுறவு மத்திய வங்கியின் [illegible] நிர்வாகக்குழு [illegible] சங்கத்தின் [illegible] கூட்டுறவு [illegible] 1963-ம் ஆண்டு தமிழக கூட்டுறவுச் சங்க [illegible] 14-1-1967-ல் [illegible] பிரதிநிதியாயிருக்கத் தகுதி அற்றவ [illegible] 40-வது விதியின் [illegible] அறிவிப்பு கொடுத்த பின்னர் நடவடிக்கை எடுக்குமாறு வேலூர் கூட்டுறவுத் துணைப் பதிவாளருக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**திரு. மா. பா. சாரதி :** [illegible] அவர்கள் அதைக் கடந்து இருந்து கொண்டிருக்கிறார்கள். அப்படியே நீடிப்பது முறைக்கு விரோதமானது அல்லவா ? உடனடியாக அவரை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** உறுப்பினராக இருக்கிறவரை நீக்க வேண்டுமென்றால் அதற்குக் காலம் முன்கூட்டியே அறிவிக்க வேண்டியிருக்கிறது. அப்படி முன்கூட்டியே காலம் அறிவித்து விட்டு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கும்படி துணைப் பதிவாளர் அவர்களுக்கு உத்தரவு போடப்பட்டிருக்கிறது.

**திரு. ந. தருமலிங்கம் :** சென்னை மாநில கைத்தறி கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினராக உள்ள ஒருவரைக் கைத்தறி நெசவாளர்கள் சமுதாயத்தின் பிரதிநிதியாக நமது பேரவையின் உறுப்பினராக ஆக்குவதற்கு இந்த

[1967 ஜுலை 1

அரசுக்கு எண்ணம் உண்டா ? அப்படியிருந்தால் அதைத் தேர்தல் கமிஷனை [illegible] என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** [illegible]

**திரு. வி. கே. கோதண்டராமன் :** [illegible]

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** [illegible] அரசின் நோக்கம்.

அகில இந்திய கைத்தறி போர்டு

*127 [illegible] —திரு. வி. கே. கோதண்டராமன் : [illegible]

(அ) [illegible] ?

(ஆ) [illegible] ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) [illegible]

(ஆ) [illegible]

**திரு. வி. கே. கோதண்டராமன் :** [illegible] ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** [illegible] 1952-[illegible] தெரிகிறது.

THIRU. K. VINAYAKAM: Even if this Government decides to shift it, it is not within the powers of the State Government. Because, it is an All India Organisation being controlled by the Central Government. Under these circumstances, will the Government consider the possibility of establishing a branch office of the headquarters at Madras ?



1967 ஜுலை 1]

**மாண்புமிகு திரு இரா. நெடுஞ்செழியன் :** [illegible]

**திரு அ. கு. சுப்பையா :** அகில இந்திய கைத்தறி போர்டில் நமது ராஜ்யத்தைச் சேர்ந்தவர்கள் யார், யாரை [illegible] என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** [illegible] தனிக் கேள்வி வேண்டும்.

**திரு. எ. பாலசுப்பிரமணியன் :** இந்திய நாடு முழுவதும் எடுத்துக் கொண்டால் கைத்தறி நெசவுத் தொழிலில் [illegible] அதிகம் பேர் [illegible] 6 [illegible] இருக்கிறார்கள். அதை [illegible] நிறுவுவதற்கு உறுப்பினர் திரு. [illegible] உதவியோடு [illegible] இங்கே நிறுவு [illegible] ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** [illegible] இருக்கிறார். அவர்களின் பணி [illegible] பொருத்தமாக இருக்கும் என்று இந்திய அரசு [illegible] கூட்டங் கள் [illegible] நடை பெறுகின்றது. [illegible] வாய்ப்பு இருக்கிறது. [illegible] வந்து கவனிப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது என்ற கருத்தை இந்திய அரசு தெரிவித்தது.

**திரு வி. கே. கோதண்டராமன் :** கைத்தறி போர்டு சம்பந்தப்பட்ட வரையில் ராஜ்ய அடிப்படையில் அங்கே இருக்கிற போர்ட் சரியாக இயங்க வில்லை என்று தெரியுமா ? [illegible] ராஜ்ய அடிப்படையில் சரியாக இயங்கவேண்டும் [illegible], அந்த போர்டை இங்கே மாற்றுவதற்கு ஏற்பாடு செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** [illegible] உறுப்பினர் கூறு [illegible] இல்லை. அந்த போர்டு இங்கே வரவேண்டும் என்று சொல்வதிலே [illegible] நடவடிக்கை எடுக்கலாம்.

**திரு. கே. விநயகம் :** இந்திய கைத்தறி நெசவாளர் போர்டு இன்று பம்பாயில் இருப்பது சென்னைக்கு வரவேண்டியதில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். [illegible] மாகாணத்திலே கைத்தறி நெச வாளர்கள் அதிகமாக இருக்கிறார்களா ? பம்பாய் மாகாணத்திலே அதிக மாக இருக்கிறார்களா ? சென்னையில் [illegible] ஸ்தாபனத்தை வைக்காத தற்குக் காரணம் என்ன ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** வரவேண்டிய அவசியம் இல்லையென்று நான் சொல்லவில்லை. இந்திய அரசு பம்பாயில் ஏன் வைத்திருக்கிறது என்பதற்கான காரணத்தை சொல்லுகிறது. இந்த மாகா ணத்தைப் பொறுத்தவரை கிட்டத்தட்ட [illegible] கைத்தறி நெசவாளர் கள் இருக்கிறார்கள். இந்தியா முழுவதும் எடுத்துக்கொண்டால் 27 ,28 லட்சம் பேர் [illegible] இருக்கிறார்கள். ஆகவே, அதை இங்கே கொண்டுவர வேண்டுமென்ற அவசியம் ஏற்பட்டால் இங்கே கொண்டு வருவதற்கான நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படலாம்.

[1967 ஜூலை 1

## கைத்தறி வாரம்

*128 வினா.—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மதிப்பிற்குரிய கல்வி—தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஆண்டுதோறும் கைத்தறி வாரம் கொண்டாடப்படுகிறதா ?

(இ) ஆம் எனில், 1962 முதல் 1966 வரை செலவு என்ன ?

(உ) ஆண்டுதோறும் கொண்டாடப்படுவதற்கான காரணங்கள் யாவை?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆமாம்.

(இ) 1962-ம் ஆண்டு முதல் 1966-ம் ஆண்டு வரையில் ஆன செலவு ரூ. 60,000.

(உ) கைத்தறித் துணிகளை மக்கள் மேலும் நாடுமாறு செய்வதற்காகவும், அதிகத் தள்ளுபடி வழங்குவதன் மூலம் கையிருப்பில் இருக்கும் துணிகளின் விற்பனையை அதிகப்படுத்தி அதனால் நெசவாளர்களுக்குத் தொடர்ச்சியான வேலைவாய்ப்பளிப்பதற்காகவும் அனைத்து இந்தியக் கைத்தறி வாரம் கொண்டாடப்படுகிறது. அனைத்து இந்தியக் கைத்தறிக் கழகமும் இந்திய அரசும் பிறப்பித்துள்ள உத்தரவுகட்கிணங்க அனைத்து இந்திய அடிப்படையில் இக்கைத்தறி வாரம் கொண்டாடப்படுகிறது.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** அப்படிக் கொண்டாடக்கூடிய கைத்தறி வார விழாவில் எல்லாக் கட்சித் தலைவர்களையும் அழைத்துக் கொண்டாடுவதில்லை. நான் இப்போது இருக்கிற சர்க்காரைப் பற்றிச் சொல்லவில்லை. முன்னர் இருந்த சர்க்கார் ஒரு சிலரை மாத்திரம் அழைத்து கொண்டாடியது. இனிமேல் அப்படியில்லாமல் எல்லாக் கட்சித் தலைவர்களையும் அழைத்து கொண்டாடப்படுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** எந்தக் கட்சியினரையும் அழைக்கக்கூடாதென்று விதியில்லை. பாராளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், பொதுமக்களில் இந்தத் தொடர்பு உள்ளவர்கள், கைத்தறி வல்லுனர்கள் அவர்களையெல்லாம் அழைத்துத்தான் விழாக்கள் நடைபெறுகின்றன. முன்னாலே அப்படி அழைக்கவில்லை என்ற குற்றச்சாட்டு இருந்தது. சென்ற முறை சென்னையைப் பொறுத்தவரை எல்லாக் கட்சியினரும் அழைக்கப்பட்டார்கள். சட்டமன்ற உறுப்பினர், பாராளுமன்ற உறுப்பினர் ஆகிய எல்லோருடைய ஆதரவைப் பெறுவதற்கு எல்லோரையும் அழைத்துத்தான் நடத்த வேண்டுமென்று உத்திரவு போடப்பட்டது. அந்த வகையிலே இந்த முறை மேற்கொள்ளப்படும்.

**திரு. ஈ. ஆர். கிருஷ்ணன் :** கைத்தறி வார விழாவின்போது விற்பனையாகும் கைத்தறித் துணிகளுக்கு சர்க்கார் ரூபாய்க்கு 10 காசு ரிபேட் வாங்குபவர்களுக்குக் கொடுத்துக்கொண்டிருக்கிறது. கைத்தறித் துணியை நெசவு செய்யும் நெசவாளர்களுக்கு மேற்படி ரிபேட் கொடுப்பதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அப்படிப்பட்ட உத்தேசம் இப்பொழுது இல்லை.

**திரு. கரு. சீமைச்சாமி :** இந்தக் கைத்தறி வார விழா அறுவடை முடிந்த பிறகு நடப்பதால் விவசாயிகள் கையில் பணம் இல்லாத சமயத்தில் கொண்டாடப்படுகிறது. ஆகவே, பொங்கல், தீபாவளி போன்ற காலத்தில் இந்த விழாவைக் கொண்டாடுவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** கனம் உறுப்பினர் அவர்கள் கூறிய கருத்து பல தடவை கூறப்பட்டிருக்கிறது. இந்த பொங்கல், தீபாவளி போன்ற காலங்களில் மக்கள் எப்படியும் தங்களுக்கு துணிகளை



1967 ஜூலை 1]

வாங்குகிறார்கள். கைத்தறித் துணி தேங்குகின்ற மார்ச்சு, எப்ரல் மாதங்களில்தான், அவை விற்பனை ஆகாத காலத்தில் தான், அதற்குரிய விளம்பரமும், ஆக்கமும் ஊக்கமும் தரப்படவேண்டிய நிலைமை ஏற்படுகிறது. விற்பனையைக் கூடுதலாக்குவதற்கு இந்தத் திங்கள்களில் இந்த விழாவை வைத்துக்கொள்ள வேண்டும் என்ற கருத்து அந்த போர்டாரினால் தெரிவிக்கப்பட்டது.

273

**திரு. ந. தருமலிங்கம் :** கைத்தறி ஆடைகளை ஆதரிக்கிற முறையில் இந்த அரசாங்கம் இன்ன இன்ன மானியங்கள், சலுகைகள் வழங்கப்படும் என்று கைத்தறி ஆடைகளை உடுத்துகிறவர்களுக்கு அறிவித்து, கைத்தறி துணிகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் தரும் வகையில் நடவடிக்கை எடுக்கும் உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அப்படிப்பட்ட எண்ணம் எதுவுமில்லை.

**திரு. டி. எஸ். ஆதிமூலம் :** கரை போட்ட வேஷ்டி, சேலைகள், சில அளவோடு உள்ள அதாவது 36 அங்குலத்துக்கு மேற்படாத உருப்படிகள் இவைகளையெல்லாம் கைத்தறிக்கே ஒதுக்கவேண்டும் என்றெல்லாம் 15 வருஷங்களுக்கு முன்னால் திரு. ராஜாஜி மந்திரி சபை இருக்கும்பொழுது ஒரு தீர்மானம் போடப்பட்டதே, அது ஒரு உருப்படியான திட்டம் என்று இந்த சர்க்கார் நினைக்கிறார்களா ? அப்படியானால் அது விஷயமாகப் பழைய முயற்சியை மீண்டும் எடுத்துக்கொள்ள இந்த அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ? கைத்தறி நெசவாளர்களுடைய நலன் அதன் மூலம் விருத்தியாகும் என்று இந்த சர்க்கார் கருதுகிறார்களா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இந்தத் திட்டம் உருப்படியான திட்டம் தான் என்று இந்த அரசாங்கம் கருதுகிறது. 1952-லிருந்து தொடர்ந்து இந்த முயற்சி கைகூடக்கூடிய முறையில் இருந்து வருகிறது. இந்தப் பிரச்னையை மேலும் ஆராய்ந்து, என்ன வழி செய்யலாம் என்பதைப் பற்றியும், எந்தெந்த வகையில் வலியுறுத்தலாம் என்பதைப் பற்றியும் இந்த அரசாங்கம் யோசித்துக்கொண்டிருக்கிறது.

**திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் :** மில் துணியோடு போட்டி போடுவதற்கு முடியாத நிலையில் கைத்தறி நெசவாளர்கள் இருக்கிறார்கள். இம்மாதிரி அகில இந்திய கைத்தறி வாரம் கொண்டாடுவதன் மூலம் அந்தத் தொழிலுக்கு ஒரு உயிரும், ஊக்கமும் அளிக்கக்கூடிய நிலை ஏற்படுவதினால், இன்னும் அதிகமாக இதுபற்றி விளம்பரப்படுத்துவதற்கு இம்மாதிரி கைத்தறி வாரத்தை மேலும் சிறப்பாகக் கொண்டாடுவதற்கு அரசாங்கம் முன் வருமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** கனம் உறுப்பினர் அவர்களுடைய கருத்துக்கு இணங்கத் தான் ஆங்காங்கே எந்த வகையில் மக்களுடைய கவனத்தை ஈர்த்து இந்த விழாவை வெற்றிகரமாகக் கொண்டாட முடியுமோ அந்த அளவில் கொண்டாட வேண்டும் என்று எல்லா மாவட்ட கலெக்டர்களுக்கும் இந்த ஆண்டு உத்தரவிடப்பட்டிருக்கிறது. பொதுஜன தொடர்புடையவர்களோடு கலந்து ஆவன செய்யவேண்டும் என்பது தான் இந்த அரசாங்கத்தினுடைய நோக்கம்.

**திரு. எஸ். முருகையன் :** இதுபோன்ற கைத்தறி வார விழாக் கொண்டாட்டங்களில் அரசியல் கட்சித் தலைவர்களும், கைத்தறி தொழில் பிரமுகர்கள் மட்டும் தான் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்களா ? கைத்தறித் தொழிலில் நேரடியாக ஈடுபட்டிருக்கும் கைத்தறி தொழிலாளர்களையும் ஒவ்வொரு ஊரிலும் சேர்த்து இது போன்ற விழாக்களில் கலந்துகொள்ளச் செய்ய வேண்டும் என்று இந்த அரசாங்கம் உத்தரவிடுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** கைத்தறி வார விழாவில் கைத்தறி நெசவாளர்களும், மற்றவர்களும் விற்பனை போன்ற காரியங்களில் தீவிரமாக ஈடுபடுகிறார்கள். இந்த விழாவில் அதைப்பற்றி விளக்க

## கைத்தறி வாரம்

*128 வினா.—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மதிப்பிற்குரிய கல்வி—தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஆண்டுதோறும் கைத்தறி வாரம் கொண்டாடப்படுகிறதா ?

(இ) ஆம் எனில், 1962 முதல் 1966 வரை செலவு என்ன ?

(உ) ஆண்டுதோறும் கொண்டாடப்படுவதற்கான காரணங்கள் யாவை?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆமாம்.

(இ) 1962-ம் ஆண்டு முதல் 1966-ம் ஆண்டு வரையில் ஆன செலவு ரூ. 60,000.

(உ) கைத்தறித் துணிகளை மக்கள் மேலும் நாடுமாறு செய்வதற்காகவும், அதிகத் தள்ளுபடி வழங்குவதன் மூலம் கையிருப்பில் இருக்கும் துணிகளின் விற்பனையை அதிகப்படுத்தி அதனால் நெசவாளர்களுக்குத் தொடர்ச்சியான வேலைவாய்ப்பளிப்பதற்காகவும் அனைத்து இந்தியக் கைத்தறி வாரம் கொண்டாடப்படுகிறது. அனைத்து இந்தியக் கைத்தறிக் கழகமும் இந்திய அரசும் பிறப்பித்துள்ள உத்தரவுகட்கிணங்க அனைத்து இந்திய அடிப்படையில் இக்கைத்தறி வாரம் கொண்டாடப்படுகிறது.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** அப்படிக் கொண்டாடக்கூடிய கைத்தறி வார விழாவில் எல்லாக் கட்சித் தலைவர்களையும் அழைத்துக் கொண்டாடுவதில்லை. நான் இப்போது இருக்கிற சர்க்காரைப் பற்றிச் சொல்லவில்லை. முன்னர் இருந்த சர்க்கார் ஒரு சிலரை மாத்திரம் அழைத்து கொண்டாடியது. இனிமேல் அப்படியில்லாமல் எல்லாக் கட்சித் தலைவர்களையும் அழைத்து கொண்டாடப்படுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** எந்தக் கட்சியினரையும் அழைக்கக்கூடாதென்று விதியில்லை. பாராளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், பொதுமக்களில் இந்தத் தொடர்பு உள்ளவர்கள், கைத்தறி வல்லுனர்கள் அவர்களையெல்லாம் அழைத்துத்தான் விழாக்கள் நடைபெறுகின்றன. முன்னாலே அப்படி அழைக்கவில்லை என்ற குற்றச்சாட்டு இருந்தது. சென்ற முறை சென்னையைப் பொறுத்தவரை எல்லாக் கட்சியினரும் அழைக்கப்பட்டார்கள். சட்டமன்ற உறுப்பினர், பாராளுமன்ற உறுப்பினர் ஆகிய எல்லோருடைய ஆதரவைப் பெறுவதற்கு எல்லோரையும் அழைத்துத்தான் நடத்த வேண்டுமென்று உத்திரவு போடப்பட்டது. அந்த வகையிலே இந்த முறை மேற்கொள்ளப்படும்.

**திரு. ஈ. ஆர். கிருஷ்ணன் :** கைத்தறி வார விழாவின்போது விற்பனையாகும் கைத்தறித் துணிகளுக்கு சர்க்கார் ரூபாய்க்கு 10 காசு ரிபேட் வாங்குபவர்களுக்குக் கொடுத்துக்கொண்டிருக்கிறது. கைத்தறித் துணியை நெசவு செய்யும் நெசவாளர்களுக்கு மேற்படி ரிபேட் கொடுப்பதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அப்படிப்பட்ட உத்தேசம் இப்பொழுது இல்லை.

**திரு. கரு. சீமைச்சாமி :** இந்தக் கைத்தறி வார விழா அறுவடை முடிந்த பிறகு நடப்பதால் விவசாயிகள் கையில் பணம் இல்லாத சமயத்தில் கொண்டாடப்படுகிறது. ஆகவே, பொங்கல், தீபாவளி போன்ற காலத்தில் இந்த விழாவைக் கொண்டாடுவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** கனம் உறுப்பினர் அவர்கள் கூறிய கருத்து பல தடவை கூறப்பட்டிருக்கிறது. இந்த பொங்கல், தீபாவளி போன்ற காலங்களில் மக்கள் எப்படியும் தங்களுக்கு துணிகளை



வாங்குகிறார்கள். கைத்தறித் துணி தேங்குகின்ற மார்ச்சு, ஏப்ரல் மாதங்களில்தான், அவை விற்பனை ஆகாத காலத்தில் தான், அதற்குரிய விளம்பரமும், ஆக்கமும் ஊக்கமும் தரப்படவேண்டிய நிலைமை ஏற்படுகிறது. விற்பனையைக் கூடுதலாக்குவதற்கு இந்தத் திங்கள்களில் இந்த விழாவை வைத்துக்கொள்ள வேண்டும் என்ற கருத்து அந்த போர்டாரினால் தெரிவிக்கப்பட்டது.

**திரு. ந. தருமலிங்கம் :** கைத்தறி ஆடைகளை ஆதரிக்கிற முறையில் இந்த அரசாங்கம் இன்ன இன்ன மானியங்கள், சலுகைகள் வழங்கப்படும் என்று கைத்தறி ஆடைகளை உடுத்துகிறவர்களுக்கு அறிவித்து, கைத்தறி துணிகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் தரும் வகையில் நடவடிக்கை எடுக்கும் உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அப்படிப்பட்ட எண்ணம் எதுவுமில்லை.

**திரு. டி. எஸ். ஆதிமூலம் :** கரை போட்ட வேஷ்டி, சேலைகள், சில அளவோடு உள்ள அதாவது 36 அங்குலத்துக்கு மேற்படாத உருப்படிகள் இவைகளையெல்லாம் கைத்தறிக்கே ஒதுக்கவேண்டும் என்றெல்லாம் 15 வருஷங்களுக்கு முன்னால் திரு. ராஜாஜி மந்திரி சபை இருக்கும்பொழுது ஒரு தீர்மானம் போடப்பட்டதே, அது ஒரு உருப்படியான திட்டம் என்று இந்த சர்க்கார் நினைக்கிறார்களா ? அப்படியானால் அது விஷயமாகப் பழைய முயற்சியை மீண்டும் எடுத்துக்கொள்ள இந்த அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ? கைத்தறி நெசவாளர்களுடைய நலன் அதன் மூலம் விருத்தியாகும் என்று இந்த சர்க்கார் கருதுகிறார்களா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இந்தத் திட்டம் உருப்படியான திட்டம் தான் என்று இந்த அரசாங்கம் கருதுகிறது. 1952-லிருந்து தொடர்ந்து இந்த முயற்சி கைகூடக்கூடிய முறையில் இருந்து வருகிறது. இந்தப் பிரச்னையை மேலும் ஆராய்ந்து, என்ன வழி செய்யலாம் என்பதைப் பற்றியும், எந்தெந்த வகையில் வலியுறுத்தலாம் என்பதைப் பற்றியும் இந்த அரசாங்கம் யோசித்துக்கொண்டிருக்கிறது.

**திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் :** மில் துணியோடு போட்டி போடுவதற்கு முடியாத நிலையில் கைத்தறி நெசவாளர்கள் இருக்கிறார்கள். இம்மாதிரி அகில இந்திய கைத்தறி வாரம் கொண்டாடுவதன் மூலம் அந்தத் தொழிலுக்கு ஒரு உயிரும், ஊக்கமும் அளிக்கக்கூடிய நிலை ஏற்படுவதினால், இன்னும் அதிகமாக இதுபற்றி விளம்பரப்படுத்துவதற்கு இம்மாதிரி கைத்தறி வாரத்தை மேலும் சிறப்பாகக் கொண்டாடுவதற்கு அரசாங்கம் முன் வருமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** கனம் உறுப்பினர் அவர்களுடைய கருத்துக்கு இணங்கத் தான் ஆங்காங்கே எந்த வகையில் மக்களுடைய கவனத்தை ஈர்த்து இந்த விழாவை வெற்றிகரமாகக் கொண்டாட முடியுமோ அந்த அளவில் கொண்டாட வேண்டும் என்று எல்லா மாவட்ட கலெக்டர்களுக்கும் இந்த ஆண்டு உத்தரவிடப்பட்டிருக்கிறது. பொதுஜன தொடர்புடையவர்களோடு கலந்து ஆவன செய்யவேண்டும் என்பது தான் இந்த அரசாங்கத்தினுடைய நோக்கம்.

**திரு. எஸ். முருகையன் :** இதுபோன்ற கைத்தறி வார விழாக் கொண்டாட்டங்களில் அரசியல் கட்சித் தலைவர்களும், கைத்தறி தொழில் பிரமுகர்கள் மட்டும் தான் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்களா ? கைத்தறித் தொழிலில் நேரடியாக ஈடுபட்டிருக்கும் கைத்தறி தொழிலாளர்களையும் ஒவ்வொரு ஊரிலும் சேர்த்து இது போன்ற விழாக்களில் கலந்துகொள்ளச் செய்ய வேண்டும் என்று இந்த அரசாங்கம் உத்தரவிடுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** கைத்தறி வார விழாவில் கைத்தறி நெசவாளர்களும், மற்றவர்களும் விற்பனை போன்ற காரியங்களில் தீவிரமாக ஈடுபடுகிறார்கள். இந்த விழாவில் அதைப்பற்றி விளக்க

மாக மக்களிடம் எடுத்துப் பேசி, மக்களுடைய கவனத்தை ஈர்க்கும் வகையில் எடுத்துச்சொல்லி, அதைப்பற்றிய விளம்பரத்தைத் தேடுவதற்கு யார் தகுதி படைத்தவர்களாக இருக்கிறார்களோ, அவர்களை மட்டும் வரவழைக்கின்ற முயற்சியில் இப்பொழுது ஈடுபட்டிருக்கிறார்கள். கைத்தறி நெசவாளர்களுக்குள் அப்படிப்பட்ட சாமர்த்தியம் படைத்தவர்கள் ஆங்காங்கு இருப்பார்களேயானால், அவர்களையும் வரவழைத்து ஆங்காங்கு இந்த விழாக்கள் கொண்டாடப்படும்.

**திரு. எ. பாலசுப்பிரமணியன் :** சமீபத்தில் ரிசர்வ் பாங்கிலிருந்து வந்த சுற்றறிக்கை ஏற்கனவே கைத்தறி சொஸைடிகளுக்கு கிடைத்து வந்திருந்த கடனை கிடைக்க விடாத நிலையை ஏற்படுத்தியிருக்கிறது. ஆகவே அது குறித்து அவசர கவனம் செலுத்தி, இந்த சொஸைடிகளுக்கு புது வாழ்வு அளிப்பதுபற்றி இந்த அரசாங்கம் யோசனை செய்யுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** ஒரு மூன்று நான்கு திங்களுக்கு முன்னால் இப்படிப்பட்ட கஷ்டமான நிலை ஏற்பட்டதின் காரணமாக பல கைத்தறி சொஸைடிகள் இயங்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருந்தது. அதற்குப் பிறகு இந்த அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்கும், ரிசர்வ் பாங்கிற்கும் எழுதி, இங்கிருந்து அதன் டைரக்டர் சென்று பேசியதன் விளைவாக கொஞ்சம் தளர்த்தப்பட்டிருக்கிறது. ஆகவே, கொஞ்சம் நெருக்கடி நீங்குகின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

**திரு. மு. ச. சிவசாமி :** முந்திய அரசாங்கம், கைத்தறி கூட்டுறவு ஸ்தாபனங்கள் கருப்பு சிவப்பு கரை வேஷ்டி, துண்டு தயாரிக்கக்கூடாது என்று தடை விதித்து சுற்றறிக்கை விட்டதை இந்த அரசாங்கம் நீக்குமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அதைப்பற்றி விவரம் இல்லை. தனிக்கேள்வி கேட்கவேண்டும்.

**திரு. கே. வினாயகம் :** ஆண்டுதோறும் இந்தக் கைத்தறி விழாவை நடத்துவதற்கு முக்கியமான காரணம் இந்தத் தொழிலுக்கு ஊக்கம் தருவதற்காகத்தான் என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். அப்படியிருந்தாலும், இத்தனை ஆண்டுகள் விளம்பரம் செய்ததன் பயனாக இந்த "ப்ளீடிங் மெட்ராஸ்" என்று சொல்லக்கூடிய அன்னிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட துணிக்கு செல்வாக்கு இருந்ததே, விருப்பம் இருந்ததே, அந்தத் துணி இப்பொழுது தேங்கிக் கிடக்கிறதே அதிகமாக விற்பனையாகாமல், இதனுடைய மௌஸ் குறைந்ததற்குக் காரணம் என்ன ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** கைத்தறி வார விழா கைத்தறித் துணிக்கு உள்நாட்டில் நல்ல மதிப்பும், செலவும் ஏற்படுவதற்காக வேண்டி கொண்டாடப்படுகிறது. "ப்ளீடிங் மெட்ராஸ்" என்ற வகைத் துணி அன்னிய நாட்டுக்கு அனுப்புவது, அது தனியான பிரச்சினை.

## தொழில் நுணுக்கக் கல்வி இயக்குனர்.

*129 வினா :—**திரு. ஏ. எம். ராஜா :** மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :—

(அ) தொழில் நுணுக்கக் கல்வி இயக்குனர் (Director of Technical Education) பதவியை எடுத்துவிடும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆம் எனில், அது எந்த நிலையில் உள்ளது ?

**மாண்புமிகு திரு இரா. நெடுஞ்செழியன் :** (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.



**திரு. ஏ. எம். ராஜா :** ரூ. 54 கோடி கல்வித் துறைக்காக செலவு செய்யப்படுகிறது. அதில் ரூ. 1,15,00,000 தொழில் நுணுக்க கல்விக்காக செலவு செய்யப்படுகிறது. அதை நிர்வகிக்க மட்டும் ஏறக்குறைய ரூ. 10 லட்சம் செலவு ஆகிறது. ஆகவே, செலவைக் குறைக்கும் முகத்தான் ஒரு டெப்யூடி டைரக்டரை மட்டும் வைத்து, டைரக்டர் ஆப் ஹையர் எஜுகேஷனோடு இணைத்து விடுவதற்கான முயற்சியை இந்த அரசாங்கம் பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** கல்வித் துறை, துவக்கப் பள்ளித் துறை, கல்லூரி கல்வித் துறை, தொழில் நுணுக்கக் கல்வித் துறை என்று மூன்றாகப் பிரிக்கப்பட்டு தனித்தனியாக இயக்குனர்கள் அமைக்கப்பட்டிருக்கிறார்கள். ஒரு துறையினுடைய பணிகள் அதற்காக செலவழிக்கப்படும் தொகையின் அளவைப் பொறுத்து அமையவில்லை. ஒவ்வொன்றுக்கும் எவ்வளவு செலவு செய்கிறோம் என்பதைப் பொறுத்து, அதனுடைய பணிகள் அந்த விகிதாசாரத்தில் அமையவில்லை. தொழில் நுணுக்கக் கல்வித் துறை இப்பொழுது இருக்கிற முறையில் இருந்து வருவதன் மூலம் நல்ல பலன்கள் ஏற்பட்டு வருகின்றன என்பதை அரசு உணர்ந்திருக்கிறது. ஆகவே, இந்த நிலையை டெப்யூடி டைரக்டர் என்ற நிலைக்கு இறக்கவேண்டிய அவசியமில்லை.

**திரு. எஸ். ராமச்சந்திரன் :** "டைரக்டர் ஆப் டெக்னிகல் எஜுகேஷன்" பதவிக்கு வெளி நாடுகளுக்குச் சென்று நல்ல அறிவும், அனுபவமும் பெற்ற கல்லூரிப் பேராசிரியர்களையும், பிரின்ஸிபால்களையும் நியமிக்க சர்க்கார் சலுகை காட்டுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அதற்கான அவசியம் ஏற்படவில்லை. வெளிநாடுகளிலிருந்து அனுபவம் பெற்று நிபுணர்களாக வருபவர்கள் மாணவர்களுக்குத் தேவையான சொற்பொழிவு ஆற்றுகிறார்கள். அது மாணவர்களுக்குப் பயன்பட்டு வருகிறது.

## திருச்சி-சென்னை விரைவு பஸ்

*130 வினா :—**திரு. வை. சுவாமிநாதன் :** மதிப்பிற்குரிய பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

திருச்சியிலிருந்து சென்னை செல்லும் ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் எக்ஸ்பிரஸ் பஸ்களின் எண்ணிக்கையை மேலும் அதிகரிக்க உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** திருச்சியிலிருந்து சென்னை செல்லும் பேருந்து விரைவு வண்டிகள் எண்ணிக்கையை மேலும் அதிகரிக்க இப்பொழுது உத்தேசம் இல்லை.

**திரு. கே. வினாயகம் :** இப்பொழுது கிடைத்திருக்கிற அனுபவத்தை வைத்துக்கொண்டு எக்ஸ்பிரஸ் பஸ்கள் விடுவதில் அரசாங்கத்திற்கு லாபம் வருகிறதா, அல்லது நஷ்டம் வருகிறதா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இப்பொழுது விடுகின்ற வண்டிகளில் நஷ்டம் வரவில்லை.

**திரு. நா. காசிராமன் :** இப்பொழுது பஸ்களிலே சர்க்கார் கட்டணத்தை குறைத்ததன் பயனாக அதிகப்படியான பாஸஞ்சர்கள் வருகிறார்களா? அப்படி வருவதாக இருந்தால், அதற்குத் தகுந்தபடி பஸ்களின் எண்ணிக்கை உயர்த்தப்படுமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** பேருந்து வண்டிகளுக்குக் கட்டணத்தை குறைத்த வகையில், பிரயாணிகளுடைய எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது. இன்னும் அதிக வண்டிகளை விடுவது பரிசீலனைக்குப் பிறகுதான் செய்ய வேண்டும்.

THIRU B. VENKATASWAMY : Is there any proposal to run night buses in our State ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இப்பொழுது அதுபோன்ற உத்தேசம் இல்லை.

**திரு. கொளத்தூர் கோதண்டம் :** தலைவர் அவர்களே, மார்ச்சு மாதத்திற்குப் பிறகு எத்தனை எக்ஸ்பிரஸ் பஸ்கள் விடப்பட்டிருக்கின்றன? எவ்வளவு புதிய மார்க்கத்தில் விடப்பட்டிருக்கின்றன?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இந்த புதிய அரசு பொறுப்பேற்ற பிறகு சென்னையிலிருந்து பேருந்து விரைவு வண்டிகள் ஏழு ரூட்களில் விடப்பட்டிருக்கின்றன. பஸ் எண்ணிக்கை மொத்தம் 14.

**திரு. டி. எஸ். ஆதிமூலம் :** சார், எக்ஸ்ப்ரஸ் பஸ்களில் இப்பொழுது சீட் வசதிகள் இருப்பதை விட கொஞ்சம் நல்லதாக இருக்க வேண்டும் என்று நினைக்கிறேன். ஏனென்றால், நண்பர் விநாயகம் போன்றவர்கள் பிரயாணமே செய்யமுடியாத அளவிற்கு சீட்கள் நாரோவாக இருக்கிறது. (சிரிப்பு) அவற்றை நல்ல விதமாக அமைக்க கனம் அமைச்சர் பரிசீலனை செய்வார்களா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இப்பொழுது விரைவு வண்டிகளின் கட்டணம், சென்னையிலிருந்து திருச்சிக்குப் போவதற்கு ரெயிலில் இரண்டாவது வகுப்புக்கு உள்ளதுபோல இருக்கிறது. இட வசதி ரெயிலை விட இதில் அதிகமாக இருக்கிறது.

**திரு. மா. இராசாங்கம் :** தலைவர் அவர்களே, தமிழகத்தில் ரெயில் போக்குவரத்து அறவே இல்லாத பகுதிகளில் நமது தமிழக அரசு போக்குவரத்துத் துறை அதிகமான வாகன வசதி செய்து கொடுக்க ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அங்கெல்லாம், அரசின் சார்பிலோ அல்லது தனியார் துறையினர் முன்வந்தால் அவர்களுக்கு ஊக்கம் அளிப்பதன் மூலமாகவோ ஏற்பாடு செய்யலாம்.

**திரு. கே. விநாயகம் :** ஐயா, திரு. ஆதிமூலம் போல உள்ள, மெல்லிய அங்கத்தினர்கள் பஸ்ஸிலே பிரயாணம் செய்யும்போது, ஒருவர் இடத்தில் இரண்டு பேர்களைப் புகுத்தி (சிரிப்பு) இடவசதி செய்ய அரசாங்கம் முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** கனம் ஆதிமூலம் போன்றவர்களுக்குப் பதிலாக இரண்டு பேர்களைப் புகுத்தவோ, திரு. விநாயகம் செல்லும்போது, சலுகையைக் கூட்டி அவர்களை அனுப்பவும் அரசு முயற்சிக்காது.

**திரு. வி. டி. அண்ணாமலை :** சார், திருச்சிக்குச் செல்லும் துரித போக்குவரத்து ஊர்திகள் செல்லுவதில் ஒன்றை காஞ்சிபுரம், திண்டிவனம் வழியாக விடப்படுமா என்று அமைச்சர் தெரிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** சென்னையிலிருந்து திருச்சிக்கு புதிய வழித்தடம் ஒன்று யோசிக்கப்படுகிறது. அது ஸ்ரீபெரும்புதூர், காஞ்சீபுரம், வந்தவாசி, திண்டிவனம், உளுந்தூர்பேட்டை, பெண்ணாடம் வழியாகச் செலுத்தலாம் என்பதற்கான செயற்குறிப்பு இயக்குனரிடமிருந்து கேட்கப்பட்டிருக்கிறது.

**திரு. வ. ஜார்ஜ்:** அவைத்தலைவர் அவர்களே, துரித பஸ் போக்குவரத்தில் லாபமே ஏற்படுகிறது என்று நண்பர் விநாயகம் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கும்போது அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால் பட்ஜெட் மெமோராண்டத்தில் ரூ. 51 ஆயிரம் நஷ்டம் வரும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. அமைச்சரவர்கள் வேண்டுமென்றே





லாபம் வருகிறது என்று சொன்னார்களா அல்லது அவர்கள் பட்ஜெட் மெமோராண்டத்தைப் பார்க்காமல் சொல்லுகிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** நண்பர் விநாயகம் கேட்டது, மொத்தத்திலே இல்லை; கட்டணம் குறைக்கப்பட்ட பிறகு ஏற்பட்ட நிலையைப் பற்றிக் கேட்டார்கள். நான் லாபம் என்று சொன்னேன்.

**திரு. சொ. கோவிந்தராசன் :** ஐயா, சென்னை—பெங்களூர் விரைவு பஸ் அதிகமாக விடப்படுமா என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இப்பொழுது அதுபோன்ற உத்தேசம் இல்லை.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, is there any proposal to extend the Express Bus Service upto the Hosur border in the Dharmapuri district ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இந்தக் கேள்வியில் அது இடம் பெறவில்லை.

**திரு. என். வரதராஜன் :** தலைவர் அவர்களே, துரித பஸ் போக்குவரத்து நிற்கும் இடங்கள் வெகு தூரத்தில் இருக்கின்றன. நகரங்களில் அல்லாமல் மற்ற இடங்களில் மக்கள் பஸ்ஸிலே ஏறமுடியாமல் அவதிப்படுகிறார்கள். ஆகவே, பஸ்கள் நிற்கும் தூரத்தைக் குறைக்கவேண்டும் என்பதில் அரசாங்கம் கவனம் செலுத்துமா? திண்டுக்கல் மார்க்கத்தில் வேடசெந்தூர் பகுதியிலிருந்து கோரிக்கைகள் வந்திருக்கின்றனவா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** கோரிக்கைகள் வந்திருக்கின்றன. வந்துள்ள கோரிக்கைகளில் சில கவனிக்கப்படுகின்றன. எல்லாக் கோரிக்கைகளையும் நிறைவேற்றுவதானால், விரைவு வண்டி என்ற பெயரையே மாற்ற வேண்டிவரும்.

**திரு. தே. கேசவலு:** ஐயா, முந்தியுள்ள சர்க்கார் ஜீப்–பஸ் விட்டது போலும், இன்றையதினம் உள்ள சர்க்கார் விட முயற்சிக்குமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இவைகளெல்லாம் பிறகு யோசிக்கப்படவேண்டும்.

**திரு. கே. பி. எஸ். மணி:** சார், திண்டிவனத்திலிருந்து சென்னைக்கு கடைசி பஸ் 7-15 மணிக்கு முடிந்துவிடுகிறது. அதற்குப் பிறகு, தனியார் துறையிலோ, சர்க்கார் துறையிலோ வண்டிகள் கிடையாது. ஆகவே, மாலை ஏழேகாலுக்குப் பிறகு, எட்டு மணி அல்லது ஒன்பது மணிக்கு திண்டிவனத்திலிருந்து சென்னைக்கு ஒரு வண்டி புறப்பட ஒரு ஸ்பெஷல் பஸ் விடுவதற்கு அரசாங்கம் யோசிக்குமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** உறுப்பினர் அதைப்பற்றி குறிப்பு அனுப்பினால், தக்க முடிவு எடுக்கப்படும்.

**திருமதி வி. ப. பழனியம்மாள் :** ஐயா, monopoly line-இல் அரசாங்கம பஸ்கள் விடுமா ? ஆம் எனில் எவ்வளவு காலம் பிடிக்கும் ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இப்பொழுது அறிவிக்கப்பட்டிருக்கின்ற கொள்கையின் அடிப்படையில் அந்தக் காரியங்கள் கவனிக்கப்படும்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** நூறு மைலுக்கு மேல் உள்ள எல்லா எக்ஸ்பிரஸ் பஸ் ரூட்டுகளையும் சர்க்காரே எடுத்துக்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** முதலிலே சொன்ன பதிலைத்தான் மறுபடியும் சொல்ல விரும்புகிறேன். இப்பொழுது அறிவிக்கப்பட்டிருக்கும் கொள்கை அடிப்படையில் இருக்கும் சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து, அந்தக் காரியங்கள் செய்யப்படும்.

**திரு. கு. கிருஷ்ணமூர்த்தி:** சார், பழனிக்கு தினமும் 5000-க்கு மேற்பட்ட யாத்திரீகர்கள் வந்து போய்க்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, பழனிக்கு ஒரு துரித பஸ் விட அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** கேள்வி திருச்சிக்குப் போகும் பஸ் பற்றியது. கனம் உறுப்பினர் அக்கறையோடு இப்பொழுது கேட்பவர், தனிக் கேள்வி போட்டிருந்தால் குறிப்போடு வந்து பதில் சொல்லியிருக்க முடியும்.

**திரு. எம். சுரேந்திரன் :** சார், புதிதாக பஸ்கள் விடப்படும்போது கிராமங்களையும் இணைக்கும் முறையில் ஒழுங்குபடுத்த அரசு முயற்சிக்குமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** விரைவு வண்டிகள் விடுவது எல்லாக் கிராமங்களையும் இணைக்கும் காரியம் இல்லை.

### புத்தூர் அக்ரஹாரத்தில் நெல் கொள்முதல்.

***131 வினா திரு. ஆ. கு. சுப்பையா :** மதிப்பிற்குரிய உணவு—வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சி நகரம் புத்தூர் அக்ரஹாரத்தில் 20-3-1967 தேதியன்று கொள்முதல் அதிகாரிகளும், போலீஸ் அதிகாரிகளும், நெல் பதுக்கல் சோதனை போட்ட சமயம் வரம்பு மீறி நடந்து கொண்டதாக புகார்கள் ஏதேனும் அரசினர் கவனத்திற்கு வந்ததா?

(இ) அந்த நிகழ்ச்சிகள் பற்றிய விபரங்கள் யாவை?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** (அ) ஆம்.

(இ) சில தாலூக்கா வழங்கல் அதிகாரிகள், சில சிறப்பு ரெவின்யூ இன்ஸ்பெக்டர்கள், திருச்சி லஞ்ச விசாரணைப்பிரிவு துப்பு துலக்கும் துறை போலீஸ் இன்ஸ்பெக்டர், ஆகியோரின் துணைகொண்டு புத்தூர் அக்ரஹாரத்தில் உள்ள குடியானவர்களிடமுள்ள கையிருப்பு நெல்லைச் சரிபார்க்கவும் கொள்முதல் செய்யவும் 20—3—1967 அன்று திருச்சி மாவட்ட வழங்கல் அதிகாரி ஏற்பாடு செய்தார். அவர்கள் முதலில் வேங்கடாசலம் அய்யங்காரின் வீட்டிற்குச் சென்றார்கள். அவர் கொடுத்துள்ள கையிருப்புக் கணக்கைச் சரிபார்த்துக் கொண்டிருந்தபோது, மற்ற சில வீடுகளில் பதுக்கி வைக்கப்பட்டிருப்பதாக பொது மக்களிடமிருந்து வாய்மொழித் தகவல் கிடைத்தது. எனவே, மற்ற வீடுகளிலும் கையிருப்பு சரிபார்க்கப்பட்டு, அன்று 910 நெல் மூட்டைகள் கொள்முதல் செய்யப்பட்டன. தங்களிடம் அதிகப்படியாக உள்ள நெல்லை அன்றே அனைவரும் மனமுவந்து கொடுத்து, கொள்முதல் பட்டியலில் கையெழுத்திட்டு அதற்கான தொகையைப் பெற்றுக் கொண்டனர். கொள்முதல் செய்த அதிகாரிகள் அல்லது போலீசார் தொந்திரவு செய்ததாக நிலை நாட்டப்படவில்லை.

**திரு. ஆ. கு. சுப்பையா:** மன்றத் தலைவர் அவர்களே, கொள்முதல் செய்த அதிகாரிகள் புத்தூர் அக்கிரஹாரத்தில் ஒன்றும் தொந்திரவு செய்யவில்லை என்று அமைச்சர் கூறினார்கள். 21, 22-ம் தேதிகளில் பத்திரிகைகளில் அதிகாரிகள் அத்தனை பேர்களும் தவறாக நடந்து கொண்டார்கள் என்று தவறாக எழுதியிருந்தார்களே அப்படிப்பட்ட பத்திரிகைகளைக் கண்டிக்க அரசாங்கம் முயற்சிப்பார்களா?



**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** எந்தப் பத்திரிகைகள் என்பதைப் பற்றி அரசாங்கத்திற்குத் தகவல் இல்லை. ஆனால் அது சம்பந்தமாக 23-ம் தேதி அன்றையதினம் ஒரு விவர அறிக்கை திருச்சி கலெக்டரிடமிருந்து சர்க்காருக்கு வந்து சேர்ந்தது. இதற்கு மத்தியில் சம்பந்தப்பட்டவர்களிடமிருந்து எந்தவிதமான புகார்களும், கலெக்டருக்கோ அல்லது அரசாங்கத்திற்கோ வரவில்லை. ஆனாலும், மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள், இதுபற்றிப் பத்திரிக்கையில் பார்த்தவுடன், ஒரு விசேஷ அதிகாரியை திருச்சிக்கு அனுப்பி விசாரிக்கச் செய்தார். அதிலும் எந்தவிதமான குற்றமும் நிலைநாட்டப்படவில்லை.

**திரு. ஆலடி அருணா :** கொள்முதலுக்குக் குந்தகம் விளைவிக்க வேண்டும் என்கின்ற ஒரு நோக்கத்தோடு சில காங்கிரஸ்காரர்கள் அவதூறாகப் பேசியதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

**THIRU. K. VINAYAKAM ;** Sir, on a point of order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான் சொல்லுகிறேன். இருங்கள்.

**THIRU, K. VINAYAKAM :** If the Chair is going to give a ruling, I will not raise my point of order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா—விடை நேரத்தில் குற்றச்சாட்டு இல்லாமல் வினாக்களைக் கேட்கவேண்டும். விவாத நேரத்தில் எது வேண்டுமானாலும் சொல்லுங்கள்.

**திரு. ஆலடி அருணா :** கொள்முதல் திட்டத்திற்கு குந்தகம் விளைவிக்க வேண்டும் என்று அரசியல் காரணமாக, அவதூறாகப் பேசுகிறவர்கள் மீது அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** புத்தூர் அக்கிரஹாரத்தில் அம்மாதிரி நிலைமைதான் ஏற்பட்டது. அப்பொழுது 2,000 அல்லது 2,500 மூட்டைகளுக்கும் அதிகமாக பதுக்கி வைக்கப்பட்டிருந்ததை எடுத்தார்கள். இப்படிப்பட்ட நிலை எங்கிருந்தாலும் நடவடிக்கை அவ்வப்பொழுது அரசாங்கம் எடுக்கிறது.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** தலைவரவர்களே, புத்தூர் சம்பவத்தைப்பற்றி பல்வேறுவகையான கேள்விகள் கேட்கப்படுகின்ற நேரத்தில், அந்த புத்தூரில் அது சம்பந்தப்பட்டவர்கள் என்னை
நேரிடையாகச் சந்தித்து, சில அதிகாரிகள் தவறாக நடந்துகொண்டார்கள் மு.ப. 9-30
என்பதை எடுத்துச்சொல்லி, அந்த அதிகாரிகள் திருந்திக்கொள்ள வேண்டுமென்று அவர்களுக்கு அறிவிக்கப்பட்ட பிறகு, புத்தூரிலுள்ள மிராசுதார்கள் திருப்தியடைந்து கொள்முதலுக்குப் பரிபூரணமாக சர்க்காரோடு ஒத்துழைக்க வாக்களித்திருக்கிறார்கள்.

**THIRU. K. VINAYAKAM :** Even though this question refers to one particular place in a particular district, will the Government come forward to declare that in the matter of procurement of paddy they will not harass the farmers and that they will procure to quote the words of the Chief Minister with 'a pat on the back' or do procurement without tears, and that in future procurement will not be carried on with the aid of their own partymen directing the police officials and the revenue department officials and showing the houses where paddy is supposed to be hoarded ?

**THE HON. THIRU C. N. ANNADURAI ;** Not only the farmer this Government will not harass anybody. If any petty official as per the training he has had under the previous Government persists in harassment, this Government will take very serious objection to

that and rectify it. The latter part of the question refers to the party cadres being used. This Government is not intent upon using the cadres. But if members of the public belonging to any political party come forward and give useful information to the Government, they are at liberty to do so.

**திரு. கரு. சீமைச்சாமி :** சார், விவசாயிகள் வீட்டில் நெல்லைப் பதுக்கி வைத்தார்கள் என்று சொல்வது சரியா ; கணக்கு கொடுக்கப்படவில்லை என்பது சரியா ? கணக்கு கொடுக்கப்படவில்லை என்பதற்காக விவசாயிகள் பதுக்கி வைத்தார்கள் என்று கூறுவது சரியா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** பதுக்கல் என்பதற்கு நாம் கொள்ளும் பொருளே, அது அவர்களிடத்திலே இருப்பதற்கு எந்த விதமான கணக்கும், அதிகாரமும் இருக்கிறதா என்பதை அறிவிக்க முடியாத நிலையில் உள்ள பொருள்கள் பதுக்கல் பொருள்கள் என்பதாகும்.

**திரு. சி. கே. சின்னராஜி கவுண்டர் :** வடார்க்காடு ஜில்லாவில் அரசாங்கம் நெல் கொள்முதல் 30,000 டன் என்று நிர்ணயித்திருந்தது. சுமார் 45,000 டன் நெல் கொள்முதல் ஆகியிருக்கிறது. இந்த ஜில்லாவில் நெல் போக்குவரத்து கட்டுப்பாட்டை அரசாங்கம் நீக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** மிகவும் விரைவில் வடார்க்காடு மாவட்டத்தில் நெல் நடமாட்டக் கட்டுப்பாடுகளை எடுப்பதாக அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது.

**திரு. எ. பாலசுப்பிரமணியன்:** தலைவரவர்களே, கொள்முதலில் புகார்களுக்கு இடம் வராமல் இருக்கக்கூடிய நோக்கத்தோடு கொள்முதலுக்கு ஒத்துழைப்பு தரக்கூடிய எல்லாக் கட்சி ஊழியர்களையும், கட்சியில் இல்லாத பொதுஜன ஊழியர்களையும் கொண்ட கமிட்டி அமைத்துக் கொள்முதல் விஷயத்தில் உதவி பெறுவதற்கு அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** குழு அமைக்கப்படாத நிலையில் சில கட்சியைச் சேர்ந்தவர்கள் அதுபற்றிச் செய்திகளைத் தருவதற்கு நம்முடைய எதிர்கட்சித் தலைவர்களெல்லாம் பெரிய புகாரைக் கிளப்புகின்ற காரணத்தாலே, எல்லா கட்சித் தலைவர்களும் கூடி நம்முடைய கனம் உறுப்பினர் பாலசுப்பிரமணியம் அவர்கள் கூறிய விஷயத்தை எல்லோரும் யோசித்து, அப்படிக் குழு அமைப்பதானால் நான் அதை விரும்பி வரவேற்பேன்.

**திரு. கே. பி. எஸ். மணி :** சார், இந்தக் கொள்முதலில் சர்க்கார் அதிகாரிகள் முறையாக ஒரு தாக்கீது எல்லா மிராசுதார்களுக்கும் அனுப்பி இந்தத் தேதிக்குள் கொள்முதல் நெல்லை, அவர்கள் கோட்டாவைக் கொடுத்து விட வேண்டுமென்று கேட்டுக்கொண்டும், அங்குள்ள முக்கியமான, பிரதான சமூக ஊழியர்களைக் கேட்டுக்கொண்டும், அதிகாரிகள் கொள்முதலுக்குப் போகும்பொழுது அதிகாரிகளிடத்திலே தவறாக நடந்துகொண்டு, படுக்கை அறைகளிலும் பூஜை அறைகளிலும் நெல்லைப் பதுக்கி வைத்த பிறகுதான் அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலைமையேற்படுகிறது என்பது அரசாங்கத்துக்குத் தெரியுமா? அப்படிப் புகார்கள் வந்திருக்கிறதா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** அது இந்தப் பிரச்னையினுடைய இன்னொரு கருத்து.

**திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் :** சபாநாயகரவர்களே, புத்தூர் சம்பவத்தைப்போல் திருநெல்வேலி ஜில்லாவில் கொள்முதல் விஷயத்தில் அதிகாரிகளின்பேரில் பல மனுக்கள் அரசாங்கத்துக்கு வந்திருக்கும் என்று நினைக்கிறேன். அவைகளில் முக்கியமாக சபஸ்தியாபுரம், பால்நாடார்



சம்பவம் விவசாயிகளிடையே பெரிய பரபரப்பை உண்டாக்கியது. அதுபற்றி விசாரணை வைத்து தக்க நீதி செய்ய இந்த அரசாங்கம் முன்வருமா?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : The matter is *sub judice*.

**திரு. ரா. ரா. முனுசாமி :** தலைவரவர்களே, விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்தபிறகு விவசாயிகளிடம் உடனடியாக அவர்களுக்குச் சேர வேண்டிய கொள்முதல் பணத்தைச் சேர்ப்பிக்காமல் காலதாமதம் ஆவதால் உடனடியாகத்தர அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அம்மாதிரியான புகார்கள் வருகிறயிடத்தில் அவைகளைத் துரிதப்படுத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றன. அவர்கள் சொல்லுகிற புகார்களுக்கு இப்போது இடமில்லை. பெரும்பாலும் கொடுக்கப்பட்டாகிவிட்டது.

**திரு. கே. என். குமாரசாமி :** சார், இந்தக் கொள்முதல் திட்டத்தில் எவ்வளவு பேர்கள் நெல்லைப் பதுக்கி வைத்திருந்தார்கள் ? அவர்களில் எவ்வளவு பேர்கள் பேரில் சர்க்கார் நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அந்தந்த மாவட்டம் பற்றிய விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. தனியாக கணக்கு வைத்துக் கொள்ளப்படவில்லை. மாவட்ட அதிகாரிகள், எந்தெந்த வழக்குகள் எப்படியெப்படி இருக்கின்றன என்ற விவரங்களைச் சேகரித்து அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**திரு. தி. பொன்னுமலை :** ஐயா, சென்ற ஆண்டு சர்க்கரை மன்றாடியார் அவர்கள் நிலத்தில் எத்தனை ஏக்கர் சாகுபடி செய்யப்பட்டது ? எத்தனை மூட்டை அவர்கள் வீட்டிலே கொள்முதல் செய்யப்பட்டதென்ற கணக்கை சொல்ல முடியுமா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** விடை இல்லை.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** சார், இந்தக் கொள்முதலுக்கு விவசாயிகள் தாங்களாகவே கொடுப்பதற்கு முன்வருகிறார்கள் என்று சொன்னால் அவர்களுக்குச் சலுகை காட்டக் கூடிய முறையில் ரிபேட் அல்லது வேறு எந்தவிதமான சலுகைகள் தர ஏற்பாடு செய்வதற்கு உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** ஒரு ஏக்கருக்கு ஐந்து மூட்டைகளுக்கு மேல் கொடுக்கிறவர்களுக்கு பூரிப்பு போனஸ், இன்ஸென்டிவ் போனஸ் என்று இரண்டு ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது.

**திரு. ந. தருமலிங்கம் :** பேரவைத் தலைவரவர்களே, நமது அதிகாரிகள் சட்ட வரம்புக்குட்பட்டு முறையாக நெல் கொள்முதல் செய்து வருகிறபொழுது, வேண்டுமென்றே தவறான எண்ணத்தை உண்டாக்கக்கூடிய வகையில் புத்தூர் சம்பவத்தைப் பெரிதுபடுத்திப் பேசுவதனால் நமது நெல் கொள்முதல் கொள்கைக்கு களங்கம் விளைவிக்கப்படுகிறது. அது பற்றி அரசாங்கம் என்ன கருதுகிறது ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அரசாங்கம் நியாயமாக நடந்துகொள்வதன் மூலம் மட்டும் இந்த நாட்டின் கருத்தை மாற்ற முடியாது. பொதுமக்கள் எண்ணத்தில் நம்பிக்கை இருக்கிறது.

**திரு. கரு. சீமைச்சாமி :** சார், நெல் கொள்முதல் செய்யப்படுகின்றபொழுது அந்த இடத்திலேயே பணம் பட்டுவாடா செய்யப்படவில்லை. இது எல்லோரும் அறிந்த விஷயம். கொள்முதல் செய்தவுடனேயே ஒரு ரசீதைக் கொடுத்துவிட்டு அங்கே வந்து பணத்தை வாங்கிக் கொள்ளுங்கள் என்கிறார்கள். இதைத் தவிர்ப்பதற்கு அரசாங்கம் என்ன ஏற்பாடு செய்திருக்கிறார்கள் ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அந்தத் தாமதங்களைக் குறைப்பதற்கும், இன்னும் சீக்கிரமாகக் கொடுப்பதற்கும் ஏற்பாடுகள் துரிதமாகச் செய்யப்பட்டு வருகின்றன.

**திரு. எஸ். ராமச்சந்திரன் :** தலைவரவர்களே, விவசாயிகளில் சிலர் கையிருப்புக் கணக்கை வேண்டுமென்றே தராமல், அதனால் அதிகாரிகள் மீது புகார் கொடுத்து, அது விசாரணைக்கு வரும்பொழுது அதிகாரிகளுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்காக சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அதிகாரிகளுக்குப் பாதுகாப்பு எப்போதும் கொடுக்கப்படும். இந்த அரசாங்கம் அவர்கள் நியாயமான கடமைகளை நிறைவேற்றுகிறபொழுது எப்பொழுதும் பாதுகாப்பு அளித்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**திரு. பி. ஜயராஜ் :** தலைவரவர்களே, தஞ்சை ஜில்லா ஐயம்பேட்டை அருகில் முஸ்லீம் நண்பரொருவர், கொள்முதல் கெடுபிடி காரணமாகத் திடீரென்று அதிகாரிகள் இருக்கிறபொழுதே இறந்துவிட்டார் என்று பத்திரிகையில் பார்த்தோம். மகஜரும் தனியாகச் சர்க்காருக்கு வந்திருக்கிறது என்று கேள்விப்படுகிறேன். இது குறித்து அமைச்சரவர்கள் என்ன விசாரணை செய்தார்கள் ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** முற்றிலும் ஆதாரமற்ற செய்திகளை வைத்துக்கொண்டு உறுப்பினர் அவர்கள் சட்டமன்றத்தில் பேசுவது சட்டமன்ற மரபுகளுக்கு உகந்தது அல்ல.

**திரு. இரா. மாணிக்கவாசகம் :** சார், கொள்முதல் திட்டம் வெறும் அதிகாரிகளை மட்டும் நம்பியிருக்கிறதா ? அல்லது பொதுமக்களையும் அணுகுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

(பதில் இல்லை.)

THIRU. K. VINAYAKAM : Sir, what is the position regarding the procurement of paddy in this State now. Has the procurement been made completely and if so, will the Government allow a free movement of paddy and rice within the State now. Also, in the matter of granting of the incentive bonus to the cultivators, is it not a fact that the Government had fixed one rate previously and then over and above that price, the incentive bonus was given by the State Government. Now, when the Central Government have come forward to grant some more incentive, why should this Government stop the grant which has been given by the Central Government and stick to its own grant ?

THE HON. THIRU. K. A. MATHIALAGAN : Sir, let the hon. Member put one question after another.

THIRU. K. VINAYAKAM : Sir, what is the position regarding procurement now ? If procurement has been completely made, why should not this Government throw open the movement of foodgrains freely within the State ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** கனம் சபாநாயகர் அவர்களே, 28-6-1967 வரையில் 5,30,176 டன் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது. அத்துடன், பல்வேறு மாவட்டங்களில்—கோயமுத்தூர், மதுரை, இராமனாதபுரம், கன்னியாகுமரி, சேலம் ஆகிய மாவட்டங்களில்—ஒரு தாலூக்காவிலிருந்து இன்னொரு தாலூக்காவிற்கு இருக்கும் நடமாட்டக் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டுவிட்டன. செங்கற்பட்டு மாவட்டத்தைப் பொறுத்தவரையில், அங்கு எதிர்பார்க்கப்பட்ட கொள்முதல் ஓரளவிற்கு வந்துவிட்டதால், கலெக்டரினுடைய ஆலோசனையின்படி, இன்று முதல் செங்கற்பட்டு மாவட்டத்திலும் தாலுக்காவிற்குத் தாலுக்கா உள்ள நடமாட்டக் கட்டுப்பாடுகள் நீக்கப்படுகின்றன. வெகு விரைவில் வட ஆற்காடு மாவட்டத்திலும் இந்த தாலூக்காவிற்கு தாலூக்கா நடமாட்டக் கட்டுப்பாடுகளை நீக்குவதற்கான ஏற்பாடுகள் பற்றி அரசாங்கம் தீவிரமாகப் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது. ஆனால், மாவட்டத்திற்கு மாவட்டம் இருக்கிற நடமாட்டக் கட்டுப்பாடுகளை நீக்குகிற உத்தேசம் இப்பொழுது எழவில்லை.



**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** தஞ்சை மாவட்டத்திற்கு எவ்வளவு கொள்முதல் நிர்ணயிக்கப்பட்டது ? நிர்ணயிக்கப்பட்ட அளவு அவ்வளவும் கொள்முதல் செய்யப்பட்டு விட்டதா ? தஞ்சை மாவட்டத்தில் கொள்முதல் செய்யும்போது விவசாயிகள், தங்களுடைய தேவைகளுக்கென்று எந்த அளவு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுகிறார்கள் ? எந்த அடிப்படையில் அவர்கள் தங்களுடைய உபயோகத்திற்காக என்று வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுகிறார்கள் என்பதை அறியலாமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** தஞ்சை மாவட்டம்தான் பெரிய அளவிற்கு கொள்முதல் நடைபெறுகிற மாவட்டம். மூன்று லட்சம் டன் அங்கே கொள் முதல் செய்யப்படலாம் என்று எதிர்பார்த்தோம். ஆனால், 2,67,000 டன் தான் இதுவரையிலும் அங்கே கொள்முதல் ஆகியிருக்கிறது. ஆனால், ஒரு ஏக்கர் வரையில் அல்லது அதற்கும் குறைவாக நிலம் வைத்திருக்கக்கூடியவர்கள் கொள்முதலில் எந்தப் பங்கும் கொள்ள வேண்டியதில்லை. ஒரு ஏக்கரிலிருந்து பத்து ஏக்கர் வரையிலும் நிலமுள்ளவர்களிடமிருந்து ஒரு ஸ்லாப் முறையில் கொள்முதல் செய்யப்படுகிறது. அதற்கு மேலே நிலம் வைத்திருப்பவர்களைப் பொறுத்த வரையில், மார்க்கடபிள் ஸர்ப்ளஸ் முழுவதையும் அவர்கள் கொள்முதலுக்கென்று கொடுத்துவிடவேண்டும் என்பது முதலமைச்சர் அவர்கள் கலெக்டர்கள் மாநாட்டில் சொன்ன திட்டமாகும். ப்ரொக்யூர்மெண்ட் ஓரளவிற்குத் தொடங்கிவிட்ட நிலையில் இந்தத் திட்டம் அறிவிக்கப்பட்ட காரணத்தால், முழு அளவில் கொள்முதல் செய்யப்படவில்லை. இந்தப் பருவத்திற்கு முழு அளவில் அந்தத் திட்டத்தைச் செயல்படுத்தலாம். வருகிற குறுவையில் முழுமையாக அந்தத் திட்டம் செயல்படுத்தப்படும்.

THIRU. K. VINAYAKAM : Sir, my question has not been fully answered.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. விநாயகம் அவர்களுடைய கேள்விக்கு முழுமையாக விடை அளிக்கப்படவில்லையென்று சொல்லுகிறார். விடையளிக்கப்படாத பகுதியை யொட்டிய வினாவை மட்டும் போட அவரை அனுமதிக்கிறேன்.

**திரு. கே. விநாயகம் :** விலை கொடுக்கும் விஷயத்தில் அரசாங்கம் ஏற்கனவே "ஒரு க்விண்டாலுக்கு விலை இதுதான்" என்று ஒரு விலையை முடிவு செய்திருக்கிறது. அதற்குமேல், "இன்ஸென்டிவ் போனஸ்" என்று ஒரு தொகையை நம்முடைய அரசாங்கம் இதுவரையில் கொடுத்து வந்தது. இந்த இரண்டும் கொடுக்கிற நேரத்தில், இன்னும் அதிகமாக "இன்ஸென்டிவ் போனஸ்" தரவேண்டும் என்று மத்திய அரசாங்கத்திலிருந்து அவர்கள் கொடுத்திருக்கிறார்களே, அதை விவசாயிகளுக்குக் கொடுக்காமல் இந்த மாநில அரசு நிறுத்தி வைத்துக்கொண்டு ஏற்கனவே மாநில அரசு கொடுத்ததை மட்டுமே கொடுத்து வருவதற்கான காரணம் என்ன ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** முழுமையான விவரங்கள் தெரியாமல் கனம் உறுப்பினர் அவர்கள் பேசிக்கொண்டே வருகிறார்கள். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூட, "விலை அதிகமாகக் கொடுக்க

வேண்டு மென்று மத்திய அரசாங்கம் புதிதாக விலை நிர்ணயித்திருக்கிறதா ?" என்று முன்பொரு நாள் ஒரு கேள்வி கேட்டார்கள். நிதி இலாக்காவிலிருந்து நேற்றைய தினம் தான் எனக்குத் தகவல் வந்திருக்கிறது. இந்த மாநிலத்தைப் பொறுத்த வரையில், ரூ. 43 கொடுக்கலாம் என்று அவர்கள் நிர்ணயித்திருக்கிறார்கள். சாதாரணமான, "கோர்ஸ் வெரைட்டி"க்கு ரூ. 43 என்று நிர்ணயித்திருக்கிறார்கள். இந்த மாநிலத்தில் இப்பொழுது நாம் விலையாக 40 ரூபாயும், போனஸாக மூன்று ரூபாயும் கொடுத்துக் கொண்டு வருகிறோம்—வேறு பெயரில். "ஒரு குவிண்டாலுக்கு 43 ரூபாய் விலையாகக் கொடுங்கள்" என்று மத்திய சர்க்கார் சிபார்சு செய்திருக்கிறது. ஆனால், அதையே, 40 ரூபாய் விலையாகவும், மூன்று ரூபாய் போனஸாகவும் நாம் கொடுத்துக் கொண்டு வருகிறோம். இரண்டையும் ஒன்றாக "மெர்ஜ்" செய்து, விலையாக ஆக்கி விடலாம் என்று நம்முடைய நிதி இலாக்காவினர் யோசனை சொல்லுகிறார்கள். ஆகவே, மத்திய அரசாங்கம் எதைச் சொல்லுகிறார்களோ, அதை இப்போது நாம் கொடுத்து வருகிறோம். பெயர் தான் வேறு. நிதி இலாக்காவின் யோசனையையும் அரசாங்கம் யோசித்துக் கொண்டு வருகிறது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** சபாநாயகர் அவர்களே, "மத்திய சர்க்கார் நான்கு ரூபாய் அதிகமாக ஏதாவது கொடுக்கிறார்களா ?" என்று முன்பொரு நாள் நான் கேட்ட சமயத்தில், "விவரம் வரவில்லை" என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இப்போதாவது விவரம் வந்திருப்பதாகச் சொன்னார்களே, அதற்காக நன்றி. மூன்று ரூபாய் போனஸ் என்பது, ஏற்கனவே பழைய சர்க்கார் இருந்த காலத்தில், அந்தத் தொகை கன்ஸ்யூமர்களுக்குப் போகாமல், விவசாயிகளினுடைய இன்ஸென்டிவ்வுக்காகக் கொடுக்கப்பட்ட போனஸ் ஆகும். அதை இப்பொழுது இருக்கும்படியான விலையுடன் சேர்த்துக் கொடுத்து, விவசாயிகளுக்கு மீண்டும் ஊக்கத்தைத் தர இந்தச் சர்க்கார் ஆலோசனை செய்வார்களா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அரசாங்கத்தினுடைய கருத்தையேதான் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் விளக்கினார்கள். வாங்குகிறவர்களுக்கு அந்த இன்ஸென்டிவ் போனஸ் தொகை போகாமல், அரசாங்கமே தான் அந்த மூன்று ரூபாய் இன்ஸென்டிவ் போனஸ் தொகைக்கான செலவையும் ஏற்றுக்கொள்ளுகிறது. இந்த மாநிலத்தைப் பொறுத்த வரையில், விலை ரூ. 43 ஆக இருக்கலாம் என்று மத்திய சர்க்கார் வரையறுத்து இருக்கிறார்கள். அதை இன்று அமல்படுத்துவதற்கு இந்த அரசாங்கம் முயலும். அதற்கு மேல் அதிகம் போக வேண்டும் என்று மத்திய சர்க்காரே கூட இப்போது எதிர்பார்க்கவில்லை. இப்பொழுது கொடுக்கும் விலை நியாயமான விலை, கட்டுபடியாகக்கூடிய விலை என்று மிகப் பெரிய அளவிற்கு நெல் விளைச்சல் உள்ள தஞ்சை மாவட்டத்திலேயே ஏகோபித்து ஒத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** மத்திய சர்க்கார் ஏற்கனவே நிர்ணயித்த விலை ரூ. 40 இப்பொழுது ரூ. 44 கொடுக்க வேண்டும் என்று அவர்கள் சொல்லுகிறார்கள். அதற்கு மேல் போனஸ் கொடுத்தார்கள். இப்பொழுது 44 ரூபாயை மாநில சர்க்கார் ஏற்றுக்கொண்டு, அதற்குமேல் போனஸ் கொடுக்கிறார்களா ? இல்லையா ? இது தான் என்னுடைய கேள்வி.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** நான் இதைத் தெளிவு படுத்த விரும்புகிறேன். கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கொஞ்சம் கவனிக்க வேண்டும். நாற்பது ரூபாய் விலையோடு, மூன்று ரூபாய் போனஸ் கொடுக்க வேண்டும் என்று மத்திய சர்க்கார் சொன்ன போது, நாற்பது ரூபாய் கூடக் கிடைக்கவில்லை. ரொம்பக் குறைவாக இருந்தது. நம்முடைய இந்த அரசாங்கம் தான், விவசாயிகளுக்குச் சற்று அதிகமாகக் கொடுக்க வேண்டும் என்ற கருத்தில் போனஸ் கொடுக்க முன்வந்தது. ஆகவே, மீண்டும் நிர்ப்பந்தித்து, இன்னும் ஏற்ற வேண்டும் என்று சொல்லுவது சரியான வாதம் அல்ல.



## உணவு தானியக் கட்டுப்பாடு

*** 132 வினா.—திரு. ஆ. கு. சுப்பையா :** மதிப்பிற்குரிய உணவு–வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) உணவு தானியக் கட்டுப்பாடுகள் சம்பந்தமாக, வர்த்தகர் சம்மேளனத்தின் சார்பில் மார்ச் மாதம் முதல் வாரத்தில், மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் அவர்களிடம் கூறப்பட்டுள்ள யோசனைகள் யாவை ?

(இ) அந்த யோசனைகள் பரிசீலிக்கப்பட்டனவா ?

(உ) ஆம் என்றால், விபரங்கள் யாவை ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** (அ) மதுரையிலுள்ள தமிழக அரிசி ஆலை உரிமையாளர்கள், நெல், அரிசி வியாபாரிகள் சங்கங்களின் கூட்டமைப்பு கீழ்க்கண்ட கருத்துரைகளைத் தெரிவித்துள்ளது :—

(1) இம் மாநிலம் உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற்றிருப்பதால், விலைவாசிகளைக் குறைக்கும் நடவடிக்கையாகத் தற்போதுள்ள விலை கட்டுப்பாடு, போக்குவரத்துக் கட்டுப்பாடு முதலிய உணவுப் பொருள்கள் மீதான எல்லாக் கட்டுப்பாடுகளையும் நீக்க வேண்டும். அரசாங்கக் கொள் முதல் திட்டத்தைக் கைவிட வேண்டும்.

(2) இம் மாநிலத்திலிருந்து அண்டை மாநிலங்களுக்கு அரசுக் கணக்கில் நெல் அல்லது அரிசி ஏற்றுமதி செய்யப்படுவதை உடனடியாக நிறுத்த வேண்டும்.

(3) நமது மாநிலத்தில் அறுவடையற்ற காலத் (Loan period) தேவைக்கு அறுவடைக் காலத்திலேயே நிலவர விலைப்படியே அரசு கொள் முதல் செய்து, கையிருப்பு வைத்துக் கொள்ள வேண்டும்.

(4) இம் மாநிலத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்த பிறகு, உபரியாக நெல் அல்லது அரிசி இருந்தால், அந்த நெல் அல்லது அரிசியை அண்டை மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்ய அரசே ஏற்பாடு செய்ய வேண்டும்.

(5) அரசு நிர்ணயித்த அதிக அளவு விலைக்கும் குறைவாக நெல் விலை இறங்குமென அது கருதினால், அப்போது அரசு காப்பு விலையை நிர்ணயிக்க வேண்டும். உற்பத்தியாளர்களின் நலனைப் பாதுகாக்கக் காப்பு விலையில் நெல் இருப்பு முழுவதையும் அரசாங்கம் கொள்முதல் செய்ய வேண்டும்.

(6) அரசாங்கம் பின்பற்றப் போகும் உணவுக் கொள்கையில் இறுதி முடிவு எடுப்பதற்கு முன்னர், இக் கூட்டமைப்பு தன் கருத்துக்களைக் கூற வாய்ப்பளிக்கப் படவேண்டும்.

7. உணவுக் கொள்கையை வகுப்பதில் அரசுக்கு ஆலோசனை கூற ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் இச் சங்கங்கள் முதலியவற்றின் முக்கியப் பிரதிநிதிகள் அடங்கிய, மாநில ஆலோசனைக் குழு ஒன்றை அமைத்தல் வேண்டும்.

(இ) ஆம்.

(உ) இக் கூட்டமைப்பின் கருத்துரைகளைக் கவனமுடன் அரசு பரிசீலித்தது. அரசாங்கக் கொள்முதலைக் கைவிடுவதோ எல்லாக் கட்டுப்பாடுகளையும் நீக்கிவிடுவதோ இயலாது. போதுமான முடை இருப்பு வைத்துக் கொள்ள முனைப்பான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இம்மாநிலத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்த பிறகே மற்ற மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்வது அனுமதிக்கப்படும். நெல்லின் விலை குறையும்போது காப்பு விலைகள் நிர்ணயிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். உணவு பற்றிய ஆலோசனைக் குழு ஒன்றை அமைக்கத் தற்போது குறிப்பிட்ட செயற் குறிப்பு எதுவுமில்லை. மாவட்டத்திற்குள் ஒரு வட்டத்திலிருந்து மற்றொரு வட்டத்திற்கு நெல், அரிசியை எடுத்துக் கொண்டு செல்வதற்கான தடையை நீக்குவதற்குப் படிப்படியான திட்டத்தை அரசு பின்பற்றி வருகிறது.

தேர்ந்தெடுக்கப்பட்ட சில மாவட்டங்களிலே ஒரு மாவட்டத்திலிருந்து மற் றொன்றிற்கு நெல், அரிசியை எடுத்துச் செல்வதற்கான தடையை நீக்கு வது பற்றி நாளடைவில் ஆலோசிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ஆ. ரு. சுப்பையா விஞ கேட்க விரும்பவில்லை என்று நினைக்கிறேன் அடுத்து, டாடர் ஹாண்டே.

DR. H. V. HANDE : Is the Hon. Minister aware that, after the stoppage of the open market in Coimbatore in order to stop the movement of rice to Kerala, the public there find it very difficult to get on with the small ration that they are getting ? Formerly they were getting rice from the open market also. I have received terrible news from Coimbatore that the people there are finding it extremely difficult to have even one proper meal. Is the Government a ware that because of the stoppage of the open market, people in Coimbatore are finding it very difficult to get on ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** கனம் சபாநாயகர் அவர் களே, கனம் உறுப்பினர் அவர்கள் சொல்கிற கருத்து சரியானது அல்ல. கோயம்புத்தூர் நகரத்தில் சட்டபூர்வமாக ரேஷன் அமுல்படுத்தப்பட்டிருக் கிறது. கோயம்புத்தூர் நகரத்தைக் கேந்திரமாக வைத்துக் கொண்டு, சிலர் கேரளாவுக்கு அரிசியைக் கள்ளக் கடத்தல் செய்து வருகிறார்கள் என்று அரசாங்கத்திற்குத் தகவல் வந்தது. சென்னை நகரத்தில் தனியார் அரிசி வியாபாரத்தை அனுமதிக்கப்படுவதில்லை. Statutory Ration இருக்கும்படியான இடத்திலே — கோயம்புத்தூர் நகரத் திலே தனியார் வியாபாரம் இருந்து வந்தது. ஆனால், நாளடைவில் கேரளாவுக்குக் கள்ளக் கடத்தல் நடத்துவதன் மூலமாக, கோயம்புத்தூர் நகருக்கு வெளியிலிருந்து 100 மூட்டை நெல் வந்தால் அதில் 70 மூட்டை கூட கோயம்புத்தூர் நகர மக்களுக்குப் பயன்படுவதில்லை. எல்லாம் கள்ளக் கடத்தலுக்குப் போகின்றது. ஆகவே, இதைத் தடுக்கும் முயற்சி யில் கோயம்புத்தூர் கலெக்டர் அவர்கள் எந்த நெல்லும் நகருக்குள் பிரவேசிக்கக் கூடாது என்று தடை உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். கோயம்புத்தூர் கலெக்டரும், நானும் சுமார் இரண்டு மணி நேரம் அங்கிருக்கும் நிலைமையைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம். இதுதான் அங்கிருக்கும் உண்மை நிலை.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** சபாநாயகர் அவர்களே, இந்தக் கொள் முதல் விஷயத்திலே, சர்க்கார் திட்டவட்டமான கொள்கையை அனுசரிக்க வேண்டியது அவசியம் என்று கருதுவதோடு, போக்குவரத்துத் தடையைப் போக்கிவிடலாம் என்று சொல்கிறார்கள். போக்குவரத்துத் தடையை எடுத்துவிடலாம் என்றால், ப்ரொக்யூர்மென்ட்—மார்க்கெடபிள் சர்பிளஸ் என்றுதான் பொருள். மார்க்கெடபிள் சர்பிளஸ் என்றால், மக்களிடத் தில் அரிசி இருக்கிறது என்பது தான் பொருள். போக்குவரத்துத் தடையை நீக்கிவிட்டோம் என்றால், சிலரிடத்திலே அரிசி அதிகமாகச் சேரும் ; ஆகவே, கொள்முதலை ஓரளவு செய்து, எல்லா விவசாயிகளுக் கும் நன்மை ஏற்படும் வகையில், இந்தப் போக்குவரத்துத் தடையை நீக்க அரசாங்கம் யோசிக்குமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், இந்தப் பிரச்சினையை இன்னும் ஆழமாகக் கவனிக்க வேண்டும். சில மாவட்டங்கள் உபரி மாவட்டங்களாக இருக்கின்றன. தஞ்சாவூர் மாவட்டத்திலிருந்து கதவைத் திறந்து விட்டால், கோயம்புத்தூர் மாவட் டத்திற்கு உதவியாக இருக்கும் என்பதில் மகிழ்ச்சி தான். திருச்சிராப் பள்ளி, தென் ஆர்க்காடு, வட ஆர்க்காடு, தஞ்சாவூர் மாவட்டங்கள் உபரி மாவட்டங்களாக இருக்கின்றன. உபரி மாவட்டங்களில் தான் கொள் முதல் நீடித்து நடக்கிறது. உபரி மாவட்டங்கள் — பற்றுக்குறை மாவட்டங் கள் என்று பிரிக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பிட்ட இலக்கை அடைந்த வுடன் கொள்முதல் தளர்த்தப்படுகிறது. செங்கற்பட்டு மாவட்டத்தில்



கொள்முதல் விஷயத்தில் ஒரு சுமுகமான நிலைமை இருப்பதாகச் சொல் லப்படுகிறது. ஆகவே, ஜில்லாவுக்கு ஜில்லா இருக்கிற நடமாட்டத் தடை எடுப்பதனால் நல்ல பலன் ஏற்படாது. ஆகவே, இந்த உத்தேசம் இப்போது எழவில்லை.

**திரு. அ. ஆறுமுகம் :** தலைவர் அவர்களே, இப்பொழுது ஒரு எக்க ருக்கு 4 மூட்டை, 8 மூட்டை என்று ப்ரொக்யூர்மெண்ட் செய்கிறார்கள். இதை மாற்றி, ஒரு எக்கரில் என்ன விளைந்தது என்ற புள்ளி விவரத்தை எடுத்துக் கொண்டு, விளைச்சலுக்குத் தகுந்த மாதிரி கொள்முதல் செய்யும் உத்தேசம் சர்க்காருக்கு உண்டா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** ஒரு எக்கரும், ஒரு எக்க ருக்கும் குறைவாக நிலம் வைத்திருப்பவர்களுக்கு கொள்முதல் கிடையாது என்று ஏற்கெனவே சொல்லியிருக்கிறோம். இதன் காரணமாக 14 லட்சம் விவசாய மக்கள் விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்களிடம் ஒரு மூட்டை, இரண்டு மூட்டை நெல் கொள்முதல் செய்வது என்ற திட்டத்தை அரசாங்கம் கொண்டுவராது.

**திரு. எ. பாலசுப்பிரமணியன் :** தலைவர் அவர்களே, இப்போது கோயம்புத்தூர் போன்ற நகரங்களில் 7 அவுன்ஸ் என்று தினசரி கிடைக் கும் நிலை இருப்பதால், பற்றுக்குறையைச் சரிசெய்துகொள்ள அவர்கள், வெளியில் வாங்க வேண்டிய நிர்ப்பந்தம் இருப்பதால், இதைப் போக்கு வதற்காக, அளவை உயர்த்த, படிப்படியாக அரசாங்கம் துரித கவனம் செலுத்துமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இந்த நிலைமையை நான் நேற்றே விளக்க விரும்பினேன். ரேஷன் பகுதிகளில் 2 கிலோ என்று கொடுத்த அளவை ஒண்ணேமுக்கால் கிலோவாகக் கொடுக்க வேண்டு மென்ற நிலையை—1,500 கிராம் என்பதை 1,400 கிராம் ஆகக் கொடுக்கக் கூடிய நிலையை—மத்திய அரசாங்கம் தாக்கீது ஒன்றை அனுப்பி, ஏற்படுத்தி யிருக்கிறது. "இந்தியாவிலேயே உணவு நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. வெளியிலிருந்து வருவது எல்லாம் மிகச் சிரமமாக இருக்கிறது. இந்தப் பற்றுக் குறையை எல்லாம் நீங்கள் சமாளிக்க வேண்டும்" என்று மத்திய அரசாங்கம் ஆணையிட்டதன் விளைவாக, இந்த அளவு குறைக்கப் பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அளவை உயர்த்த இப்போது நிலைமை இடம் கொடுக்கவில்லை.

**திரு. நா. கிருட்டிணன் :** தலைவர் அவர்களே, செங்கற்பட்டு மாவட்டத் தில் கட்டுப்பாடுகள் நீக்கப்படாதிருந்தபோதிலும், காஞ்சீபுரத்திலிருந்து கார்கள் மூலமாகச் சென்னைக்கு அரிசி வருவது அரசாங்கத்திற்குத் தெரியு மா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அம்மாதிரியாக அரிசி கொண்டுவரப்பட்டதன் மீது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அது மட்டுமல்ல. இனிமேல் அவ்வாறு கள்ளத்தனமாகக் கொண்டுவரும் எல்லாக் கார்களையும் பறிமுதல் செய்ய வேண்டும். அவற்றின் உரிமை யாளர்கள் மீது அதற்கான வழக்குகள் பதிவு செய்யப்படும் என்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. நிலைமையை அரசாங்கம் கவனித்துக் கொண்டு வரு கிறது.

**திரு. க. ரா. நல்லசிவன் :** கோயம்புத்தூர் ஜில்லாவிலிருந்து கேர ளாவுக்குக் கள்ளக் கடத்தல் நடைபெறுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஈரோடு தாலுகாவிலே வண்டிப் போக்குவரத்தைக்கூட அதிகாரிகள் தடுக்கிறார்கள். லாரியாக இருந்தாலும் அரிசியைக் கொண்டு போய்விடலாம். வண்டிகளைப் பொறுத்த வரையில் சிரமம் இல்லாமல் இருப்பதற்காக, கேரள பார்டரில் வலுவான பாதுகாப்புப் போட அரசாங் கம் நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** ஈரோடு பகுதியிலே நடை பெற்றதுபோல் ஏதாவது இருந்தால் கனம் உறுப்பினர், அரசாங்கத்திற்கு —அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு வருவது நல்லது. கேரள

[1967 ஜூலை 1

எல்லையில் புதிதாக இன்னும் காவல் நிலையங்கள் துரிதப் படுத்தப் பட்டுவிட்டன. 24 மணி நேரமும் ரோந்து வருகிற மாதிரி போலீஸ் ஜீப்புகளைத் தயார்படுத்தி, தவறுகள் நடக்காமல் பார்த்துக் கொள்ள ஏற் பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பொள்ளாச்சியில் ஒரு ரெவின்யூ இன்ஸ் பெக்டர் மீது ஒரு வழக்குப் பதிவு செய்யப்பட்டு விசாரணையில் இருந்து வருகிறது.

**திரு. ரா. ரா. முனுசாமி :** தலைவர் அவர்களே, செஞ்சி மாவட்டத் திலே ஏழை விவசாயிகளிடமிருந்துதான் கொள்முதல் செய்யப்பட்டது; பெரிய நிலச் சுவான்தார்களிடம் கொள்முதல் செய்யத் தயக்கம் காட்டப் பட்டது என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இந்த விஷயத்தை, அந்த மாவட்ட அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு வருமாறு கனம் உறுப்பினர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் :** கோவையிலிருந்து சிலர் அரிசியைக் கேரளாவுக்குக் கடத்துகின்ற காரணத்தால், கோவை மக்கள் கால் பங்கு பட்டினி கிடத்தப்படுகிறார்கள். வியாபாரிகளில் இரண்டொருவர் அயோக்கிய ராக இருக்கலாம். அதற்காகக் கோயம்புத்தூரிலுள்ள அத்தனை மக்களை யும் கால் பட்டினி போடுவது நல்லதல்ல. "பசி வந்திடப் பத்தும் பறந்து போகும்" என்று சொல்வார்கள். ஆகவே, அந்த மக்களுக்கு முழுக்க, முழுக்க அவர்களுக்குத் தேவையான அளவு அரிசி கொடுக்க வேண்டும். ஏற்கெனவே ரூபாய்க்கு ஒரு படி அரிசி என்று போடப்பட்டு வரும் அரிசியை அரிசி ரேஷன் கடையில் வாங்க முடியாத நிலையில் மக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். ஆகவே, இதைக் கவனித்து அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** கோயம்புத்தூரில் ஏற்பட் டிருக்கிற நிலைமைகள், கள்ளக் கடத்தல் நடைபெறுவதற்கு அரசாங்கம் அனுமதித்துவிட்டாலும், அரசாங்கத்தின் மீது குற்றம் சாட்டுகின்ற அபாயம் தான் ஏற்படும். இன்றைக்கு ஏற்பட்டிருக்கிற நிலைமையைக் கனம் உறுப் பினர் அவர்கள் கூறினார்கள். நான் கோவையில் 200, 300 வியாபாரி களைக் கூட்டி வைத்துச் சொன்னேன். தவறு செய்கிற வியாபாரிகள் இரண்டு மூன்று பேர்கள் இருப்பார்கள். நீங்கள் ஒரு பத்து பேர் சேர்ந்து அந்த வியாபாரிகளைக் கண்டுபிடித்துத் தரக்கூடாதா என்றேன். அந்த இரண்டு மூன்று பேரை அடையாளம் காட்டுங்கள் என்றேன். இது விஷய மாக முதலமைச்சரைக் கண்டு பேசினேன். நான் அவர்களிடம் சொல்லி வந்து 20 நாட்களாகிறது. கோயம்புத்தூர் வியாபாரிகளிடமிருந்து இது வரையில் எதுவும் எனக்குத் தகவல் வரவில்லை. ஆகவே அங்கிருக்கும் உண்மைக்கும், இவர் கூற்றுக்கும் பொருத்தமில்லையென்று கூறிக்கொள் கிறேன்.

மு. ப. 10-00

**திரு. ஜெ. பெள்ளி கௌடர் :** சார், கள்ளக் கடத்தல் செய்கிறவர்கள் கூடலூர் பகுதியில்தான் இருக்கின்றனர். ஆகவே அந்தப் பகுதியைப் பாதுகாத்துக் கொண்டு, கோயம்புத்தூர், நீலகிரிக்கு இடையே உள்ள நெல் போக்குவரத்துக் கட்டுப்பாட்டை அரசாங்கம் நீக்குமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** கோயம்புத்தூர், நீலகிரி மாவட் டங்களுக்கு இடையே நெல் போக்குவரத்துக் கட்டுப்பாடு இல்லை. அவை இரண்டும் ஒரு மாவட்டம் போலவே நெல் போக்குவரத்தில் கவனிக்கப்பட வேண்டுமென்று கோயம்புத்தூர் கலெக்டர் உத்தரவு போட்டுவிட்டார்கள்.

**திரு. வ. ஜார்ஜ் :** கனம் சபாநாயகர் அவர்களே, கேள்வி கேட் பதற்கு உறுப்பினர்களைக் கூப்பிடும்போது தாங்கள் அருள் கூர்ந்து தங்களது இடது பக்கத்திலுள்ள உறுப்பினர்களையும் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**ஓர் உறுப்பினர் :** சார், ஆன் ய பாயின்ட் ஆப் ஆர்டர். கனம் அங்கத் தினர் சொற்பொழிவு ஆற்றுகிறாரா ? கேள்வி கேட்கிறாரா ?



1967 ஜூலை 1]

**திரு. வ. ஜார்ஜ் :** விளவங்கோடு தாலுக்காவில் குடும்பக்கார்டு திட்டம் அமலில் இருக்கிறது. நபருக்கு வாரத்திற்கு 900 கிராம் அரிசி கொடுக்கிறார்கள். அவர்களும் உண்டு இருப்பதற்குப் போதுமான அரிசி யை இந்தச் சர்க்கார் கொடுக்க வேண்டுமென்று அங்கிருந்து பல விண்ணப் பங்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன. அதை அதிகப்படுத்த சர்க்காருக்கு உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** விளவங்கோடு தாலுக்காவில் 900 கிராம் அரிசிதான் கொடுக்கப்படுகிறது என்பது உண்மை. கனம் முதல் அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிறபடி கொடுக்கவேண்டியவர்கள் கொடுத்தால் தான் நாம் கொடுக்க முடியும். கட்டாயக் கொள் முதலைக் கொண்டு வந்துவிட்டால் 900 கிராம் அல்ல, இன்னும் அதிகமாகக் கொடுக்கலாம். விளவங்கோடு தாலூகாவைப் பொறுத்த வரையில் கோரிக் கை நியாயமானதாக இருக்கலாம். நம்முடைய கொள்முதல் கையிருப்பு நிலையை அபிவிருத்தி அடைகிறபோது கவனிக்கப்படும்.

**திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் :** அமைச்சர் அவர்களிடம் ஒரு விளக்கம் கேட்கிறேன். உண்மையில் அவர்கள் குறிப்பிட்டதுபோல வியாபாரி களிடம் சொன்னார்கள். கள்ளக்கடத்தல்காரர்களைப் பிடித்துக்கொடுங்கள் கட்டுப்பாடுகளை எடுக்கிறோம் என்பதாகும். ஆனால் வெளியார்கள் இரண்டொ ருவர்தான் அம்மாதிரி கள்ளக்கடத்தல் வியாபாரத்தில் இறங்குகிறார்கள். அவர்களை வியாபாரிகள் பிடித்துக்கொடுப்பது என்பது முடியாத காரியம். அக்கிரமம் செய்பவர்களை அரசாங்கம் பிடித்துத் தண்டிக்க வேண்டும். அதற்காக ஊரில் உள்ளவர்களைப் பட்டினி போடாது, கட்டுப்பாட்டைத் தளர்த்த முன் வருமா ? கொடுப்பதும் இல்லை......கிடைப்பதும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேச்சின் நடுவில் குறுக்கிடுவதற்கு அருள்கூர்ந்து மன்னிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் கேள்வி போட வேண்டும். சொற்பொழிவாற்றக் கூடாது.

**திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் :** பட்டினி கிடக்காது மக்கள் உண்பதற்கு எப்படியாவது வகை செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** கனம் உறுப்பினர் ஒப்புக்கொண்டபடி கள்ளக் கடத்தல் நடைபெறுகிறது. அவர்களை வியா பாரிகள் பிடித்துக் கொடுப்பது என்பது இயலாத காரியம் என்பது உண்மை. கள்ளக்கடத்தல்காரர்களைப் பிடித்து அடக்க வேண்டியது சர்க்காரின் கடமை என்று சொல்கிறார்கள். அதில் சர்க்கார் வெற்றி பெற்றவுடன் இப்போதுள்ள கட்டுப்பாடுகள் நீக்கப்படும்.

**Thiru K. VINAYAKAM :** Sir, whereas it has been popularly believed that this complicated process of procurement of rice, movement of paddy and their distribution in paltry quantities to the consumers of the State, is not going to solve the entire problem and this is not a panacea for all the ills connected with the food distribution, will the Government consider the possibility of taking up the entire responsibility of wholesale food trade or entrusting it to the Food Corporation of India and thus solve the issue amicably to the entire satisfaction of producers, consumers, traders and what not?

**The Hon. Thiru C. N. ANNADURAI :** This is not a new suggestion or a novel one. It has always been there and if the Government feel that all other methods have failed, certainly they will look into that.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** டெபிசிட் தாலுக்காக்கள் என்று பிரித்து வைத்துவிட்டு, போதுமான உணவுப் பொருளை சர்ப்ளஸ் தாலுக்கா வில் இருந்து வாங்கிக் கொள்வதற்கும் தடை விதித்துவிட்டால், டெபிசிட்

தாலுக்காக்களில் உள்ளவர்கள் இன்றைய தினம் கள்ள மார்க்கெட்டைத் தேடிப்போகிற நிலை ஏற்படாதா என்று அறிய விரும்புகிறேன். ஆகவே, அங்குள்ள கட்டுப்பாட்டை நீக்குவார்களா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** கேள்வியைப் பொதுவான தாகப் போடுகிறார்கள். இது தவறான கருத்தாகும். நடமாட்ட கட்டுப்பாடு நிலைமை இல்லாமல் இருந்தாலேயே விலை குறைந்துவிடும் என்று சொல்லுவது சரியானதல்ல. உதாரணமாக இராமநாதபுரம் திருவாடானைப் பகுதியில் கட்டுப்பாட்டை எடுக்கச் சொன்னார்கள். அதன்காரணமாக இந்த பகுதியில் உள்ள தானியம் அங்கே கிடைக்காது ராஜபாளையம் போன்ற இடத்திற்குப் போக ஆரம்பித்து விட்டது. அதன் காரணமாக இப்போது கட்டுப்பாட்டைக் கொண்டுவரச் சொல்கிறார்கள்.

**ஹாஜி. ம. மு. பீர் முஹம்மது :** பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டத்தைப் பொறுத்த வரையில் காவேரி சமவெளிப் பிரதேசமாக இருக்கிற காரணத்தால் சாகுபடிக்கு அதிகச் செலவு ஆகாது. பிற மாவட்டங்களில் பாசனம் நீர் இறவையை அடிப்படையாகக் கொண்டு பம்பு செட்டுகள் வைத்து நடைபெறுவதால் செலவு அதிகமாகிறது. அதோடு விலைவாசி ஏற்றம் காரணமாக உணவுப் பொருள் உற்பத்திச் செலவு அதிகமாகவும் இருப்பதனால் தஞ்சை நிலக்கிழார்களை கேட்டுக்கொண்டு விலையை நிர்ணயிக்காமல், பிற மாவட்டங்களில் உள்ள வர்களையும் கலந்துகொண்டு நிர்ணயம் செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தனித்தனியாக அங்கங்கு உள்ள செலவுக் கணக்கு அடிப்படையில் அந்த அந்த மாவட்டக் கலெக்டர்களே தான் விலையை நிர்ணயம் செய்கிறார்கள். தஞ்சை மாவட்ட நிலக் கிழார்களைக் கேட்டு நிர்ணயிப்பது என்பது இல்லை. இப்போதுள்ளது மாக்சிமம் விலை. அதுவும் கோயம்புத்தூர் விலை ஒன்று, திருச்சி விலை ஒன்று என்பதாக இப்படித்தான் இருக்கிறது.

### இராமநாதபுரம் மாவட்டத் தலைநகர்

*133 வினா.—திரு. கரு. சீமைச்சாமி :
திரு. கே. வினாயகம் : } மதிப்பிற்குரிய உணவு-வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தின் தலைநகரை அந்த மாவட்டத்திற் குள் மாற்ற உத்தேசம் ஏதேனும் உண்டா ?

(இ) ஆம் என்றால், எப்போது அமுலாக்கப்படும் ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**திரு. கே. வினாயகம் :** இராமநாதபுரம் மாவட்டத்தின் தலைமைச் செய லகம் இத்தனை ஆண்டுகளாக மதுரையில் இருக்கிறது. இதை மாற்ற வேண்டுமென்று பல ஆண்டுகளாகக் கேட்டு வருகிறார்கள். இனியாவது இந்தச் சர்க்கார் இராமநாதபுரம் மாவட்டத்தின் தலைமைச் செயலகம் இராமநாதபுரத்திலேயே இருக்க ஏற்பாடு செய்வார்களா ?

**மாண்பமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** சார், இராமநாதபுரம் மாவட்டத்தின் தலைமையகம் இராமநாதபுரத்திலேயே இருக்கவேண்டு மென்ற கோரிக்கை நீண்ட நாட்களாக இருந்து வருகிறது. திரு. தங்கப்பன், எம்.எல்.ஏ. கூட அப்படிச் சொல்லியிருக்கிறார்கள். இதுபற்றி கலெக்டரிடம் விவரம் கேட்டு இருக்கிறோம். அவரது அறிக்கை வந்தவுடன் போர்டு இதுபற்றி பரிசீலனைசெய்து முடிவு எடுக்கும்.

**திரு. கரு. சீமைச்சாமி :** இராமநாதபுரம் மாவட்டத்தின் தலைமையகம் இராமநாதபுரத்திலேயே இருக்கவேண்டுமென்று திரு. தங்கப்பன் மாத்திரம் அல்ல, நமது சட்ட மந்திரி அவர்களும் கூடச் சொல்லி இருக்கிறார்கள். திரும்பத் திரும்ப கட்டடம் இல்லை, வசதி இல்லை என்று சொல்லாது எந்த இடத்திற்காவது, இராமநாதபுரம் மாவட்டத்திற்குள் மாற்ற நடவடிக்கை எடுப்பார்களா ?



**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** எல்லா மாவட்டங்களையும் பொறுத்தவரையில் பரிசீலனை செய்யப்படுகிறது. குறிப்பாகச் செங்கல்பட் டிலிருந்து சில பகுதிகளைப் பிரித்து, தனியாகக் காஞ்சீபுரத்தைத் தலைநகராகக் கொண்டு ஒரு மாவட்டம் அமைக்க இருக்கிறது. அது போலவே இராமநாதபுரம் மாவட்டத்தில் சிற்சில பகுதிகளைப் பிரித்து இராமநாதபுரம் மாவட்டம் என்று வைத்து மற்றவற்றை மற்ற மாவட்டங் களில் இணைக்க இருக்கிறது. இதுபற்றி விவரமான அறிக்கை வந்தவுடன் முடிவு எடுக்கப்படும்.

**திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் :** இராமநாதபுரம் மாவட் டத்தின் ஜில்லாக் கோர்ட் தேவக் கோட்டையில் இருக்கிறது. அங்கே கட்டிட வசதிகள் இருக்கின்றன. பக்கத்தில் காரைக்குடியிலும் கட்டிட வசதிகள் இருக்கின்றன. ஆகவே தேவக் கோட்டையிலோ அல்லது காரைக்குடியி லோ இராமநாதபுரம் மாவட்டத்தின் தலைமைச் செயலகத்தை வைக்க உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இது பற்றி பரிசீலனையில் இருக் கிறது என்று சொன்னேன். கனம் உறுப்பினர் தம் ஆலோசனையையும் அவர்களிடத்தில் சொல்லலாம். நமக்கு அறிக்கை கிடைத்தவுடன் பரி சீலனை செய்து முடிவு எடுக்கப்படும்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** மாவட்டங்களின் தலைமை யகம் அந்த அந்த மாவட்டத்திற்குள்ளேயே இருக்க வேண்டுமென்பது விவாதத்திற்கு இடமில்லாது ஒப்புக் கொள்ளப்பட வேண்டிய பிரச்சினை. இராமநாதபுரம் மாவட்டத்தின் தலைமையகம் இராமநாதபுரத்தில்தான் இருக்க வேண்டும். இப்போது செங்கல்பட்டு மாவட்டத்தின் தலைமையகம் சென்னையிலே இருக்கிறது. இவைகளை மாற்ற வேண்டுமென்ற நியாயத்தை இந்தச் சர்க்கார் மறுக்கவில்லை. நிதி நிலைமை இல்லாத காரணமாகவே இப்படியே விடப்பட்டிருக்கிறது.

### *Loop*

*134 *Q.*—THIRU. K. VINAYAKAM : Will the Hon. the Minister for Public Health be pleased to state ;

(*a*) whether it is a fact that I.U.C.D. or loop has so far not been implemented by Madras Government ; and

(*b*) if so, the reasons therefor ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) இல்லை.

(இ) இந்தப் பிரச்னைக்கு இடமில்லை.

**திரு. கே. வினாயகம் :** இந்த intra uterine contraceptive device என்பதற்கு வளையம் என்று சொல்கிறார்களே, இதைப் பற்றி தேர்தல் காலத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் மிகக் குறைவாகப் பேசி வந்ததன் காரணமாகத்தான் இதை தடுத்து நிறுத்துவதற்கு இப்போது முயற்சிக்கிறார்கள்?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** குறுக்கிடுவதற்கு மன்னிக்க வேண்டும். கேள்வியே வளையம் வளையமாகப் போய் வருகிறது (சிரிப்பு). கனம் உறுப்பினர் கேட்ட கேள்வியின் முற்பகுதி தவறான கருத்தாகும். திராவிட முன்னேற்றக் கழகம் குடும்பக் கட்டுப்பாட்டை எதிர்க்கவில்லை. அவர்கள் தலைமையேற்று நடத்தி வைக்கிற மங்களகர மான திருமண நேரத்திலே கூட குடும்பக் கட்டுப்பாட்டை வலியுறுத்தி வருகிறார்கள். உணவு நெருக்கடிக்கு ஜனத்தொகைப் பெருக்கந் தான் காரணம் என்று சொல்லப்பட்டு வந்ததை மறுக்கிற வகையில் பேசி யிருக்கலாம். திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்தவர்கள் சிலபேர் ஆரம்பத்தில் குடும்பக் கட்டுப்பாடுத் திட்டம் தேவையில்லை, எவ்வளவு குழந்தைகளை வேண்டுமானாலும் பெறலாம் என்று சொல்லியிருக்கி றார்கள். நல்ல வேளையாக அவர்கள் இப்போது காங்கிரஸ்காரர்களிடத்தில் தான் இருக்கிறார்கள்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** இந்தக் குடும்பக்கட்டுப்பாட்டுத் திட்டத்தை இன்றுள்ள நிலைமையில் அமல்படுத்துவதை மாற்றி, தொத்த் நோய்கள் உடையவர்களுக்கு, டி.பி., லெப்ரசி போன்ற வியாதி உடையவர்களுக்குக் குடும்பக்கட்டுப்பாடு முறையைக் கையாள உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணதுரை :** குடும்பக் கட்டுப்பாடு பிரச்சினையில் எத்தகைய புதுப்புது முறைகளைக் கையாளலாம் என்பதைப் பற்றி டாக்டர் சந்திரசேகரன் அவர்கள் புதுப் புது யோசனைகளை ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள். அவைகள் எல்லாம் நல்ல முறையில் பரிசீலிக்கப்பட்டு மேறகொள்ளப்பட வேண்டும். கனம் உறுப்பினர் குறிப்பிட்டவர்களுக்குக் குடும்பக் கட்டுப்பாடு இல்லை, அவர்கள் பிள்ளைகளே பெருது இருக்க ஸ்டெரிலைசேஷன்—மலடாக்கப்பட வேண்டியது முறை. அதைப்பற்றியும் இப்போது பரிசீலீத்துக் கொண்டு வருகிறார்கள்.

**திரு. கே. விநாயகம் :** ஐயா, இந்த அரசாங்கத்திற்கு குடும்பக்கட்டுப்பாட்டில் நம்பிக்கை யிருந்தால், அந்தக் கட்டுப்பாட்டை செய்வதற்கு இது ஒரு முறை என்று மத்திய சர்க்கார் பரிசீலனை செய்து, ஆராய்ச்சி செய்து டாக்டர் சந்திரசேகரன் அவர்களே, இது நல்ல பலனை அளிக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறபோது ஏன் இதை வளர்ப்பது கூடாது ? இதை எதிர்க்க வேண்டிய காரணம் என்ன ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணதுரை :** கொஞ்சம் ரசக்குறைவானதாக இருந்ததால் முழுக்க விளக்க முடியவில்லை. லூப் சிஸ்டம்—வளையம் போட்டுக் கொள்கிற முறை இருக்கிறது, அறுவை சிகிச்சை முறை இருக்கிறது. வளைய முறையை எடுத்துக் கொண்டால் தேவைப்படுகிறபோது போட்டுக் கொள்வது, மற்ற நேரத்தில் எடுத்து விடுவது என்கிறபோது போட்டு எடுப்பதில் சில கோளாறுகள் இருக்கின்றன என்று உயர்மட்டத்தில் உள்ள மருத்துவர்கள் கருதுகிறார்கள். தற்காலிகமாகத் தான் இது தடுத்து நிறுத்தும். ஆனால் நிரந்தரமான ஏற்பாடாக—இனி குழந்தைகளே வேண்டாம் என்கிற அளவில் அறுவை சிகிச்சை தான் நல்ல பலனை—நிரந்தர பலனை அளிக்கிறது. அறுவைச் சிகிச்சையைப் பொறுத்தவரையில் மற்ற மாநிலங்களைவிட நம் மாநிலம் தான் நல்ல வெற்றியைக் கண்டிருக்கிறது என்று பாராட்டுகிறார்கள்.

**திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் :** குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை மிகவும் தீவிரமாக நம் அரசு அமுல் படுத்திக் கொண்டு வருகிறது. இப்போது விவசாய வேலைகளுக்கு ஆட்களே கிடைப்பதில்லை. விவசாய வேலைகளுக்கு ஆட்கள் தேவைப்படுகிறார்கள் என்ற காரணத்தினால் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தைத் கைவிடுவார்களா ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணதுரை :** இது புதிய கருத்தல்ல. ரொம்ப நாளாக இருந்து வருகிற கருத்தாகும். நம் நாட்டைப் போல வேறு எந்த நாட்டிலும் இப்படி விவசாய வேலைகளுக்கு அதிகமான ஆட்களை வைத்துக் கொண்டு குறைவான பலனை. பெறுகிறநிலை இல்லை. விவசாய வேலைகளில் எல்லா மக்களும் ஈடுபட வேண்டும் என்ற நிலையில் நாம் தான் அடிமட்டத்தில் இருக்கிறோம். பெரிய வெளிகளில் அவர்கள் ட்ராக்டர்கள், புல்டோசர்கள் கொண்டு குறைவான ஆட்களை வைத்துக் கொண்டு அதிக அளவுக்கு விவசாயத்தில் பலனைப் பெறுகிறார்கள். விவசாயத்திற்கு ஆட்கள் கிடைக்காமல் போய்விடக் கூடாது என்பதற்காக குடும்பக்கட்டுப்பாட்டுத் திட்டத்தை இந்தச் சர்க்கார் கைவிடுவதாக நோக்கம் இல்லை. இன்னும் எளிதான முறையில் கூடப் பேசுவார்கள். பத்து மக்கள் இருந்தால் பத்துக் கைகள் சோறு போடும், பிழைத்துக் கொள்ளலாம் என்பார்கள். அது தவறு என்பதை குசேலர் புராணம் நன்றாகக் காட்டுகிறது. (சிரிப்பு.)

**திரு. எம். சுரேந்திரன் :** சார், மக்களின் பெருக்கம் அதிகமாகிறது என்பதால் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தைக் கொண்டுவரவில்லை. பொருள்கள் போதுமான அளவு கிடைக்கவில்லை. அதற்காகத்தான் குடும்பக் கட்டுப்பாடு திட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. சோஷலிஸ சித்தாந்தத்தை நம்புகிறவர்கள் உழைப்பு தேசத்தின் செல்வம் என்று கொள்ளவேண்டுமென்று சொல்கிறார்கள். அப்படியிருக்கும்பொழுது உழைப்பு முழுமையும் பயன்படுத்திச் செல்வத்தை உண்டாக்க வேண்டுமென்பதை சர்க்கார் ஒப்புக்கொள்கிறார்களா ?





**மாண்புமிகு திரு. சி. என். அண்ணதுரை :** உழைப்புச் சக்தியேகூட அதிகக் குழந்தைகள் பெறுவதால், பெற்றோர்களுக்கும், குழந்தைகளுக்கும் குறைந்துவிடுவதாக விஞ்ஞானம் சொல்கிறது.

**திரு. ஈ. ஆர். கிருஷ்ணன் :** ஐயா, சமீபத்தில் அமெரிக்காவில் கருத் தடை ஏற்பட வில்லைகள் தயாரித்துள்ளதாகவும், அது நன்றாக வேலை செய்வதாகவும் பத்திரிகையிலே செய்தி வந்தது. அது சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதா ? அந்த முறையைச் சர்க்கார் பயன்படுத்த உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணதுரை :** நானும் கனம் அங்கத்தினர் அவர்களைப் போல பத்திரிகையில் பார்த்தேன். ஆனால் இன்னும் அந்த மாத்திரையைப் பரிசீலிக்கின்ற வாய்ப்புக் கிடைக்கவில்லை.

**திரு. என். சங்கரய்யா :** குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தைப் பற்றி மக்கள் மத்தியிலே பிரச்சாரம் செய்தால் தான் பலன் அளிக்கும். மதுரை மாவட்டக் கவுன்சில் கூட்டத்திலே, மதுரையிலே அறுவைச் சிகிச்சை செய்வதற்காகப் பல இடங்களிலே பிச்சைக்காரர்களைக் கட்டாயப்படுத்தி அறுவைச் சிகிச்சை செய்து பணம் கொடுக்கப்பட்டிருப்பதாகப் புகார் வந்திருக்கிறது. அறுவை சிகிச்சை செய்யும் பொழுது அவர்கள் தாங்களாகவே முன் வந்து செய்து கொள்ளக்கூடிய வகையில் அரசாங்கம் உத்திரவிடுமா ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணதுரை :** அதற்காகத் தரப்படுகிற போனஸ் தொகையை இப்பொழுது நிறுத்துவதாக இல்லை. கனம் அங்கத்தினர் சொன்ன யோசனை கருத்தில் கொள்ளப்பட்டு தானகவே முன் வந்து செய்து கொள்ளக் கூடிய முறையிலே சீர்திருத்தம் ஏற்படுகின்ற முறையிலே சர்க்கார் பிரச்சாரத் துறையை முடுக்கி வைக்கக் கூடிய முறையை மேற்கொள்ளும்.

**திரு. கே. விநாயகம் :** குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தில் நம்பிக்கை வைத்திருக்கிற சர்க்கார் அதை நிறைவேற்றுவதற்குப் பல முறைகள் இருக்கின்றன. வாஸக்டமி சிஸ்டம், லூப் சிஸ்டம், பில்ஸ் சிஸ்டம், லூப்ரிகன் சிஸ்டம் என்று வந்திருக்கிறது. இவற்றிலே எல்லாம் மத்திய சர்க்கார் ஆராய்ச்சி செய்து அதன் விளைவாக நல்ல பலன் தருகிறது என்ற முடிவுக்கு வந்திருக்கிறார்கள். ஆகவே, இவற்றிலே எந்த முறையையாவது நம்முடைய தமிழ் நாட்டிலே எடுத்துக் கொண்டு உபயோகப்படுத்துவதற்கு முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்துக்கொள்வார்களா ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணதுரை :** எல்லாவிதமான முறைகளும் பரிசீலிக்கப்படும். ஆனால், கனம் உறுப்பினர் அவர்களைப் போல் வெகுதீவிரமாக, வயது காரணமாக, நான் ஈடுபடவில்லை.

**திரு. க. மு. ராசகோபால் :** தலைவர் அவர்களே, மத்திய சர்க்காராலே செய்யப்பட்ட பெரிய ஆராய்ச்சிகளிலே ஏற்பட்ட முறைகளிலே குடும்பக் கட்டுப்பாடு செய்தும் பல குடும்பங்களிலே மீண்டும் குழந்தைகள் பெற்றிருக்கிறார்கள் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணதுரை :** ஆயிரத்தில் ஒன்று தவறிவிடலாம் என்று மருத்துவர்கள் கூறுகிறார்கள்.

**திரு. டி. மார்டின் :** குடும்பக் கட்டுப்பாடு திட்டத்திற்கு விரோதமாக சில நாட்களாகப் பத்திரிகைகள், பிள்ளைகள் அதிகமாகப் பெற்றவர்களுக்குப் பரிசு வழங்கும் திட்டத்தைக் கொண்டிருப்பது சரியா ? அதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணதுரை :** அப்படிச் சிலர் கருதி வெளியிடுவார்களானால் அவர்களைக் கண்டிப்பதற்கோ, தண்டிப்பதற்கோ பதிலாக, அவர்களிடம் உண்மை நிலையை எடுத்துச் சொல்லி அந்தப் போக்கை மாற்றியமைக்க முடியும் என்ற நம்பிக்கை சர்க்காருக்கு இருக்கிறது.

**திரு. ந. தருமலிங்கம் :** லூப் என்பதற்கு சரியான பொருள் என்ன ? அதற்குத் தமிழ்ச் சொல் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை :** கனம் உறுப்பினர் அவர்களுக்கு நெருங்கிய நட்புடைய மருத்துவரிடத்திலே கேட்டால் சுவையான தகவல்கள் எல்லாம் கிடைக்கும்.

### *Director of Medical Education*

*135 *Q.*—THIRU A. M. RAJA : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether there is any proposal to abolish the post of Director of Medical Education : and

(*b*) if so, its present stage ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

**திரு. ஏ. எம். ராஜா :** தலைவர் அவர்களே, டைரக்டர் ஆப் மெடிகல் எஜுகேஷன் மருத்துவக் கல்வியை மட்டும் வைத்துக் கொண்டு, ஆஸ்பத்திரி நிர்வாகங்களை யெல்லாம் டைரக்டர் ஆப் மெடிக்கல் சர்வீஸ் நிர்வாகம் செய்கிற நிலைமையைமாற்றி இரண்டையும் மீண்டும் இணைப்பதற்கு அரசாங்கம் முயற்சிக்குமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** கொள்கைபற்றிய கேள்வி. எனவே இப்பொழுது பதில் கொடுப்பதற்கு இல்லை.

**திரு. மா. இராசாங்கம் :** தலைவர் அவர்களே, இப்பொழுது இருக்கிற மருத்துவக் கல்வி இயக்குநருக்குக் கொடுக்கப்படுகிற சம்பளம் என்ன ? எப்பொழுது நியமிக்கப்பட்டார், அவருடைய வயது என்ன என்ற விவரங்களை அறிவிக்க முடியுமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** 1966-ம் வருடம் ஜூன் மாதம் 1-ம் தேதியிலிருந்து 1968-ம் வருடம் அக்டோபர் மாதம் 4-ஆம் தேதி வரை அவர் காண்ட்ராக்ட் பேஸிஸில் நியமிக்கப்பட்டிருக்கிறார் அவருக்கு பிக்ஸ்ட் பே ரூபாய் 1,500, நான் பிராக்டீஸ் அலவன்ஸ் ரூபாய் 400 கொடுக்கப்படுகிறது. அவருடைய வயது 59. அவருடைய பிறந்த தேதி 1908-ம் வருடம் மார்ச் மாதம் 29-ம் தேதி.

**திரு. செ. பாலசுப்பிரமணியன் :** டைரக்டர் ஆப் பப்ளிக் ஹெல்த், டைரக்டர் ஆப் மெடிகல் சர்வீஸஸ் இரண்டிற்கும் ஒரே டைரக்டராகப் போடுவதாக அரசாங்கம் பரிசீலித்ததே, அதன் மேல் என்ன முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** இது மூலக் கேள்விக்குத் தொடர்பு இல்லாத கேள்வி. தனிக் கேள்வி போடவேண்டும்.

**திரு. கரு. சீமைச்சாமி :** மருத்துவக் கல்லூரி இயக்குநர் திறமை வாய்ந்தவர்களாகத் தான் போடுகிறார்கள். ஆனால், அவர் மருத்துவக் கல்லூரி இயக்குநராகப் போனவுடனே அவருடைய திறமை எல்லாம் பயன்படுவது இல்லை, அட்மினிஸ்ட்ரேடிவ் விஷயத்தில் எப்படி மாற்றுவது, உயர்த்துவது போன்ற விஷயங்களிலே ஈடுபடுவதால், அவர்களுடைய திறமை மக்களுக்குப் பயன்பட முடிவதில்லை. ஆகையால், அதற்கு ஐ.ஏ.எஸ். ஆபீஸர்களைப் போடுவதற்கு அரசாங்கம் முயற்சிக்குமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தற்போது அப்படி ஒன்றுமில்லை.





**திரு. சி. கோவிந்தராசன் :** டைரக்டர் ஆப் மெடிக்கல் எஜுகேஷன், டைரக்டர் ஆப் மெடிக்கல் சர்வீஸஸ் என்று இருவர்கள் இருப்பதால் இருவருடைய அலுவல்களும் வரையறுக்கப்படாத காரணத்தாலே நிர்வாகத்திலே காலதாமதம் ஏற்படுகிறதாகத் தகவல் வந்திருக்கிறதா, அப்படியிருந்தால் ஒவ்வொருவருக்கும் என்ன என்ன அலுவல்கள் என்பதை திட்டவட்டமாக வரையறுத்து நிர்வாகக் காரியங்களைச் சீக்கிரமாகச் செய்வதற்கு அரசாங்கம் முயற்சிக்குமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** காலதாமதம் ஆவதாகச் சொல்வது சரியல்ல. குறிப்பாக, ஸ்பெஸிபிக்காகச் சொன்னால் நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. ந. வீராசாமி :** முன்பு இருந்த அரசாங்கத்திற்கும், டைரக்டர் ஆப் மெடிக்கல் சர்வீஸஸுக்கும் ஏற்பட்ட தகராறு காரணமாக, டைரக்டர் ஆப் மெடிக்கல் சர்வீஸஸுக்கு இருக்கின்ற அதிகாரங்கள் குறைக்கப்பட வேண்டுமென்ற எண்ணத்தில், டைரக்டர் ஆப் மெடிக்கல் எஜுகேஷன் என்ற அதிகாரி நியமிக்கப்பட்டாரா ? இந்தப் பதவியை எடுத்துவிடுவதற்கான உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** அது கனம் உறுப்பினருடைய கருத்து. பதில் ஒன்றும் இல்லை.

### பஞ்சாயத்து யூனியன் மருந்தகங்கள்

*136 வினா.—**திரு. எஸ். சிவசுப்பிரமணியன் :** மதிப்பிற்குரிய பொதுச் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்படுத்தாத கூட்டு மன்றப் பகுதிகளில் உள்ள அரசாங்க டிஸ்பென்ஸரிகளை ஆரம்பச் சுகாதார நிலையங்களாக மாற்றும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** இல்லை.

**திரு. எஸ். சிவசுப்பிரமணியன் :** இல்லை என்றால், இனிமேலாவது அப்படி மாற்றும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** அதுபோன்ற உத்தேசம் இப்பொழுது இல்லை.

**திரு. டி. எஸ். ஆதிமூலம் :** பிரைமரி ஹெல்த் சென்டர் என்பது ஏதோ பிரமாதமாக இருக்கிறது, ரெகுலர் டிஸ்பென்சரி போன்று மாற்றப்பட்டு பெரிய வசதிகள் எல்லாம் கிடைக்கின்றன என்று வெளியிலேதான் சொல்லப்படுகிறதே தவிர, அது தவறான முறையில் தான் சொல்லப்படுகிறதேயொழிய அது நடைமுறையில் பிரயோஜனம் இல்லை. ஏதோ ஆம்புலன்ஸ் மாதிரி அவர்களுக்கு ஜீப் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதை வைத்துக் கொண்டு அங்கே இருக்கிற மருத்துவர்கள் சுகவாசிகளாக இருக்கிறார்கள். ஆகவே, இந்தத் திட்டத்தைக் கூடுமான வரையில் கைவிடுவதற்கு சர்க்கார் யோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** கனம் உறுப்பினர் அவர்களுடைய கருத்து சரியல்ல. பிரைமரி ஹெல்த் சென்டர்கள் நல்ல முறையில் நடத்தப்படுகின்றன. இந்தத் திட்டத்தினை கிராமப் புறங்களிலே விரிவுபடுத்துவதற்கும், நல்ல மருத்துவ வசதிகளைச் செய்துகொடுப்பதற்கும் ஏற்பாடு செய்கிற நிலைமை இருக்கிறது.

**திரு. கொளத்தூர் கோதண்டம் :** தலைவரவர்களே, புதிதாக ஏற்படுத்தப்பட்ட பிரைமரி ஹெல்த் செண்டர்களில் டாக்டர்கள் இல்லை, ஹெல்த் விஸிட்டரும் இல்லை, ஜீப் கொடுப்பது இல்லை, இப்படிப்பட்ட குறைகளை நீக்குவதற்கு அரசாங்கம் முயற்சி செய்யுமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** கனம் உறுப்பினர் சொல்வது சரியல்ல, மருத்துவ மனைகளிலே வேண்டிய வசதிகள் செய்து தரப்பட்டிருக்கின்றன. குறிப்பாக எந்த இடத்திலே டாக்டர் இல்லை என்று தெரிவித்தால் அதன் மீது நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும்.

**திரு. நா. காசிராமன் :** நமது தமிழ்நாட்டிலுள்ள எல்லா மருத்துவ நிலையங்களிலும் டாக்டர்கள் இருக்கிருர்களா ? இல்லையென்ருல் எத்தனை நிலையங்களிலே டாக்டர்கள் இல்லை ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** எல்லா மருத்துவ நிலையங்களிலும் டாக்டர்கள் நியமிக்கப்பட்டிருக்கிருர்கள். எதில் இல்லை என்று குறிப்பாகச் சொன்ருல் நடவடிக்கை எடுக்கலாம்.

(மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர்—தலைமை.)

மு.ப 10-30 **திரு. எம். கண்ணப்பன் :** ஆரம்பச் சுகாதார நிலையங்கள் கிராமப் புறங்களில் இருக்கிற காரணத்தால் பட்டம் பெற்ற டாக்டர்கள் கிடைப்பது அரிதாக இருக்கிறது. ஆகவே, அவர்கள் பட்டம் பெற்றவுடன் குறிப்பிட்ட காலம் வரை கிராமங்களில் பணியாற்ற வேண்டுமென்று உத்தரவிடும் உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** கனம் உறுப்பினர் அவர் கள் குறிப்பிடுவது போல் கிராமப் புறங்களில் பணியாற்ற டாக்டர்கள் முன் வருவதில்லை என்று சொல்வது சரியல்ல. ஏற்கனவே, சுமார் 200 பேர் வேலைக்காகக் காத்துக் கொண்டிருக்கிருர்கள்.

**திருமதி கே. பி. ஜானகியம்மாள் :** மெடிகல் காலேஜில் எம்.பி.பி.எஸ். பட்டம் பெற்று ஆஸ்பத்திரியில் ஓராண்டுகாலம் பயிற்சி பெற்ற பிறகு சம்பளம் குறைவு என்ற காரணத்தால் சர்க்கார் ஆஸ்பத்திரிகளில் வேலை செய்ய அவர்கள் முன் வராமல் பிரைவேட் டிஸ்பென்சரி வைக்க கவனம் செலுத்துகிருர்கள் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** இந்த ஆண்டு அப்பேர்ப் பட்ட நிலைமை இல்லை. நான் ஏற்கனவே சொன்னது போல், 200 பேர் வேலை கோரிக் காத்துக் கொண்டிருக்கிருர்கள்.

**திரு. முனு. ஆதி :** பிரைமரி ஹெல்த் சென்டர்கள் ஒரு யூனியனுக்கு ஒன்று என்றுதான் இருக்கிறது. அதை மேலும் ஒன்ருக உயர்த்த அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** அதுபற்றிப் பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர் :** வினுக்கள்—விடைகள் முடிவடைந்தன.

[குறிப்பு—ஒரு உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பட்டிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்]

## 2. ஒழுங்குப் பிரச்சினை

### நடவடிக்கைகள் சுருக்க வெளியீட்டில் உறுப்பினர் வெளிநடப்புப்பற்றிக் குறிப்பிடப்படாமை.

**திரு. கே. விஞயகம் :** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், சார். மாண்புமிகு உதவி சபாநாயகர் அவர்களே, என்னுடைய கையிலே உள்ள இந்தத் தாள்—நேற்றைய குறிப்புகளைப் பற்றி விவரிக்கிறது. "Brief Record of the proceedings of yesterday" இது ப்ரீஃப் என்பது எனக்குத் தெரியும். அந்தத் தாளிலே நேற்று நடந்த நிகழ்ச்சிகள் எல்லாம் விவரமாகச் சொல்லப்படவில்லை என்ருலும், அதனுடைய குறிப்பு





களைச் சொல்ல வேண்டும். 30-ஆம் தேதி நடவடிக்கை என் கையில் இருக்கிறது. அதிலே, ஒரு பெருத்த நிகழ்ச்சி, குறிப்பிடத்தக்க நிகழ்ச்சி, இந்தச் சட்டசபை துவக்கியதிலிருந்து நடக்காத நிகழ்ச்சி, அதுதான் ஸ்பீக்கர் கொடுத்த ரூலிங்கை ஏற்றுக் கொள்ள முடியாது—ஆயினும் மரியாதைக் குரிய ஸ்பீக்கரை ஒன்றும் சொல்ல முடியாது—என்று சொல்லி எதிர்க் கட்சித் தலைவர் திரு. கருத்திருமன் மற்றும் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த அனைவரும் வெளியேறினேம். ஒரு மணி நேரத்திற்குப் பிறகு மற்றவர் கள் வேண்டுகோளுக்கு இணங்க உள்ளே வந்தோம். இப்பேர்ப்பட்ட நிகழ்ச்சி குறிப்பில் இல்லாததால் அது சரிவரக் குறிப்பு எடுக்கவில்லை என்பதாலா அல்லது, அதைப் போடக் கூடாது என்று சொல்லித் தடைப் படுத்தப்பட்டதா என்று தெரியவில்லை. இதைப் பற்றிச் சரியான முறை யில் தங்களுடைய ரூலிங்கைத் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அது போடப்பட வேண்டிய ஒன்ரு இல்லையா என்பது ஆராயப்பட வேண்டிய ஒன்று. இதற்கு முன்ஞலே நடைபெற்ற பல்வேறு நிகழ்ச்சிகளிலும், சென்ற முறையில் பல தடவைகளிலும் வெளிநடப்பு நடைபெற்றிருக்கிறது. அப் பேர்ப்பட்ட நிகழ்ச்சிகளை இந்தக் குறிப்பில் குறிப்பிடுவது வழக்கமில்லை. இந்த மன்றத்திலே எடுத்துக் கொள்ளுகின்ற நிகழ்ச்சிகள் என்னென்ன நடைமுறையில் எடுத்துக் கொள்ளப்படுகின்றன என்ற சுருக்கந்தான் அதிலே தரப்படுகிறது. அந்த முறை ஏற்கனவே கொள்ளப்பட்ட ஒன்று. முன்பே கூட இத்தகைய வெளிநடப்புகளை அதிலே சேர்ப்பதில்லை. எதிர்காலத் திலே அதைச் சேர்த்துக்கொள்ள வேண்டுமா என்பது பற்றிக் கலந்து பேசி முடிவு எடுக்க வேண்டும். இதுவரை அதிலே சேர்க்கின்ற வழக்கம் இல்லாமையால் தவறு ஏதும் ஏற்பட்டுவிடவில்லை.

**திரு. கே. விஞயகம் :** **On a further clarification of my point of order.** முன்பு என்ன நடந்தது என்பது அல்ல இன்றைய பிரச்சினை. இந்தச் சட்டசபையில் என்ன நடக்கிறது ? சரிவர குறிப்புகள் எடுக்கப்படுகின்ற னவா என்பதுதான் இன்றைய பிரச்சினை. இதற்காகத்தான் பாயிண்ட் ஆப் ஆர்டர் எழுப்பினேன். அதற்குத்தான் ரூலிங் தரவேண்டும்.

**மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர்:** திரு. விஞயகம் அவர்கள் இந்த அவையிலே நடந்த ஒரு நிகழ்ச்சியை இந்தக் குறிப்பிலே குறிப்பிட் வில்லை என்று சொன்ஞர்கள். ஆனல் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளை இந்தச் சட்டசபைத் துறையிலிருந்து வெளியிடுகின்ற இந்தக் குறிப்பில் வழக்கமாகக் கொடுப்பதில்லை என்பதுதான் இந்தச் சபையின் மரபாக இருந்து வரு கிறது.

(திரு. கே. விஞயகம் அவர்கள் உட்கார்ந்தபடியே ஏதோ கூறிஞர்.)

**மாண்புமிகு திரு. மு. கருணநிதி :** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், சார். சபாநாயகர் எழுந்து ஒரு தீர்ப்பை அளிக்கின்ற நேரத்தில் மாண்பு மிகு உறுப்பினர் திரு. விஞயகம் அவர்கள் இப்படி உட்கார்ந்தபடியே எல்லாச் சமயத்திலும் குறுக்கிடுவது முறையல்ல. இதை ஒட்டுமொத்த மாக அவர்களுக்குச் சொல்லி அடக்கமாக நடந்து கொள்ளவேண்டுமென்று அவரை எச்சரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. வ. ஜார்ஜ் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, தாங்கள் ரூலிங் கொடுத்துக் கொண்டிருக்கும்போது மதிப்பிற்குரிய அமைச்சர் அவ கள் "பாயின்ட் ஆப் ஆர்டர்" எழுப்புவது சரியா ?

**மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர் :** சபாநாயகர் பேசுகின்ற நேரத்திலே சட்டசபையிலே இப்பேர்ப்பட்ட முறைகேடுகள் நிகழுமானல் சுட்டிக்காட்டுவதற்கு உறுப்பினர்களுக்கு எந்த நேரத்திலும் உரிமை இருக் கிறது. ஆகவே, அமைச்சர் அவர்கள் எழுப்பிய ஒழுங்குப் பிரச்சினை முறை யானது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அமைச்சர் அவர்கள் கூறியதோடு, நானே கூட இந்த இடத்தில் இருக் கின்ற நேரத்தில் நம்முடைய உறுப்பினர் திரு. விநாயகம் அவர்களுக்கு இப்படிப்பட்ட வேண்டுகோளை விடுத்திருக்கிறேன். அவர்கள் இந்த முறையை வழக்கமாகக் கொண்டிருக்கிறார்கள். வெளியிடங்களில் இத்தகைய முறைகள் இருக்கலாம். இத்தகைய முறைகளை இங்கு கைக்கொண்டால் சட்ட மன்ற நிகழ்ச்சிகள் முறைப்படி நடக்க இயலாது என்பதைப் பணிவோடு தெரி வித்துக் கொள்கிறேன்.

இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் அத்தனையையும் இந்தக் குறிப்பில் வெளி யிடுவது என்பது இந்தச் சபையின் மரபாக இதுவரை இல்லை. எதிர் காலத்திலே எப்படி இருக்க வேண்டுமென்று முடிவு செய்யவேண்டு மென்றால் இந்த மன்றத்திலுள்ள அனைவரும் கூடி ஒரு முடிவு எடுத்துக் கொள்ளலாம். ஆகவே, திரு. விநாயகம் அவர்களால் எழுப்பப்பட்டது ஒழுங்குப் பிரச்சினை ஆகாது என்று தீர்ப்புக் கூறுகிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** நமது சட்ட மன்றத்தின் நிகழ்ச்சிக்கான குறிப்புகள் எனக்கு அனுப்பப்படவில்லை. இதனால் முழு அளவில் இந்தச் சபை நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள முடியாதவனாக இருக்கிறேன்.

**மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர் :** நம்முடைய கனம் ராம மூர்த்தி அவர்கள் இந்தக் குறிப்பேடுகள் எல்லாம் வரவில்லை என்று சொன்னார்கள். இந்தக் குறிப்பேடுகள் வரவில்லை என்பதற்குக் காரணம் அவர் தன்னுடைய சரியான முகவரியைக் கொடுக்காத காரணத்தாலா அல்லது அலுவலகத்திலே தவறா என்பதைப் பற்றி விசாரித்து முடிவு கூறுகிறேன் என்று கூறிக்கொண்டு மேலே செல்லுகிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** ஒரே ஒரு க்ளாரிபிகேஷன். . . .

**மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர் :** கிளாரிபிகேஷனுக்கு இப் பொழுது இடம் இல்லை. பின்னால் கேட்கலாம்.

**3. 1967–68-ம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு— தொடர்ச்சி.**

**கோரிக்கை எண் XIII—கல்வி.**

**மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர் :** அடுத்து, நம்முடைய மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் கோரிக்கை எண் XIII—கல்வி என்ற தலைப்பின் கீழ் உள்ள மானியக் கோரிக்கையின் மீது மானியம் கோருவார் கள்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

"கோரிக்கை எண் XIII—கல்வி என்ற தலைப்பின் கீழ் ரூ. 54,53,58,600-க்கு மேற்படாத தொகையைஅரசுக்கு வழங்க வேண்டும்".

**மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர் :** எதிர்க் கட்சியின் தரப்பில் வெட்டுத் தீர்மானங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவற்றையெல்லாம் முன்மொழிய வேண்டுமென்ற அவசியம் இல்லையென்று எதிர்க்கட்சித் தலைவ ரால் ஒத்துக் கொள்ளப்பட்டது. ஆகவே, எதிர்க் கட்சியின் சார்பில் 154 என்ற எண்ணுள்ள வெட்டுத் தீர்மானத்தை மட்டும் முன்மொழியும் படி கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. செ. பாலசுப்பிரமணியன் :** ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர் சார் வெட்டுத் தீர்மானங்களை மற்ற எதிர்கட்சிக்காரர்களும் கொடுத்திருக்கிறார் கள். காங்கிரஸ் கட்சித் தலைவருடைய கருத்தைக் கேட்ட கூட்டம் எப் போது நடந்தது என்று தெரியவில்லை. காங்கிரஸ் தரப்பில் மட்டும் அந்த உடன்பாடு வந்ததா ?

**மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர் :** உறுப்பினர் அவர்கள் கொஞ்சம் பொறுமையாக இருந்திருந்தால் நலமாக இருந்திருக்கும். காங்கிரஸ் தரப்பில் மட்டுமல்ல, ஒவ்வொரு தலைவரையும் கேட்டிருக்கிறேன். இதிலே கொடுக்கப்



பட்டுள்ள 100 தீர்மானங்களையும் இந்தச் சபையிலே கொண்டு வருவது என்றால் இந்தச் சபையின் அருமையான நேரம் வீணாகிறது. அந்தக் கார ணத்திற்காக ஒவ்வொரு கட்சியின் சார்பில் ஒரு தீர்மானத்தை மட்டும் முன் மொழிந்தால் போதும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறேன். ஒவ் வொரு தலைவரையும் கலந்து ஆலோசித்த பிறகுதான் அந்தந்தக் கட்சி யின் சார்பில் ஒரு தீர்மானத்தை மட்டும் முன் மொழிந்தால் போதும் என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

**திரு. நா. காசிராமன் :** தலைவர் அவர்களே : **'To discuss about the inadequate provision made for Education'**

"கோரிக்கை எண் XIII—கல்வி என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 54,53,58,600-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற என்னுடைய வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** தலைவர் அவர்களே, ஆரம்பக் கல்வி முதல் கல்லூரிப் படிப்பு வரை எல்லாப் புத்தகங்களையும் சர்க்காரே பொறுப் பேற்று வெளியிட வேண்டிய அவசியத்தைப் பற்றி விவாதிக்க,

"கோரிக்கை எண் XIII—கல்வி என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 54,53,58,600-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்"

என்ற என்னுடைய வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. கரு. சீமைச்சாமி :** தலைவர் அவர்களே, மதுரைப் பல்கலைக் கழகத்திற்குக் கொடுக்கும் மானியத் தொகையைப் பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் XIII—கல்வி என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 54,53,58,600-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற என்னுடைய வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. ஆ. கு. சுப்பையா :** தலைவர் அவர்களே, எல்லாப் பள்ளிகளிலும் மத போதனையைக் கல்விப் பாடத்திலிருந்து நீக்க வேண்டுமென்பதைக் குறித்து விவாதிக்க,

"கோரிக்கை எண் XIII—கல்வி என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 54,53,58,600-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற என்னுடைய வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** தலைவர் அவர்களே, மாணவர்கள் உதவித் தொகை (ஸ்காலர்ஷிப்) பெறுவதற்குத் தற்போதுள்ள பெற்றோர்களின் வருவாய் வரம்பை ரூ. 3,600 ஆக உயர்த்துவது பற்றி விவாதிக்க,

"கோரிக்கை எண் XIII—கல்வி என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 54,53,58,600-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற என்னுடைய வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. க. ர. நல்லசிவன் :** தலைவர் அவர்களே, கல்லூரிகளில் உடனடி யாக தமிழ் போதனா மொழியாக ஆக்கப்படவேண்டுமென்பது பற்றி விவாதிக்க,

"கோரிக்கை எண் XIII—கல்வி என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 54,53,58,600-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற என்னுடைய வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. ம. பொ. சிவஞானம் :** தலைவர் அவர்களே, தமிழைப் பயிற்சி மொழியாக்க வேண்டுமென்று விவாதிக்க,

"கோரிக்கை எண் XIII—கல்வி என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 54,53,58,600-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற என்னுடைய வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர் :** [1967 ஜூலை 1
தீர்மானமும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவை முன் விவாதத்
திற்கு இருக்கின்றன.

* **திரு. வ. ஜார்ஜ் :** மாண்புமிகு உதவித் தலைவர் அவர்களே, காங்கிரஸ்
கட்சி சார்பில் அளித்திருக்கிற வெட்டுப் பிரேரணையை ஆதரித்து ஒருசில
வார்த்தைகள் கூற முற்படுகிறேன். அதற்கு முன்னதாக ஜனநாயகத்தில்
காக்கப்பட வேண்டிய சில மரபுகள் பற்றி ஒரு சில வார்த்தைகள் கூறலாம்
என்று நினைக்கிறேன். நேற்று நடந்த மானியக் கோரிக்கை விவாதத்
தின்போது அதற்கு முதல் அமைச்சர் அவர்கள் பதிலளிக்கையில் அங்கத்
தினர்கள் ஒவ்வொரு குற்றச்சாட்டுகளையும் இந்த மன்றத்தில் எடுத்துக் கூறு
வது அவற்றிற்குப் பரிகாரம் காணுவதற்கல்ல, வெறும் பிரச்சாரத்திற்கு,
விளம்பரத்திற்கே பயன்படும். அவைபற்றி உண்மையாக அக்கரையோடு
அதற்குப் பரிகாரம் காணவேண்டுமென்றால் தனியான முறையில் அமைச்சர்
களைச் சந்தித்து அவற்றிற்குப் பரிகாரம் காண வேண்டுமென்று கேட்டுக்
கொண்டார்கள். ஜனநாயக முறைப்படி, பாராளுமன்ற அமைப்புப் படி . . .

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** நேற்று முதல் அமைச்சர் அவர்
கள் அங்கத்தினர்களுக்கு இருக்கிற குறைகளை இங்கு எடுத்துச் சொல்லக்
கூடாது என்று குறிப்பிடவில்லை. தவறான தகவல் தந்து அதன் மூலம்
விளம்பரம் செய்வது சரியல்ல என்று குறிப்பிட்டார்கள். ஆகவே தவறான
அடிப்படையில் அங்கத்தினர் பேசுவது முறையல்ல.

**திரு. வ. ஜார்ஜ் :** எந்தக் காரியமாக இருந்தாலும் அதை எடுத்துக்
கூற அங்கத்தினர்களுக்கு உரிமை உண்டு. தனிப்பட்ட சில குறைகளைத்
தனியாக அமைச்சர்களைச் சந்தித்துப் பரிகாரம் தேடலாம் என்று சொன்னா
லும் தனிப்பட்ட குறைகளையும் எடுத்துச் சொல்ல அங்கத்தினர்களுக்கு
உரிமையுண்டு. இந்த மன்றமே அதற்குச் சரியான இடம். பட்ஜட் விவா
தத்திற்குப் பதில் அளிக்கையில் ஒரு இல்யூஷன் இருப்பதாக முதல்
அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அது இல்யூஷன் அல்ல. அது
லீகல் ஃபிக்ஷன். ஆளும் கட்சி மக்களை தாக்குவதாகவும், எதிர்கட்சிகள்
மக்களுக்குப் பாதுகாப்புக் கொடுப்பது என்பதும் என்றதொரு இல்யூஷன்
இருப்பதாகக் குறிப்பிட்டார்கள். ஆங்கிலத்தில் லீகல் ஃபிக்ஷன் என்று
சொல்வார்கள். லீகல் ஃபிக்ஷன் என்று சொல்வதுதான் சரி. மக்கள்
ஆட்சியில் மக்களுக்கு நன்மை செய்வதில், ஆளும் கட்சியினரும், எதிர்
கட்சியினரும் போட்டி போட்டுக் கொண்டு மக்களிடையே தங்கள் தகுதியை
நிலைநிறுத்தி வரும் முறைதான் அது. ஆகவே, லீகல் ஃபிக்ஷன் என்பது
அடிப்படைத் தேவை என்று குறிப்பிட நான் ஆசைப்படுகிறேன். ஆகவே
அதிலிருந்து மாற்றிக் கொள்வது என்று சொன்னால் அது ஜனநாயக
பாராளுமன்ற அமைப்பு முறைக்கு முரணானதாகும். கல்வி மான்யத்தை
எடுத்துக் கொண்டால், இதில் பாராட்டுக்குரியதாக ஒன்றும் காணவில்லை.
குறிப்பாக இரண்டு குறிப்பிட்ட காரியங்களைச் செய்து பொது மக்களின்
பாராட்டைப் பெற யோசிக்கிறார்கள். எனக்குத் தோன்றுவது அவை
சரியான முறையில் செய்யப்படவில்லை என்பதுதான். புகுமுக வகுப்பில்
படிக்கிற மாணவர்களுக்கு அவர்களின் பெற்றோர்களுக்கு ரூ. 1,500
க்கு குறைவான வருவாயிருந்தால் அவர்களுக்குக் கட்டணச் சலுகை அளிக்கப்
படும் என்று கூறியுள்ளார்கள். இதில் பெருமைப்படுவதற்கோ அல்லது
பாராட்டுவதற்கோ ஒன்றுமில்லை. ஏனெனில் காங்கிரஸ் சர்க்காரின்
கொள்கை இதில் வருமானத்தின் அடிப்படையில் அமைந்ததல்ல. புகு
முக வகுப்பில் படிக்கிற எல்லா மாணவர்களுக்கும் இலவசக் கல்வி அளிக்க
வேண்டும் என்பதுதான் காங்கிரசின் கொள்கை. ஆகவே குறிப்பிட்ட
ஓரளவிற்கு செய்யப்பட்டிருக்கும் இதை எங்களால் பாராட்ட முடியாது.
பொருளாதார அடிப்படையில் ரூ. 1,500 என்று வரம்பு வைத்திருப்பதால்
ஜாதி மத வேறுபாட்டை அகற்றி விட்டோம் என்று பொதுவிவாதத்தின்
போது பல உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். உண்மையில் இதனால்
ஜாதி மத வித்தியாசம் போய் விட்டதா என்று கேட்கிறேன். ஹரிஜனங்
களுக்கும், பிற்பட்ட வகுப்பினருக்கும் 2,000 ரூபாய் வருமானம் வரை





என்ற வரம்பு இருக்கிறது. ஆகவே இந்தப் புதிய ஏற்பாட்டினால் ஜாதிமத பேதமின்றி பி.யூ.சி. மாணவர்களுக்கு உதவி செய்து விட்டதாகக் கூற முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். பொது விவாதத்தின் போது பல அங்கத்தினர்கள் பேசினார்கள். காங்கிரஸ்காரர்கள் தோற்று விடுவார்கள், ஆகவேதான் பி.யூ.சி. வரை இலவசக் கல்வி என்று பொறுப் பில்லாத முறையில் சொல்லிவிட்டார்கள் என்று சொன்னார்கள். அப்படிச் சொன்னது, தேர்தலுக்காகச் சொன்னார்கள், நடைமுறைக்காக அல்ல என்றார்கள். உண்மையில் நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அது நடைமுறைக்காகச் சொன்னது தான். 1964–65 கல்வி ஆண்டிலி ருந்துதான் உயர்தரப் பாடசாலைகளில் இலவசக் கல்வி வழங்க முற்பட்டோம். அத்திட்டத்தின் கீழ் 1967–68 முதல் அந்த மாணவர்கள் தேர்வு பெற்று கல்லூரிப் படிப்பிற்கு வருகிறார்கள். ஆகவே அவர்கள் அத்தனை பேர்களும் கல்லூரிப் படிப்பு பெற்று பயன்பெற வேண்டுமென்றுதான் பி.யூ.சி.யில் இலவசக் கல்வி அளிக்க வேண்டுமென்ற திட்டத்தை நீட்டினோம். இப்போது உயர்நிலைப் பள்ளிகளில் இலவசக் கல்வியால் பயன்பெற்ற மாணவர்கள், 1964–65 முதல் பயன்பெற்று வரும் மாணவர்கள் அத்தனை பேர்களும் இன்று கல்லூரிப் படிப்பு பெற முடியாமல் தவிக்கிற நிலை ஏற்பட்டிருக்கிறது. ரூ. 1,500 என்று கூறும்போது எல்.டி.சி.க்கள், செக்கண்டரி கிரேட் டீச்சர்ஸ், ப்யூன்ஸ் இவர்கள் குழந்தைகள் இந்தச் சலுகை பெற முடியாதிருக்கிறார்கள். எனவே இது ஒரு குறிப்பிட்ட அளவுக்கு வருமான முள்ளவர்களுக்குப் பெரிதும் பயன் அடையச் செய்யாது. ஆனால் குறிப்பிட முடியாத நிலையில் கணக்கு இல்லாத வருமானம் உள்ளவர்கள் சர்டிஃபி கேட் வாங்கி வந்து பயனை அடையலாம். இதனால் குறிப்பிட்ட சில வியாபாரிகள், விவசாயிகள் பயன் அடையாலமே தவிர, குறிப்பிட்ட வருமானம் உள்ளவர்கள் இதனால் பயன் அடைய முடியாது என்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

கல்லூரிகளில் பட்டப்படிப்பு படிக்கும் ஹரிஜன மாணவர்களைப் பொறுத்த வரையில் வருமான வரம்பு 1,500 ரூபாய் என்று இருந்ததை 2,000 ரூபாயாக அதிகப்படுத்தியிருக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். அதிலும் பாராட்டுவதற்கு ஒன்றும் இல்லை. அந்தச் சமயத்தில் இருந்த விலைவாசி யின்படி 1,500 ரூபாய் என்று இருந்ததானது, இன்றுள்ள விலைவாசி யில் 2,000 ரூபாய் என்று இருந்தும் கூட இது குறைவானது தான் என்று நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். மேலும், பட்டப்படிப்பிலே ஹரிஜன மாணவர்களுக்கும், பின்தங்கிய மாணவர்களுக்கும் இந்தச் சலுகை என்று சொல்லும்போது அங்கு கூட ஜாதி அடிப்படையில் தான் சலுகை அளிக்கப்படுகிறது என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பட்ஜெட் பொது விவாதத்தின்போது இந்தக் கல்விச் சலுகைகளின் மூல மாக ஜாதியை ஒழித்துவிட்டோம் என்று சொன்னது பொருளற்றது என்று மேலும் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

இரண்டாவது, இந்தக் கல்வி மானியக் கோரிக்கையில் புதிய திட்ட மாகக் காட்டப்பட்டிருக்கிற ஒன்று, கேர் நிறுவனத்தின் கொடையாக மத்திய உணவுப் பண்ட உற்பத்தி நிலையம் ஏற்படுத்தி, 15 மைல் சுற்றளவில் உள்ள பாடசாலைகளுக்கு மோட்டார் வண்டிகளின் மூலமாக மதிய உணவை வழங்குவது என்ற திட்டமாகும். இது எத்தனை தூரம் நடைமுறையில் நடைபெறும் என்று தெரியவில்லை. பஞ்சாயத்து யூனியனில் 15 ஏக்கர் நிலம் கொடுத்து, $7\frac{1}{2}$ ஏக்கர்கள் நிலத்தில் நெல் விளைச்சலிட்டு, மிஞ்சிய பாதி நிலத்தில் காய்கறி, பழங்கள் பயிரிட்டு அதனைக் கொண்டு அத்தனை பேர்களுக்கும் இலவசமாக மதிய உணவுத் திட்டத்தின் கீழ் உணவு அளிக்க இயலுமா, முடியுமா என்று அரசாங்கம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். என்னுடைய கருத்து என்னவென்றால், "முடியாது" என் பது. 15 ஏக்கர் நிலத்தைப் பண்படுத்திச் சாகுபடி செய்வது யார்? அந்தப் பொறுப்பு ஆசிரியர்களைச் சாருமா? பஞ்சாயத்து யூனியன் அலு வலர்களைச் சாருமா? அல்லது விவசாய இலாகாவைச் சாருமா? என்று தெளிவுபடுத்தப்படவில்லை. அந்தப் பொறுப்பு விவசாய இலாகாவைச் சார்ந்தது என்றால், சரி. அப்படியில்லாமல் ஆசிரியர்களின் தலையில் போட்டால், கல்வியின் தரம் குறைந்துவிடும் என்று சுட்டிக்காட்ட விரும்பு கிறேன்.

[திரு. வ. ஜார்ஜ்] [1967 ஜூலை

அடுத்து, இந்தக் கல்வி மானியக் கோரிக்கையில் நாம் காணும் புதுமை என்னவென்றால், தேசிய மாணவர் படையில்—என்.ஸி.ஸி. யில்—இதுவரையில் பி.யூ.ஸி.-யில் விருப்பப் பயிற்சி பெற்று வந்தவர் களுக்கு, இனிமேல் அந்தப் பயிற்சி வேண்டாமென்று மாற்றப்பட்டு, பட்டப் பாட முறை வகுப்புகளில் கட்டாயமாகப் பயிற்சி முறை இருந்ததை இப்போது விருப்பப் பயிற்சி முறையாக மாற்றியது ஓது புதிய அம்சம். நம்முடைய நாடு இப்போது இருக்கும் நிலைமையில், பாகிஸ்தானாலும், சைனாவாலும் சூழப்பட்டு எப்போதும் ஆபத்தாக இருக்கும் நிலையில், நமது மக்கள், படித்தவர்கள், நிச்சயம் படை அனுபவம் பெற்றவர்களாக இருக்கவேண்டும். அதற்காகவே இந்த இயக்கம் தொடங்கப்பட்டது. நம் முடைய ஜனத்தொகைக் கணக்குப்படி வற்புறுத்த வேண்டியதில்லை என்றாலும், இருக்கக்கூடிய திட்டத்தைக் கைவிடுவது சரியல்ல என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். புகு முக வகுப்பிலும் இப்போது இருப்பது போல தேசிய மாணவர் படை பயிற்சி விருப்ப முறையில் தொடர்ந்து இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தப்படியாக, நம் மாநிலத்தில் இதுவரையில் ஏற்பட்டுள்ள சாதனை, காங்கிரஸ்காரர்களின் சாதனை, கல்வித் துறையில் வியப்பு அளிப்ப தாக இருக்கிறது. அவர்கள் இந்த மானியக் கோரிக்கையின் மீது கொடுத்துள்ள குறிப்புரையில் குறிப்பிடுகிறார்கள். காங்கிரஸ் ஆட்சியில் 6 முதல் 11 வரை வயதுள்ள மாணவர்களில் 90 சதவீதம் மாணவர்கள் பாடசாலைகளில் பயின்று வருகிறார்கள், என்று. இது குறித்து காங்கிரஸ் காரர்கள் மட்டும் அல்லாமல், எல்லோருமே மகிழ்ச்சி அடைய வேண்டியத் தான். இப்போதே 90 சதவீதம் மாணவர்கள் படித்து வரும்போது, 11–14 வயதுத் தொகுதியிலுள்ளவர்களுக்கும், 14–17 வயதுத் தொகுதியி லுள்ளவர்களுக்கும், அதற்குத் தகுந்தபடி இடங்கள் ஒதுக்கப்படவேண்டும். உயர்நிலைப் பாடசாலைகளில் நான்காவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 5·5 லட்சம் மாணவர்களுக்கு இடங்களை அமைக்கவேண்டுமென்று திட்ட மிடப்பட்டு, இன்று நாம் நடைமுறையில் காணுவது, கடந்த வருடத்தில், நான்காவது திட்டத்தின் முதல் வருடத்தில் 80,000 மாணவர்களுக்கே வழி செய்யப்பட்டுள்ளது. இந்த வருஷம் 80,000 மாணவர்களுக்கே அதிக இடம் கொடுக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இப்படி இருந்தால் நம்முடைய திட்டத்தின் குறிக்கோளை அடைய முடியாது. இந்த வருஷம் $1\frac{1}{2}$ லட்சம் மாணவர்களுக்காவது இடம் தேடியிருக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு உண்டு என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 6–11 வயதுத் தொகுதியிலுள்ள மாணவர்களில் 90 சதவீதம் மாணவர்கள் படித்து வரும்போது அவர்களுக்கு மேலே படிக்க நிச்சயமாக இடம் வேண்டும். அந்த நிலையைக் கருதினால் இந்த வருஷம் 80,000 மாணவர்கள் அல்ல, $1\frac{1}{2}$ லட்சம் மாணவர்கள் படிக்க வழி வகுத்திருக்க வேண்டும் என்ற பொறுப்பு அரசைச் சாரும் என்று மீண்டும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இப்போது நம் கல்வித் திட்டத்திலே இளைஞர்களுக்குப் படிக்க ஆக்கம் அளித்து வருகிறோம். இப்போது முதியோர்களாக இருக்கிறவர்களும் எழுத்தறிவு பெற்றவர்களாக இருக்கவேண்டும் என்று அதற்கு மூன்றாவது திட்டத்தில் பல முதியோர் கல்விப் பாடசாலைகள் நிறுவப்பட்டன. 1965–66-ல் 175 பள்ளிகளும், 1966–67-ல் 150 பள்ளிகளும் நிறுவப்பட்டன. இன்னும் முதியோர்கள் அத்தனை பேர்களும் எழுத்தறிவு பெற்றவர்களாக ஆக வேண்டும் என்றால், அந்த உயர் நோக்கம் நிறைவேறவேண்டுமென்றால், இந்தப் பள்ளிகளை இன்னும் அதிகரிக்கவேண்டும். அதற்குள்ள வழி வகை எதும் செய்ததாக இந்த மானியக் கோரிக்கையில் தென்பட வில்லை. எனவே அரசாங்கத்தை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன், முதியோர் கல்வித் திட்டத்தை இன்னும் விஸ்தரித்து, நம் மாநிலத்தில் ஐந்து வருஷ காலத்திற்குள் எழுத்து வாசிக்கத் தெரியாத நபர்களே இல்லை என்று கொண்டுவரவேண்டும் என்று நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.



1967 ஜூலை 1] [திரு. வ. ஜார்ஜ்]

தொழில் கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கப்படவில்லை. இளைஞர் பாலி டெக்னிக் 20 பாடசாலைகள் நிறுவுவதாக மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் திட்டமிட்டிருந்தும், 14 பள்ளிகளை முன்பு இருந்த சர்க்கார் நிறுவிவிட்டது. இன்னும் ஒரு பாடசாலை நிறுவப்பட்டுவருகிறது. மீதி யுள்ள பாடசாலைகளை நான்காவது திட்டக் காலத்தில் நிறுவுவோம் என்று இருக்கிறது. உண்மையிலேயே தொழில் வளம் பெருகி வரும் நேரத்தில், குறிப்பிட்ட 6 பாடசாலைகளை மட்டுமே நான்காவது திட்டத்தில் நிறுவ வழி செய்திருப்பது போதாது என்று சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

மதுரைப் பல்கலைக் கழகத்திற்கு ஒதுக்கியிருக்கும் மானியத் தொகை 6 லட்சம் ரூபாய் மிக மிகக் குறைவு என்று சுட்டிக்காட்ட ஆசைப் படுகிறேன். சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு 19 லட்சம் ரூபாயும், அண்ணா மலைப் பல்கலைக் கழகத்திற்கு 11·6 லட்சம் ரூபாயும் மானியத் தொகை யாகக் கொடுக்கப்படுகிறது என்று பட்ஜெட் மெமோரண்டத்தில் இருக்கிறது. ஆனால் டீடெயில்ட் பட்ஜெட்டில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கு 11,84,900 ரூபாய் என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. இதிலே எது சரி என்று தெரியவில்லை. மதுரைப் பல்கலைக் கழகமானது நான்கு தென் மாவட்டங்களுக்காக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அங்கே தமிழுக்கு ஊக்கம் அளிக்கப்படுகிறது என்று கூறுகிறார்கள். இப்போது 6 லட்சம் ரூபாய் மதுரைப் பல்கலைக் கழகத்திற்கு மானியத்தொகை கொடுத்திருப்பதில் மாற்றாந்தாய்க் கொள்கையினை சென்னை மாநில சர்க்கார் கடைபிடிக்கிறது என்ற குற்றச்சாட்டைச் சாட்ட விரும்புகிறேன். அதை அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் தாங்கள் தான் தமிழுக்குப் பெரிய தொண்டு செய்வதாக அறைகூவுகிறார்கள். உண்மையிலேயே சிந்தித்துப் பார்க்கவேண்டும். காங்கிரசார் தமிழுக்கு என்ன செய்ய வில்லை ? 1959-லே தமிழ் வளர்ச்சிக் கழகம் என்ற நிறுவனத்தை நிறுவவில்லையா ? கல்லூரித் தமிழ்க் குழு என்று ஒரு குழுவை நிறுவ வில்லையா ? தமிழ் வளர்ச்சிக் கழகம் அநேக புத்தகங்களை வெளியிட வில்லையா ? அநேக துறைகளில் டெக்னிக்கல் டெர்ம்ஸ் வெளியிட வில்லையா ? (மணியடிக்கப்பட்டது)

*THIRUMATHI A. SUARES : Mr. Deputy Speaker, Sir, while supporting the Demand for Rs. 54,53,58,600 under Education, I congratulate the Hon. Minister for Education for having provided an increase of Rs. 9,23,05,100 for the current year's Budget. A part of this amount will go towards the increased Dearness Allowance that was sanctioned recently. Important schemes that were started in 1966–67 will be continued in 1967–68. மு.ப. 11 00

Some of the problems relating to education are the pattern of education and the duration of the course. The Kothari Education Commission worked during 1964–66 and had submitted an exhaustive report. It has analysed the present pattern of education in the various States in the country. The total period varies from 14 years to 16 years which covers primary, secondary and collegiate education. In Andhra Pradesh, Bihar, Gujerat, Maharashtra, Kerala, Madras and Orissa the duration is 15 years. In Assam and Nagaland it is 16 years and in the rest of the States it is 14 years.

Though the Commission recommends a common pattern of education in the country which will minimise confusion and main- ain standards, it does not believe that it is necessary or desirable to impose a uniform pattern of school and college classes in a

parts of the country. The vastness of our country and the immense diversity of local conditions and traditions will make it difficult for a common pattern to be followed.

Different States are at different levels of development. So, it will be difficult to impose a uniform pattern on a backward area, whose needs would be different from those of an advanced area.

In 1959 our State introduced a pattern of a 10-year secondary course. The first examinations were held in S.S.L.C. schools in March 1962 and in Anglo-Indian schools in November 1962. This pattern was given a fair trial but the results were not satisfactory. The pupils who passed out of the tenth standard were found immature for employment, below age for college and below the standard of the old eleventh standard examination.

When the Tenth Standard examination was introduced, the then Government had planned to attach the Higher Secondary class to the high schools in a phased programme, taking about 30 schools in a year. This scheme could not be given effect to owing to high expenditure on extra accommodation, expansion of laboratories and employment of staff with post-graduate qualifications. The number of higher secondary students in each school would be too small and the scheme would have been uneconomical. So, the State Government went back to the eleven-year pattern and the P.U.C. attached to the colleges continued to cater for higher education.

There are two small groups of secondary schools in our State which have the English medium—the matriculation schools and the Anglo-Indian schools. The matriculation schools are under the University. The Anglo-Indian community is the only minority community that was given special treatment in the Constitution of India. Special provision was made in Article 337 for educational grants for Anglo-Indian schools. When the Pay Commission's scales were introduced, the teachers in the S.S.L.C. schools were given increased scales of pay but the teachers in the Anglo-Indian schools have been receiving the same scales of pay for the last 20 years. So, I request that when the question of revising the pay of the teachers in the S.S.L.C. schools is taken up, the case of Anglo-Indian schools will also be considered.

Anglo-Indian schools serve a definite purpose in the State educational pattern. They are found in all the cities, bigger towns, hill stations and the railway colonies in this State. A few years ago the strength of these schools doubled or even trebled because there was a great rush of non-Anglo-Indian students for admission in this type of school. These schools possess certain characteristics. They follow the traditions that go back to half a century. High standards of work, good discipline, good character-formation, high standard of athletics, extra curricular activities and cultural activities are some of the characteristics of these schools. They have a high standard of English and a wide choice of electives.



Electives are being introduced in S.S.L.C. schools with effect from this year. But in Anglo-Indian schools they have already been introduced and they have taken examinations in the elective subjects. Special attention is paid to the teaching of moral science. This helps in the formation of character, good conduct and discipline.

In every Anglo-Indian school there is a large percentage of non-Anglo-Indians. They belong to various communities and creeds. So, these schools provide scope for pupils of various communities and creeds to mix together and study together, having a common loyalty to the schools, to the State and to the country. This is a singular opportunity to train the younger generation to live in India with its diversity of people.

The Government have decided to have Tamil as the medium of instructions at all levels. To provide for pupils whose mother-tongue is not Tamil, Matriculation schools and the Anglo-Indian schools will be found useful. They are also useful for the children of the Central Government servants who are eligible for trasnsfer to different parts of India.

The Education Commission has remarked that in States which have a eleven-year school pattern, Class I may be considered as a pre-primary class particularly where the age of admission is below six years. In the Madras State the age of admission is 5 plus. Before this age, children from 3 to 5 years attend pre-primary schools and the value of these pre-primary schools is increasingly realised. At present there are only three schools in Madras that give training to teachers to qualify for teaching in pre-primary schools. They are the Nursery, Kindergarten and Montessori schools. All these three schools are located in Madras City. In order to expand this scheme, more teachers with necessary training will be required. I recommend to Government that the three existing training schools should be expanded with a larger number of stipends and with more grants-in-aid. Besides these, a few schools may be opened in the mofussil in big centres like, Madurai, Coimbatore, Tiruchirappalli, etc.

The free secondary education scheme has resulted in increased numbers taking the S.S.L.C. examination. This year the highest number so far has been recorded and about two lakhs of students appeared for the S.S.L.C. examination. Though the numbers have increased, the percentage of passes has not shown an appreciable increase. The percentage still remains between 50 and 55. More attention should be paid to the quality of teaching. Teachers with higher qualifications more inspecting staff including subject inspetors for subejcts like science and mathematics will help in improving standards. Government is giving increased grants for science and the core subjects in the current year. All these measures should improve the standard of teaching in secondary schools. I request the Hon. Minister for Education to consider some of the points which I have mentioned when discussions are held on the Kothari Education Commmission Report at a later stage.

*திரு. ம. பொ. சிவஞானம் : துணைத்தலைவர் அவர்களே, அவை முன் உள்ள கல்வி மானியத்தின் மீது நான் வெட்டுப் பிரேரணை கொடுக்கக் காரணம் கல்லூரிகளில் தமிழைப் பயிற்சி மொழியாக்க அரசாங்கம் தீவிர முயற்சிகள் எடுப்பதற்காக என் கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டும் என்ற நோக்கம்தான். அதை எடுத்துச் சொல்வதற்கு முன்பாக கல்வித் துறையில் காணப்படும் மூன்று விதமான முன்னேற்றங்களை எடுத்துச் சொல்லிப் பாராட்ட வேண்டியது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். பி.யு.சி. வகுப்பிற்குச் சம்பளச் சலுகை கொடுத்திருப்பது ; இரண்டு புதிய கல்லூரிகள் தொடங்க தொகைகள் ஒதுக்கியிருப்பது ; கல்வி மானியம் இந்த ஆண்டில் மிகவும் அதிகமாக்கப்பட்டிருப்பது ஆகியவற்றைக் கண்டு மகிழ்ச்சி அடைகிறேன். அதற்காகக் கல்வி அமைச்சரைப் பாராட்டுகிறேன். பொதுவாக, கல்வித் துறையில் மக்கள் அபிவிருத்தி அடைவதற்காக, பொருளாதார நெருக்கடியையும் புறக்கணித்துவிட்டு, அதிகப்படியான பணத்தை ஒதுக்கியிருப்பது பெருமைக்குரியது என்றாலும், தமிழுக்குரிய இடம் கொடுப்பதற்குப் போதுமான காரியங்கள் நடைபெறவில்லை. கனம் முதல் அமைச்சரவர்கள் நிகழ்த்திய பட்ஜெட் சொற்பொழிவில் பயிற்சி மொழி பற்றி குறிப்பு இருக்கும் என்று எதிர்பார்த்தேன். தமிழைப் பயிற்சி மொழியாக்கும் பிரஸ்தாபமே இல்லாததைக் கண்டு ஏமாற்றம் அடைந்தேன். மேல் அவையில் கடந்த மார்ச்சு மாதக் கூட்டத்தில், கனம் முதல் அமைச்சர் "ஆங்கிலம் ஒரு மொழியாக அன்றி, வேறு எந்த வகையிலும் அதன் அந்தஸ்து நீடிக்கப்பட மாட்டாது" என்று குறிப்பிட்டார்கள். அதுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை என்று நினைத்தேன் கலைக் கல்லூரியானாலும் சரி, தொழில் கல்லூரியானாலும் சரி, விஞ்ஞானப் பாடங்களானாலும் சரி, போதனா மொழி தமிழாகத்தான் இருக்கும் என்ற கொள்கை பிரகடனம் செய்யப்பட்டதாக நம்பினேன். திராவிட முன்னேற்றக் கழகத்தினர் நீண்ட நெடுநாளாக மொழிப்பற்றுள்ளவர்கள். அதனால், தாய்மொழிக்குத் தக்க இடம் கொடுப்பார்கள் என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால், அந்தக் கொள்கைக்கு மாறாக மதிப்பிற்குரிய கல்வி அமைச்சர் கோவை பி.எஸ்.ஜி. பெண்கள் உயர்நிலைப் பள்ளி ஆண்டு விழாவில் பேசியபோது, "விஞ்ஞான ஆங்கில நூல்களை தமிழ் மொழியில் ஆக்குவது சுலபம் இல்லை. விஞ்ஞானப் படிப்புக்கு ஆங்கிலத்தையே பயன்படுத்தலாம்" என்று கூறியதாக பத்திரிகைகளில் ஒரு செய்தி பார்த்தேன், அதை நான் நம்புகிறேன் என்று அர்த்தம் இல்லை. அதனைக் கல்வி அமைச்சர் கவனத்திற்குக் கொண்டு வந்தால், அது மிகைப்படுத்தப் பட்ட செய்தியாக இருந்தால் அதை மறுப்பதன் மூலம், பயிற்சி மொழிக்கொள்கையில் அவரிடம் மாறுதல் இல்லை என்பதைக் காட்ட வாய்ப்பு அளிக்க வேண்டும் என்பதற்காகவே இங்கு சொல்லுகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இப்பொழுது போதுமான அளவுக்கு அறிவியல் பாடங்களைப் போதிக்கத் தக்க நூல்கள் இல்லை என்று கூறப்பட்டிருக்கிறது. ஆங்கிலத்தில் ஆசிரியர்கள் படித்துவிட்டு, தமிழிலே பயிற்றுவிக்கலாம். உடனடியாக எல்லா விஞ்ஞானப் பாடங்களையும் தமிழிலே போதிக்கும் முறையைக் கொண்டு வர முடியாவிட்டாலும், படிப்படியாக அதைச் செய்ய வேண்டும் என்கிற கருத்தைத்தான் அங்கே நான் தெரிவித்தேன்.

**திரு. ம. பொ. சிவஞானம் :** உதவிகரமான பதிலைக் கேட்டு மகிழ்ச்சி அடைகிறேன். நான் நம்பிவிடுவதற்குக் காரணம், பிரபலமான பத்திரிகைகள், அமைச்சர் வேறுவிதமாகச் சொன்னதாகக் கொண்டு, அதனை வரவேற்று, வாழ்த்தியிருப்பதால், சரியான கொள்கையை அமைச்சர் மூலம் வெளிப்படுத்தவே அதைக் குறிப்பிட்டேன்.

கல்வித் துறையில் தந்துள்ள குறிப்பிலே 1967–68-ல் பி. ஏ. வகுப்பிலே எத்தனை தமிழிலே கொண்டு வர இயலுமோ அத்தனை கொண்டு வரப்படும் என்று தெரியப்படுத்தப்பட்டிருக்கிறது. எந்த அளவுக்கு நடைபெறும் என்பதைப் போகப் போகத்தான் பார்க்க வேண்டும்



ஆனால், இதிலே கல்வித் துறையும், கல்வி அமைச்சரும் எவ
முயற்சி எடுத்தாலும், ஆங்காங்கே உள்ள கல்லூரி முதல்வர்கள் வே
அக்கறை காட்டுவதில்லை என்பதை ஞாபகப்படுத்த வேண்டியிருக்
தமிழில் பயிற்சி பெறுகிறேன் என்று மாணவன் பெயர் கொடுத்
பல கல்லூரி முதல்வர்கள், "உருப்படுவதில்லை என்று முடிவு
விட்டாயா" என்று மாணவனைக் கேட்கிறார்கள். அப்படி கேட்டு, உ
தமிழின் உயிரைக் குடிக்கிறார்கள். கல்லூரி முதல்வர்கள் அ
செய்வதற்குக் காரணம், நாம் அனுமதித்து இருக்கும் இரண்டு
முறைதான். பயிற்சி மொழி தமிழ்தான் என்று செய்யவே
அம்மையார் குறிப்பிட்டது போல, யார் யாருக்கு தமிழ் தாய்
யில்லையோ, மாநிலம் மாறி வருகிறார்களோ, அப்படிப் பட்டவர்க
ஆங்கிலப் பயிற்சி கொடுப்பது நியாயமாக இருக்கும். அதே
நம்மவரும் வேறு மாநிலங்களுக்குப் போகும் போது அந்த
கொடுக்கப்படவேண்டும். ஆனால், தமிழ் நாட்டிலே, ஒவ்வொரு க
யிலும் விரும்புகிறவர்களுக்கு தமிழ், மற்றபடி ஆங்கிலமே பே
மொழி என்றால், அது பழைய நிலையைத்தான் உறுதிப்படுத்து
விரும்புவோருக்குச் சலுகை என்பது சரியாகாது. நான் வலியு
விரும்புவது, தமிழ் நாட்டில், தமிழ் ஆட்சிமொழியாக இருக்கும்
தமிழ்தான் போதனா மொழி என்று அறிவித்துவிடவேண்டும்.
பல்கலைக்கழகச் சட்டம் குறுக்கே நின்றால், அவர்கள் ஒத்து
மறுத்தால், பல்கலைக் கழகச் சட்டத்தையே திருத்த நாம்
கூடாது. பல்கலைக் கழகம் போட்டி சர்க்காராக அமையக்க
இந்தப் பயிற்சி மொழி சம்பந்தப்பட்ட வரையில், கடந்த கா
போட்டி சர்க்காராக அனுமதிக்கப்பட்டு வந்திருக்கிறது. வாக்கா
நம்பிக்கைக்கு விரோதமாக நாம் செய்யக்கூடாது. இந்தச் சட்டப்பேரவை
இறுதியானது. இதுதான் சுப்ரீம் மன்றம். அமைச்சரவை கொள்
வகுக்க வேண்டும். நடைமுறையில் சுதந்தரம் பல்கலைக் கழகத்
தரலாம். ஆனால், கொள்கை வகுக்கப் பட்ட பின், பல்கலைக் கழக
சுதந்தரம் கொடுத்து, ஆட்சி சொல்லுவதை, அமுலாக்குவதில்லை
அளவுக்கு போட்டி சர்க்காராக அமைந்துவிடக் கூடாது என்பதைச்
கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். ஒரு பத்திரிகைச்
பார்த்தேன். ஆந்திர மாநிலத்தில் தெலுங்குதான் பயிற்சிமொ
இருக்கும். எல்லாத் தெலுங்குக்காரர்களுக்கும், தெலுங்
போதனா மொழி என்று செய்யப்படுவதாக, நடைமுறை ஆண்
அப்படிச் செய்யப் போவதாக பத்திரிகைச் செய்தி பார்த்தேன்.
இந்திய கல்விக் கமிஷன் கூட ஐந்தாண்டு காலத்தில் கலைக்
களில் முக்கியமாகத் தாய் மொழியாக இருக்கவேண்டும் என்று
கால வரம்பு வைத்திருக்கிறார்கள். கல்வி அமைச்சர் கலந்து
கல்வி அமைச்சர்கள் மாநாட்டில் கூட அது ஏகமனதாக ஒத்துக்கொ
பட்டிருக்கிறது என்பதை ஞாபகத்திற்கு கொண்டு வர விரும்பு
நாம் செய்த தவறு, தமிழ் வகுப்பு மாணவன் என்றும், ப
ஆங்கில வகுப்பு மாணவன் என்றும் இரண்டு ஜாதி முறையில் வ
தான். ஆங்கிலத்தில் பயில்வோர் ஒரு சாரார். தமிழ் பெ
பயிற்சி பெறுவோர் மற்றொரு சாரார் என்று வைத்ததால் ம
களிடையே என்ன எண்ணம் வந்திருக்கிறது என்பதைப் பார்க்கவே
ஒருகால், திராவிட முன்னேற்றக் கழக சர்க்கார் தமிழ்ப் பட்டதாரி
அரசாங்க நிறுவனங்களில் வேலை கொடுக்கலாம். ஆனால் மற்ற நி
களுக்குப் போனால், அங்கே, "நீ தமிழ் மீடியமா அல்லது
மீடியமா" என்று கேட்டால், தமிழில் போதனை பெற்றவர்க
கணிக்கப் படுவார்கள், பிற்பட்ட, மிகப் பிற்பட்ட, இன்னும் தாழ்
வகுப்பாக ஆக்கப்படுவாறோ என்கின்ற அச்சம் இருக்கிறது.
இந்த இரண்டு ஜாதி முறையை, வகுப்பு முறையை எடுத்து
தமிழைப் போதனா மொழியாகச் செய்யும் பணியில் ஈடுபட
என்று கேட்டுக் கொள்ளுகிறேன். படிப்படியாகச் செய்யுங்கள்,
கட்டமாகச் செய்யுங்கள். ஆனால் தமிழ் நாட்டில், ஒரு கல்லூ
தமிழ் பயிற்சி மொழி என்றும் ஆங்கிலப் பயிற்சி மொழி
இரண்டும் இருக்கக்கூடாது.

இன்னொன்று, இப்பொழுது தமிழை அதிக மாணவர்கள் விரும்பிப் படிக்க முன் வராததற்குக் காரணம் அதற்கு ஒதுக்கப்படும் பாடங்கள் சரித்திரமும், பொருளாதாரமுமாக இருப்பதால்தான். கல்லூரி திறந்தவுடனே தமிழ் மொழிப்பயிற்சிக்கு மாணவர்களே வரவில்லை, இரண்டு பேர்கள், ஒன்றேமுக்கால் பேர்கள் வந்தார்கள் என்று கூறுகிறார்கள். இதற்குக் காரணம் என்ன ? சரித்திரம், பொருளாதாரம் போன்ற பிரிவுகளில் சேர்வதற்கு மாணவர்கள் ஆவலாக வருவதில்லை. மேலும் இந்தப் பிரிவுகளில் ஆங்கில மீடியம், தமிழ் மீடியம் என்று இருவகையாக இருப்பதால் ஆங்கில மீடியத்தையே மாணவர்கள் எடுத்துப் படிக்கிறார்கள் என்பதைப் பார்க்கிறோம். அதைப் பத்திரிகைகளிலும் பார்க்கிறோம். இதற்காக நான் இப்பொழுதுள்ள அமைச்சர்களையோ, ஆட்சியையோ குறைத்துச் சொல்லவில்லை. கடந்த காலத்தில் ஏற்பட்டிருக்கும் இந்த முறைகளைத்தான் நினைவுபடுத்துகிறேன். இவ்வாறு இரண்டு ஜாதிப்பிரிவுகளாக, ஆங்கில மீடியம், தமிழ் மீடியம் என்று இருப்பதை எடுத்துவிட்டுத் தமிழ் மீடியமாகவே ஆக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். தமிழ் மீடியத்திற்கு ஒதுக்கப்பட்டிருக்கும் இந்த சரித்திர, பொருளாதார பிரிவுகள் மாணவர்கள் விரும்பாத விஷயமாக இருக்கிறது. எம்.பி.பி.எஸ்.-க்கு மனுப்போட்டு அது கிடைக்காத நேரத்தில் பொறியியல் பிரிவுக்கு மனுப்போட்டு அதில் இடம் கிடைக்காத நேரத்தில், விஞ்ஞானம் கேட்டு அது கிடைக்காத நேரத்தில் கடைசியாக எப்படியாவது கல்லூரிக்குள் நுழைந்துவிட வேண்டுமென்ற தரித்திரங்களுக்குத்தான் சரித்திரம் கிடைக்கிறது. அப்படிப்பட்ட பாடத்தைத் தமிழ் மீடியத்திற்கு ஒதுக்கியிருக்கிறது கடந்த கால அரசு. ஒரு பாடமும் கிடைக்காத மாணவனைப் பார்த்து கடைசியாக, கல்லூரி முதல்வர், "ஏண்டா உயிரை வாங்குகிறாய், சரித்திரத்தை எடுத்துக்கொள்ளேன்" என்று கூறுகிறார். அவ்வாறு உயிரை வாங்கக் கூடிய அந்த சரித்திரத்தைத் தமிழுக்கு ஒதுக்கியிருக்கிற காரணத்தினால்தான் மாணவர்கள் தமிழ்ப் பிரிவை நாடவில்லை. ஆகவே தமிழ் நாட்டிலுள்ள கலைக் கல்லூரிகளில் கலைப் பாடங்களைத் தமிழில் நடத்த ஏற்பாடு செய்ய வேண்டும். ரெஃப்ரென்ஸ் புத்தகங்கள், தகவல் புத்தகங்கள் வேண்டுமானால் ஆங்கிலத்தில் இருக்கலாம். அந்த அடிப்படையில்தான் அவர்கள் பேசியிருப்பார்கள் என்று நான் நம்புகிறேன். அந்தப் பொது அறிவு, ரெஃப்ரென்ஸ் தகவல் புத்தகங்கள் ஆகியவற்றை இப்போதைக்கு ஆங்கிலத்தில் பயன்படுத்திக்கொள்ளலாம், ஆனால் பாடப் புத்தகங்கள் தமிழாகத்தான் இருக்க வேண்டும். ஆங்கிலத்திலும் இருக்கலாம், தமிழிலும் இருக்கலாம் என்று சொன்னால் அது தமிழ் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாக இருக்கக் கூடிய அம்சமாகவே இருக்கும். ஆகவே, பாடப் புத்தகங்கள் தமிழாக வந்து, தகவல் புத்தகங்கள் தற்போதைக்கு ஆங்கிலத்தில் வைத்துக் கொள்ளலாம் என்று சொல்லிக்கொள்ளுகிறேன்.

மற்றொன்று. நம் மக்களிடம் ஐந்தாண்டு காலத்தில் தமிழை வளர்த்துக் கொள்ள முடியாது என்ற ஒரு மனப்பான்மை இருக்கிறது. அதை நாம் நம்ப முடியவில்லை. "கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன் தோன்றி மூத்த குடி"யாகிய தமிழை ஐந்தாண்டுக் காலத்தில் கற்க முடியவில்லையென்றால் உலகத்திலேயுள்ள எந்த மொழியையுமே நம்மால் கற்றுக்கொள்ள முடியாது. பக்கத்திலுள்ள தெலுங்கு நாட்டில், அங்குள்ள தாய் மொழிப்பற்றுடைய மூன்று பல்கலைக் கழக துணை வேந்தர்களும், பி.பி.ஐ.யும் சேர்ந்து கலந்து கூடி மாநாடு நடத்தி, அடுத்த ஆண்டிலிருந்து கல்லூரிகளில் தெலுங்கைப் பயிற்சி மொழியாக்குவது என்று தீர்மானித்தார்கள். அவர்கள் இரண்டாவது கட்டமாக விஞ்ஞானத்திற்கும் அதைக் கொண்டுவர முடியுமென்று இந்த மாநாடு நம்புகிறது என்றும் தீர்மானம் போட்டார்கள். நம்முடைய சேய்மொழியாகிய தெலுங்குக்கே அந்த இடம் கொடுக்கப்படும்பொழுது, நம்முடைய தாய்மொழியாகிய தமிழுக்கு அந்த இடத்தை உடனே கொடுக்க வேண்டுமென்று விண்ணப்பித்துக்கொள்ளுகிறேன்.





இன்றைய தினம் உயர்நிலைப் பள்ளிகளிலும் ஆங்கில மீடியம், தமிழ் மீடியம் என்று இரண்டு பிரிவாக இருப்பதைப் பார்க்கிறோம். இந்தப் பள்ளிகளில் விரும்பக்கூடியவர்கள் ஆங்கில மீடியத்தில் சேரலாம் ; கட்டாயபடுத்துவதில்லை என்று சொல்லுகிறார்கள். இவ்வாறு இரண்டு பிரிவுகள் வைத்திருப்பதால் தமிழ் எவ்வாறு வளரும் என்பதைக் கடவுள் தான் அறிவார். இவ்வாறு உயர்நிலைப்பள்ளிகளில் விரும்பினால் ஆங்கிலத்தை எடுத்துக்கொள்ளலாம் என்று வைத்திருப்பது தமிழ் வளர்க்க முயற்சி எடுத்துக்கொள்ளும் கொள்கைகளிலிருந்து வழுவுவதாகாதா ? 1937-இல் ராஜாஜி முதலமைச்சராகவும், டாக்டர் சுப்பராயன் கல்வியமைச்சராகவும், ஸ்டாதம் என்பவர் டைரக்டராகவும் இருந்தபோது உயர்நிலைப்பள்ளிகளில் தமிழ்ப்பாடமொழி என்று சொன்னவுடனே அப்பொழுது, தமிழ் யாருக்குத் தாய்மொழியாக இல்லையோ அவர்கள் ஆங்கிலத்தை எடுத்துக்கொள்ளலாம் என்று சொன்னது மறுக்க முடியாததாயிருந்தது. அந்த விதி கட்டுப்பாடாக இல்லாததைப் பயன்படுத்தி 1939-க்குப் பிறகு நீண்ட நெடுங்காலமாக ஆங்கிலம் முக்கியத்துவமாக்கப்பட்டது. தயவு செய்து அனுமதியை உடனடியாக நிறுத்தி இங்குள்ள உயர்நிலைப்பள்ளிகளில் தமிழ்தான் பாடமொழி, ஆங்கிலத்தை அனுமதிக்க முடியாது என்று தாங்கள் செய்தால்தான் திராவிட முன்னேற்றக் கழகம் மொழிக் கொள்கையில் மாறுதல் காட்டியதாக முடியும என்பது என்னுடைய விண்ணப்பம்.

அதுமட்டுமல்லாமல், இப்பொழுது புதிதாக ஆங்கிலத்தை மீடியமாகக் கொண்டு பள்ளிகளை நடத்த அனுமதி வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதற்கும் அனுமதி கொடுக்கக்கூடாதென்று இருப்பதே நல்லது.

இன்னொன்றையும் நாம் பார்க்கிறோம். வகுப்புகளில் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கின்ற நேரத்தில் கான்வென்ட் பள்ளிகளும் அதிகரித்து வருகின்றன. நாம் எல்லோரும் ஆங்கிலேய ஜாதியாக மாறிக்கொண்டிருக்கிறோமா ? ஆங்கில மீடியத்தில் படித்திருந்தால் பி.யு.சி.யில் இடம் பிடிப்பதற்குச் சுலபமாகவிருக்கிறது. மற்றக் குழந்தைகளைவிட அவர்கள் அதிக அறிவு பெற்றவர்கள் என்று கருதுகிறார்களாம். இதற்கெல்லாம் காரணம் என்ன என்று பார்த்து, எந்தெந்தக் கொள்கைகளைக் கவனித்தால் தமிழ் மொழிக்கு வாழ்வளிக்க முடியுமென்று பார்த்து இந்த அரசாங்கம் செய்ய வேண்டும்.

இன்னொரு கருத்தையும் நான் சொல்லிக்கொள்ளுகிறேன். தமிழ் போதனா மொழியாக ஏற்கப்பட்டால் விஞ்ஞான பாடங்கள் சொல்லித்தர முடியாது என்ற ஒரு கருத்து இருக்கிறது. தமிழ் மூலம் மருத்துவம், விஞ்ஞானம், பொறியியல் ஆகிய பிரிவுகளை நடத்த முடியாது என்பது இந்தத் தலைமுறையிலே உண்மை அல்ல என்று காட்டுவதற்கு, ஊர்ஜிதப்படுத்துவதற்கு, வடக்கே மருத்துவத்தை குஜராத் மொழியில் படிக்கவும் நாகபுரி கல்லூரியில் பொறியியல் பிரிவை மராட்டியில் படிக்கவும் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இப்படி வடக்கே பல கல்லூரிகளில் மின்னல் வேகத்தில் அவர்கள் தாய்மொழியைப் பயிற்சி மொழியாக்கிக்கொண்டு வருகிறார்கள். ஓரளவு, நம்முடைய தமிழ்நாட்டு இன்ஜினியரிங் பட்டதாரிகளுக்கு முன்பு வடக்கே வேலை கிடைத்தது. இந்த ஆண்டு தமிழ்நாட்டு இன்ஜினியர்களுக்கு வடக்கே கணிசமான அளவுக்குச் சரிவு விழுந்திருப்பதை நாம் காண்கிறோம். அதற்குக்காரணம் அங்கு அவர்கள் தாய்மொழியிலேயே பொறியியல் பிரிவில் பயிற்சி பெற்று, திறமையில் நம்மை விடக் கூடுதலாகிவிட்டார்கள் என்பதுதான். இதிலிருந்தாவது நாம் தமிழுக்கு ஆக்கம் அளிக்கப்பார்க்க வேண்டாமா என்று கூறிக்கொள்கின்றேன்.

யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் தேர்வுக்குச் செல்பவர்கள் 14 மொழிகளிலும் தேர்வு எழுத உரிமை வேண்டுமென்று நாம் கேட்டோம். அப்பொழுது அவர்கள் கூறினார்கள் ; உங்கள் பல்கலைக்கழகத்திலேயே தமிழ் போதனா மொழியாக்கப்படவில்லையே அந்த நிலையில் தமிழில் எழுத அனுமதித்தால் அவர்கள் அதில் திறமைக்குறைவு உடையவர்களாக இருக்கிறார்களென்று. ஒரு அறிக்கையில் இந்த ஆண்டு குஜராத்தி, வங்காளம்

மராத்தி, பஞ்சாபி ஆகிய மொழிகளில் யு.பி.எஸ்.ஸி. தேர்வு எழுத
அனுமதித்திருக்கிறோம். தமிழ்போன்ற மொழிகள் அந்த மாகாணங்களிலே
போதனு மொழியாக்கப்படாததால் அனுமதிப்பதற்கில்லை என்று வெளி
யிட்டார்கள். இவ்வாறு நம் 14 மொழி கோரிக்கைக்கும், இங்கு தமிழைப்
பயிற்சி மொழி ஆக்காமல் இருப்பது ஒரு தடையாக இருக்கும் என்ற
காரணத்தினுல் இதற்கு வழி காண வேண்டுமென்று சொல்லிக்
கொள்ளுகிறேன்.

நான் கிளப்பிய ஒரு விஷயத்திற்கு உதவிகரமான பதிலை கனம் கல்வி
அமைச்சர் அவர்கள் நேற்று இங்கே கொடுத்ததைக் குறித்த செய்தியைப்
மு. ப. 11-30 பத்திரிகையில் பார்த்தேன். அந்த நேரத்தில் நான் இங்கு இல்லை.
இப்பொழுது அமைச்சருக்கு நன்றி தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

தமிழகத் தலைமைச் செயலகத்தில் தமிழைக் கொண்டுவருகிற விஷயத்
தில், "படிப்படியாகச் செய்யப்படும்" என்று சொல்லப்படுகிறது. "படிப்படி
யாக" என்ற வார்த்தையைப் பார்த்தாலே எனக்கு ஒரு பயமாக இருக்கிறது
என்பதைத் தாழ்மையோடும் மிக அடக்கத்தோடும் நான் சொல்லிக்
கொள்ள விரும்புகிறேன்.

ஆட்சி மொழிச் சட்டம் செய்து ஆண்டு பத்தாகிறது. இன்னும் தமிழை
முழு அளவிற்குக் கொண்டுவராததற்கு கடந்து போனவர்கள்தான்
பொறுப்பு என்றுலுங்கூட, நீங்கள் ஒப்புக்கொண்டாலும் மறுத்தாலும்,
பூர்வ வினை போல், அந்த ஆட்சி செய்யத் தவறியதற்கும் நீங்கள்தான்
பொறுப்பு ஏற்றுக்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறீர்கள் என்று,
கொஞ்சம் அடக்கத்தோடு நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன். "பொறுப்பு
ஏற்கவேண்டும்" என்று சொல்லும்போது, "திருத்துவதற்கு" என்ற பொரு
ளில்தான் சொல்லுகிறேன்.

ஆட்சி மொழிச் சட்டம் செய்து பத்தாண்டு ஆகியும், இந்தப் பத்தாண்டு
களில் தமிழகத் தலைமைச் செயலகத்தில் தமிழ் நுழையவில்லை. விளம்
பரத் துறைக்கு நுழைக்கப்பட்டிருக்கிறது. தலைமைச் செயலகத்தில் தமிழ்
நுழைக்கப்படாமல் இருக்கிறதே என்று முன்பிருந்த கல்வி அமைச்சரைக்
கேட்டபோது, "எங்கள் துறைச் சிப்பந்திகளுடைய மொழிபெயர்ப்புத் திறமை
யிலே நம்பிக்கை இல்லை. சரியான மொழி பெயர்ப்புத் தரவில்லை"
என்று இந்த மன்றத்தில் எழுந்த கேள்விக்குப் பதில் சொன்னார்கள்.

இன்னும் நம் மசோதாக்கள், குறிப்புகள், இவையெல்லாம் தமிழில்
இல்லாததற்குக் காரணம், மொழிபெயர்ப்புத் திறமை போதுமானதாக
இல்லை என்றுல், அதை நான் ஒத்துக் கொள்ளுகிறேன். அதற்கு மூளைக்
குறைவு அல்ல காரணம். ஆங்கில மீடியம் வைத்தார்களே, அது காரண
மாக இருக்கலாம். இதிலிருந்து என்ன தெரிகிறது? பட்டப் படிப்பு
வரையில் தமிழ் பயிற்சி மொழியாக இல்லாததுதான் அதற்குக் காரண
மாக இருக்க முடியும். தமிழ் மொழியில் படித்துப் பட்டம் பெற்றவர்கள்
தமிழகத் தலைமைச் செயலகத்திற்கு வந்தாலொழிய, தமிழ் ஆட்சி
மொழியாகவேண்டும் என்ற இலட்சியம் நிறைவு பெற வாய்ப்பு இல்லை.

நீதி மன்றத்திலும் படிப்படியாகத் தமிழைக் கொண்டுவர படிப்படியாக
முயற்சி எடுக்கப்படுவதாக சட்ட அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள்.
தமிழைப் போதனுமொழியாகக் கொண்டு, சட்டக் கல்லூரியில் படித்துத்
தேர்வு பெற்றவர்கள் இருந்தால்தான், நீதி மன்றத்திலே கூடத் திறமை
யாகவும், உறுதியாகவும் வழக்கிட முடியும். அப்பொழுதுதான் நீதி
மன்றத்திலும் தமிழைக் கொண்டுவர முடியும்.

இந்த அடிப்படையையெல்லாம் வைத்துப் பார்க்கும்போது, எல்லாத்
துறைக்கும் இதுதான் மையமாகிறது. நீதி மன்றங்களிலும், தலைமைச்செயல
கத்திலும் எல்லா நடவடிக்கைகளும் தமிழிலேயே நடைபெற வேண்டு
மானுலும், மத்திய ஆட்சிக்கு 14 மொழிகளும் வரவேண்டும் என்ற
கோரிக்கை வெற்றிபெற்று, அங்கும் திறமையாகப் பயன்படுத்த வேண்டு
மென்றால், நல்ல முறையில், தமிழைப் பயிற்சி மொழியாக்கவேண்டும்,





ஆங்கிலம் இருக்கிற வரையில் முன்னேற முடியாது என்பதை மீண்டும் ஒரு முறை ஞாபகப்படுத்தி, இந்த நேரத்தில் இந்தக் கருத்தினைத் தெரிவிக்க வாய்ப்பு அளித்ததற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்து, உரையை முடிக்கின்றேன்.

**மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர் :** இப்பொழுது நேரம் 11-30 மணிக்கு மேல் ஆகிறது. இந்தக் கூட்டத்தை ஒன்றரையோடு முடிக்காமல், இரண்டு மணி வரை நீட்டுவதாக இருந்தால், இரண்டரை மணி நேரம் கிடைக்கும். அமைச்சர் அவர்களும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் பேச ஒரு மணி நேரம் ஒதுக்கினுல் கூட, மீதமிருப்பது ஒன்றரை மணி நேரம்தான். இருபது பேர்கள் பேச இருக்கிறார்கள். ஆக, ஒவ்வொரு வருக்கும் ஐந்து நிமிடங்கள் கூட வராது. ஆகையால், மாண்புமிகு உறுப்பினர் ஒவ்வொருவரும் ஐந்து நிமிடங்களுக்கு மேல் எடுத்துக் கொள்ள வேண்டாம் என்று நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

***திருமதி வி. ப. பழனியம்மாள் :** மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கல்வி மானியக் கோரிக்கையை ஆதரித்துப் பேசும்போது, கல்வித் துறையில் சிறிது மாற்றங்கள் ஏற்படுத்தினுல் நலமாக இருக்கும் என்பதைக்குறித்து எனது தாழ்மையான கருத்துக்களை அரசினரின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

தமிழக அரசின் அனுமதியுடன் செயல்படும் கைத்தொழிற் பயிற்சி நிலையங்களிலும், அரசினர், டெக்ஸ்டைல் பயிற்சி நிலையங்களிலும் பத்து மாதங்கள் பயிற்சி பெற்ற நெசவுத் தொழில் ஆசிரியர்கள் முதலில் கவர்ன்மெண்ட் டெக்னிகல் எக்ஸாமினேஷனில் வெற்றிபெற்று, பிறகு டெக்னிகல் டீச்சர்ஸ் சர்ட்டிபிகேட் கோர்சிலும் வெற்றிபெற்று முழுத் தகுதி பெறுகிறார்கள். அப்படிப்பட்டவர்களை உயர் நிலைப்பள்ளிகளிலும் மற்றுமுள்ள பள்ளிகளிலும் வேலைக்கு அமர்த்திக் கொள்ளுகிறார்கள். ஆனுல், அவர்களுக்கு டி.எஸ்.எல்.ஸி. பரீட்சை எழுத அனுமதி கொடுக்கப்படுவதில்லை. மேற்கண்ட தகுதியைப் பெற்றவர்களில் சைதாப்பேட்டை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் படித்தார்கள் என்ற ஒரே ஒரு தகுதியை மாத்திரம் வைத்துக்கொண்டு அவர்களுக்கு டி.எஸ்.எல்.ஸி. பரீட்சை எழுத அனுமதி கொடுக்கப்படுகிறது. எப்படி சைதாப்பேட்டை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் படித்தவர்களுக்கு இந்த அனுமதி வழங்கப்படுகிறதோ, அதேபோல் மற்றப் பள்ளிகளிலும் படித்து முழுத் தகுதி பெற்ற ஆசிரியர்களுக்கும் டி.எஸ்.எல்.ஸி. பரீட்சை எழுத அனுமதி அளித்தால் நலமாக இருக்கும் என்பதை நான் அரசினருக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அரைக்க அரைக்கச் சந்தனம் மணம் பெறுவது போல, ஆசிரியர்களுக்கு அனுபவம் அதிகரிக்க அதிகரிக்கத்தான் அவர்கள் போதனு முறையில் சிறந்து விளங்குகிறார்கள். ஆகையால், ஆசிரியர்களுடைய ஓய்வு கால வயதை 60 என்று ஆக்கினுல், அது ஆசிரியர்களுக்கும் பலனளிக்கும், போதனு முறையினுல் பலனடையும் மாணவர்களுக்கும் நன்மை பயக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அடுத்து, உயர் நிலைப் பள்ளிகளில் "சூபர்வைஸ்டு ஸ்டடி" என்கிற ஒரு திட்டம் இருக்கிறது. பள்ளிக்கூடத்தில் நல்ல மார்க் வாங்காத பையன்களுக்கு, பள்ளிக்கூட நேரம் முடிந்த பிறகு, இருக்கச் செய்து, தனிப் பயிற்சி அளிக்கிறார்கள். காலையிலிருந்து மாலை வரை வேலை செய்த ஆசிரியர்களை, பள்ளிக்கூட நேரம் போக, மற்ற நேரங்களிலும் உட்கார்ந்து கல்வி போதிக்கச் செய்வதென்றால், அவர்களுக்கு மிகவும் களைப்பாக இருப்பதோடு சங்கடமாகவும் இருக்கிறது. அதற்காக, சூபர்வைஸ்டு ஸ்டடி என்று இருப்பதற்குப் பதிலாக, மாலை நேரப் பள்ளிக்கூடங்களாக மாற்றியமைத்து, அதற்கு என்று தனிப்பட்ட ஆசிரியர்களை நியமித்தால், வேலையில்லாத ஆசிரியர்களுக்கு வேலை கொடுத்த பலன் இருக்கும், மாணவர்களுக்கும் பலன் இருக்கும்.

அடுத்து, ட்யூடோரியல் காலேஜ்பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். ஆண்டுதோறும் எஸ்.எஸ்.எல்.ஸி. பரீட்சையில் தவறும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே போகிறது. அவர்களுக்கெல்லாம் அரசினராலேயே ட்யூடோரியல் கல்லூரி ஆரம்பித்துப் பயிற்சி கொடுத்தால் நலமாக இருக்கும். அதே சமயத்தில் வேலையில்லாத ஆசிரியர்களுக்கும் வேலை கொடுப்பதற்கு வாய்ப்பாக இருக்கும்.

சில பல்கலைக்கழகங்களில், பெண்கள் வீட்டிலேயே படித்துப் பரீட்சை எழுதிக்கொள்ளலாம் என்ற திட்டம் இருப்பதாகத் தெரிகிறது. ஆனால், நமது சென்னைப் பல்கலைக்கழகத்தில் அந்த ஒரு திட்டம் இல்லை என்றே தெரிகிறது. ஈ.எஸ்.எல்.ஸி., படித்து விட்டு. வீட்டிலிருக்கும் பெண்கள் தனியாகப்படித்து, எஸ். எஸ். எல். ஸி., பி.யூ.ஸி., பி.ஏ. பட்டங்களுக்கான பரீட்சை எழுத வாய்ப்பு கொடுத்தால் நலமாக இருக்கும்.

எங்கள் கோவை மாவட்டத்தை எடுத்துக்கொண்டால், அங்கே ஆசிரியைப் பயிற்சிப் பள்ளியில் சேர ஏராளமான பெண்கள் காத்துக்கொண்டிருக்கிறார்கள். நான்கைந்து வருஷங்களாக இடம் கிடைக்காத பெண்கள் இருக்கிறார்கள். அந்த மாவட்டத்தில் இரண்டே இரண்டு பயிற்சிப் பள்ளிகள்தான் இருக்கின்றன. என்றாலும், ஆசிரியைப் பயிற்சி பெற விரும்பும் எல்லாப் பெண்களையும் பயிற்சிப் பள்ளிகளில் சேர்த்துக்கொள்ளுவதற்கு வகை செய்தால், பெண் குலத்திற்கு உதவி செய்த பலன் நம்முடைய அரசாங்கத்திற்குக் கிடைக்கும் என்று நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அநேக பள்ளிகளில் செகண்டரி கிரேடு பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் ஹையர் கிரேடு ஆசிரியர்களுக்குரிய சம்பள விகிதங்களையே பெற்றுக்கொண்டு வேலை பார்க்கிறார்கள். அந்த நிலைமையை மாற்றியமைத்து, அவரவர்கள் தகுதிக்கு ஏற்றபடி சம்பளங்களைக் கொடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

தனியார்களால் நடத்தப்பட்டு வரும் பள்ளிகளில் வேலை பார்க்கும் ஆசிரியர்கள் தேர்தலுக்கு நிற்கலாம் என்று சட்டம் இருக்கிறது. ஆனால், அரசினர், நகராட்சி மன்றம் ஆகிய அமைப்புகளின் கீழ் இருக்கிற பள்ளிகளில் வேலை பார்க்கிற ஆசிரியர்களைப் பொறுத்த வரையில், அவர்கள் வேலையை விட்டுவிட்டுத்தான் தேர்தலில் நிற்கலாம் என்று சட்டம் இருக்கிறது. அதை மாற்றி, தனியார் பள்ளிகளில் உள்ள ஆசிரியர்களுக்கு இருக்கும் சலுகையை, அரசினர், மற்றும் நகராட்சி மன்றங்கள் நடத்தும் பள்ளிகளில் உள்ள ஆசிரியர்களுக்கும் விஸ்தரிக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

* **திரு. நா. காசிராமன் :** மாண்புமிகு துணைப் பேரவைத்தலைவர் அவர்களே, கல்வி மானியக் கோரிக்கையின் மீது கொடுக்கப்பட்டுள்ள வெட்டுப் பிரேரணையை ஆதரித்து, என்னுடைய ஒரு சில கருத்துக்களைச் சொல்ல நான் ஆசைப்படுகிறேன்.

பெண் கல்விக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படும் என்று வெகு காலமாகச் சொல்லப்பட்டு வருகிறது. சமீபத்தில் கல்வி அமைச்சர் அவர்கள் ஓரிடத்தில் சொல்லிய ஒரு செய்தியை நான் பத்திரிக்கையில் பார்த்தேன். அது ஓரளவு ஒத்துக்கொள்ளத்தக்கதாக இருக்கலாம். என்றாலும், அவர்கள் என்ன சொன்னார்கள் என்றால், பெண்களுக்கு அதிகப்படியான கல்வி அவசியந்தானா? மேற்படிப்பு அவசியந்தானா? சில சமயங்களில் அனாவசியமாக அவர்கள் பி. எஸ்ஸி. இல் கெமிஸ்ட்ரி, ஃபிஸிக்ஸ் போன்ற கோர்ஸ்களை எடுத்துப் படித்து விட்டுப் பிறகு, கல்யாணம் ஆகி, அந்தக் கோர்ஸ்களில் கிடைத்த பலனைச் சரியானபடி பெறாமல், மேற்கொண்டும் படிக்காமல் இருக்கும்போது, மற்ற மாணவர்கள் படிக்கக்கூடிய வாய்ப்பதைத் தடை செய்வதாக நேருகிறதே, அம்மாதிரியான மேல் படிப்பு பெண்களுக்கு அவசியம்தானா? என்ற முறையில் கல்வி அமைச்சர் அவர்கள் பேசியதாக நான் பத்திரிக்கையில் பார்த்தேன்,





**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே இதுவும், நான் பேசின பேச்சு சிறிது தவறாக சிலச் செய்தித் தாள்களில் வந்ததாக நான் அறிகிறேன். கனம் உறுப்பினர் அவர்களும் அதைச் சுட்டிக்காட்டினார்கள். "பெண்களுக்குக் கல்வி அவசியம் இல்லை" என்று கூறுபவன் அல்லன், நான். ஆண்களுக்கு ஒப்ப, பெண்களும் கல்வி பெறவேண்டும் என்பதிலும் நான் கருத்து வேறுபாடு உடையவன் அல்லன். இருக்கும் புள்ளி விவரங்களை வைத்துப் பார்த்தவகையில், நான் குறிப்பிட்டது இதுதான்—பெண்கள் படிக்க வேண்டியதுதான். படித்து ஏதேனும் குறிப்பிட்ட வேலைக்குப் போகின்ற எண்ணம் உடையவர்கள், பி.எஸ்ஸி. போன்ற கோர்ஸ்களை எடுத்துப் படித்தால், பலன் உண்டு. ஆனால், எந்த வேலைக்குமே போவதில்லை, படிப்புக்காகத்தான் படிக்கின்றார்கள் என்றால், பி.ஏ. படிப்பு எடுத்துப் படிப்பது நல்லது. பி.எஸ்ஸி. இடங்களை, அந்த படிப்பைப் பயன்படுத்துகிற மாணவிகளுக்கு ஒதுக்கித் தந்தால், நாட்டிலே அப்படிப்பட்ட படிப்பைப் பயன்படுத்துகிறவர்கள் ஏற்படுவார்கள். பி.ஏ. படிக்க ஆசைப்படுகிறவர்கள் படிக்கட்டும். பி.எஸ்ஸி. போன்ற, குறைந்த எண்ணிக்கை இடங்களே உள்ள, படிப்பைப் படித்துவிட்டு, பின்னால் அதைப் பயன்படுத்தாமற் போனால் அந்தக் கல்வி அவர்களுக்கும் பயன்படுவதில்லை, நாட்டுக்கும் பயன்படுவதில்லை. ஆகவே, அப்படி பி.எஸ்ஸி. படிக்கின்றவர்கள் அந்தத் தன்மையிலே வரவேண்டும் என்று கூறினேனே தவிர, பெண்களுக்குப் படிப்பே தேவை இல்லை, அவர்கள் அத்தகைய படிப்பைப் படிக்கவே கூடாது என்று நான் சொல்ல வரவில்லை. பெண்கள் எம்.ஏ. படிப்பதையும், எம்.எஸ்ஸி. படிப்பதையும், இவற்றுக்கும் மேலாக, வெளிநாடுகளுக்கும் போய் மேற்படிப்புப் படித்து விட்டு வருவதையும் நான் முழு மனதோடு வரவேற்கிறேன்.

**திரு. நா. காசிராமன் :** நானும் அந்த அர்த்தத்திலேயே அந்த விளக்கத்தை எடுத்துக்கொள்ளுகிறேன். அதே சமயத்தில், உயர் படிப்பு படிக்கவேண்டிய அவசியமும், பி.எஸ்ஸி. (பிஸிக்ஸ்), பி.எஸ்ஸி. (கெமிஸ்டிரி) போன்ற பௌதிகப் படிப்பைப் படிக்க வேண்டிய அவசியமும் பெண்களுக்கு இருக்கிறது. காரணம், முற்காலங்களில் இருந்ததுபோல பெண்கள் வீட்டிலேயே இருக்க வேண்டும், ஆண்கள்தான் சம்பாதிக்க வேண்டும், குடித்தனத்தை நடத்த வேண்டும் என்ற கட்டாயமோ நியதியோ இப்பொழுது இல்லை. பலப்பல சூழ்நிலை காரணமாக, குடும்பங்களில் ஏற்படும் சிக்கல்களின் காரணமாக பிற்காலங்களில் பெண்களும் உத்தியோகத்திற்குப் போக வேண்டிய அவசியம் ஏற்படுகிறது; குடும்பப் பொறுப்பை ஏற்று நடத்த வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அப்படி நேரும்போது, இம்மாதிரி உயர் படிப்பு படிக்கவில்லையே என்று வருத்தப்பட்டால், அப்பொழுது எதுவும் செய்ய முடியாது. கட்டடம் கட்டுவதற்கு முன்பே அஸ்திவாரம் சரியாகப் போட்டால்தான், அவசியம் இருக்கும்போது, அதை நன்றாக விஸ்தரிக்க முடியும். ஆகவேதான், பெண்களுக்கும் அதிகக் கல்வி வசதி வேண்டும் என்ற கருத்தை நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

கும்பகோணம் கல்லூரியில் நிகழ்ச்சியொன்று நடந்திருக்கிறது. அங்கே பெண்களையும் சேர்த்துக்கொள்ளுவது என்று, "ப்ரொவிஷனல்" ஆக அவர்களைச் சேர்த்துக்கொள்ள அனுமதி தந்தார்கள். செலக்‌ஷன் முடிந்துவிட்டது. ஆனால் செலக்ட் செய்யப்பட்ட பெண்களைக் கல்லூரியில் அனுமதிக்கவில்லை. காரணம், சர்வகலாசாலையிலிருந்து ஒரு உத்தரவு வந்திருக்கிறது. ஆண்கள் கல்லூரியில் பெண்களைச் சேர்த்துக்கொள்ளக் கூடாது என்று உத்தரவு வந்திருக்கிறது. கல்லூரியில் செலக்ட் செய்வதே கஷ்டம். அப்படி செலக்‌ஷன் செய்யப்பட்டிருந்தும், சர்வகலாசாலையிலிருந்து வந்த உத்தரவின் காரணமாக, பணத்தைக் கட்டும்போது பணத்தை வாங்கிக் கொள்ள மறுத்துவிட்டார்கள். "கோ-எஜுகேஷன்" கூடுமானவரை தவிர்க்கப்பட வேண்டியதுதான். அது நல்ல எண்ணமாகவும் இருக்கலாம். ஆனால், அந்த உத்தரவு, ஏப்ரல் மாதத்திலோ அல்லது மே மாதத்திலோ

பிறப்பிக்கப்பட்டிருந்தால், பெற்றோர்கள் அந்த மாணவிகளை, வேறு எந்த பெண்கள் கல்லூரிக்காவது மனுச் செய்து அதில் சேர்த்திருக்கலாம். எந்த கோர்ஸில் இடம் கிடைக்கிறதோ, அந்தக் கோர்ஸில் அவர்களைச் சேர்த்துப் படிக்க வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்திருக்கலாம். ஆனால், காலம் கடந்துவிட்ட நிலையில், இனி வேறு கல்லூரிக்குப் புதிதாக அப்ளிகேஷன் போட முடியாது. ஆகவே, இந்த ஒரு வருஷத்திற்காவது, ஏற்கனவே செலக்ட் செய்யப்பட்டிருக்கிற பெண்களைப் பொறுத்த வரையில், கும்பகோணம் அரசினர் கல்லூரியில் சேர்த்துக்கொள்ளுவதற்கு அனுமதி கொடுக்க அரசாங்கம் முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

கும்பகோணம் கல்லூரியிலே இப்போது பி.யூ.சி.—புகுமுக வகுப்பில் 695 பேர் சேர்ந்து படிக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. ஆனால் இப்பொழுது ஆயிரத்திற்கும் மேற்பட்ட நபர்கள் விண்ணப்பம் செய்திருக்கிறார்கள். ஆகவே, குறைந்தது 150 பேருக்காவது அதிகப்படியான நபர் சேர்த்துக்கொள்ள வாய்ப்பு அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். 50 பேர்கள் பெண்கள் கல்லூரியில் சேரும் வாய்ப்பையும் அரசாங்கம் ஏற்படுத்தித் தரவேண்டும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். கும்பகோணம் கல்லூரி 100 வருஷங்களுக்கு மேற்பட்டது. சென்ற வருஷம்தான் அந்தக் கல்லூரியில் "போஸ்ட் கிராஜுவேட் கோர்ஸ்" ஆரம்பித்திருக்கிறார்கள். இந்த வருஷம் "எகினாமிக்ஸ்" ஆரம்பிப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதை உடனடியாகச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். முன்பு சென்னை, திருச்சி, கோயம்புத்தூர், மதுரை, ஆகிய இடங்களில் போஸ்ட் கிராஜுவேட் கோர்ஸ் இருந்தது. இப்போது மதுரை சர்வகலாசாலை ஆரம்பமானதும், மதுரையும், கோயம்புத்தூரும் அந்த சர்வகலாசாலையின் கீழ் வந்திருக்கிறது. தஞ்சாவூர் ஜில்லாவில் எட்டுக் கலைக்கல்லூரிகள் இருக்கின்றன. கும்பகோணம் கல்லூரியில் போஸ்ட் கிராஜுவேட் கோர்ஸ் இருக்கிறது. அதை, "போஸ்ட் கிராஜுவேட் சென்டராக" மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மதுரை சர்வகலாசாலைக்குச் சென்ற வருஷம் 1966–67-ல் 7 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தது. இந்த வருஷம் 6 லட்சம் ரூபாயாக அது குறைக்கப்பட்டிருக்கிறது. புதிதாக ஏற்பட்டிருக்கும் சர்வகலாசாலை தன்னுடைய திட்டத்தைச் சரிவர நடத்த பற்றாக்குறை ஏற்பட்டு, அதனால் வளர்ச்சிக்குத் தடங்கல் ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, அரசாங்கம் இதனை மறுமுறை பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது.)

அடுத்தபடியாக முனிசிபாலிடிகளுக்கு கொடுக்கப்படுகின்ற தொகை போதாது. பிரைவேட் மானேஜ்மெண்ட் பள்ளிகளுக்கு முழு மானியத் தொகை கொடுக்கிறார்கள். ஆனால் அதே நேரத்தில் முனிசிபாலிட்டிகளுக்கு சரி பாதிதான் தருகிறார்கள். ஆகவே, அதிகப்படியான மானியத் தொகையை முனிசிபாலிட்டிகளுக்கு வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக "ப்யூபிள் டீச்சர் ரேஷியோ"—11 முதல் 14 வயதுள்ள 30 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற விகிதம் இருக்கிறது. ஆனால் எலிமென்டரி வகுப்புகளில், அதாவது 6 முதல் 11 வயது வரையுள்ள 40 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்று விகிதம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. 11–14 வயதுள்ள மாணவர்கள் ஓரளவு புரிந்துகொள்ளக் கூடியவர்கள். 6–11 வயதுள்ள மாணவர்கள் குழந்தைகள். விஷமத்தன செய்கைகள் பிடிவாதம் முதலியவை அந்தக் குழந்தைகளுக்கு அதிகமாக இருக்கும். இந்த நிலைமையில் இந்த விகிதாசாரம் ஆசிரியர்களுக்கு ஒரு பெருத்த சுமையாகவே இருக்கும். ஆகவே, 30 மாணவர்கள் என்று குறைக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது மதிய உணவுக்காக அரசாங்கம் ஒரு மாணவனுக்கு 6 பைசா கொடுத்து வருகிறது. இப்போது விலைவாசிகள் எல்லாம் ஏறியிருக்கிற காலத்திலே அந்த அளவை 10 பைசாவாக உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது.)



*திரு. ஆலடி அருணா: அவைத் துணைத்தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களால் கோரப்பட்டிருக்கிற மானியக் கோரிக்கையை ஆதரிக்கும் வகையில் எனது கருத்துக்களை சொல்ல வாய்ப்பு அளித்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். கல்வித் துறையில் பெரிய மாற்றத்தையும் வளர்ச்சியையும் உருவாக்கவேண்டுமென்ற உயர்ந்த நோக்கத்தோடு, மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்கள் 54 கோடியே 53 லட்சம் ரூபாயைக் கோரியிருக்கிறார்கள். இந்த நாட்டின் பொறுப்பு ஏற்ற திராவிட முன்னேற்றக் கழகம், கல்வித் துறையிலே, குறுகிய காலத்திற்குள் சில சீர்திருத்தங்களையும் நல்ல முன்னேற்றத்தையும் கண்டிருக்கிறது. இந்த அமைச்சரவையால் எட்டு கல்லூரிகளுக்குப் புதிதாக அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. தமிழைப் பயிற்சி மொழியாக எடுத்துக் கொள்ளும் மாணவர்களுக்கு அரசாங்கம் புதிய சலுகை காட்ட முன் வந்திருக்கிறது. 1,500 ரூபாய் வருமானத்திற்குக் குறைவாக வருமானம் உள்ளவர்கள்-எந்த வகுப்பைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், எந்தச் சமயத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அவர்களுக்கு பி.யூ.சி. வரை இலவச கல்வி சலுகை அனுமதிக்கப்பட்டுள்ளது. முன்னால் பொறுப்பேற்றிருந்த அரசு செய்த தவறுகளை திருத்தி—செய்ய மறந்த பொறுப்புகளை உடனடியாக அமுல் செய்ய—இந்த அவையின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, மும்மொழித் திட்டத்தின் பேரால், இந்த மாநிலத்தில் இந்தியானது முன்னாலிருந்த அரசால் திணிக்கப்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இதை எதிர்த்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலும், மாணவர்கள் சார்பிலும் பலமான எதிர்ப்புகள் கிளம்பின. இந்தி ஏகாதிபத்தியவாதிகள், இந்தி பேசாதா மாநிலங்களில் இந்தியை எப்படியாவது புகுத்திட வேண்டுமென்ற ராஜதந்திர முறையில் தான் மும் மொழித் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். இந்தத் திட்டம் பயன் அளிக்க வில்லையென்பதை, கோத்தாரி கமிஷன், —'The situation was made worse by defective planning and by the half-hearted way in which the formula was implemented. As a result of this development, considerable resources have been wasted over, what may be regarded as unproductive programme of implementation. As far as the third language is concerned, students in many areas have gained very little because of the unreal situation in which most of them studied it.— தெளிவாக விளக்கியிருக்கிறது. ஆகவே, இந்த அமைச்சரவை மும்மொழித் திட்டத்தை உடனடியாகக் கைவிட்டு, இருமொழித் திட்டத்தை ஏற்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். முன்னாள் முதலமைச்சர் அவர்கள் இந்தி இங்கே புகுத்தப்படவில்லை, நிர்ப்பந்திக்கப்படவில்லையென்று கூறினார்கள். இதனை ஏற்க மறுத்த நாம் இப்பொழுது எத்தனை தெலுங்கு ஆசிரியர்கள் இங்கே நியமிக்கப்பட்டிருக்கின்றனர் என்பதைப் பார்க்கவேண்டும். எத்தனை பேர் கன்னட மொழியை விரும்பிப் படிக்கின்றனர் ? இந்தியை எதிர்த்து மாணவர்கள் ஆர்பாட்டம் செய்திருக்கிறார்கள், ரத்தம் சிந்தியிருக்கிறார்கள், சிறை சென்றிருக்கிறார்கள், துப்பாக்கி குண்டுகளை தாங்கியிருக்கிறார்கள், தீக்குளித்து இறந்திருக்கிறார்கள். இத்தகைய மாணவர்கள் இந்தியை விரும்பிப் படிக்கின்றனர் என்று சொல்வது மனச்சாட்சியின் சமாதியிலிருந்து பேசுவதாகும். உடனடியாக இந்த அரசு இந்தி தேர்வுகளை நிறுத்த வேண்டும். 1965-ல் இந்தி தேர்வு நிறுத்தப்பட்டது. மீண்டும் புகுத்தப்பட்டது. இந்த நாட்டின் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகம் அந்தத் தேர்வை ரத்து செய்ய வேண்டுமென்று பணிவாகக் கேட்டுக்கொள்கிறேன்.

எல்லைப்புற மாவட்டங்களில் மூன்றாவது மொழியாக, மாணவர்களுக்கு திராவிட மொழி ஒன்றைக் கற்றுத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தேசிய கடன் உதவியின் பேரில் மத்திய அரசு சில மாணவர்

களுக்கு மானியம் வழங்குகிறது. 1966–67-ல் மத்திய அரசால் வழங்கப்பட்ட கடன் தொகை இன்னும் கொடுக்கப்படவில்லை. கல்வி ஆண்டும் முடிவடைந்துவிட்டது. அடுத்த கல்வி ஆண்டும் வந்துவிட்டது. என்னுடைய தொகுதியில் எம்.எஸ்ஸி. மாணவர் ஒருவர் உருக்கத்தோடு ஒரு கடிதம் எனக்கு எழுதியிருக்கிறார். பழைய அரசு தவறு செய்துவிட்டது. நமது அரசு உடனடியாக சம்பந்தப்பட்ட கடனை அந்த மாணவனுக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒவ்வொரு கல்லூரிகளிலும், ஸ்காலர்ஷிப்புகள் ஆதிதிராவிட மாணவர்களுக்கும் அளிக்கப்படுகின்றன. கல்லூரிகளில் சேருகின்ற மாணவர்களின் பெற்றோர்கள அதற்காக ரூபாய் 400, 500-ம் செலவழிக்கின்ற கஷ்டம் இருக்கிறது. பின்னர் கொடுப்பதாகச் சொல்கிறார்கள். ஆனால் அது பெற்றோர் கைக்குச் போய்ச் சேருவதில்லை. எல்லாம் சிவப்புநாடா முறையினால் அலைக்கழிக்கப்படுகிறது. ஆதிதிராவிட மாணவர்கள் சேருகின்ற நேரத்திலே அவர்களிடம் கட்டணம் வசூலிக்கக்கூடாது என்று அரசு வெளியிட வேண்டும். இந்த நேரத்திலே தனியார் நடத்துகின்ற கல்லூரிகளிலும் பதிவு செய்வதற்கு 5 ரூபாய் 6 ரூபாய், என்று வாங்குகிறார்கள். இடநெருக்கடியுள்ள இந்த நேரத்தில் ஒரு மாணவன் 4, 5 கல்லூரிகளுக்கு மனுச் செய்துகொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. குறைந்தபட்சம் அவன் 25 ரூபாய் செலவு செய்ய வேண்டும். இதைக் குறித்து நான் அமைச்சருக்குத் தெரிவித்திருக்கிறேன். நான் பத்திரிகையிலே ஒரு செய்தி பார்த்தேன். கல்வி அமைச்சர் அவர்களும், சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் அவர்களும் கூடிப் பேசி, இந்த விண்ணப்பத்தாட்களுக்கு 3 ரூபாய் என்று முடிவு செய்திருக்கிறார்கள் என்று பார்த்தேன். ஆனால் இன்றைக்கு நான் காண்கிறேன், பல தனியார் கல்லூரிகளில் பாரங்களுக்கு ஐந்து ரூபாய், ஆறு ரூபாய் என்று வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் விசித்திரம் என்னவென்றால் பத்தாயிரம் பாரம் வரைக்கும் விற்கிறார்கள். அரசு தலையிட்டு கல்வியை வியாபாரம் ஆக்காமல் அதைச் சேவையாக நடத்துகின்ற சூழ்நிலையை உருவாக்கவேண்டுமென்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

கலைக் கல்லூரியில் வேலை செய்கின்ற ஆசிரியர்களுக்கு யுனிவர்சிடி கிராண்ட்ஸ் கமிஷன் சிபார்சின்படி சம்பளம் பல்கலைக் கழகத்தால் கொடுக்கப்படுகிறது. அதே சம்பளம் தொழில் இயல் கல்லூரிகளில் வேலை செய்கின்ற ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்படவில்லை. இதையும் அரசு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கல்லூரிகளில் இடம் கிடைப்பது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. தனியார் கல்லூரிகள் அரசாங்கத்தினிடம் இருந்து மானியம் பெறுகிறார்கள். கட்டிட மானியம், விடுதி மானியம், கல்வி மானியம் என்பதாக இத்தனை மானியங்களை அவர்களும் பெற்று வருகிற போதிலும் இன்னாருக்கு இடம் கொடு என்று சொல்ல அரசாங்கத்திற்கு அதிகார பூர்வமாக உரிமையில்லை. ஆகவே; தனியார் கல்லூரிகளிலும் மாணவர்களைச் சேர்ப்பதற்கு அரசாங்கத்தின் சார்ப்பில் தேர்வுக் குழு நியமிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இறுதியாக என் உரையை முடித்துக்கொள்வதற்கு முன்னால் நண்பகல் உணவுத் திட்டத்தைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். இது மகத்தான திட்டம் என்றும், மாபெரும் திட்டம் என்றும், இது மகத்தான அளவில் வெற்றி பெற்றிருப்பதாக கடந்த காலத்தில் ஒரு கட்டுக்கோப்புடன் பிரச்சாரம் செய்யப்பட்டு வந்தது. அதற்காக நிறைய செலவழிக்கப்படுகிறது. பல ஸ்தாபனங்களிடமிருந்து உதவிகளும் வருகின்றன. ஆனால் அந்தத் திட்டம் மாணவர்களுக்குப் பயன்பட்டதாகச் சொல்வதைவிட அதிகமாக அதனை நடத்துகிற நிர்வாகிகளுக்குத்தான் பயன்பட்டிருக்கிறது என்று சொல்கிறேன். பால் பவுடர்களை அப்படியே விற்கிறார்கள். மற்ற பண்டங்களை அப்படி அப்படி விற்கிறார்கள். நிர்வாகிகள் சுரண்டுவதற்குத்தான் அந்தத் திட்டம் பயன்பட்டு வருகிறது. இதில் இவ்வாறு தவறு செய்கிறவர்களின்



மீது நடவடிக்கை எடுத்துக்கொள்வது ஒரு முறை. குற்றம் செய்பவர்களைக் கண்டு பிடித்து தண்டிப்பது ஒரு முறை என்றாலும் யாரும் குற்றம் செய்வதற்கு இடமில்லாத ஒரு முறையை வகுப்பது சிறந்த வழி என்று நான் கருதுகிறேன். நண்பகல் உணவுத் திட்டத்தை எடுத்துக் கொண்டால் நகர்ப்புறங்களில் 6 காசுக்கு உணவுக் கொடுக்கிறார்கள் என்றால் அந்த உணவு அந்த அளவில் இருக்கும், அதை எத்தனை பேர்கள் வாங்கிச் சாப்பிடுவார்கள் என்பதை நாம் தெரிந்துகொள்ள முடியும். எனவே இந்தத் திட்டம் ஏழை எளிய மாணவர்களுக்குப் பயன் அளிக்கக் கூடியது என்றாலும், இதற்கு நகர்ப்புறங்களில் முக்கியத்துவம் கொடுக்காமல் கிராமப் புறங்களில் முக்கியத்துவம் கொடுத்து, அந்தப்பகுதிக்கு அதிகமான நிதியை ஒதுக்கி, அதை அரசாங்கமே செய்யவேண்டும். நிர்வாகிகளிடம் ஒப்படைக்கக் கூடாது. இதுவரை இந்தத் திட்டத்தால் பலன் அடைந்து, லாபத்தை ஈட்டிக்கொண்டு வருகிறவர்கள் பள்ளி நிர்வாகிகள் என்பதை நான் பகிரங்கமாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொன்றையும் குறிப்பிட ஆசைப்படுகிறேன். நெல்லை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் 12 உயர்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. அந்த பள்ளிகளுக்கு இறுதியான 3 வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. வேலைசெய்கிற ஆசிரியர்களுக்கு ஒரு வாரத்தில் எவ்வளவு நேரம் பணி புரியவேண்டுமோ அவ்வளவு நேரம் பணிபுரிய பள்ளியில் இடமில்லை. அன் எக்கனாமிகல் ஸ்கூல் என்பார்களே அந்த நிலையில் உள்ள அந்தப் பள்ளிகளுக்கு எல்லாம் கீழ் நிலை வகுப்புகளை உடனடியாக ஏற்படுத்திக் கொள்ள அரசு அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்தச் சீர்திருத்தங்களை எல்லாம் செய்யும் என்கிற நம்பிக்கையோடும் நல்ல எண்ணத்தோடும் எனது ஆதரவை கல்வி மானியத்திற்குத் தெரிவித்து விடைபெறுகிறேன். வணக்கம்.

***திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் :** மதிப்பிற்குரிய துணைச் சபாநாயகர் அவர்களே, இந்த மன்றத்தில் கொண்டு வந்திருக்கும் கல்வி மானியத்தை ஆதரித்து என்னுடைய கருத்துக்களை கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

கிராமப் புறங்களிலே நடக்கும் ஆரம்பப் பள்ளிகளுக்கு கட்டிடமே இல்லாத மோசமான நிலை இருந்து வருகிறது. டவுனைப் போன்ற இடங்களில் வாடகைக்கு கட்டிடங்கள் கிடைக்கும். கிராமங்களில் கட்டிடம் கிடைப்பது அரிது. அங்கு பள்ளிக் கட்டிடங்கள் இல்லாததால் மாட்டுக் கொட்டகைகளிலும், கோவில்களிலும் பள்ளிகளை வைத்து நடத்துகிறார்கள். சில இடங்களில் மரத்தடிகளில் கூட ஆரம்பப் பள்ளிகளை நடத்த வேண்டிய மோசமான நிலை இருக்கிறது. இதை 20 வருட காங்கிரஸ் ஆட்சியிலே அப்பொழுது நாங்கள் எத்தனையோ முறை எடுத்துச்சொன்னோம், கவனிக்காமல் இருந்தார்கள். இப்போதும் அவர்கள் சொன்னது போலவே சொல்லாமல், எப்படியாவது இந்த ஆரம்பப் பள்ளிகளுக்கு கட்டிடம் கட்டினாலொழிய அவை நல்ல முறையில் நடைபெற முடியாது. நல்ல கட்டிடங்களில் ஒழுங்கான முறையில் நடைபெற இல்லை என்றால் அடிப்படையிலேயே மாணவர்களுக்கு நல்ல தரமான பயிற்சி ஏற்பட முடியாது என்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். கிராமங்களில் வேலை பார்க்கின்ற வாத்தியார்கள் வீடுகள் இல்லாமல் 4, 5 மைல் நடந்து நடந்து கஷ்டப்படுகின்ற நிலை இருக்கிறது. ஆகவே பள்ளிக்கூடங்களுக்கு எத்தனை வாத்தியார்கள் உள்ளனரோ அத்தனை வாத்தியார்களுடைய குடியிருக்கின்ற வீடுகளும் கிராமத்திலேயே இருப்பது மிக அவசியமாக இருக்கிறது. அதை இந்த அரசு கட்டிக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஆசிரியர்களுடைய சம்பளம் மிகக் குறைவாக இருக்கிறது. இப்பொழுது இருக்கின்ற விலைவாசி ஏற்றத்திலே ஆசிரியர்களுடைய நிலை மிகவும் பரிதாபகரமாக இருக்கிறது. அவர்கள் வேறு வருமானமே இல்லாதவர்கள். ஆகவே ஆசியர்களுடைய சம்பளங்களை உயர்த்தி அவர்களுடைய நிலையை உயர்த்த வேண்டுமெனக் கூறிக்கொள்ளுகிறேன்.

மதிய உணவுத் திட்டத்தைப் பற்றிப் பேசினார்கள். மதிய உணவுத் திட்டம் சரியாக நடைபெறவில்லை. அந்தத் திட்டத்திலும் பெரும் ஊழல்கள் நடைபெறுகின்றன. சில இடங்களில் மதிய உணவு போட்டதாகக் கணக்கு இருக்கின்றது. ஆனால் மதிய உணவு போடப்பட்டதாகத் தெரியவில்லை. இத்திட்டத்தை நல்ல முறையில் நடத்த அரசாங்கம் ஏற்பாடு செய்ய வேண்டும். இல்லையென்றால் அதற்காக வேஸ்டாக செலவழிப்பதை விட மதிய உணவுத் திட்டத்தையே எடுத்து விடுவது நல்லது என்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

உயர்தரக் கல்வியைப் பொருத்த வரையிலும் கிராமங்களில் ஹைஸ்கூல்களுக்கு வேண்டிய இடங்கள் இல்லை. மேலும், உயர்தர பள்ளிகளை கிராமங்களில் ஏற்படுத்த முடியாத சூழ்நிலை இருக்கிறது. 10,000 ரூபாய் பணமும் கட்டிட வசதியும் இல்லாத நிலையில், உயர்தரக் கல்வி ஏற்படுத்த முடியாது என்ற நிலை இருக்கிறது. ஆகவே இந்த முறையை நீக்கிவிட்டு ஜனத்தொகை விகிதாச்சாரத்தில், இவ்வளவு ஜனத்தொகை இருந்தால் அங்கே ஒரு ஹைஸ்கூலை அவசியமாக ஏற்படுத்த வேண்டுமென்ற அடிப்படையில் அரசாங்கமே ஏற்பாடு செய்யவேண்டும். ஹைஸ்கூல் கட்டிடமும் இல்லாமல் ஹாஸ்டலும் இல்லாமல் மிகவும் மோசமான நிலையில் இருக்கும் இடங்களில் அரசாங்கமே பொறுப்பேற்று முழு கிராண்ட் தொகையுடன் விரைவில் கட்டிடங்களை கட்ட ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதே போல் ஹைஸ்கூல்களில் இருக்கும் வாத்தியார்களுக்கும் வீடுகள் மிக மிகத் தேவை. கிராமங்களில் ஹைஸ்கூல் ஆசிரியர்களுக்கு, போலீஸ் லைன் போன்ற, கட்டிட வசதி ஏற்பாடு செய்யவேண்டுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

எனது தொகுதியிலே, தேவக்கோட்டை நகரத்திலே, 1-ம் நம்பர்
12-00 வார்டில் இரவசேரி என்ற ஒரு பகுதி இருக்கிறது. அதிலே ஒரு ஆரம்பப்
ந.ப. பள்ளி இருக்கிறது. 4, 5 வருடங்களாக இந்த ஆரம்பப் பள்ளி நடந்து கொண்டு வருகிறது. அப்பொழுதுல் இருந்தே இப்பள்ளிக்கு அரசாங்க அனுமதி அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு இருக்கிறோம். ஹரிஜனங்களும் பிற்பட்ட வகுப்பினரும் அதிகமாக வசிக்கின்ற அப்பகுதிக்கு அரசாங்கத்தின் அனுமதி இன்னும் கிடைக்கவில்லை. அதைப் பற்றிய மனுவைக் கூட சென்ற மாதம் 20-ம் தேதியன்று மதிப்பிற்குரிய கல்வி அமைச்சரவர்களிடம் நான் கொடுத்து இருக்கிறேன். அங்கு இருக்கிற அதிகாரிகள் ஒரு மைல் தூரத்திற்குள் வேறு பள்ளி இருக்கின்ற காரணத்தினால் என்று அனுமதி மறுத்து விட்டார்கள். உண்மையிலேயே ஒரு மைல், ஒரு பர்லாங் தூரத்தில் ஒரு பள்ளி இருக்கிறது. ஒரு மைல் தூரம் என்று இல்லாமல் ஜனத்தொகை இருக்கின்ற அளவைக் கொண்டு பள்ளிகளை நிறுவித்தரும் ஏற்பாட்டின் அடிப்படையில் இந்த பள்ளிக்கு அவசியம் அனுமதி தரவேண்டுமென்று கல்வி அமைச்சரவர்களை மிகவும் மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியான தேவக்கோட்டையைப் பொறுத்தவரையிலே அது ஜில்லாக் கோர்ட்டு இருக்கக் கூடிய ஒரு பெரிய டவுன். அதைச் சுற்றி பத்துப் பதினைந்து ஹைஸ்கூல்கள் இருக்கின்றன. ஆகவே, தேவக்கோட்டை நகரத்திலே ஒரு கல்லூரி ஏற்படுத்தித் தர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன். அதைப் போலவே உசிலம்பட்டியிலும் ஒரு கல்லூரிக்கு ஏற்பாடு செய்து தரவேண்டும். தேவக்கோட்டையில் ஆசிரியர் பயிற்சி பள்ளியே கிடையாது. நம்முடைய அமைச்சரவர்கள் காலத்திலேயே தேவக்கோட்டையில் ஒரு ஆசிரியர் பயிற்சி பள்ளி ஏற்படுத்தித் தரவேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன்.

பஞ்சாயத்து யூனியன்களிலே இருக்கிற ஆசிரியர்களை, இப்பொழுது இருக்கிற முறைப்படி, ஆர். டி. ஓ. தலைமையிலே ஒரு கமிட்டி மாற்றுவதாக இருக்கிறது. இதனால் பெரிய சிக்கல்கள் ஏற்படுகின்றன. பஞ்சாயத்து





யூனியன் கமிஷனரும் பஞ்சாயத்து யூனியன் சேர்மனும் மாற்ற வேண்டுமென்று கூறுவதை அவர்கள் கவனிப்பது இல்லை. அதனால் பெரும் கஷ்டமாக இருக்கிறது. பஞ்சாயத்து சேர்மனுடைய நிர்வாகத்திலே அந்த கௌன்சிலின் நிர்வாகத்திலே இருக்கின்ற அதிகாரிகள் அதற்கு மாறுதல் செய்கிறார்கள் என்றால் இது ஜனநாயகம் ஆகுமா ? ஆகவே இது ஜனநாயக முறைக்கு முரணாக இருக்கிறது. காங்கிரஸ் அரசாங்கத்தில் இதைச் செய்தார்கள். இப்பொழுது எல்லோருமே, இப்பொழுது இருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழக மெம்பர்கள் கூட இதை எதிர்த்துக் கூறினார்கள். இப்பொழுதாவது இதை மாற்றி அந்த பஞ்சாயத்து யூனியனுக்கும் பஞ்சாயத்து யூனியன் கௌன்சிலுக்கும் இந்த அதிகாரம் இருக்கும்படி செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மதுரைப் பல்கலைக் கழகத்திற்கு நிதி ஒதுக்கீடு குறைவாக இருக்கிறது என்று கூறினார்கள். தென் மாவட்டத்திலே புதிதாக ஏற்படுத்தப்பட்ட அந்த பல்கலைக் கழகம் குறைவான பண ஒதுக்கீட்டினால் நல்ல முறையில் நடக்க முடியாது. அதையும் அதிகமாக்கி நல்ல முறையிலே நடக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் அமைச்சரவர்களை கேட்டுக்கொண்டு எனக்குப் பேச சந்தர்ப்பம் அளித்ததற்கு இந்த மன்றத்திற்கு நன்றி கூறிக் கொண்டு, என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

**ஹாஜி ம. மு. பீர்முஹம்மது :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கல்வி மானியக் கோரிக்கையின் மீது பேசுகின்ற வாய்ப்புக் கொடுத்ததற்காக நான் நன்றி தெரிவித்துக் கொள்வதோடு இந்தக் கோரிக்கையை மனப்பூர்வமாக ஆதரிக்கின்றேன். அதோடு நம் நாடு விடுதலை அடையவதற்கு முன்னால் இந்த நாட்டிலே வாழ்கின்ற மைனாரிடி சமய மக்களுக்குக் கல்விக் கூடங்களில் அவரவர்களுடைய சமய சார்புள்ள மார்க்கக் கல்வியைப் போதிக்கின்ற வாய்ப்பு இருந்தது. அந்த வாய்ப்பு நாடு விடுதலை அடைந்த பின்னால் இது சமய சார்பற்ற அரசு என்ற அடிப்படையில் சமயக் கல்வி போதிப்பதைத் தடுத்து நிறுத்தியிருப்பதை இந்த அரசு புனராலோசனை செய்து மீண்டும் சமயக் கல்வி போதனைக்கு வழிவகை செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய மத்திய அரசாங்கத்தார் மாணவர்களுடைய மத்தியில் குறிப்பாக உயர் நிலைப் பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கிடையே கட்டுப்பாடின்மையும், கிளர்ச்சி மனோபாவமும் அதிகமாகிக்கொண்டு வருவதற்குக் காரணம் என்ன என்பதை ஆராய்வதற்காக திரு. ஸ்ரீபிரகாசா அவர்கள் தலைமையில் ஒரு கமிஷனை நியமித்தார்கள். அப்படி நியமிக்கப்பட்ட அந்தக் கமிஷனுடைய தலைவர் திரு. ஸ்ரீபிரகாசா அவர்கள் "மாணவர்களுக்கு மத்தியில் கிளர்ச்சி மனோபாவம், புரட்சி எண்ணம், கட்டுப்பாடற்ற தன்மை ஏற்பட்டு வருவதற்குக் காரணமே ஆரம்பப்பள்ளிக்கூடங்களில் அவர்களுக்கு சமய உண்மைகளை அடிப்படையாக வைத்து கல்வி போதிக்கப்படாத நிலை தான்" என்பதை எடுத்துச் சொல்லி யிருக்கிறார்கள். இதை நம்முடைய கல்வி அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டுவருகிறேன். நம்முடைய ஆட்சி மதச்சார்பற்ற ஆட்சி என்பதை நாம் அறிவோம். அதே நேரத்தில் நம்முடைய நாடு மதம் அற்ற நாடு அல்ல என்பதை நாம் நினைவில் கொண்டாகவேண்டும். அதனால்தான் பள்ளிக்கூடங்களில் அந்நியர்களுடைய ஆட்சிக் காலத்தில் இருந்த ஒரு உரிமை அவரவர்களுடைய சமயத்திற்கேற்ற சமயக் கல்வி—முஸ்லிம்கள், கிருஸ்துவர்களுக்கு மட்டும் அல்ல—இந்த நாட்டில் உள்ளவர்கள் ஒவ்வொருவருக்கும் சமய நம்பிக்கை உடைய ஒவ்வொருவருக்கும் அவரவர்களுடைய சமயத்தை அடிப்படையாக வைத்து, கடவுள் நம்பிக்கையை ஊட்டி வளர்க்கின்ற கல்வி போதிக்கின்ற போதுதான், அந்தரங்கமாகவும், பகிரங்கமாகவும் இறைவனை நினைத்து தவறில் இருந்து தன்னை காத்துக்கொள்கின்ற தவறே புரியாத மனோபாவம் உண்டாகும். ஆகவே சமயக் கல்வி மிகவும் அவசியம் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

கேரள ராஜ்யத்தில் கூட, அந்நாட்டு முதல் அமைச்சர் திரு. நம்பூதிரி பாட் அவர்கள்—அவர்கள் மதச்சார்பற்ற நிலையில் இருந்தாலும், நாடு மதமற்று இருக்கவில்லை என்கிற உண்மையை அடிப்படையாகக் கொண்டு கல்விக் கூடங்களில் மதக் கல்வியைப் பள்ளிக்கூடங்களில் தனியார் ஏற்பாட்டில் போதனை செய்யலாம் என்பதாக உத்தரவு பிறப்பித்திருப்பதை நான் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். கேரள நாட்டோடு இணைந்து இருந்து அண்மையில் தமிழ்நாட்டோடு சேர்ந்திருக்கிற செங்கோட்டை, கன்னியாகுமரி மாவட்டத்தில், உள்ள சில தாலூகாக்களில் உயர்நிலைப் பள்ளிகளில் முஸ்லிம்களுக்கு அரபு இரண்டாவது பாடமாக எடுத்துக்கொள்கிற வாய்ப்பு இருந்தது. இந்த அரபு வகுப்புகளை நடத்துகிற ஆசிரியர்கள் இன்றையதினம் ஆண்டுக்கு ஆண்டு அவர்களுடைய பதவி நீடிக்கப்படுகிற நிலை இருக்கின்றது. தாற்காலிகமாகவே அவர்களை வைத்திருக்கிற நிலையை மாற்றி நிரந்தரமாகப் பழைய நிலையில் அவர்கள் தொடர்ந்து செயல்படுவதற்கு வழி இல்லை. அங்குள்ள உயர்நிலைப் பள்ளியில் உள்ள முஸ்லிம் மாணவர்கள் அரபு மொழியை இரண்டாவது பாடமாக எடுத்துப் படிக்கிற வாய்ப்பை மாற்றம் இன்றி ஏற்படுத்துத் தரவேண்டும், அரபு வகுப்புகளை எடுக்கிற ஆசிரியர்களுடைய பதவியை நிரந்தரம் செய்து சம்பளமும் சரியான முறையில் நிர்ணயிக்கப்பட வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அதோடு வடாற்காடு மாவட்டத்தைப் பொறுத்த வரையில் உருது மொழியைத் தாய்மொழியாகக் கொண்டு வாழ்கிற மக்கள் 25 சதவிகிதம் இருக்கிறார்கள். அங்கே உள்ள உயர்நிலைப் பள்ளிகளை, நடுநிலைப் பள்ளிகளை உருது மொழியையே போதனமொழியாகக் கொண்டவையாக சில இருக்கின்றன. வேலூர் அரசாங்கக் கலைக் கல்லூரியில் உருதை பாடமொழியாகக் கொண்டு போதிக்கிற வாய்ப்பு இருக்க வேண்டுமென்று சென்ற ஆண்டே ஒரு கோரிக்கை வந்திருக்கிறது. இந்த ஆட்சியில் அந்தக் கோரிக்கை கோரிக்கை அளவில் இருந்துவிடாதவாறு அங்கே உருதை போதனமொழியாகக் கொண்ட பகுதியைத் தொடங்கவேண்டும். நம்முடைய அரசியல் சட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ள 14 தேசிய மொழிகளில் உருது ஒரு மொழியாக அங்கீகரிக்கப்பட்டு இருக்கிறது. அந்த வடாற்காடு மாவட்டத்தில் உருது மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர்களும் 25 சதவிகிதம் இருக்கிறார்கள். இந்தக் காரணத்தினால் வேலூர் கலைக் கல்லூரியில் உருதுமொழி பாடத்திற்கும் கல்வி அமைச்சர் அவர்கள் இவ்வாண்டே ஆவன செய்யவேண்டுமென்று பேரவையின் துணைத் தலைவர் அவர்கள் மூலமாக நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு வடாற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் வாணியம்பாடி, ஆம்பூர், குடியாத்தம், திருப்பத்தூர் ஆகிய ஊர்களில் ஆரம்பக் கல்விக் கூடங்களில் எந்த எந்தப் பள்ளிகளில் 20 சதவிகிதம் முஸ்லிம் மாணவர்களுக்கு மேல் இருக்கிறார்களோ அங்கெல்லாம் உருதுவை மூலமொழியாகக் கொண்டு போதனை நடைபெற வகை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சட்டத்திலேயே அப்படி இருக்கிறது. அந்தச் சட்டமும் இன்றைக்கு சிறிய அளவில் செயல்பட்டு வருகிறது. இன்னும் மாணவர்களுடைய பெருக்கம் காரணமாக புதுப் பள்ளிக்கூடங்கள் தோற்றுவிக்கவேண்டிய நிலைமை இருக்கிறது. ஆகவே, இதுபற்றி நகராட்சிகளையும் கலந்துகொண்டு புதிய பள்ளிகளை உருதுவை மூலமொழியாகக் கொண்டு ஆரம்பிக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய கல்வி முறை அந்தக் காலத்தில் வெள்ளைக்காரன்கொண்டு வந்த மெக்காலே கல்வித் திட்டத்தையே அடிப்படையாகக் கொண்டது. அதன்மூலம் வெள்ளைக்காரன் தங்களுடைய நிர்வாகத்திற்கு தேவைப்படுகிற குமஸ்தாக்களை தயாரித்துக்கொள்ளவே ஏற்பாடு செய்தான். நம் நாடு விடுதலை அடைந்திருக்கிறது. விடுதலை அடைந்த ஒரு நாட்டின் கல்விமுறை வெறும் குமஸ்தாக்களாக்கும் வாய்ப்பை உண்டாக்குகின்ற ஒன்றாக இனியும் இருக்கக் கூடாது. வெள்ளைக்காரன் காலத்திய கல்வி முறை நம்முடைய மாணவர்களிடத்தில் ஒழுக்கத்தையும் வளர்க்கவில்லை. அவர்களுடைய பண்பாட்டையும் வளர்க்கவில்லை. தியாகத்தையும் வளர்க்க



வில்லை. "உடலையும், உள்ளத்தையும், ஆன்மாவையும் ஒருசேர வளர்ப்பது தான் உன்னதமான கல்வி" என்பதாக நம்முடைய தேசத் தந்தை காந்தியடிகள் சொல்லி இருக்கிறார்கள். இப்போது இருக்கிற கல்விமுறை நம்முடைய மாணவர்களின் உடலையும் வளர்க்கவில்லை, உள்ளத்தையும் வளர்க்கவில்லை, ஆன்மாவையும் வளர்க்கவில்லை. உடலையும், உள்ளத்தையும், ஆன்மாவையும் ஒருசேர வளர்க்கின்ற கல்விமுறை ஏற்படுகின்ற போதுதான் மாணவர்களிடையே கட்டுப்பாடு, ஒழுக்கம் ஆகியவை உண்டாகி தேசத் தியாகத்திற்கு தங்களை அர்ப்பணித்துக்கொள்கிற உன்னதமான நிலை ஏற்படும். ஆகவே, உடலை, உள்ளத்தை, ஆன்மாவை ஒருசேர வளர்க்கின்ற ஒரு கல்வித் திட்டத்தை உருவாக்கித் தந்து இன்றுள்ள கல்வித் திட்டத்தை மாற்றி அமைக்கின்ற முறையில் நம் அரசு முயற்சி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன். நன்றி.

***திரு. என். எஸ். வி. சித்தன் :** சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1967–68-ஆம் ஆண்டு கல்வி மானியத்தின்மீது கொடுக்கப்பட்டுள்ள வெட்டுப் பிரேரேணையை ஆதரித்துச் சில கருத்துக்களைச்சொல்லலாம் என்று நினைக்கிறேன். நம் நாடு பொருளாதாரத் துறையிலே பின்தங்கிய நாடு. ஏனைய நாடுகள் பொருளாதாரத் துறையிலே வளர்ந்து வேண்டிய வசதிகளையெல்லாம் பெற்றுத் திளைத்துக்கொண்டு இருக்கின்ற நேரத்திலே நம்முடைய நாட்டிலே சாதாரணமாகப் பெரும்பாலான மக்கள் உணவு, உடை போன்றவற்றிற்கெல்லாம் மிகக் கடினமாக உழைக்க வேண்டியிருக்கிறது. எனவே உற்பத்தியைப் பெருக்கவேண்டுமென்று நம்முடைய தலைவர்கள் எல்லாம் வற்புறுத்தி வருகிறார்கள். உணவு உற்பத்தி காடு, கழனிகளில் மட்டுமல்ல, ஆலைகளிலேயும் உற்பத்தியைப் பெருக்க வேண்டும், அப்படி இரண்டு முறைகளிலும் உற்பத்தியைப் பெருக்கினால் தான் நம்முடைய பொருளாதார நிலை வளர்ச்சியடையும். கலைக் கல்லூரியில் மாணவர்கள் படிப்பது அரசினர் துறையில் எழுத்தர்களாக உழைப்பதற்கான நிலைமையிலேதான் இருக்கிறதே தவிர தொழிலபிவிருத்தியில் ஈடுபடக் கூடிய முறையில் இல்லாததால் தொழில் வளர்ச்சிக்கான வாய்ப்புகள் நம் நாட்டில் இல்லை. சென்னையிலே பொறியியல் துறையிலே படித்துப் பட்டம் பெற்ற மாணவர்களுக்கு இந்தியா முழுவதிலும் நல்ல வாய்ப்புக்கள் இருக்கின்றன. பல்வேறு துறைகளிலும் அவர்களுக்கு இந்தியாவில் மட்டுமல்ல, அமெரிக்கா போன்ற உலக நாடுகளிலும் வாய்ப்புகள் இருக்கின்றன. எனவே தொழில் நுட்பக் கல்வியை வளர்ப்பதற்கு இந்த அரசு ஏற்பாடுகள் செய்தாகவேண்டும். 1965–66-ஆம் ஆண்டிலே தொழில்நுட்பக் கல்விக்காக என்று 154 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டது. பிறகு 1966–67-ஆம் ஆண்டுக்கு அதிலே 9 லட்ச ரூபாய் அதிகப்படுத்தி 163 லட்சமாக ஆக்கப்பட்டிருந்தது. இப்பொழுது 1967–68-ஆம் ஆண்டில் என்ன காரணத்தாலோ தெரியவில்லை 139 லட்சமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. தொழில் பெருகவேண்டும் உற்பத்திப் பெருக வேண்டுமென்று நினைக்கின்ற இந்த அரசு தொழில் நுட்பக் கல்விக்கு ஒதுக்கியிருக்கிற தொகையை குறைவாக ஒதுக்கியிருப்பதற்கு காரணம் என்ன என்பதை கனம் தொழிலமைச்சர் அவர்கள் விளக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தியாவிலேயே முதன்முதலாக தமிழகத்திலேதான் நண்பகல் உணவு திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. ஆசிய ஜோதி பண்டித நேரு அவர்கள் நம் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இதைப்பற்றிப் பாராட்டிப் பேசியிருக்கிறார்கள். உதவித் தொகையை எடுத்துக் கொண்டால் ஒரு மாணவனுக்கு ஒரு வேளைக்கு 7 காசுகள் தான் கொடுக்கப்படுகிறது. இது மிகவும் குறைந்ததாக இருக்கிறது. விலைவாசிகள் ஏறியிருக்கின்ற இந்த நேரத்திலே ஏழு காசுக்கு எப்படி உணவு கொடுக்க முடியும் என்பதை ஆராய்ந்து இந்த நண்பகல் உணவுக்கு அதிகமாக நிதி ஒதுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அமெரிக்க கேர் (CARE) ஸ்தாபனத்திலிருந்து பெறப்படுகின்ற பால் தூளை ஆசிரியர்கள்-எனக்கு முன்பு பேசியவர்கள்கூடக் குறிப்பிட்டார்-வேறு பல முறைகளில் பயன்படுத்திவிடுகிற ஒழுக்கக் கேடுகள் இருக்கின்றன. ஆகவே கேர் ஸ்தாபனம் கொடுக்கின்ற பால் தூளை நல்ல முறையில் விநியோகம் செய்வதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தனியார் கல்லூரியிலே அதிக அளவில் மாணவர்கள் தேர்ச்சியடைகிறார்கள். மாணவர்களை அவர்கள் சேர்க்கின்ற பொழுது நல்ல சதவீதம் அதாவது நல்ல மார்க்குகளை எடுத்தவர்களைத் தங்கள் கல்லூரிகளில் சேர்த்துக்கொள்ளுகிறார்கள். அப்படி நல்ல மார்க் எடுத்தவர்களைச் சேர்த்து நல்ல ரிசல்ட் காட்டுவது பெரிய காரியமல்ல. ஆகவே அதிக மார்க் எடுத்த மாணவர்களைச் சேர்ப்பதோடு குறைந்து மார்க் எடுத்தவர்களையும் குறிப்பிட்ட சதவீதம் அப்படிப்பட்ட கல்லூரிகளில் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்று அரசாங்கம் ஆணை பிறப்பிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

புத்தகங்கள் வெளியிடுவது சம்பந்தமாக, நான் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். தமிழக அரசு ஒரு சில புத்தகங்களைத் தான் வெளியிட்டு வருகிறது. ஏனைய புத்தகங்களைத் தனியார்கள் தான் பிரசுரிக்கிறார்கள். ஆகவே அப்படியில்லாமல் தமிழகத்திலே அத்தனை புத்தகங்களையும் பிரசுரிக்கின்ற வேலையை அரசே மேற்கொண்டு வெளியிட்டால் நல்லது. எழுதுகின்ற ஆசிரியர்களுக்கு நல்ல ஊதியம் அதன் மூலம் கிடைக்கும், அதோடுகூட பல லட்சக்கணக்கான ரூபாய்கள் அரசு சேமிக்க முடியும்.

எஸ். எஸ். எல். சி. கேள்வித் தாள்கள் வெளியாகின்ற நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. சென்ற முறை நம்முடைய அமைச்சர் அவர்கள் கேள்வித் தாள் வெளிவரவேயில்லை என்று சொன்னாலும் கூட கேள்வித் தாள்கள் இனிமேலாவது வெளிவராதபடி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மாணவர்களிடையே, மாணவர்கள் சமுதாயத்திடையே ஒழுக்கமும், கட்டுப்பாடும் குறைந்து வருகிறது. இளமையில் கல்வி சிலைமேல் எழுத்து என்பதுபோல் அவர்களுக்கு சிறிய வயதில் என்ன பழக்கவழக்கங்கள் ஏற்படுகின்றனவோ என்ன கல்வி கற்கிறார்களோ, என்ன பாடம் படிக்கிறார்களோ அதையேதான் பிற்காலத்திலும் அவர்களிடம் நாம் காண்கிறோம். ஆகவே அதைப் போக்குகின்ற முறையில் ஒரு கல்விக்குழு, நிபுணர் குழுவொன்றை அமைத்து இதற்கான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாணவர்கள் தகுதியை நிர்ணயிக்கும்பொழுது தேர்வு முறையை மட்டும் வைத்துக்கொண்டு தேர்ச்சியை முடிவு செய்யக்கூடாது. தேர்வுக்கு இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பாக ஒரு மாணவருக்கு வசதியின்மை காரணமாகவோ அல்லது உடல் நலமின்மை காரணமாகவோ தேர்வு நன்றாக எழுதமுடியாத நிலைமை ஏற்பட்டுவிட்டால், அந்த மாணவனுக்குத் தேர்ச்சி கிடைக்காத நிலைமை ஏற்பட்டுவிடுகிறது. எனவே மாணவன் பள்ளியில் சேர்ந்ததிலிருந்து, அவன் படிக்கின்ற முறை, எடுத்திருக்கின்ற மார்க், ஆசிரியருக்குக் கொடுக்கின்ற மரியாதை, அவனுடைய சமுதாயப் பணிகள் இவற்றையெல்லாம் அவ்வப்பொழுது தெரிந்துகொள்கிறவண்ணம் ஒரு ரிக்கார்டு அமைத்துவிட்டால், அந்த ரிக்கார்டின் அடிப்படையில் அந்த மாணவனுடைய தேர்ச்சியைப்பற்றி முடிவுசெய்யலாம். ஆகவே அப்படிப்பட்ட ரிக்கார்டை ஏற்படுத்தி, தேர்வுக்கு அதையும் அடிப்படையாக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் என்னுடைய தொகுதியாகிய திருமங்கலம் தொகுதியில் பெண்களுக்கு என்று செகண்டரி ஆசிரியர் பயிற்சி பள்ளியில் முன்பு 80 பேர்கள் பயிற்சி பெற்று வந்தனர். ஆனால் என்ன காரணத்தாலோ அதை 40 பேர்களாகக் குறைத்திருப்பதால் 40 பேர்கள்தான் பயிற்சி பெறக்கூடிய





நிலைமை இருக்கிறது. மாணவர்களை அதிகமாகச் சேர்க்கவேண்டும், அப்படி சேர்ப்பதால் ஆசிரியர்கள் அதிகமாக வேண்டும் என்று அரசு சொல்கிறது. ஆகவே, அங்கே மீண்டும் 80 பேர்கள் படிக்கக்கூடிய அளவுக்கு நிலைமையை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருமங்கலத்திலிருந்து ஆயிரக்கணக்கான மாணவர்கள் வெளியூர்களுக்கு சென்று, மதுரை, விருதுநகர் போன்ற ஊர்களுக்குச் சென்று படிக்கவேண்டிய நிலைமைதான் இருக்கிறது. திருமங்கலத்திலேயே கல்லூரி படிப்பு படிக்க முடியவில்லை. வெளியூர்களுக்கு பஸ்களில், ரயில்களில் செல்வதால் நேரம் வீணாகிறது. ஆகவே அவர்கள் திருமங்கலத்திலேயே படிக்கக்கூடிய வகையில் அங்கே ஒரு அரசினர் கலைக் கல்லூரி ஏற்படுத்தித்தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

***புலவர் க. முருகையன்**: மாண்புமிகு தலைவர் அவர்களே, கல்வி மானியத்திலே பேசுகின்ற ஒரு வாய்ப்பை அளித்ததற்காக நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் மனிதனின் அத்தியாவசியத் தேவையில் நான்கில் ஒன்றாக இருக்கக்கூடிய கல்விக்கு அதன் திட்டமிட்ட பொருளில் நாலில் ஒரு பகுதியை அளித்து, நாட்டிலே நான்கிலே ஒன்றாகிய புகழைப் பெறுகிற வாய்ப்பைப் பெற்றிருக்கிறது. எனவே இந்த மானியக் கோரிக்கையை நான் வரவேற்கிறேன். சென்ற ஆண்டை விட இந்த ஆண்டு ஏறக்குறைய எட்டுக்கோடி சில்லரை ரூபாய் அதிகமாகக் கல்விக்காக ஒதுக்கியிருக்கிற நேரத்திலே, திராவிட முன்னேற்றக் கழகம் வந்தால் கல்வி அழியும், திறக்கப்பட்ட பள்ளிகள் மூடப்படும், உண்டாக்கப்பட்ட கல்லூரிகள் தகர்க்கப்படும் என்ற பொய்யான, பொருத்தமற்ற வாதங்களைத் தகர்த்தமைக்காகவும் நான் இதை வரவேற்கிறேன். படிக்காமலே மேதையாகிவிடமுடியும் தமிழகத்திலே, படிப்புக்கு அவ்வளவு ரூபாய் தேவையில்லை என்று கருதாமல் படித்தவர்கள் மேலும் வளரவேண்டும் என்பதிலே அக்கறை இந்த அமைச்சரவை காட்டியிருக்கிறது என்பதைக் காட்டுகின்ற இந்த மானியக் கோரிக்கையை நான் வரவேற்கிறேன்.

மதிய உணவுத் திட்டத்தைப் பற்றி எனக்கு முன்பு பேசியவர்கள் தெள்ளென விளக்கிக் காட்டினார்கள். மதிய உணவுத் திட்ட மாணவர்களின் தரத்தைக் குறைக்கவும், ஆசிரியர்களுடைய கல்விக் கடமைகளைக் கெடுக்கவுமே பயன்படுகிறது என்று சொல்லலாம். பொருள்களை வாங்கி வருவது, கேர் ஸ்தாபனத்திலிருந்து உணவை வாங்கி வருவது தலைமையாசிரியருடைய வேலை. அதைச் சமைத்துப் போடுவது ஆசிரியர்களுடைய வேலை. சமைத்ததைத் தின்றுவிட்டு செல்வது மாணவர்களுடைய வேலை. இதுதான் நிலைமையே ஒழிய இதை மாணவர்கள் பெற்றுப் பயனடைகிறார்கள் என்பது கற்பனைதான். 15 மைல் சுற்றளவுள்ள ஒரு உணவு மையத்தை அமைத்து, அங்கிருந்து உணவை வண்டிகளில் கொண்டு போய்க் கொடுப்பது என்ற திட்டம் இருப்பதாகத் தெரிகிறது. அது நடைமுறைக்கு பயன்படுகிற நல்ல திட்டம் என்று கருதுகிறேன். நான் ஆசிரியனாக, தமிழாசிரியனாக பணியாற்றியவன். எங்களுடைய குறைகளை எடுத்துச் சொல்லவேண்டும். இதைப்பற்றி என்னைவிட நல்ல முறையில் பேசக்கூடிய ஒரு தக்கவர் இப்படியெல்லாம் பேசமுடியாத இடத்திலே அமர்ந்திருப்பதாலே நான் இதைப் பற்றிப் பேசக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கல்வித் துறையில் இருக்கிற ஒரு சோம்பலை இன்று நாடே அறியும். மற்றைய அலுவலகங்களைவிட கல்வித் துறை அலுவலகங்கள் கடந்த 20 ஆண்டுகளில் மிக மிதமாக நடந்திருக்கின்றன. குறிப்பாக, தமிழைப் பொருத்தவரை, தமிழாசிரியர்களைப் பொருத்தவரை 20 ஆண்டுகாலமாக நடந்து வந்த நடைமுறை பயங்கரமானது. பல்வேறு காரணங்கள் இருந்திருக்கலாம். சுருக்கமாகச் சொல்லப்போனால் தமிழாசிரியர்களின் கெட்ட காலமோ என்னவோ, கடந்த கால அரசு தங்களுடைய முதல் எதிரியாகத் தமிழாசிரியர்களைக் கருதினார்கள். காரணம் என்னவென்று தெரியவில்லை. தமிழாசிரியர்கள் தமிழ் வளர வேண்டுமென்று நினைத்தது காரணமாக இருக்கலாம்.

எனக்கு முன்பு பேசிய எதிர்க்கட்சியைச் சேர்ந்த திரு. ஜார்ஜ் அவர்கள் சொன்னார்கள்—தமிழைக் காங்கிரஸ் அரசு வளர்க்கவில்லையா ? அதற்கான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளவில்லையா ? என்றெல்லாம் கேட்டார்கள். உள்ளபடியே நான் அவரைக் குறை சொல்வதாக யாரும் கருதக்கூடாது. உள்ளபடியே, தமிழாசிரியர்களுக்குத் தக்க மரியாதை கொடுத்திருந்தால் ஜார்ஜ் அவர்கள் "எடுத்துக் கொள்ளவில்லையா"? என்பதற்கெல்லாம் "எடுத்துக் கொல்லவில்லையா"? என்று சொல்லியிருக்க மாட்டார்கள். நல்ல தமிழாசிரியரிடம் பயின்றிருந்தால் அந்த குறை இருக்காது.

**மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர் :** சில நேரத்தில் ஒலிக்கின்ற முறையில் சில சொற்களை ஒலிப்பது வராது. அதைத் தவறாக எடுத்துக் கொள்ளக்கூடாது ; அதை இங்கே குறிப்பிடுவது முறையாகாது.

**திரு. வ. ஜார்ஜ் :** ஆன் எ பாயின்ட் ஆப் பர்சனல் எக்ஸ்பிளனேஷன்..

**மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர் :** அதெல்லாம் இப்போது இல்லை.

**புலவர் க. முருகையன் :** கடந்த காலத்திலே அந்தக் கேள்வியைக் கேட்டபோது இன்னொன்றையும் நினைவுபடுத்த விரும்புகிறேன். தமிழைக் காங்கிரஸ் கட்சி வளர்த்திருந்தால் இவ்வளவு பயங்கரமான தோல்வியைச் சந்தித்து இருக்கமுடியாது. ஏறக்குறைய 150 இடங்களைப் பெற்றிருந்த காங்கிரஸ் 50 இடங்களை மட்டுமே பெறவேண்டிய நிலை ஏற்பட்டது. அதற்கு மாறாக திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்பாராத மாபெரும் வெற்றியைப் பெற அடிப்படை காரணம் தமிழிடத்திலே வைத்திருந்த பற்றுதலும் தமிழ் இலக்கியங்களைப் போற்றுவதிலே முதன்மையாக நின்று எடுத்துக் கொண்ட நடவடிக்கைகளும் தான்.

**மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர் :** கொடுக்கப்பட்டிருக்கும் நேரம் குறைந்த நேரம். ஆசிரியர்களின் தேவைகளைப் பற்றிக் கூறுவதாகச் சொன்னார்கள். அதைப் பற்றி மட்டும் கூறுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**புலவர் க. முருகையன் :** கடந்த காலத்தில் தமிழாசிரியர்கள் ஊதியத் திட்டங்களில் பல்வேறு மாறுபட்ட திட்டங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அதனாலே, தமிழகம் முழுவதும் இருக்கிற தமிழாசிரியர்கள் தங்களுக்கிருக்கிற தகுதிக்கேற்ற இடத்தை, ஊதியத்தை பெறமுடியாமலே இருக்கிறார்கள், உயர்நிலைப் பள்ளிகளிலே தமிழாசிரியர்களைப் போட வேண்டிய இடத்தில் போடாமலும், உயர்நிலைப் பள்ளிகளில் பாடம் நடத்த தகுதி பெற்று வகுப்புகளில் பாடம் நடத்தினாலும் முதல் நிலை ஊதியத்தை வாங்க முடியாது, இரண்டாம் நிலையிலேயே வைக்கப்பட்டு ஊதியம் அளிக்கப்பட்டு வருகிறது. இது பற்றி மேலிடங்களுக்கெல்லாம் எவ்வளவுதான் எழுதினாலும் பலன் இல்லை. அதற்கு ஒரு உதாரணம் சொல்ல வேண்டுமானால், நானே ஒரு உதாரணந்தான். நான் 1950-ல் இருந்து கிடைக்க வேண்டிய தகுதிக்காக எழுதி எழுதி 1967-ல் நான் தேர்தலுக்காக அந்த வேலையை விடுகிற வரை கிடைத்தபாடில்லை. என்னைப் போன்றவர்கள் தென்னாற்காடு, வட ஆற்காடு மாவட்டங்களில் நூற்றுக் கணக்கான பேர்கள் இருக்கிறார்கள். இந்தக் குறை கடந்த 20 ஆண்டு காலமாக நீங்காமல் இருந்தது. இப்போதுள்ள அரசால் தமிழாசிரியர்களுடைய கவலை ஓரளவு நிவர்த்திக்கப்படும் என்று கருதுகிறார்கள். இந்த அமைச்சரவையிலே தமிழறிந்த மூதறிஞர் முதலமைச்சராக இருக்கிறார். தமிழை உயிராகக் கருதுகிற அமைச்சர்கள் வீற்றிருக்கிறார்கள். இந்த நாளிலே தமிழாசிரியர்களுக்கும், தமிழுக்கும் இருக்கின்ற குறைகளை நீக்கவேண்டும். இதை நாங்கள் எதிர்பார்ப்பதை அதிகம் என்று சொல்ல முடியாது. எனக்கு முன்பு ம. பொ. சி. அவர்கள் பேசும்போது தமிழின் முக்கியத்துவத்தைக் குறிப்பிட்டுக் காட்டினார்கள். இங்கே வரையப்பட்டிருக்கும் அத்தனை திட்டத்திலும் தமிழுக்கு முதலிடம் கொடுக்கப்படும் என்ற கொள்கையை அடிப்படையாகக்கொண்டிருப்பதை வரவேற்கிறேன்.



தமிழுக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய இடத்தை, கிடைக்க வேண்டிய நேரத்தில் கிடைக்கச் செய்வது ஆட்சியின் கடமையாகும். கல்லூரிப் பாடங்களை போதிப்பதைப் பொறுத்து இப்போது இருக்கும் முறையை எவ்வளவு விரைவாக மாற்ற முடியுமோ அவ்வளவு விரைவாக மாற்றுவதற்கு முயலவேண்டும். வெளி மாநிலத்திலிருந்து வருகிறவர்களுக்காக வேண்டுமானால் ஆங்கிலத்திலே போதிக்கின்ற முறை ஓரளவு இருக்கலாம். தமிழர்களுக்கு தமிழில் எல்லாப் பாடங்களையும் கற்றுத் தருகிற நிலைமையை விரைவில் கொண்டு வரவேண்டும் ; அதை இந்த ஆட்சி கொண்டு வரவேண்டுமென்று தமிழர்கள் எதிர்பார்ப்பதில் தவறு இல்லை.

தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு, அரசினர் பள்ளி ஆசிரியர்களுக்கு அளிக்கப்படுகிறது போல் மருத்துவ வசதி அளிக்கப்படுவதில்லை. இந்த நாட்டிலே பிறந்த ஒவ்வொரு குடிமகனும் இந்த நாட்டின் மகன் ஆவன். பொதுவாக, நோய் தீர்க்கின்ற இந்த விஷயத்திலே வேறுபாடு காட்டாமல் நியாயமாக எல்லோருக்கும் மருத்துவ வசதி செய்து கொடுப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும். அது பற்றி அறிக்கையில் இருப்பது அறிந்து மகிழ்ச்சியடைகிறேன்.

சென்ற ஆண்டும் இந்த ஆண்டும் வந்திருக்கின்ற புத்தகங்களில் பல தரக் குறைவாக இருக்கின்றன. உதாரணமாக, தஞ்சை மாவட்டப் பள்ளிகளில் வைத்திருக்கக்கூடிய சமூக நூலில் "விண்ணாற்றிலிருந்து குடமுருட்டி ஆறு பிரிகிறது", "அப்பர் அணைக்கட்டு கும்பகோணத்தின் பக்கத்தில் இருக்கிறது, லோயர் அணைக்கட்டு குளித்தலை பக்கத்தில் இருக்கிறது" என்று நேர்மாறான செய்திகள் அதிலே இருக்கின்றன. ஒருவர் பாடியதை இன்னொருவர் பாடியதாக எழுதப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட குறைபாடுகளை உடனடியாக நீக்கவேண்டும். இவற்றிலே அமைச்சரகம் முழு கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாலை நேரக் கல்லூரியைத் தொடங்குவதில் இன்னும் கொஞ்சம் துரிதமாகச் செயல்பட வேண்டும். பல்வேறு காரணங்களாலே கடந்த காலத்தில் மேல்பட்டப் படிப்பு பயில முடியாதவர்கள் மாலை நேரத்தில் கல்வி பயின்று பட்டதாரிகளாக ஆக விரும்புகிறபடியால் அதற்கு இடத்தைக் கொஞ்சம் அதிகமாக்கவேண்டும். அதோடு அதற்கான இடத்தைத் தேர்ந்தெடுப்பதிலே கொஞ்சம் கவனம் செலுத்த வேண்டும். தஞ்சை சரபோஜி கல்லூரியில் மாலை நேரக்கல்லூரி ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. அது நகரத்தை விட்டு மூன்று மைலுக்கு அப்பால் இருக்கிறது. மாணவர்களாக இருந்தால் அவ்வளவு தூரம் சென்று படிக்க முடியும். ஆனால் உத்தியோகத்தில் இருக்கிறவர்கள் மாலை 5 மணிக்கு வேலை முடிந்து 3 மைல் தூரம் சென்று படிப்பது சிரமமாக இருக்கிறது. அதைக் கவனத்தில் கொண்டு சென்னையிலும் மற்ற நகரங்களிலும் இந்த மாலை நேரக் கல்லூரிகளை ஆரம்பிக்க அனுமதி தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இப்படி ஒரு சிறப்பான வாய்ப்பைத் தந்த தலைவர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

***திரு. கெ. இர ஞானசம்பந்தன் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கல்வி மானியத்தில் பேசும்போது சில விஷயங்களை மட்டும் கவனத்திற்குக் கொண்டு வந்து முடித்துக் கொள்ளலாம் என்று கருதுகிறேன். இந்த வருஷம் எஸ்.எஸ்.எல்.சி. பரிட்சையை 1,92,000 பேர் எழுதியிருக்கிறார்கள். அக்டோபர் மாதத்தில் பரிட்சை எழுதியவர்கள் 8,215 பேர். காலேஜுகளில் தேர்வு பெற்று வரக்கூடியவர்கள் 1,26,000-க்கு மேல் இருக்கும். இதோடு கூட ஆங்கிலோ-இந்தியன் ஸ்கூல், ஓரியண்டல் ஸ்கூல் எல்லாவற்றையும் சேர்த்தால் மேல் படிப்புக்கு போகக் கூடியவர்களின் எண்ணிக்கை 75,800-க்கு மேல் இருக்கும். இவை எல்லாவற்றையும் பார்ப்போமானால் இட்டத்தட்ட 82,000 பேருக்கு மேல் கல்லூரியில் படிக்க இடம் வேண்டும். பாலிடெக்னிக் போன்றவற்றில் 3,000 பேருக்கு மேல் சேர்த்துக் கொள்ள

வாய்ப்பு இல்லை. மெட்றாஸ், மதுரை யூனிவர்சிடி அறிக்கையைப் பார்த்தால் அவர்களுக்கு மட்டும் இருக்கக்கூடிய இடங்கள் 49,312 தான்—பி.யு.சி.-க்கு அண்ணாமலை யூனிவர்சிடியில் 600 இடங்கள். எல்லா காலேஜுகளிலும் ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது 55,000 இடங்கள் பி.யு.சி.-க்கு கிடைக்கும். மேலும் 27,000 மாணவர்களுக்கு சீட் வேண்டும். வளர்ந்து வரும் சமுதாயத்தில் கிராமங்களில் இருப்பவர்கள் கூட மேல் படிப்பு படிக்க வேண்டுமென்ற ஆர்வத்தோடு படித்து வருகிறார்கள்.

பி. ப. 12-30 அத்தகைய இளைஞர்களுக்கு படிக்க வசதி செய்து கொடுக்க சர்க்கார் நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளவேண்டும். அப்படிப்பட்டதொரு டயனமிக் அப்ரோச் இல்லாவிட்டாலும் படித்து வளர்ந்து வரும் மாணவர்கள் கல்லூரிகளில் இடம் கிடைக்காமல் தெருவில் அலையக் கூடிய நிலை ஏற்பட்டால் அது சமுதாயத்திற்கும், சமுதாய வளர்ச்சிக்கும் நல்லதல்ல. அதனால் அவர்களிடையே ப்ரஸ்ட்ரேஷன்தான் ஏற்படும். அதைத் தடுக்க வேண்டும்.

இன்று நகரத்தை எடுத்துக் கொண்டால் ஒரு காலேஜில் பி.எஸ்.ஸி.-க்கு வந்திருக்கிற அப்ளிகேஷன்ஸ் 1,140, அங்குள்ள இடங்களோ 124 தான். 124 இடங்களுக்கு 1,140 அப்ளிகேஷன்ஸ் வந்திருக்கின்றன. பீ.ஏ.-க்கு வந்திருக்கிற அப்ளிகேஷன்ஸ் 371, இருக்கிற இடமோ 100. பி.யூ.சி-க்கு 3,867 அப்ளிகேஷன்ஸ் வந்திருக்கின்றன. இருக்கிற இடமோ 690. ஆக நர்சரி முதல் கல்லூரி வரையில் பிள்ளைகளைச் சேர்க்க வேண்டுமென்றால் பெற்றோர்கள் படும்பாடு கொஞ்சநஞ்சமல்ல. இப்படிப்பட்டதொரு நிலை இந்த ஆட்சியில் அகற்றப்படவேண்டும். அதற்கு தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கு என்ன வழி? புதுக் கல்லூரி ஏற்படுத்தவேண்டுமென்றால் லட்சக்கணக்கான ரூபாய் ஆகிறது, அது முடியாது. அதனால் மாணவர்கள் தெருவில் சுற்றவேண்டுமா? கல்லூரியில் படிக்க உரிமை இருக்கிறது என்று அதிகாரிகளினால் அறிவிக்கப்பட்ட பிறகு மாணவர்கள் தெருவில் சுற்றுவது என்பது சமூக நீதியா? ஆகவே நான் சொல்வது, ஷிஃப்ட் ஸிஸ்டத்தை அமுல்படுத்தவேண்டும். அதை கடுமையாகக் கொண்டுவர வேண்டும். மதறாஸ் யூனிவர்சிட்டியும், அமைச்சர் அவர்களும் கல்லூரிகளில் ஷிப்ட் ஸிஸ்டம் கொண்டு வருவதை ஒப்புக் கொள்வதை சிலர் எதிர்க்கிறார்கள். எஸ்.எஸ்.எல்.ஸி.-யில் வடி கட்டவேண்டும். பி.யு.ஸி.-யில் சேர்ப்பதை ரெஸ்ட்ரிக்ட் செய்யவேண்டும் என்று கூறுகிறார்கள். இது ஒரு பிற்போக்கான கருத்து, மற்றவர்கள் படிக்க வேண்டாம் என்று கூறுகிற பழங்கருத்தாகும், இது ஒரு கன்ஸர்வேட்டிவ் வ்யூ. இதை நிச்சயமாக நாம் எதிர்க்கவேண்டும். அப்படிப்பட்டதொரு கருத்திற்கு நாம் இடம் கொடுக்கக்கூடாது. ஆகவே ஷிப்ட் ஸிஸ்டம் நமக்கு இப்போது மிகவும் தேவை. நேரம் இன்மையால் இதுபற்றி நான் விளக்கமாக சொல்லவில்லை. ஷிஃப்ட் ஸிஸ்டத்தை எங்கு நடத்தவில்லை? வான மண்டலத்திற்கு பிரயாணம் செய்யும் அளவிற்கு முன்னேறியுள்ள அமெரிக்கா போன்ற நாடுகளில் இந்த ஷிஃப்ட் ஸிஸ்டம் இல்லையா? பிரிட்டனில் இல்லையா? ஜப்பானில் நடத்தவில்லையா? அங்கெல்லாம் ஷிப்ட் முறையில் கல்லூரிகள் நடத்துகிறார்கள். அதனால் அங்கு கல்வியின் தரம் குறைந்துவிட்டதா? ஷிப்ட் ஸிஸ்டத்தினால் கல்வியின் தரம் குறைந்து விடும் என்று சொல்பவர்கள் சமுதாய வளர்ச்சிக்கு தடையாக இருப்பவர்களே, கன்ஸர்வேட்டிவ் ஐடியாஸ் உள்ளவர்கள்தான், சமுதாயம் வளர்ச்சி அடையக் கூடாது என்பவர்கள்தான் அதை எதிர்ப்பார்கள். ஆகவே இந்த ஷிஃப்ட் ஸிஸ்டத்தை கண்டிப்பாக அமலுக்குக் கொண்டுவர வேண்டும். உலகத்தில் உள்ள முன்னேற்றம் அடைந்த நாடுகளில், கல்வி வளர்ச்சி ஏற்பட்டுள்ள நாடுகளில் இதைக் கொண்டு வந்திருக்கும்போது நாம் ஏன் இங்கு கொண்டு வரக்கூடாது? ஆகவே சர்க்கார் உடனடியாக இந்த வருடமே ஆர்ட்ஸ் காலேஜில் உபரி செக்ஷன்களை ஏற்படுத்த நட வடிக்கைகள் எடுத்துக்கொள்ளவேண்டும். ஷிஃப்ட் ஸிஸ்டம் ஏற்படுத்துவது மிக மிக முக்கியமான வேலை. இதை உடனடிச் செய்யவேண்டும்.



செலக்ஷன் பற்றி ஒரு வார்த்தை. மதாராஸில் பத்து காலேஜ்கள் இருக்கின்றன என்றால் மாணவர்கள் பத்து காலேஜ்களுக்கும் அப்ளிகேஷன்ஸ் போடுகிறார்கள். இடம் இருக்கிறதா இல்லையா என்று சுற்றுகிறார்கள். அதேமாதிரி மதுரையிலும் உள்ள இரண்டு மூன்று கல்லூரிகளிலும் அப்ளிகேஷன்ஸ் போடுகிறார்கள். ஆகவே என் யோசனை என்னவென்றால் இவற்றையெல்லாம் பூல் செய்து, ஒரு அட்மிஷன் கமிட்டி ஏற்படுத்தவேண்டும். கல்வி இயக்குனர் இருக்கட்டும், அமைச்சர் அவர்கள் இருக்கட்டும், எல்லாக் கல்லூரி பிரின்சிபால்களும் இருக்கட்டும். மாணவர்களுக்கு எந்த காலேஜ் வேண்டும் என்பது பற்றி அப்ளிகேஷனில் குறிப்பிடட்டும். எந்தெந்தப்ரயாரிட்டி என்று அப்ளிகேஷனில் சொல்லட்டும். அது கமிட்டிச் செயலாளரிடம் வரட்டும். எல்லோரும் உட்கார்ந்து முடிவு செய்து அவர்கள் ப்ரபரன்ஸ் அடிப்படையில் இந்தக் கல்லூரி என்று கொடுப்பதாகயிருந்தால் மாணவர்களும், அவர்கள் பெற்றோர்களும் அலைய வேண்டியதில்லை, இடமும் கிடைக்கும் லயோலா காலேஜில் எவ்வளவு கஷ்டமிருக்கிறது என்று பார்த்தேன். போலீஸை வைத்திருக்கிறார்கள், ஆயிரம் பேர்கள் கூட்டம் இருக்கும். கடவுளைப் பார்த்தாலும் பிரின்ஸிப்பாலைப் பார்க்க முடியவில்லை. அவர்களுக்கும் கஷ்டம் இருக்கிறது. ஆகவே திட்டமிட்டு நாம் செய்தால் மாணவர்களும் அலைய வேண்டியிராது. பிரின்ஸிபால்களுக்கும் கஷ்டம் இருக்காது. அதனால் கல்லூரிகளின் தனித் தன்மை போய் விடாது. எந்தெந்தக் கல்லூரிகளில் எவ்வளவு எவ்வளவு மாணவர்கள் சேருகிறார்களோ அந்த அடிப்படையில் பீஸைப் பிரித்துக் கொடுத்துவிடலாம். ஆகவே "ப்ளாண்ட் அட்மிஷன்" என்ற நிலைமையை ஏற்படுத்த அரசு திட்டமிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று திட்டமிடுகிறார்கள் மேல் நாடுகளில். இப்படிச் செய்வதால் நிர்பந்தங்களும் வராது, ஃபேவரிட்டிஸமும் ஏற்படாது. ஆகவே ப்ளாண்ட் அட்மிஷன் முறையை மேற்கொண்டு கமிட்டிகள் அமைத்து நடவடிக்கைகள் எடுக்க திட்டமிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நிச்சயமாக இதைத் தவிர இதற்கு வேறு வழியே இல்லை. நான் முன்பே சொல்லியிருக்கிறேன், 575 மார்க்குகள் வாங்கியவனுக்கு அட்மிஷன் கிடைக்கவில்லை, ஆனால் 325 மார்க்குகள் வாங்கியவனுக்கு காலேஜில் அட்மிஷன் கிடைத்திருக்கிறது என்பதை. இதையெல்லாம் தவிர்க்க கல்வி இயக்குனரைச் செயலாளராகக் கொண்டு செயல்படுத்தலாம். (மணியடிக்கப்பட்டது). பி.ஏ., பி. எஸ்ஸி., படித்துவிட்டு கல்லூரிகளில் ட்யூட்டர்களாக, டெமான்ஸ்ட்ரேடர்களாக இருப்பவர்களுக்கு ஆரம்பச் சம்பளம் 200 ரூபாய் கிடைக்கிறது. ஆனால் அதே படிப்பு படித்தவர்களுக்கு ஹை ஸ்கூல்களில் ஆரம்பச் சம்பளம் 140 தான் கொடுக்கப்படுகிறது. ஏன் இந்த வித்தியாசம், இந்த வித்தியாசம் இருக்கக்கூடாது. அடுத்தபடியாக, எலிமெண்டரி எஜுகேஷனை ஸ்டாச்சுட்டரியாக்க வேண்டும். இதற்கு பெரிய அதிகாரிகளிடம் மறுப்பு இருப்பதாக தெரிகிறது. அப்படி ஸ்டாச்சுட்டரியாக்கினால்தான் அவர்கள் உரிமை நீதி மன்றத்தில் பாதுகாக்கப்படமுடியும். ஆகவே அதை ஸ்டாச்சுட்டரியாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, புத்தகங்களை தனியார் கம்பெனிகளிடம் விடாதீர்கள். அதனால் பேப்பர் விரயமாகிறது. நாம் ப்ரிண்டு செய்து கொடுப்பதனால் அவர்கள் ஒன்றல்லது இரண்டு ரூபாய்க்குக் கொடுப்பதை நாம் 30 பைசாவிற்குக் கொடுக்கமுடியும். ஆகவே அரசாங்கமே புத்தகங்களை அச்சிட்டுக் கொடுப்பதினால் குறைந்த விலையில் கொடுக்கமுடியும். கல்வி இயக்குனராக இருந்து டெல்லி சென்றிருக்கும் திரு. சுந்தரவடிவேலு அவர்களைப்பற்றி அவர்களை ஏன் மாற்றினார்கள் என்பதைப்பற்றி விளக்க நேரம் இல்லை. போனதடவை எஸ்.எஸ்.எல்.ஸி.-க்கு நான்கு நான்டீடெயிலில் ஒன்று சூஸ் செய்யப்பட்டது. "புக்ஸ் இந்தியா" சூஸ் செய்யப்பட்டதில் ஊழல் இருக்கிறது. ஆகவே தனியாரிடம் விடுவதால் ஊழல் அதிகமாகிறது. வாங்குகிறவர்களுக்கு விலை அதிகமாகிறது. ஆகவே புத்தகங்கள் வெளியிடுவதை சர்க்காரே ஏற்றெடுத்து நடத்தவேண்டும். ஆரம்ப ஆசிரியர்களுக்கு வைத்திய வசதி போன்றவைகளும், செகண்டரி கிரேட் பாஸ் செய்து

விட்டு ஹையர் கிரேட் ஆசிரியர்களாக இருப்பவர்களுக்கு செகண்டரி கிரேட் சம்பளம் கொடுக்க வேண்டுமென்று கூறிக்கொண்டு முக்கியமாக இந்த "ப்ளான்ட் அட்மிஷன்"-ஐ அமல்படுத்த நடவடிக்கைகள் எடுத்துச் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டு நேரம் இல்லாததால் அதிகம் பேச முடியவில்லை என்ற குறையோடு முடித்துக் கொள்கிறேன்.

***திரு. நா. கிருட்டிணன்** : சட்டமன்ற உதவித் தலைவர் அவர்களே, இந்தக் கல்வி மானியக் கோரிக்கையை ஆதரித்துப் பேச எனக்கு வாய்ப்புத் தந்தமைக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தரப்பட்டிருக்கிற நிதி நிலை அறிக்கையில் கல்லூரிகளில் பி.ஏ. பட்டப் படிப்பிற்கு தமிழை பாடமொழியாக ஆக்கியிருப்பதை வரவேற்கிறேன். அதேபோன்று தொழில் நுட்பக் கல்லூரிகளிலும், பொறியியல் கல்லூரிகளிலும் பகுதி நேரப் பட்டப்படிப்பு முறையை ஏற்படுத்தி இருப்பதை இந்த நேரத்தில் நான் பாராட்டுகிறேன். முக்கியமாக எங்கள் ஊரான காஞ்சீபுரத்தில் பச்சையப்பன் அறநிலையத்தாரின் துணையோடு ஒரு மகளிர் கல்லூரி துவக்க முற்பட்டதற்காக எங்கள் நகர மக்கள் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். கல்வித் துறையில் கடந்த இருபது ஆண்டுகளாக காங்கிரஸ் கட்சி ஆட்சி புரிந்த போதிலும் கிராமப்புறங்களில் பள்ளிகளுக்குச் சென்றால் அந்தக் காலத்திய குருகுல முறையைதான் பார்க்க முடிகிறது. மரத்தடிகளில்தான் வகுப்புகள் இன்னும் நடந்து கொண்டிருக் கின்றன. அந்த நிலைமையை மாற்றியமைக்க இந்த அரசு முழு முயற்சியும் எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். போதிய உயர்நிலைப் பள்ளிகள் ஏற்படுத்தப்படவேண்டும். குறிப்பாக மகளிர் கல்வி பயில உயர்நிலைப் பள்ளிகள் மிகவும் குறைவாக இருக்கின்றன. எங்கள் ஊரில் இரண்டு பள்ளிக்கூடங்கள் உள்ளன. ஒன்று கிழக்குக் கோடியில் உள்ளது. இன்னொன்று மேற்குக் கோடியில் உள்ளது. மேற்குக் கோடியில் உள்ளது சோமசுந்தர கன்னியா வித்யாலயா. அது தனியார் துறையில் நடத்தப்படுகிறது. அதில் ஒன்பதாவது வகுப்பில் ஆறு பிரிவுகளும், பத்தாவது வகுப்பில் நான்கு பிரிவுகளும், 11-வது வகுப்பில் இரண்டு பிரிவுகளும் உள்ளன. 11-வது வகுப்பிலே [illegible]டே பிரிவுகள் இருக்கின்ற காரணத்தினால் 10-வது [illegible]யிலிருந்து இரண்டு பிரிவுகளுக்கு தேவையான மாணவி [illegible]கு மட்டும் ஆண்டுத் தேர்வில் தேர்வு கொடுக்கிறார்கள். [illegible]-வது வகுப்பில் இரண்டு பிரிவு மாணவிகள் நிறுத்தப்படுகிறார்கள். 9-வது வகுப்பிலிருந்து, அதிலே 6 பிரிவுகள் இருந்தாலும் 10-வது வகுப்பில் இரண்டு பிரிவுகளுக்கு மட்டுமே இடமிருக்கின்றமையால் இரண்டு பிரிவு மாணவிகளுக்கு மட்டும்தான் தேர்வு தருகிறார்கள். அந்த வகையில் சென்ற ஆண்டு 220 மாணவிகள் 9-வது வகுப்பில் படித்தவர்களில் 84 மாணவிகளுக்குத் தான் தேர்வு கொடுத்திருக்கிறார் கள். இந்த நிலை மாற்றி அமைக்கப்பட வேண்டுமென்றால், 9-வது வகுப்பில் 6 பிரிவுகள் இருந்தால், 10-வது வகுப்பில் 5 பிரிவுகள், 11-வது வகுப்பில் 4 பிரிவுகள் என்ற விகிதப்படி வைக்கவேண்டும்.

(திரு. சி. வி. எம். அண்ணாமலை அவர்கள் நின்ற நிலையில் ஒரு மாண்புமிகு அமைச்சரோடு பேசிக்கொண்டிருந்தார்கள்.)

**மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர்** : கனம் உறுப்பினர் அவர்களை உட்கார்ந்து கொண்டு பேசுமாறு கேட்டுக் கொள்கிறேன். உறுப்பினர் திரு. கிருட்டினன் அவர்கள் தொடர்ந்து பேசலாம்.

**திரு. நா. கிருட்டிணன்** : அந்த முறையில் வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் ஒன்று நான் குறிப்பிட விரும்புவது, அந்த மகளிர் பள்ளியில் எந்த ஒரு ஆசிரியையும், குறிப்பிட்ட ஒருவரைத்



தவிர, ஒரு ஆண்டுக்குமேல் வேலைக்கு வைத்துக் கொள்வதில்லை இதிலே அரசாங்கம் தலையிட்டால்தான் அதைத் தடுத்துக் கட்டுப்படுத்த முடியும் என்று இந்த மன்றத்தின் முன் கூற விரும்புகிறேன்.

எங்கள் ஊரிலே — அது ஒரு பெரிய நகரம் என்பது யாரும் அறிந்தது —கிழக்குக் கோடியில் ஒரு மகளிர் உயர்நிலைப் பள்ளியும், மேற்குக் கோடியில் ஒரு மகளிர் உயர்நிலைப் பள்ளியும் மட்டுமே இருக்கின்றன. இடையில் உள்ளவர்கள் கல்வி பயில மிகவும் சிரமப்படுகிறார்கள். அரசாங் கத்தின் தரப்பிலாவது இன்னும் ஒரு மகளிர் உயர்நிலைப் பள்ளியை மத்தியப் பகுதியில் ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

புதிய கல்லூரிகள் ஆரம்பிக்கப்படும்போது, புகுமுக வகுப்பு மட்டும் ஆரம்பிக்கப்படுகிறது. அடுத்த ஆண்டிலே புதிய கல்லூரிகளில் பட்டப் படிப்பு வகுப்புகளும் ஆரம்பிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன். அந்த நிலைமை இல்லாத காரணத்தினால் புகுமுக வகுப்பில் தேறியவர்களுக்கு பட்டப்படிப்புக்கு இடமில்லாத காரணத்தினால் 1—2 ஆண்டுகள் வீட்டில் தங்கவேண்டிய நிலை ஏற்படுகிறது.

ஒரு மாணவன் தர்மபுரி மாவட்டத்தைச் சேர்ந்தவன், வாணியம்பாடி கல்லூரியில் சேர்ந்து புகுமுக வகுப்பில் தேர்வு பெற்று சென்ற ஆண்டு முழுவதும் இடம் கிடைக்காது வீட்டிலேயே காலத்தைக் கழித்து, இந்த ஆண்டும் அதே நிலைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறான். இந்த நிலை தவிர்க்கப்பட வேண்டுமென்றால் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட கல்லூரிகளில் பட்டப்படிப்பு வகுப்புகளைத் துவக்க வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

கல்லூரிகளில் படித்து, பல்கலைக் கழகத் தேர்வுகளில் மாணவர்களுக்கு வகுப்புகள் அளிக்கப்படுகின்றன. அந்த முறையில் ஏதோ தவறுகள் நடைபெறுவதாகப் பொது மக்களிடையே பெருத்த குறை நிலவி வருகி றது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், சென்ற ஆண்டு பி.காம். வகுப்பில் முதல் வகுப்புப் பெற்ற மாணவர்கள் 34. அந்த 34 பேர்களில் 30 மாணவர்கள் சென்னையில் உள்ள விவேகானந்தா கல்லூரி மாணவர்கள். மாநிலம் முழுவதும் உள்ள மற்ற கல்லூரிகளிலிருந்து நான்கு பேர்கள் தான் முதல் வகுப்புப் பெறத் தகுதி பெற்றவர்களா என்ற குறை மக்களிடத்தில் இருக்கிறது. இந்தக் குறையை நிவர்த்தி செய்யும் முறையில் இதற்கு உரிய ஆராய்ச்சியை நடத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

தனியார் துறைக் கல்லூரிகளில் இடம் கிடைப்பது என்பது மிகவும் சிரமமாக இருக்கிறது என்று நான் முன்னரேயே குறிப்பிட்டேன். இந்த நிலையை மாற்றி அமைக்க வேண்டுமானால், அரசு நடத்துகிற கல்லூரி களுக்கு பொறுக்குக் குழு நியமித்து மாணவர்களைத் தேர்ந்தெடுப்பது போல, தனியார் கல்லூரிகளுக்கும் அரசாங்கம் தான் மானியம் தருகிறது, அவைகளைக் கட்டுப்படுத்த அரசுக்கு அத்தனை அதிகாரமும் இருக்கிறது என்ற காரணத்தினால், தனியார்த் துறைக் கல்லூரிகளிலும் மாணவர் களைத் தேர்ந்தெடுக்க பொறுக்குக் குழுக்களை நியமித்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, நான் இந்தக் குறைகளையெல்லாம் குறிப்பிட்டுக் காட்டியது, இவ்வளவு காலம் வேர் ஊன்றிக் கிடந்த குறை கள் இன்றைய தினம் பொறுப்பேற்றிருக்கிற திராவிட முன்னேற்றக் கழக அரசு, அவைகள் இன்னும் நீடிக்காமல் மாற்றியமைத்து நாட்டு மக்களுக்கு கல்வித்துறை நல்ல பயனை ஏற்படுத்தித் தருகிற அளவுக்குப் பாடுபட வேண்டுமென்ற காரணத்தினால்தான் என்று கூறி, இந்தக் கல்வி மானியத்தை முழுமனதோடு ஆதரித்து, எனக்குப் பேசுவதற்கு வாய்ப்புத் தந்ததற்காக மீண்டும் நன்றி கூறி முடிக்கிறேன், வணக்கம்.

***திரு. கே. என். குமாரசாமி** : துணைப் பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட மன்றத்தில் கல்வி அமைச்சர் அவர்கள் கொண்டுவந் துள்ள மானியக் கோரிக்கையின் பேரில் பேசுவதற்கு, குறைந்த அளவிலே

ஐந்து நிமிடம் கொடுத்திருப்பதில், சகல விஷயங்களையும் சொல்ல முடியாதாகையால், சில குறிப்பிட்ட விஷயங்களை மட்டும் சொல்லி முடித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கல்வி மானியக் கோரிக்கையிலே, வருமானம் என்ற அடிப்படையிலே 1,500 ரூபாய்க்கு மேற்படாமல் வருமானம் உள்ளவர்களுக்குப் புகுமுக கல்லூரி வகுப்பில் சலுகை அளித்திருப்பதன் மூலமாக, தொழிலாளிச் சமூகம் என்று சொல்லப்படுகிற ஆலைகளிலே வேலை செய்கிறவர்களும், என்ஜினீயரிங் ஒர்க்ஷாப்புகளில் வேலை செய்கிறவர்களும் இந்தச் சலுகையைப் பெற முடியாது. அதனால் அவர்களுக்கும் சலுகை கிடைக்கின்ற ஒரு வாய்ப்பை அமைச்சர் அவர்கள் இந்த மானியக் கோரிக்கையிலே சேர்த்துக் கொள்ளுமாறு நான் கேட்டுக் கொள்கிறேன். காரணம், அவர்களுடைய அடிப்படை சம்பளம் மட்டுமின்றி, பஞ்சப்படியும் உள்ளிட்ட வருமானத்தைத்தான் அங்கு கணக்கிலெடுத்துக் கொடுக்கிறார்கள். அதன் மூலம் அவர்களுக்குச் சலுகை கிடைக்காது. ஒன்று பஞ்சப்படியை நீக்கி விட்டு, சம்பளத்தை மட்டும் கணக்கிலெடுத்துக் கொடுத்தால் அந்தச் சலுகை கிடைக்கும். இல்லையென்றால் இன்றைக்கு இருக்கக்கூடிய வரம்பு 1,500 ரூபாய் என்று இருப்பதை 2,500 ரூபாயாக ஆக்கவேண்டும். இதற்கு என்ன காரணம் என்றால், இன்றைக்கு இருக்கிற விலைவாசி ஏற்றம் காரணமாக அந்தக் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் இன்றைக்கு ஒன்றும் செய்ய முடியாது. அவர்கள் படிப்பதற்கான வாய்ப்பை இழக்க நேரிடும். அப்படிப்பட்ட சலுகை வாய்ப்பைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கல்வித் துறையிலே நம் நாடு முன்னேற்றமான சூழ்நிலையில் அமைய வேண்டும் என்ற எண்ணத்தோடு, பல பேர்கள் இன்றைக்கு ஆக்கமான முறையில் வேலை செய்யவேண்டுமென்று சொல்லுகிற ஒரு சூழ்நிலையும் இப்போது தென்பட்டுக்கொண்டிருக்கிறது. ஆகவே, இன்றைக்கு தமிழ் போதனா மொழியாக சட்டத் துறையிலும், பொறியியல் துறையிலும் இருக்க வேண்டும் என்ற சட்ட மன்றத்தில் கூறிய நண்பர்கள் கூறினார்கள். அவ்வளவும் உண்மை தான். இன்றைக்கு தமிழுக்கு எந்த நீதி மன்றத்திலும் மதிப்பு அளிப்பதாகக் காணோம். ஆங்கிலத்தில் பேசுகிற இடத்தில்தான் மதிப்பு அளிக்கப்படுகிறது என்று மக்கள் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த மோசமான நிலையை மாற்ற எந்தத் துறையிலும் தமிழே போதனா மொழியாக விளங்க அரசாங்கம் நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு நம் கல்வியின் தரத்தை எடுத்துக் கொண்டால், ஆரம்பப் பாடசாலைகளில் போதிக்கும் முறை சரியான முறையாக இல்லை. மேலும் 5 வயதிலே, சிறு வயதிலே போதிக்கும் கல்வியின் தரம் உயர்ந்ததாக இருந்தால்தான் பிற்காலத்தில் எந்தத் துறையில் சென்றாலும் முன்னேறுவதற்கான ஒரு நிலைமையை உண்டாக்க முடியும். அந்த ஆரம்பத்திலே குழந்தைகளுக்கு கீழ் வகுப்புகளிலே சரியான கல்வி போதிக்கப்படுவது கிடையாது. அங்கு இட வசதி கிடையாது. அந்தக் குழந்தைகள் உயர்நிலைப் பள்ளிகளுக்குப் போகும் வரைக்கும் கல்வியின் தரத்தைப் பற்றி என்ன என்று கூடத் தெரியாமல் வந்துகொண்டிருக்கிறார்கள். ஏதோ ஒரு காரணத்திற்காக, குழந்தைகள் அதிகமாக பாஸ் ஆகவேண்டுமே என்று மேலே போட்டு விடுகிறார்கள். குழந்தைகள் ஹை ஸ்கூல்களுக்கு வரும் முன்னரே, ஆரம்பப் பள்ளிகளில் பயிற்சி பெறும் முறையில் ஒரு ஏற்பாட்டை அரசாங்கம் சிருஷ்டிக்க வேண்டும். ஆரம்பத்தில் நல்ல தரமான பயிற்சி அளிப்பதன் மூலமாக அவர்கள் எந்த அறிவுத் துறையில் நாட்டம் கொண்டிருக்கிறார்களோ அதிலே நல்ல பயிற்சி பெறும் அளவுக்குச் சந்தர்ப்பத்தை ஏற்படுத்தினால், அதன் மூலம் பாஸ் செய்கிற மார்க்குகளை வைத்து அந்தந்தத் துறையில் கலாசாலை வரையில் வருவதற்குச் சந்தர்ப்பத்தை ஏற்படுத்தினால், அந்தந்தத் துறையில் பயிற்சி பெற்றவர்கள் வருவதற்கான சந்தர்ப்பங்கள் நாட்டிலே ஏற்படும். ஆனால், இன்றைக்கு நிலை அப்படி இல்லை. எந்தத் துறையிலே





மாணவர்கள் இடம் வேண்டும் என்று அப்ளிகேஷன் போடுகிறார்களோ அந்தத் துறையிலே அவர்களுக்கு இடம் கிடைப்பதில்லை. அவர்கள் சரித்திரத் துறையிலே திறமையுள்ளவர்களாக இருந்தால், அல்லது விஞ்ஞானத் துறையிலே திறமை உள்ளவர்களாக இருந்தால், அல்லது மருத்துவத் துறையில் திறமை உள்ளவர்களாக இருந்தால், அந்தத் துறையில் அவர்களுக்கு இடம் கிடைப்பதில்லை. அவர்களுக்கு ஆராய்ச்சி ஆர்வம் இல்லாத வேறு துறையிலே இடம் கிடைத்தால் அவர்களுடைய திறமை குறைந்துபோய் விடுகிறது. அவரவர்கள் விரும்புகிற துறையில் பயிற்சி பெறுவதற்கு நாட்டிலே சந்தர்ப்பம் கிடைக்காததன் விளைவு என்னவென்றால், அவர்கள் வேறு துறைக்குப் போகக் கூடிய நிலைமை ஏற்படுவதால், அவர்களுடைய ஆர்வமும், திறமையும் குறைந்து விடுகிறது. அந்தந்த துறைகளில் நல்ல திறமை உள்ளவர்களை உருவாக்க வேண்டுமென்று சொன்னால், எந்தெந்தத் துறையில் அவரவர்களுக்கு பயிற்சி பெறுவதற்கு ஆர்வம் இருக்கிறதோ, அவர்களுடைய அறிவுத் தூண்டுதல் இருக்கிறதோ அந்தத் துறையிலேயே அவர்களுக்கு பயிற்சி அளிப்பதற்கு ஒரு சந்தர்ப்பத்தை இந்த அரசாங்கம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அப்படிச் செய்வதன் மூலம் தமிழகத்திற்கு நல்ல முறையில் சேவை செய்தவர்களாவார்கள்.

அடுத்தபடியாக, பல இடங்களில் பள்ளிக்கூடங்களுக்கு கட்டடம் கிடையாது. கோவில்களில் உட்கார்ந்துகொண்டு மாணவர்கள் பாடம் படிக்கிறார்கள். இப்படி கோவில்களில் உட்கார்ந்து கொண்டு மாணவர்கள் படிப்பு கற்றுக் கொண்டால் ரோடில் போகின்ற வாகனங்களை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கக் கூடிய நிலைமைதான் ஏற்படுகிறது. அந்தக் குழந்தைகளுடைய நிலைமை என்ன ஆகும் என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். இதை உடனே கவனிக்கவில்லையென்றால், அவர்கள் எத்தனை ஆண்டு படித்தாலும், அவர்களுக்கு அறிவை புகுத்தி விட முடியாது. ஐந்தில் விளையாதது ஐம்பதில் விளையாது. ஆகவே, குழந்தைப் பிராயத்திலே அறிவு கிரமமாக புகுத்தப்பட வில்லையென்றால், 50-வது வயதில் அவன் அறிவாளி ஆகிவிட முடியாது. அப்படிப்பட்ட நிலைமை உருவாக்கப்படாமல் இருக்க இவர்களுக்கு தகுந்த பாதுகாப்புக் கொடுக்க, பள்ளிக் கூடங்களுக்கு தகுந்த கட்டடங்களை அமைத்துக் கொடுக்க வேண்டும். சிறு வயதிலேயே அவர்கள் படிப்பில் நல்ல கவனம் செலுத்தி, அவர்கள் நல்ல அறிவை பெறுவதற்கான சந்தர்ப்பத்தை நாம் உண்டாக்கிக் கொடுக்க வேண்டும். அவர்களுக்கு அளிக்கப்படுகிற பயிற்சி சரியாக இருக்கிறதா என்பதைக் கண்காணிப்பதற்கு கிராமக் கமிட்டிகளை அமைக்க வேண்டும். திறமை படைத்தவர்களை உருவாக்குவதற்கு அந்தப் பள்ளிகளில் சரியான முறையில் கல்வி பயிற்சி அளிக்கப்படுகிறதா என்பதை கண்காணிக்கவேண்டும். குறிப்பாக, பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளை கண்காணிப்பதற்கு கிராமக் கமிட்டிகளை அமைக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சரியானபடி போதிப்பதற்கான சூழ்நிலையை உருவாக்க வேண்டும். இந்த நிலையிலே இந்த மான்யக் கோரிக்கையின்மீது நான் ஒரு வெட்டுப் பிரேரேபணையை கொடுத்திருக்கிறேன். ரூ. 1,500 வருமானம் உள்ளவர்களுக்கு சலுகை என்று இருப்பதை ரூ. 2,500 வரை உயர்த்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தொழிலாளர்கள் தரப்பில் இருக்கிற பஞ்சப்படியை நீக்கி, அவர்களுடைய அடிப்படை சம்பளத்தை கணக்கிட்டு, அதன் அடிப்படையில் அவர்களுக்கு சலுகைகள் அளிக்கின்ற நிலைமையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கல்வித்துறையிலே தமிழை கூடிய சீக்கிரம் சகல துறைகளிலும் கொண்டு வருவதற்கான மார்க்கத்தை அரசாங்கம் கடைப்பிடிக்க வேண்டும். மக்கள் தமிழிலேயே பயிற்சி பெற்று அந்தத் துறையிலே தங்களுடைய காரியங்களை சுலபமாக சாதித்துக் கொள்ளும் மார்க்கத்தை அரசாங்கம் உண்டாக்கிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

*DR. HABIBULLAH BAIG: Mr. Deputy Speaker, Sir, I rise to congratulate the Hon. Minister for Education on the provision of more funds this year to the tune of Rs. 9 crores than last year.

[Dr. Habibullah Baig] [1967 ஜூலை 1

Nearly one-fourth of the total budget allotment is going to be spent on Education alone under the heads of Elementary Education, Secondary Education, University Education, Special Education and other items. Fifty per cent of the total provision under the Education Demand is going to be spent on elementary education. Really it is a very appreciable thing. There are a large number of higher and lower elementary schools. But what about the quality of teaching ? In the schools managed by the municipal councils and the Corporation of Madras the quality of teaching is going down day by day. I hope the Hon. Minister for Education will take more precautions to see that the standard of education is raised. Though we have increased the number of schools, the quality is going down day by day.

As regards secondary education, under the Centrally-sponsored Crash Programme, the Central Government is giving a grant for the provision of laboratory equipment and improvement of teaching of science. This allotment was not properly utilised in 1966. At least this time the Minister for Education must see that the grant is properly utilised in the various high schools and that laboratory equipment is purchased and the teaching of science, is improved.

Coming to Higher Education, no doubt many colleges have been started by private bodies as well as Government. During the current academic year two new Government Arts Colleges are going to be opened. The number of students passing the S.S.L.C Examination is increasing and there is a rush for admission to the Pre-University Course. Though the number of colleges is increasing, the seats are not increased and the students are not able to secure admission to the Humanities and Science courses in the Pre-University Class. The number of seats in the existing colleges at least must be increased under the expansion programme. In the Presidency College, Madras, there are 400 seats—250 for Science subjects and 150 for Humanities. In the Humanities, there are in the B.A. course 20 seats for History, 20 for Politics, 15 for Literature, 60 for Economics, etc. In the Science subjects also, there are very few subjects—24 for Botany, 24 for Biology and 40 for Chemistry, etc. It is very difficult to get admission in the Presidency College.

Private colleges see that only the best students are taken in and students of average ability are likely to seek admission in the Government colleges. If the students do not get admission after passing the Pre-University Course, there will be a break in their study. This is a very difficult problem for the students as well as their parents and the break will affect the morale of the students. The Hon. Minister for Education must see that provision for more seats is made under the expansion programme.

The Government Arts College, Madras, was formerly known as the Muhammadan College. After the coming into force of the present Constitution and the advent of sucularism, it was said the



1967 ஜூலை 1] [Dr. Habibullah Baig]

the word ' Muhammadan ' should not be there. The word was scrapped with the assurance that 25 per cent of the seats in that College would be reserved for Muslims. That convention was maintained for all these years. The previous Government was very careful in observing this 25 per cent reservation for Muslims and in keeping a Muslim as the Chairman of the Committee for admission to the College. Sir M h mmed Usman, Mr. Abdul Hameed Khan, and later on Mr. Haja Sheriff were the Chairmen of the Selection Committee. But this time there is no Muslim Chairman. The 25 per cent reservation has been scrapped; the word ' Muhammadan ' has been scrapped from the name. Out of a total of 40 or 60, only three Urdu students have been admitted. The Selection Committee did not select more students with higher marks. I request the Government to see that at least the reservation of 25 per cent for Muslims is maintained as has been promised.

In the Government and private colleges, provision must be made for the teaching of languages of linguistic minorities like Telugu and Urdu so that they may learn their language. Unfortunately in most of the colleges such a provision is not made. I request the Hon. Minister for Education to see that provision is made for learning languages of minorities like Urdu as a second language.

Now, Sir, the Governments of Sweden and Australia have பி. .
given us freely 84,218 reams of papers as well as covering papers 1-00
for the school text-books to be printed and supplied freely to the needy students of the elementary and higher elementary schools. Those papers costs nearly Rs. 54 lakhs. So far only 50 per cent of the papers worth Rs. 31 lakhs have been utilised for printing the books. The rest of the papers have not been utilised for printing the text-books for the poor students studying in the elementary schools. In this connection, I wish to point out that because they have not been utilised properly,the stocks of these papers have been damaged. I have brought this matter to the notice of the Hon. Minister for Education so that he would see that they are properly utilised and the books are printed immediately and distributed to the poor and needy students.

So far as mid-day meals are concerned, we have been supplied with a report on the Mid-day Meal Scheme wherein it is stated that lakhs and lakhs of children have been benefited under this scheme. The rate of 6 paise per head to be spent on the mid-day meal in the rural areas including the panchayat area is a very low sum and it is doubtful whether they could prepare a meal for that amount. So the amount set apart for the mid-day meal should be increased and the Government should see that the amount is utilised properly for the mid-day meal scheme.

Thank you, Sir.

**திரு. அ. ப. சண்முகசுந்தரம் :** மதிப்பிற்குரிய சட்ட மன்றத் துணைத் தலைவர் அவர்களே, கல்வி மானியக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். இந்த ஆண்டு கல்விக்காக

ரூ. 54 கோடியளவில் அரசு ஒதுக்கியிருக்கிறது. பல்கலைக் கழகத்தைப் பொறுத்தவரையில், கல்லூரிகளுக்கு ரூ. 6 கோடி அரசாங்கம் ஒதுக்கியிருக்கிறது. கல்லூரிகளைப் பொறுத்தவரையில், முந்தியுள்ள அரசாங்கத்திலே, கல்லூரிகளில் தமிழ் பாட மொழிப் பிரிவுகளுக்கு மாணவர்கள் அதிகமாக வரவில்லை என்று சொல்லிக் கொண்டு இருந்தார்கள். மற்ற செய்தித் தாள்களிலும் அறிக்கை வந்துகொண்டிருந்தது. இந்த ஆண்டு நம் அரசு கல்லூரிகளில் தமிழ் பாடமொழியாகப் பெற்ற மாணவர்களுக்கு அரசாங்கத்திலே உத்தியோகங்களில் முதல் சலுகை காட்டப்படும் என்று அறிவித்த பிறகு தமிழ் பாடப் பிரிவில் நிறைய மாணவர்கள் வருகிறார்கள். பொள்ளாச்சி கல்லூரியில் இப்பொழுது அதிகப்படியான மாணவர்கள் வந்துவிட்டதன் காரணமாக, மேலும் மாணவர்கள் வந்து கொண்டிருப்பதால், மேலும் ஒரு பிரிவை ஏற்படுத்த வேண்டும் என்று ஏற்பாடுகளைச் செய்கிறார்கள். அந்த முறையில் நம் அரசாங்கம் தமிழ் பாட மொழிக்கு சலுகை கொடுக்கும் என்ற உறுதியைத் தெரிவித்த பிறகு, நிறைய மாணவர்கள் வருகிறார்கள். அதற்காக நம் அரசாங்கத்தைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

இப்பொழுது நம்முடைய அரசு இன, ஜாதி பாகுபாடு இல்லாமல், ரூ. 1,500-க்குக் குறைவான வருமானம் உள்ளவர்களுக்கு சம்பளச் சலுகை கொடுத்திருக்கிறது. அந்தச் சலுகையை தமிழ் பாடமொழியாக எடுத்துள்ள பிரிவில் இருக்கும் மாணவர்களுக்கு, அத்தனை பேர்களுக்கும், விஸ்தரிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அதில் கனம் கல்வி அமைச்சர் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இப்பொழுது கல்லூரிகளில் தமிழ் மொழியை சமூகயியல் பாடங்களுக்கு மட்டுந்தான், அதாவது "ஹ்யுமானிடிஸ்"களுக்கு மட்டுந்தான் ஏற்பாடு செய்திருக்கிறோம். அந்தக் கல்லூரிகளிலே குறைவான மாணவர்களை மட்டும்தான் சேர்த்துக் கொள்ளும் இட வசதி இருக்கிறது. குறைவான இடங்களே இருக்கின்றன. சில கல்லூரிகளில் 20 மாணவர்களை மட்டும் சேர்த்துக் கொள்ளும் தன்மைதான் இருக்கிறது. அதை அதிக அளவில் அமைக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அதே போல, பட்டப் படிப்பை எடுத்துக் கொண்டால், டிக்ரி கிளாஸ்களில் தமிழைப் பாடமாகக் கொண்டுள்ள பகுதியில் குறைந்த மாணவர்களே சேர்த்துக்கொள்வதற்கு இடம் இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. அங்கேயும் அதிகமான இடங்களை ஏற்படுத்த முயற்சி செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். கல்லூரிகளில் பி.யு.ஸி. ஆனாலும் சரி, மற்ற டிக்ரி வகுப்புகள் ஆனாலும் சரி, இடம் குறைவாக இருப்பதால், விரும்பிவரும் மாணவர்களுக்கு இடம் இல்லாமல் போய்விடுகிறது. ஆகவே அதிகப்படியான இடங்களை ஒதுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். திரு. ம.பொ. சி. குறிப்பிட்டது போல, சமூகயியல் பாடங்களுக்கு மட்டும் தமிழ் பாட மொழியாக இருந்தால் போதாது. விஞ்ஞானப் பிரிவிலும் தமிழ் பாட மொழியாக ஆக்கப்படவேண்டும் என்று சொன்னதை வரவேற்கிறேன். அரசு நிச்சயமாக அந்த வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நம்பிக்கை ஏற்படுத்திக்கொள்ளலாம். அந்த வகையில் இந்த ஆண்டு செய்ததற்குமேல், அடுத்த ஆண்டு விஞ்ஞானப் பிரிவுகளிலும் தமிழ் பாட மொழி ஆக்கினால் நலமாக இருக்கும். அதற்கான நடவடிக்கைகளை இந்த ஆண்டே மேற்கொண்டால் தான் நூல்கள் வெளி வருவதற்கும், மற்றவைகள் செய்வதற்கும் சாத்தியமாக இருக்கும். இப்பொழுதே அதற்கு ஒரு திட்டமான அறிக்கையை கல்லூரி முதல்வர்களுக்கு கொடுத்தால், புத்தகங்களை தயாரித்து வைத்து இருப்பார்கள். விஞ்ஞானப் பிரிவுகளில் சுலபமாக செயல்பட முடியும். அப்படிப்பட்ட விஞ்ஞானப் பிரிவு மாணவர்கள் வெளி மாநிலங்களுக்கும், வெளி நாடுகளுக்கும் மேற்படிப்புக்காகவும், உத்தியோகத்திற்காகவும், செல்லும்போது, அது அவர்களுக்குத் தடையாக இருக்கும் என்று தவறான கருத்தைச் சிலர் கொண்டிருக்கிறார்கள். நம்முடைய விஞ்ஞானப் பாடங்களில் தமிழைப் பாட மொழியாகக் கொள்ளும்போது, தமிழ்ப் படுத்தும்



போது விஞ்ஞானப் பதங்களை அப்படியே வைத்துக்கொண்டு விடலா
"இண்டர்நாஷனல் ஸைண்டிபிக் டர்ம்ஸ்"-ஐ அப்படியே தமிழ்ப் படுத்
கொண்டால், அந்நிய மாநிலங்களுக்கு நம் மாணவர்கள் வேலைக்க
போகும்போதும், வெளிநாடுகளுக்கு மேற்படிப்புக்குப் போகும்போது
சௌகரியமாக இருக்கும். இந்த நிதி நிலை அறிக்கையில் கூட நைட்ரஜ
அம்மோனியம் சல்பேட், போன்ற வார்த்தைகள் அப்படியே தான் குற
பிடப்பட்டிருக்கிறது. அதே போல, நாமும் இண்டர்நாஷனல் ஸைண்டிபி
டர்ம்ஸை அப்படியே வைத்துக்கொண்டால், அகில உலக விஞ்ஞா
பதங்களை அப்படியே வைத்துக்கொண்டால், அது தமிழிலேயே ப
மொழியாகப் பயிற்சி பெற்ற மாணவர்கள் வெளி மாநிலங்களுக்கு
வெளி நாடுகளுக்கும் செல்லும்போது அவர்களுக்கு அது உறுதுணைய
இருக்கும் என்பதில் ஐயம் இல்லை. அந்த வகையில் நம்முடைய ப
திட்டங்களை நாம் வகுத்துக் கொண்டால், மாணவர்கள் தமிழிலே
படித்துத் தேறியதும், அது அவர்களுக்கு தடையாக இருக்காது என்பத
உறுதியாகச் சொல்லவிரும்புகிறேன்.

நம்முடைய கல்லூரிகளில் முதல்வர்கள்கூட, குறைந்த மார்க்குக
எடுத்திருப்பவர்களே வருகிறார்கள் என்றும் அப்படியிருந்தும்கூட அ
கள் தமிழிலேயே படிக்கவேண்டும் என்று வந்து, ஆண்டு இறுதியி
திறமையுள்ள மாணவர்களாக வெளி வருகிறார்கள் என்றும் ஒப்
கொள்ளுகிறார்கள். இயற்கையாக உள்ள அந்த குணத்தை நாம் பய
படுத்த வழிவகை செய்ய வேண்டும். முந்தைய சர்க்கார் போல இல்
மல், புரட்சியான மாறுதல்களைச் செய்ய முன்வரவேண்டும் நம்மு
இப்போதைய சர்க்கார் என்று வலியுறுத்துகிறேன். சலுகைகள் கொடு
திட்டங்களைத் தயாரித்து, அவற்றைச் செயல் படுத்துவதன் மூலம்—முந்தை
சர்க்கார் சொல்லால் செய்ததை, செயலில் செய்யவில்லை, அதுபோ
இல்லாமல்—நல்ல முன்னேற்றத்தைக் காணவேண்டும் என்பதை இ
மன்றத்திலே தெரிவிக்க விரும்புகிறேன்.

பொள்ளாச்சியைப் பொறுத்தவரையில் ஆண்கள் கல்லூரிகள், பா
டெக்னிக் கல்லூரிகள் இருக்கின்றன. அவைகளில் மாணவர்கள் நிறை
வருகிறார்கள். ஆகவே கல்லூரிகளில் அதிக இடவசதி செய்து
வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். மேலும், பெண்கள் கல்லூ
ஒன்று அவசியம் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். தேர்த
நேரத்தில்கூட காங்கிரஸ் நண்பர்கள் அதற்கான உதவிகளைச் செய்வோ
என்று உறுதியளித்தார்கள். இப்பொழுது அப்படிப்பட்ட நிதி வசதி
உதவியைச் செய்ய எந்தவிதமான தடையுமில்லை. எல்லோரும் க
மனப்பான்மையில்லாமலேயே பெண்கள் கல்லூரி நிறுவ வாய்ப்பிருக்கிற
அதை அவர்கள் சேர்ந்து செய்வார்கள் என்று நம்புகிறேன்.

அதைப்போலவே, கோவை மாவட்டத்திலும் ஒரு மருத்துவக் கல்லூ
பல பொறியியல் கல்லூரிகள், விவசாயக் கல்லூரி இருக்கின்றன. கா
லாகா கல்லூரி இருக்கிறது. இப்படிப் பல கல்லூரிகளும் இருக்கின்ற
அங்கு ஒரு பல்கலைக்கழகம் ஏற்படுத்தலாம் என்று முந்தைய அரசு
ஒரு எண்ணம் இருந்தது. அந்த எண்ணத்தை நல்லமுறையிலே நி
வேற்றி அங்கே பல்கலைக்கழகம் ஏற்படுத்த நம்முடைய அரசு நடவடிக்
எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். இப்படி நல்ல
திட்டங்களை நம் அரசு நிதிநிலை அறிக்கையிலே கொண்டு வந்திருக்கிற
பல்கலைக்கழகத்திற்கு 6 கோடி ரூபாய்க்குக் கொஞ்சம் குறைவாக ஒது
யிருக்கிறது. மேலும் படிப்படியாகக் கொஞ்சம் கூட்டி அதற்கு ந
வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். இந்
சந்தர்ப்பத்தை எனக்கு அளித்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொ
முடித்துக்கொள்ளுகின்றேன்.

**திரு. ஆ. கு. சுப்பையா :** மதிப்பிற்குரிய உதவித் தலைவரவர்களே,
பொழுது விவாதத்திலிருந்துகொண்டிருக்கக்கூடிய கல்வி மான்யக் கோ
கையின்மீது சில கருத்துக்களைச் சொல்வதற்கு முன் வருகிறேன். நமது

அரசாங்கம் நமது ராஜ்யத்தில் செலவு செய்யக்கூடிய மொத்தத் தொகையில் நான்கில் ஒரு பங்கு கல்விக்காக ஒதுக்கியிருக்கிறது. மிகப் பெரிய தொகையை இன்றையதினம் கல்விக்காக செலவழிக்க நமது அமைச்சரவர்கள் அனுமதி கோருகிறார்கள்.

அந்தச் சந்தர்ப்பத்தில் இன்று மதிய உணவு முறை அமலில் இருக்கிறது. அதில் ஏற்பட்டிருக்கக்கூடிய பல தவறுகளை இந்த மன்றத்தில் உறுப்பினர்கள் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். மதிய உணவு அளிப்பதாக பல லட்சக்கணக்கான மாணவர்களுக்கு உணவு அளித்துக்கொண்டிருப்பதாகக் கணக்குச் சொல்லப்படுகிறது. அது நியாயமான முறையில் செலவழிக்கப்படுகிறதா ? அந்த மாணவர்களுக்கு உணவு கொடுக்கப்படுகிறதா? என்று பார்த்தோமேயானால் அவ்வளவு பொருத்தமாக இராது என்பதே என்னுடைய அபிப்பிராயம். மதிய உணவுக்காக இரண்டு கோடியே இரண்டு லட்சம் ரூபாய் செலவழிக்கப்படுகிறது. இந்த உணவு விநியோகிக்கக்கூடிய வேலைகளை ஆசிரியர்களுக்குக் கொடுக்கிறார்கள். இதை ஆசிரியர்கள் செய்வதன் மூலம் அவர்கள் மாணவர்களுக்குப் போதுமான முறையில் பாடம் கற்பிப்பதற்குத் தவறக்கூடிய ஒரு நிலைமையும் ஏற்படுகிறது. ஆகவே, இன்றைய தினம் நம்முடைய அரசு இந்த மதிய உணவு வேலையை ஆசிரியர்கள் செய்வதை நீக்கிவிட வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

கிராமப்புறங்களிலே அதிகமாக உயர்நிலைப்பள்ளிகளை ஆரம்பித்திருக்கிறோம். உயர் நிலைப்பள்ளிகளுக்குப் போதுமான, அத்தியாவசியமான கட்டடங்கள் இல்லாத ஒரு நிலையில் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. இந்தக் கட்டடங்களைச் செம்மையாகக் கட்டுவதற்கு உரிய நிதியை ஒதுக்கி, கட்டடங்கள் கட்டுவதற்கு அதற்குரிய சாதனங்கள் வாங்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்று நமது ராஜ்யத்தில் செகண்டரி கிரேடு படித்த ஆசிரியர்கள் நிறைய இருக்கிறார்கள். அவர்கள் ஹையர் கிரேடு வேலை செய்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் வேலை ஹையர் கிரேடாக இருந்தாலும் அவர்களுக்கு செகண்டரி கிரேடுக்கு என்ன சம்பளம் கொடுக்கப்படுமோ அதே சம்பளத்தைக் கொடுக்க வேண்டுமேயொழிய அவர்களுக்கு செகண்டரி கிரேடு படித்தவர்களுக்கு ஹையர் கிரேடு சம்பளம் கொடுப்பது மிகவும் தவறானதாகும். அதையும் அரசாங்கம் பரிசீலனை செய்து செகண்டரி கிரேடுக்குரிய சம்பள விகிதத்தை அவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்ளுகின்றேன்.

மாவட்ட நூலகங்களுக்கு இங்கிருந்து செலவு செய்யப்படுகிறது. மாவட்ட நூலகங்களிலே புத்தகங்கள் வாங்கி வைத்திருக்கிறார்கள். அந்தப்புத்தகங்கள் அவசியம்தானா என்று பரிசீலனை செய்யவேண்டும். தேவையில்லாத அவசியமில்லாத புத்தகங்களை அங்கு வாங்கி வைத்திருக்கிறார்கள். அம்மாதிரியான புத்தகங்களைப் பரிசீலனை செய்வதற்காக அரசாங்கம் ஒரு கமிட்டி அமைத்து ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள நூலகங்கள் வைத்திருக்கக்கூடிய புத்தகங்களைப் பரிசீலனை செய்து அரசாங்கத்துக்கு ஒரு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

உபகாரச்சம்பளம் இன்றைய தினம் 2,000 ரூபாய் வரையிலும் ஹரிஜனங்கள், பிற்பட்டவர்களுக்கும், 1,500 ரூபாய் வரை மற்ற இதரர்களுக்கும் என்று நாம் ஒரு வரைமுறை நிர்ணயித்திருக்கிறோம். அந்த வரம்பு அதிகமாகயிருந்தாலும், சாதாரணமாக ஒரு செகண்டரி கிரேடு ஆசிரியராக பணியாற்றக்கூடியவர்கள் தங்களுக்கு அந்த உகபாரச் சம்பளம் பெற முடியாத ஒரு நிலை இருக்கிறது. ஆகவே வருமான வரம்பை இன்னும் அதிகமாக உயர்த்தி வசதி செய்து, 2,500 ரூபாய் என்று வைத்தால் நல்லதாக இருக்கும். 2,500 ரூபாய் என்று மற்றவர்களுக்குச் சொல்லும் பொழுது ஹரிசன வகுப்பினர்களுக்கு இன்னும் அதிகமாக உயர்த்த வேண்டும். இல்லை



யென்றால் உபகாரச் சம்பளம் கொடுப்பதற்கு வருமான வரம்பே இல்லாம
எடுத்து விடுவது நல்லதாக இருக்கும் என்று சொல்லிக்கொள்
ஆசைப்படுகிறேன்.

ஹரிஜன மாணவர்கள் இன்றையதினம் எஸ்.எஸ்.எல்.சி.வ
படித்தவர்கள் என்று சொல்லக்கூடியவர்கள் அதிக மார்க் வாங்க மு
யாத நிலையைப் பார்க்கிறோம். அதற்குரிய, திறமையாகப் படிப்பதற்
போதுமான வசதியில்லாத காரணத்தால்தான் அவ்வாறு அவர்க
அதிக மார்க் வாங்க முடியவில்லை. அதிக மார்க் பெற்றால்தான் அவர்க
கல்லூரிகளில் சேர முடியுமென்ற காரணத்தினால், ஹரிஜன மாணவர்க
கல்லூரியில் சேர முடியாத நிலையிருக்கிறது. ஆகவே, ஹரிஜன மாண
களுக்கு அந்த உயர்நிலைப்பள்ளியிலேயே தனி உபாத்தியாயர்களை வைத்
பாடம் கற்பிப்பதற்கு, ஹரிஜன இலாகா நிதியிலிருந்து ஏற்பாடு செய்தாலு
அவர்கள் திறமையாகப் படித்து அதிக மார்க் பெறுவதற்கு வசதிய
இருக்க முடியும். அந்த நிலையையும் அரசாங்கம் ஏற்று செ
வேண்டுமென்று கூறி நான் முடித்துக்கொள்ளுகிறேன்.

**திரு. இரா. மாணிக்கவாசகம்** : மாண்புமிகு துணைப் பேரவைத் தலை
ரவர்களே, இந்தக் கல்வியறிக்கையின்மீது பேச எனக்கு வாய்ப்பளித்
மைக்கு என் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்ளுகி
றேன். கல்வி மான்யத்தை வரவேற்று, கல்விக்கு மூலாதாரமாக இரு
கின்ற ஆரம்பக்கல்விக்கு, மிகுந்த இடத்தைக் கொடுத்திருப்பதற்கு அ
வரவேற்கிறேன் ; வாழ்த்துகின்றேன். ஏனென்றால் கல்வியின் தரம் உ
வதற்கு அடிப்படையாக இருப்பது ஆரம்பக்கல்வி. அந்த ஆரம்பக்கல்
கல்வியின் ஆணிவேர் பழுதுபட்டு விட்டால் அது நல்ல முறையில் வளராத
வளர்ந்து பலன் தராது என்று கருதுகின்றோம். ஆகவே, ஆரம்
கல்வியை ஆதாரமுள்ள கல்வியாகக் கருதுகின்றோம். அந்த நிலையிலே
இப்பொழுது பார்க்கின்ற பொழுது ஆரம்பக்கல்விக் கூடங்களெல்லாம் ஆ
மரத்தடியில் உள்ள இடங்களில் நடத்த வேண்டிய சூழ்நிலை இருக்கிற
அதைத் தவிர்த்து பள்ளிகள் இருப்பிட வசதியை நல்ல முறையி
அமைத்துத் தரவேண்டுமென்று விழைகின்றேன். பள்ளிகளிலே
வசதி ஏற்பட்டால் மட்டும் போதாது. பள்ளியை நடத்துவதற்கு வேண்டி
கருவிகள், கரும்பலகைகள், எழுதுவதற்கு வேண்டிய கட்டி, சுண்ணாம்
கட்டி, கலர் சுண்ணாம்புக்கட்டி ஆகியவைகளை கொடுக்கவேண்டும்.
பொழுது அந்த நிலையில்லை. அதற்காக இரண்டு ரூபாயோ மூன்
ரூபாயோ ஆசிரியர்களுக்கு தந்துவிடுகிறார்கள். அந்த நிலை இருக்கு
யானால் அது மாணவர்களுக்குப் பாடத்தைச் சரியான முறையில் கற்பி
முடியாத நிலையில் இருக்கிறது. அதைத் தவிர்க்க அரசு முன்
வேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அத்துடன், ஆரம்பக் கல்வியைப் போதிக்கின்ற ஆசிரியர்கள் நல்
முறையிலே, மன நிறைவுபெற்று இருக்கக்கூடிய நல்ல நிலையை உருவ
கித்தருவதற்கு வேண்டிய நிலைமையை ஏற்படுத்த வேண்டும்.

அது மட்டுமல்லாமல், மதிய உணவுத் திட்டத்தின்கீழ் வழங்கப்படு
உணவைப் பொறுத்தும், படியரிசித் திட்டத்தின்கீழ்க் கொண்டுவந்
அதற்கும் மானியமாக வழங்கவேண்டும். சுற்றுலா வருவதன் மூல
பல இயற்கைக் காட்சிகளைக் கண்டு நல்ல கருத்துக்களைப் பெற்று, அறி
விசாலப்படுத்திக்கொள்ள முடியும் என்ற காரணத்தால், சுற்றுலாவி
பஸ் வசதிகள் செய்து கொடுப்பதோடு, குறைந்த கட்டணத்தை மட்டு
வசூலிக்க அரசு முன்வர வேண்டும்.

ஒவ்வொரு கிராமத்திலும் 300-க்கும், அதற்குமேற்பட்டும் மக்
இருக்கும் பகுதிகளில் ஒரு பள்ளியை ஏற்படுத்தவேண்டும் என்று கு
பிட்டிருக்கிறார்கள். எங்கள் தொகுதியில் இருக்கின்ற ரத்னபுரி என்னு
ஊரில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் இருந்துங்கூட, அரசி
கண்ணோட்டத்தின் காரணமாக, பள்ளி நிர்வாகம் பல முறை முயன்

முயன்று தோல்வியுற்றிருக்கும் நிலை இருக்கிறது என்பதையும் இந்த அவை முன் வைக்க ஆசைப்படுகிறேன். இதுபோன்ற நிகழ்ச்சிகள் நம்முடைய அரசாங்கத்தில் ஏற்படாத நிலை இருக்கவேண்டும் என்று நான் கூறிக்கொள்ளுகிறேன். ஏனென்றால், கல்வியிலே கட்சி மாச்சரியங்கள் ஏற்பட்டால், அது வேறு பல திசைகளுக்கு இழுத்துச் சென்றுவிடும். ஆகவேதான், நமது முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள்கூட, கல்விக்கூடங்களில் பயிலும் மாணவர்களிடத்தில் அரசியல் புகக்கூடாது என்று எடுத்துக்காட்டியிருக்கிறார்கள்.

மாணவர்களுக்குச் சீருடை வழங்க வேண்டும் என்ற திட்டம் இருந்தது அதைச் செயல்படுத்துவதுடன், ஆசிரியர்கள், ஆசிரியைகள் இவர்களும் மிக முக்கியமாக சீருடை அணிந்து வரச் செய்யவேண்டும் என்று அரசை நான் வேண்டிக் கேட்டுக்கொள்ளுகிறேன். ஆசிரியர்களும் சீருடை அணிந்து வந்தால்தான் மாணவர்களிடத்தில் ஒரு நல்ல கருத்து நிலவ முடியும். அப்பொழுதுதான் மாணவர்கள் ஆசிரியர்களுக்கு ஒரு மரியாதை தரக்கூடிய நிலை உருவாகக்கூடும்.

ஆசிரியர்களுக்கு மானியம் வழங்குவது, பொற்பதக்கங்கள் வழங்குவது என்பதெல்லாம், அவர்களுடைய வாழ்க்கையின் பிற்பகுதியில் நடைபெறுகிற நிகழ்ச்சிகளாகும். வாழ்க்கையை நல்ல முறையில் நடத்துவதற்கு, அது வழி செய்யாத காரணத்தால், ஓராண்டில் ஒரு ஆசிரியர் எந்த முறையில் மாணவர்களுக்குப் பாடத்தைப் புகட்டினார், எந்த வகையிலே உயர்ந்த கருத்துக்களை எடுத்துச் சொன்னார், எந்த அளவிற்கு மாணவனை வெற்றியடையச் செய்திருக்கிறார் என்று ஆய்வெடுத்து, அந்தந்த ஆண்டு எந்தெந்த ஆசிரியர் நல்ல முறையில் பணியாற்றுகிறார் என்று கணக்கெடுத்து, அவர்களுக்கு நல்லதொரு பாராட்டுரை வழங்க வேண்டும் என்று கேட்டு, எனக்கு இந்த வாய்ப்பு அளித்தமைக்கு மிக்க நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன். வணக்கம்.

*திரு. செ. பாலசுப்பிரமணியன் : சட்ட மன்றத் துணைத் தலைவர் அவர்களே, ஐயா, பொதுவாக, தமிழக அரசின் மொத்த வரவு-செலவுக் கணக்கில் நான்கிலொரு பாகத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும் இந்தக் கல்வி மானியத்தின்மீது என்னுடைய கருத்துக்களை நான் கூற ஆசைப்படுகிறேன்.

பொதுவாக, இந்தத் தேசத்திலே இரண்டு அரசியல் மாற்றங்கள் ஏற்பட்டுவிட்டன. ஒன்று—இருபது வருஷ காலத்திற்கு முன்பு இந்தத் தேசத்தை விட்டு வெள்ளைக்காரன் வெளியேறினான். இப்பொழுது காங்கிரஸ் அரசாங்கம் மாறி, தமிழ்நாட்டிலே திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்திருக்கிறது. ஆனால், இந்த இருபது வருஷ காலத்திலே, இரண்டு அரசியல் மாற்றங்கள் ஏற்பட்டனவேயொழிய, கல்வித்துறையில் ஏதாவது மாற்றம் ஏற்பட்டதா என்று பார்த்தால், நான் சற்று தயக்கத்தோடுதான் சொல்ல வேண்டியிருக்கிறது, இன்னும் மாற்றம் ஏற்படவில்லை. வெள்ளைக்காரன் காலத்தில் என்ன கல்வி முறை இருந்ததோ, என்ன கல்விக் கொள்கை அனுஷ்டிக்கப்பட்டு வந்ததோ, அதே கல்வி முறைதான், அதே கல்விக் கொள்கைதான் இப்போதும் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. அந்தக் காலத்தில், மெக்காலே கல்வி முறை என்ற அடிப்படையில் குமாஸ்தாக்களை அதிகப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தோடு, வெள்ளைக்காரன் ஆரம்பித்துவைத்து, விட்டுவிட்டுப் போன அதே கல்விமுறையைத்தான் பின்பற்றி, காங்கிரஸ்காரர்களின் ஆட்சிக் காலத்தில், தொழில் நுணுக்கக் கல்வியை அதிகப்படுத்தியிருக்கிறோம், வசதியை அதிகப்படுத்தியிருக்கிறோம் என்ற அடிப்படையில், அங்கொன்றும் இங்கொன்றுமாக இன்ஜினீரிங், தொழில் நுணுக்கப் பள்ளிகள் இவற்றை அதிகப்படுத்தினார்களே தவிர, கல்வி முறையிலே, கல்விக் கொள்கையிலே ஏதாவது மாற்றுதல் ஏற்படுத்தியிருக்கிறார்களா என்று பார்த்தால், நிச்சயமாகக் கிடையவே கிடையாது.



வெள்ளைக்காரன் காலத்தில் இந்தத் தேசத்தில் இருக்கும் மக்கள் அத்தனை பேர்களும் அடிமைகளாகவே இருக்கவேண்டும், அவர்களுக்குச் சுய சிந்தனை இருக்கக் கூடாது, சுய முயற்சி இருக்கக்கூடாது, சுய நம்பிக்கை இருக்கக்கூடாது என்ற அடிப்படையில்தான் தன்னுடைய மொழியைப் போதனாமொழியாக வைத்து, இந்தத் தேசத்தின் கல்விக் கொள்கையை வகுத்துவிட்டுப் போய்விட்டான். அதற்குப் பிறகு வந்த காங்கிரஸ்காரர்கள் அதே கொள்கையைக் கடைப்பிடித்து வந்ததன் மூலம், எத்தனையோ பேர்கள் படித்தாலும், படித்தவர்கள் மத்தியில் சுய நம்பிக்கையோ, சுய சிந்தனையோ, சுய முயற்சியோ கிடையாது.

கல்விக் கொள்கை என்று சொல்லும்போது, ஏதோ தனிப்பட்ட கொள்கை என்று நினைத்துவிடக்கூடாது. கல்விக் கொள்கை என்று சொல்லும்போது, பொருளாதார முன்னேற்றத்தை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரக் கொள்கை, தொழில் முன்னேற்றத்தை அடிப்படையாகக் கொண்ட தொழிற்கொள்கை, விவசாய முன்னேற்றத்தை அடிப்படையாகக் கொண்ட விவசாயக் கொள்கை ஆகியவற்றைக் கொண்ட ஒருங்கிணைந்த கொள்கையாகத்தான் கல்விக்கொள்கை அமல்படுத்தப்பட வேண்டும். அப்படியில்லாமல், கல்விக் கொள்கை என்று தனியாக வைத்துக்கொண்டு படித்தவர்களிடையே வேலையில்லாத் திண்டாட்டம் பெருகக்கூடிய நிலைமை இருக்குமானால், அதே கதியில்தான் இந்த நாடு செல்லவேண்டியிருக்கும்.

காங்கிரஸ்காரர்கள் ஆட்சி புரிந்த காலத்தில், இன்ஜினீரிங் காலேஜை அதிகப்படுத்தினார்கள் என்பதை நாம் பார்க்கிறோம். அதிகப்படியாக இன்ஜினீர்களை உற்பத்தி செய்தார்கள் என்றாலும், இன்ஜினீரிங் காலேஜ்களில் படித்துவிட்டு வந்த அத்தனைபேருக்கும் வேலைவாய்ப்பு கொடுக்கக் கூடிய அளவிற்குத் தொழில் பெருகியிருக்கிறதா என்று பார்த்தால் இல்லை. தொழில் பெருகவில்லை. வேலைவாய்ப்பு ஏற்படவில்லை. இன்ஜினீரிங் காலேஜ்களில் பல தொழில்களைப் படித்து, பல ஆயிரம் ரூபாய்களைச் செலவழித்து வந்தவர்களகூட, இன்று வேலையில்லாத் திண்டாட்டத்திற்கு ஆட்பட்டிருக்கிறார்கள் என்ற நிலைமையைப் பார்க்கிறோம். இதற்கெல்லாம் என்ன அடிப்படைக் காரணம் என்று பார்க்கும்போது, கல்விக் கொள்கையில் அடிப்படையான மாறுதல் செய்யப்படவில்லை என்பதுதான். ஆகவே, கல்விக் கொள்கையில் அடிப்படை மாறுதல் செய்யப்படவேண்டும்.

கல்விக் கொள்கை எப்படி இருக்க வேண்டுமென்றால், ஒரு மனிதனுக்கு சுய சிந்தனையைத் தூண்டுவதாகவும் சுய முயற்சியைத் தூண்டுவதாகவும் சுய நம்பிக்கையைத் தூண்டுவதாகவும், இருக்கவேண்டும். அப்படிப்பட்ட கொள்கையின் அடிப்படையில் தரப்படும் கல்வி எந்த மொழியின் மூலம் கற்றுக்கொடுக்கப்படவேண்டும் என்று பார்த்தால், நிச்சயமாகத் தாய்மொழியின் மூலமாகத்தான் கற்றுக் கொடுக்கப்படவேண்டும். தாய்மொழியின் மூலமாக அல்லாமல் மற்ற எந்த மொழியின் மூலம் கற்றுக் கொடுக்கப்பட்டாலுங்கூட, சுய நம்பிக்கையை அது தூண்டிவிடாது, சுய சிந்தனையை அது தூண்டிவிடாது, சுயமுயற்சியை அது தூண்டிவிடாது என்பதை நான் அழுத்தந்திருத்தமாக இங்கே சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

தாய்மொழியின் மூலம் கல்வி கற்றுக்கொடுக்கப்படவேண்டும் என்ற கொள்கையில் மற்றொரு அடிப்படையும் அடங்கியிருக்கிறது. இந்தத் தேசத்திலே பார்க்கிறோம். ஒரு பக்கம் மாபெரும் ஆராய்ச்சி நடக்கிறது. தொழில்துறையில் ஆனாலும் சரி, விவசாயத் துறையில் ஆனாலும் சரி, இரண்டு மூன்று நாட்களுக்கு முன் கேள்வியொன்றுக்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, மாபெரும் ஆராய்ச்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன, ஆனால், அந்த ஆராய்ச்சிகளின் பயனை விவசாயிகளோ மற்றவர்களோ பெறத்தக்க வகையில் பயிற்சி அளிப்பதற்கான திட்டம் இல்லை என்று சொன்னார்கள். அதைத்தான் நான் குறிப்பிட விரும்புகிறேன். ஒரு பக்கம் மாபெரும் ஆராய்ச்சி நடந்து, புதிய புதிய கண்டுபிடிப்புகள் நடந்துகொண்டிருக்கும் இதே சமயத்தில், இன்று தேசத்திலே இருக்கும் விவசாயிகள் நவீன விவசாய முறைகளைப் பற்றியோ, விவசாய ஆராய்ச்சிகளைப்

பற்றியோ ஒன்றும் தெரியாதவர்களாக இருக்கிறார்கள். காரணம், இந்த தேசத்திலே போதனமொழியாக இருப்பது ஆங்கிலம்தான். ஆங்கிலம் போதன மொழியாக இருக்கும் காரணத்தால், நவீன விவசாய முறைகளை ஆங்காங்கே தமிழ் மூலம் அறிய முடிவதில்லை. புதிய புதிய கருத்துகளைச் சொல்லக்கூடிய நூல்கள் தமிழ் மொழியில் வராத காரணத்தால், புதிய புதிய கருத்துக்களைச் சொல்லக்கூடிய பள்ளிகள் இல்லாத காரணத்தால் விவசாயிகளுக்குப் புதிய முறைகளை அறிந்துகொள்ளுவதற்கு வாய்ப்பு இல்லாமலிருக்கிறது. இன்று நாம் என்ன பார்க்கிறோம்? ஒரு பக்கம் ஆராய்ச்சியின் மூலமாகப் புதிய கண்டுபிடிப்புகள் இருப்பதையும், இன்னொரு பக்கம் நடைமுறையில் இருந்து வரும் பழக்க வழக்கங்களையும் நாம் பார்க்கும்போது, இவற்றிலே மாபெரும் 'வித்தியாசத்தைப் பார்க்கிறோம். போதனமொழி தாய்மொழியாக இருக்கவேண்டும் என்று சொல்லும்போது, நிச்சயமாக இந்த அடிப்படையில்தான் சொல்லுகிறோம். போதனமொழி, தாய்மொழியாக இல்லாத வரையில், இந்தத் தேசத்தில் தொழில் நுணுக்க ஆராய்ச்சி முன்னேறாது. இந்த தேசத்தில் தொழில் நுணுக்க ஆராய்ச்சி முன்னேறாத வரையில் இந்த தேசத்திலுள்ள பாமர மக்களுக்குப் புது முறைகளைப்பற்றிய அறிவு வருவதற்கில்லை. தொழில் முன்னேற்றமோ, விவசாய முன்னேற்றமோ ஏற்படாது. ஆகவே இந்த அடிப்படைக் கோணத்திலிருந்துதான் போதனமொழி தாய் மொழியாக ஆக்கப்படவேண்டும் என்று நான் சொல்லுகிறேன். அந்த அடிப்படையில் இப்பொழுது வந்திருக்கும் அரசு நிச்சயமாக சுய சிந்தனை, சுயநம்பிக்கை, சுய முயற்சி ஆகிய இவைகளெல்லாம் ஏற்படுகிற ஒரு கல்விக் கொள்கையை வகுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இந்த அரசு பொறுப்பேற்றுக்கொண்டு கொஞ்ச காலம்தான் ஆகிறது. மாறுதல்களை ஏற்படுத்துவதற்கு நிச்சயமாகக் கொஞ்ச காலம் பிடிக்கும். ஒரு யோசனையை மட்டும் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். காங்கிரஸ் ஆட்சி செலுத்தக்கூடிய மாநிலங்களை விட்டு விட்டு, இந்தத் தேசத்திலே மொத்தமாகப் பார்த்தால், எட்டு மாநிலங்களில் காங்கிரஸல்லாத அரசாங்கங்கள் ஆட்சிக்கு வந்திருக்கின்றன. காங்கிரஸல்லாத இந்த எட்டு மாநிலங்களைச் சேர்ந்த கல்வி அமைச்சர்கள் எல்லோரும் ஒன்றுகூடி, எப்படிப்பட்ட புதிய கல்விக் கொள்கையை வகுக்கலாம் என்பதைக்குறித்து சிந்தனை செய்து, ஒரு முடிவு எடுத்தால் நல்லது. அப்படிப்பட்ட ஒரு கல்விக் கொள்கையை அமைக்க நம்முடைய மாநில அமைச்சரவை வழி காட்டினால் மிகப் பெரிய சீர்திருத்தம் செய்தவர்களாவார்கள் என்று நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

இங்கே மற்றொன்றையும் நாம் பார்க்கவேண்டும். ஒரு பக்கம் கல்விக் கொள்கையிலே மாறுதல்; மற்றொரு பக்கம் கல்வி முறையிலே மாறுதல். அவைகளை மாறுதல் என்று சொல்லும்போது, என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்கின்றேன். கல்விமுறை என்றால் என்ன? கிராமப் புறங்களில் இருக்கும் பள்ளிக்கூடங்களில் கல்வி கற்றுக்கொடுக்கக்கூடிய நிலையை நாம் பார்க்கிறோம். அங்கே இருக்கும் ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்படும் சம்பளம், வேலை நிலை இவைகளையும் நாம் பார்க்கிறோம். நகரப் புறங்களில் ஆடம்பரமாகப் பெரிய மனிதர்கள் வீட்டுக் குழந்தைகள், பணக்காரர்கள் வீட்டுக் குழந்தைகள், கான்வென்ட் போன்ற பள்ளிக்கூடங்களில் படிக்கும் நிலைமையையும் நாம் பார்க்கிறோம். கிராமங்களில் ஒரு நிலையும், நகரங்களில் வேறொரு நிலையும் இருப்பதைப் பார்க்கும்போது, மிகப் பெரிய ஏற்றத்தாழ்வு இருப்பதை நாம் பார்க்கிறோம். நகரங்களில் செல்வம் படைத்தவர்கள் தங்களுடைய குழந்தைகளை கான்வென்ட் போன்ற பள்ளிகளுக்கு அனுப்புகிறார்கள். கிராமப்புறங்களில் இருக்கும் விவசாயிகள், மற்ற தொழில்களில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளிகள் தங்களுடைய பிள்ளைகளை கிராமப்புறங்களில் உள்ள சாதாரண பள்ளிகளுக்கு அனுப்புகிறார்கள். செல்வந்தர்களின் வீட்டுக் குழந்தைகளுக்கு அளிக்கப்படும் கல்வியின் தரம் உயர்ந்ததாக இருக்க, ஏழை விவசாய, தொழிலாளி இவர்களுடைய குழந்தைகளுக்கு அளிக்கப்படும் கல்வியின் தரம் குறைந்ததாக இருக்கிறது. இப்படிக் கல்வியிலே மிகப் பெரிய ஏற்றத்தாழ்வு இருக்





கிறது. சமத்துவம் இல்லாத நிலை இருக்கிறது. இதைப் போக்குவதற்கான நடவடிக்கை எடுக்கவேண்டும். நான் திட்டவட்டமாகச் சொல்லுகிறேன்—கான்வென்ட் போன்ற ஆடம்பரமான பள்ளிகளை, லக்ஸரி ஸ்கூல்ஸ் என்று சொல்லத்தக்க அளவிற்கு இருக்கக்கூடிய பள்ளிகளையெல்லாம் ஒழித்துவிட்டு, இந்தத் தேசத்திலே ஏற்றத் தாழ்வற்ற நிலையில் குழந்தைகளுக்குக் கல்வி கற்பிக்க வகை செய்யவேண்டும். இந்தத் தேசத்திலே சாதாரண விவசாயி, தொழிலாளி ஆகியவர்களுடைய குழந்தைகள் எந்தப் பள்ளிகளுக்குச் சென்று படிக்கிறார்களோ, அதே பள்ளிகளில்தான் தொழில் அதிபர்களுடைய பிள்ளைகளானாலும் சரி, மந்திரிகளுடைய பிள்ளைகளானாலும் சரி, மிராசுதார்களுடைய பிள்ளைகளானாலும் சரி, படிக்கக்கூடிய அளவிற்குக் கல்வியிலே சமத்துவத்தைப் புகட்ட வேண்டும் என்று நாங்கள் கேட்டுக் கொள்ளுகிறோம். பி.ப. 1–30

மற்றும், இங்கே சம்பள உயர்வுபற்றி எல்லாம் பேசப்பட்டபோது, ஆரம்ப ஆசிரியர்கள் கல்வித் துறையிலே மிக உயர்ந்த நிலையில் வைக்கப்படவில்லை. இந்தத் தேசத்தில் எந்தத் துறையில் பார்த்தாலும் தனி மனிதன் வருமானம் ஏற்றத் தாழ்வு உடையதாகவே இருக்கிறது. சர்க்கார் அதிகாரிகளுடைய வருமானம், துறைத் தலைவர்களுக்கும், கடைநிலை ஊழியர்களுக்கும் உள்ள ஏற்றத்தாழ்வு மிகமிக அதிகமாக இருக்கிறது. சர்வகலாசாலையிலே இருக்கும் தலைவருக்கு 2 ஆயிரம் ரூபாய்க்கும் அதிக பட்சம் இருக்கும். ஆனால் ஆரம்ப ஆசிரியர்களுடைய சம்பளம் 100-க்கும் குறைச்சலாக இருக்கிறது. இதன் காரணமாக கல்வியிலும் ஏற்றத் தாழ்வு ஏற்படுகிறது. ஆரம்ப ஆசிரியர்கள் குறைந்த கீழ்நிலையிலே இருப்பதால் கல்வியின் தரம் குறைந்து விடுகிறது. இந்தத் துறையிலே அரசு கவனம் செலுத்தி வர வேண்டும். மேலே இருக்கக் கூடியவர்களின் சம்பளத்தைப் பாராமல் கீழே இருக்கக் கூடியவர்களின் சம்பளத்தை மேலும் உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன் . . . . (மணியடிக்கப்பட்டது.)

## 4. அமைச்சரின் அறிக்கை

### மேட்டூர் அணையிலிருந்து பாசனத்திற்குத் தண்ணீர் விடுதல்.

**மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர் :** அடுத்து, சட்டப்பேரவை விதிகளின் 82 (1) பிரிவின் கீழ் சபாநாயகர் அனுமதி பெற்று, பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள், அவசரமும், பொது முக்கியத்துவமும் வாய்ந்த ஓர் அறிவிப்பைத் தருவார்கள்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, மேட்டூர் நீர்த்தேக்கத்தைப் பாசனத்திற்குத் திறந்து விடுவதுபற்றி அரசு பரிசீலித்துள்ளது. சென்ற மூன்று நாட்களாக காவிரி நீர்வாத்துப் பகுதியில் சற்று நல்ல மழை பெய்துள்ளது. 29–6–1967 மெர்க்காராவில் 130 மி.மீட்டர். 30–6–1967 அன்று மெர்க்காராவில் 130 மி.மீட்டர். இன்று 53 மி. மீட்டர் மழை. "கபினி" ஆற்று வரத்தும் 29,000 கியூசெக்ஸ் வரை உயர்ந்துள்ளது. இந்த நிலை இன்னும் ஓரிரு நாட்களுக்கு நீடிக்கும். நீர்வரத்துப் பகுதிகளில் மழையும் சற்று குறைந்தாலும் 50 மி. மீட்டர் வரை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேட்டூர் இன்றைய நீர்மட்ட உயரம் 47·4 அடியாக இருக்கிறதெனினும், மேற்கண்ட காரணங்களினால் விரைவில் உயரும். குறைந்தது ஒரு மாத காலத்திற்காவது தொடர்ந்து காவிரிப் பாசனத்துக்கு நாற்று பாவுவதற்கும், பயிருக்கும் தேவையான தண்ணீர் வழங்க முடியும் என்று பொறியியல் தலைமையினர் கருதுகின்றனர். இதற்குள் மேல் பருவ மழையும் வரத்தும் எதிர்பார்க்கலாம். எனவே, 3–7–1967 மாலை 6 மணியிலிருந்து மேட்டூரில் இருந்து பாசனத்திற்குத் தண்ணீர் திறந்து விடுமாறு உத்திரவிடப்பட்டுள்ளது. தண்ணீர் கல்லணைக்கு 7–7–1967 வாக்கில் போய்ச் சேரும்.

**மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர் :** சபையின் காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவடைகின்றன. பேரவை மீண்டும் மாலை 3 மணிக்குத் கூடும்.

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

இடைவேளைக்குப் பிறகு, பேரவை 3–00 மணிக்கு மாண்புமிகு துணை பேரவைத் தலைவர் அவர்களின் தலைமையில் கூடியது.

**3. 1967–68-ம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.**

**கோரிக்கை எண் XIII—கல்வி—தொடர்ச்சி.**

*** திரு. டி. மார்டின் :** துணைப் பேரவைத் தலைவர் அவர்களே, நான் சார்ந்து இருக்கும் காங்கிரஸ் கட்சியின் சார்பாகக் கொடுக்கப்பட்டிருக்கும் வெட்டுத் தீர்மானத்தை ஒட்டி என் கருத்துக்களை இந்த அவையில் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய கட்சியின் ஒப்பற்ற தலைவரும் முன்னாள் இந்தத் தமிழக அரசின் முதல்வருமான மதிப்பிற்குரிய, காமராஜ் அவர்கள் எஸ்.எஸ்.எல்.சி. வரைக்கும் ஏழை பணக்காரர் என்ற வித்தியாசம் இல்லாத முறையில், சாதி வித்தியாசம் இல்லாத முறையில் எல்லோருக்கும் இலவசமாகக் கல்வி அளிக்கிற திட்டத்தை வகுத்துக் கொடுத்து இருந்தார்கள். கல்லூரிகளிலும் அந்தச் சலுகை கொடுக்கப்பட வேண்டுமென்ற எண்ணத்தால் அப்போதிருந்த முதல்வரிடம் கூறினார்கள். இவ்வாண்டு முதல் பி.யு.ஸி. வகுப்பில் அந்தச் சலுகையை அளிப்பதாக அவரும் கூறியிருந்தார். அந்தச் சலுகை இவ்வாண்டு முதல் கிடைக்கும் என்று மக்கள் நம்பிக்கொண்டிருந்தார்கள். ஆனால் இன்றைய தமிழக அரசு 1,500 ரூபாய், அதற்குக் குறைவாக வருமானமுள்ளவர்களின் குழந்தைகளுக்குத்தான் பி.யு.ஸி.யில் இலவசக் கல்வி அளிக்கப்படும் என்கிற கொள்கையை வகுத்திருக்கிறார்கள். உண்மையில் பார்க்கப்போனால் நூறு மாணவர்கள் படித்தால் அவர்களில் ஒன்றிரண்டு மாணவர்களாவது இந்த வரம்புக்கு உட்பட்டு வருவார்களா என்ற சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது. காரணம் என்னவென்றால் அரசின் கடைநிலை ஊழியர்களை எடுத்துக்கொண்டாலும், சமுதாயத்தின் அடித்தட்டில் இருக்கிற மற்றவர்களை எடுத்துக்கொண்டாலும் 1,500 ரூபாய் வருமான வரம்புக்கு உட்பட்டு வருபவர்கள் மிகமிகக் குறைவு. கட்டிட வேலை செய்கிற மேஸ்திரிக்கு தினம் வருமானம் பத்து ரூபாய், ஆகையால் இந்த விதமாக இருக்கிற நேரத்தில் 1,500-க்கு உட்பட்ட வருமானம் உடையவர்களுக்குத்தான் இலவசக் கல்வி என்று சொன்னால் இது வெறும் கண் துடைப்பான காரியந்தான் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

மேலும் இன்று சர்க்கார் ப்ரொபஷனல் காலேஜ்களை எடுத்துக்கொண்டால் என்ஜினிரிங் கல்லூரிகளுக்கும் சரி, மெடிகல் கல்லூரிகளுக்கும் சரி மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு முந்திய சர்க்கார் எந்த முறையைக் கையாண்டார்களோ அந்த முறையையேதான் இவ்வாண்டும் கையாண்டிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் அன்றைய தினம் எதிர்க்கட்சித் தரப்பில் இருந்தபோது இந்த முறையைப் பற்றிப் பலவிதமாகக் குறை கூறியிருக்கிறார்கள். பலவிதமான ஊழல் புகார்கள் லஞ்சப் புகார்களுக்கு எல்லாம் அந்த முறை இடமளித்திருப்பதாகக் கூறியிருக்கிறார்கள். ஆனால் இன்றையதினம் இவர்களும் அந்தப் பழைய முறையையே கையாண்டிருக்கிறார்களே. அதில் பலவிதமான குறைபாடுகள், புகார்கள் ஏற்பட இடம் கொடுத்திருக்காதா என்று கேட்க விரும்புகிறேன், ஆகவே இந்த அவையில் நான் மிக உருக்கமாக கல்வி அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். என்ஜினிரிங் கல்லூரி, மெடிகல் கல்லூரி இவற்றுக்கு யார் யார் விண்ணப்பம் போட்டிருந்தார்கள், அவர்களுடைய யோக்கியதாம்சங்கள் என்ன என்ன, யார் யார் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் என்கிற விவரங்களை இந்த அவையில் வைத்தால் சட்டமன்ற உறுப்பினர்கள் அத்தனை பேரும் ஒரு திருப்தி அடைய முடியும். எங்காவது அநீதி விளைவிக்கப்பட்டிருக்குமானால் அதை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர உதவியாக இருக்குமென்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மேலும் நம் மாநிலத்தைப் பொறுத்தவரையில், ஆசிரியர் பயிற்சிப் பள்ளி பெரிய பிரச்னையாக இருக்கிறது. குறிப்பாக நெல்லை மாவட்டம் சாத்தான்குளம் பகுதியில் எண்ணிறந்த பெண்கள் எஸ்.எஸ்.எல்.ஸி



படித்துவிட்டு ஆசிரியர் பயிற்சிப் பள்ளிக்கு விண்ணப்பம் போட்டு இடம் கிடைக்காது ஆண்டுக்கு ஆண்டு காத்துக்கொண்டிருக்கிறார்கள். நகரங்களில் உள்ளவர்களாவது டைப்ரைடிங், ஷார்ட்ஹாண்டு படித்துவிட்டு உத்தியோகத்தைத் தேடிக்கொள்ள முடிகிறது. கிராமப் புறங்களில் அந்த வசதியும் இடையாது. ஆகவே, நான் கூறுவது என்னவென்றால், டிரெயினிங் ஸ்கூல் அதிகமாக ஆரம்பிக்க வேண்டும். குறிப்பாக சாத்தான்குளத்தில் பெண்கள் ஆசிரியைப் பயிற்சிப் பள்ளியை ஏற்படுத்த வேண்டுமென்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். அரசாங்கத்திடம் போதுமான பணம் இல்லாவிட்டாலும், தனிப்பட்டவர்கள் யாராவது முன்வந்தால் மிஷினரி போன்ற ஸ்தாபனங்கள் பாதித் தொகை கொடுக்க முன்வந்தாலும், அரசாங்கம் கொடுக்கிற மானியத்தைக் குறைத்து வாங்கிக்கொள்ள முன்வந்தாலும் அவர்கள் எல்லோருக்கும் அம்மாதிரி ஆசிரியர் பயிற்சிப் பள்ளியை ஆரம்பிக்க அனுமதி வழங்க வேண்டும். ஆசிரியர்களாக அவர்கள் பயிற்சி பெற்ற பின் வேலை வாய்ப்பை ஏற்படுத்தித் தர வேண்டியதாக இருக்கிறதே என்று அவர்கள் கவலைப்பட வேண்டியதில்லை. அவர்கள் தங்கள் குழந்தைகளையாவது நல்ல முறையில் வளர்க்க முடியும். பாடங்கள் சொல்லிக்கொடுக்க முடியும். ஆப்பிரிக்கா போன்ற இடங்களுக்காவது சென்று வேலை பார்த்துக்கொள்வார்கள். ஆகவே ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளை அதிகம் ஏற்படுத்துவதற்கு இந்த சர்க்கார் முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக, என்னுடைய சாத்தான்குளத்தில் ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்று தொடக்கக் கல்வியை நினைக்கும்போது ப்ரீ ப்ரைமரி பற்றி நினைக்க வேண்டும். இன்று கல்வி அமைச்சராக இருக்கக்கூடியவர்கள் முன்பே அதைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். தனியார் துறையில் வந்தாலும் அதற்கும் உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் இன்று நடக்கிற சர்க்கார் பள்ளிகளின் ரிசல்டைக் கவனித்தால் மிகவும் வருந்த வேண்டியதாக இருக்கிறது. அதே நேரத்தில், மிஷினரி, தனியார் பள்ளிகளில் ரிசல்ட் அதிகமாக இருக்கிறது. மாணவர்களும் அதிகமாக மார்க் வாங்கியிருக்கிறார்கள். சர்க்கார் பள்ளிகளில் ஏன் ரிசல்ட் குறைவாக இருக்கிறது என்பதைப்பற்றி ஆராய ஒரு குழு அமைத்தாலும் சரி என்று நினைக்கிறேன். கல்விக்காக ஏராளமான பொருள் செலவு செய்கிறபோது, அவை நல்ல முறையில் நியாயமான வழியில் செலவிடப்படுகிறதா என்பதிலும் கவனம் செலுத்தவேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்ளுகிறேன். மேலும் சில பள்ளிகளிலே மாணவர்களுக்கு ஆர்பனேஜ் வசதிகள் செய்து கொடுக்க வேண்டுமென்று சில பள்ளிகளிலிருந்து கல்வி இலாகாவுக்கு மனுக்கள் அனுப்பியிருக்கிறார்கள். அப்படி அவர்கள் அனுப்பிய மனுக்கள் ஒரு வருடத்திற்கு மேலாக கல்வி இலாகாவிலே தேங்கிக் கிடக்கின்றன என்று பல பள்ளிகளின் ஆசிரியர்களும், தலைமையாசிரியர்களும் கூறியுள்ளார்கள். ஆகவே உடனே இதிலே அரசு தலையிட்டு எந்த எந்தப் பள்ளிகளிலிருந்து ஆர்பனேஜ்கள் வேண்டுமென்று மனுக்கள் வந்திருக்கிறதோ அதைப் பரிசீலனை செய்து அதற்கான வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பள்ளிக்கூடக் கட்டிடங்கள் பற்றி ஒரு வார்த்தை சொல்லவேண்டியிருக்கிறது. கட்டிடங்கள் கட்டுவதற்கு வேண்டிய பணத்தை சர்க்காருக்குத் தனியார்கள் சில சமயங்களிலே கொடுக்கிறார்கள். இரக்க சிந்தனையுடைய அவர்கள் அப்படிக் கொடுத்தாலும், அவர்கள் தங்களுடைய பெயர்கள் பொறிக்கப்பட வேண்டுமென்று விரும்புகிறார்கள். அப்படி அவர்கள் விரும்பினால் அதை ஊக்குவிக்கின்ற முறையிலே பெயர்களைப் பொறித்து அவர்களுக்கு ஊக்கம் காட்டினால் அதைப்போன்று இரக்க சிந்தனையுடைய மற்றவர்களும் உதவி செய்வதற்கு முன்வருவார்கள்.

சயின்ஸ் கிளாஸ்களில் அதிக இட நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது சயின்ஸ் வகுப்புகளில் இடம் கிடைக்கவில்லை. ஏற்கெனவே இருக்கக்கூடிய வசதிகளை பெருக்கவேண்டும். இதற்கு கல்வி அமைச்சர் அவர்கள் நடவடிக்கை

எடுக்கவேண்டும். குறிப்பாக நெல்லை மாவட்டத்தில் பெண்களுக்கே சிறப்பான கல்வியைத் தரக்கூடிய தூத்துக்குடி செயின்ட் மேரீஸ் கல்லூரி, ஆண்களுக்கே சிறப்பான கல்வியைத் தரக்கூடிய செயின்ட் சேவியர்ஸ் கல்லூரி, பாளையங்கோட்டை செயின்ட் ஜான்ஸ் கல்லூரி, பாளையங்கோட்டை இவற்றிலே எல்லாம் அதிகமான வசதிகளை ஏற்படுத்தி அதிகமாக சலுகைகள் கொடுத்து சயின்ஸ் வகுப்புகளை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கல்வி அமைச்சர் அவர்கள், தமிழால் கிடைக்கமுடியாததை ஆங்கிலத்திலே பெற்றுக்கொள்ளலாம், அகில உலகத் தொடர்புக்கு ஆங்கிலம் தேவை. கல்வியில் உயர்தனிச் செம்மொழியாக தமிழ் இருந்தாலும், கிடைக்க முடியாதவற்றை ஆங்கிலத்தில் பெற்றுக்கொள்ளலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதை நான் வரவேற்கிறேன். இரண்டாவது வகுப்பிலிருந்து ஏ, பி, சி, டி என்று ஆங்கிலம் சொல்லிக்கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த வெட்டுப் பிரேரணையையின் மீது எனக்குப் பேச வாய்ப்புக் கொடுத்ததற்காக நான் உதவி சபாநாயகர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு என்னுடைய சிற்றுரையை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. மு. இராமன் :** மாண்புமிகு சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, 1967–68-ஆம் ஆண்டுக்கான கல்வி மானியத்தை ஆதரித்துப் பேச எனக்கு வாய்ப்புத் தந்தமைக்கு நான் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆசிரியர் பயிற்சிக்கு எஸ். எஸ். எல். சி. தேர்வில் வெற்றி பெறுமல் தோற்றுவிட்ட மாணவர்களுக்கு செகண்டரி பயிற்சி பள்ளியில் சேருவதற்கு வாய்ப்புக் கொடுக்க வேண்டுமென்று இருந்தும், அப்படியில்லாமல் எஸ். எஸ். எல். சியில் எலிஜிபில், அதாவது பாஸ் செய்த மாணவர்களுக்குத்தான் இடம் கிடைக்கிறது. தாழ்த்தப்பட்ட மாணவர்களாக இருந்தாலும் பின் தங்கிய வகுப்பைச் சேர்ந்த மாணவர்களாக இருந்தாலும் ஆங்கிலத்தில் 30 மார்க்கும், மற்ற பாடங்களில் 25 மார்க்கும் எடுத்து இருந்தால் கல்வி இலாகா இடம் கொடுக்கவேண்டுமென்று விதி இருந்தும், பயிற்சிக் குழுவும், தேர்வுக் குழுவும் நடக்கின்ற நேரத்தில் இப்படிப்பட்ட வாய்ப்புக்கள் அளிக்கப்படவில்லை என்பதை நான் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதியில் கண்டமங்கலத்தில் கஸ்டம்ஸ் ஹவுஸில் ஏராளமான கட்டிடங்கள் இருக்கின்றன. வானூர் தொகுதியில் இரும்பையில் ஆசிரியர் மகளிர் பயிற்சிக் கூடம் ஒன்று இருக்கிறது. அங்கே போய் மாணவர்கள் படிப்பதற்கு போக்குவரத்து வசதிகள் இல்லை. ஆகவே கண்டமங்கலத்திலே உள்ள அந்தக் கட்டிடங்களுக்கு அந்த பயிற்சிப் பள்ளியை மாற்றினால் அது மாணவர்களுக்கு வசதியாகவும், பாதுகாப்பாகவும், இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுக்கு 58 ஆக உள்ள வயதை 60 ஆக உயர்த்தவேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுக்கு பென்ஷன் குறைவாகத்தான் முன்னால் இருந்த சர்க்கார் கொடுத்து வந்திருக்கிறது. நம்முடைய சர்க்கார் கொடுக்கக் கூடிய பென்ஷன் தொகையை உயர்த்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் அநேக இடங்களில் 500-க்கு மேற்பட்ட ஜனத்தொகை இருந்தும் ஆரம்பப் பாடசாலைகள் அமைக்கப்படாமல் இருக்கின்றன. எனவே பூஞ்சோலைக் குப்பம், குயலாப் பாளையம் போன்ற இடங்களில் உடனே ஆரம்பப் பள்ளிகள் ஆரம்பிக்கவேண்டுமென்று கேட்டுக் [illegible]கிறேன்.

[illegible] உயர்நிலைப் பள்ளிகளில் ஸ்வீப்பர்கள் நியமிக்கப்படு [illegible] எல்லாம் சம்பளம் 15 ரூபாய் தான் கொடுக்கப் [illegible], அதை வைத்துக்கொண்டு அவர்கள் [illegible]கிறார்கள், அவர்களுக்குச் சம்ப [illegible]கிறேன்.



என்னுடைய தொகுதியில் சித்தனம்பட்டில் உயர்நிலைப் பள்ளிக் கட்டடம் இருக்கிறது, அது மிகவும் மோசமான நிலையில் இருக்கிறது, அதை உடனே கவனித்து மாணவர்களுக்கு எந்தவிதமான ஆபத்தும் ஏற்படாதபடி பாதுகாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விக்கிரவாண்டி உயர்நிலைப் பள்ளிக் கட்டடத்திற்காக மக்கள் பங்குத் தொகையை விதிதாச்சாரப்படி கொடுத்திருந்தும், பணத்தை அரசாங்கம் வாங்கியும் முன்பிருந்த சர்க்கார் கட்டி முடிக்கவில்லை. ஆகவே நம்முடைய சர்க்கார் உடனே அதைக் கட்டுவதற்கு உத்திரவு வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒன்றிப்பு மன்றங்களில் பணிபுரிவதற்கு ஆசிரியர்களின் விகிதாச்சார முறைப்படி, தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கு சலுகைகள் வழங்கப்படவில்லை. 100க்கு 16 சதவீதம் கொடுக்கவேண்டுமென்று விதியிருந்தும் ஒன்றிப்புத் தலைவர்களும், ஆணையாளர்களும் 16 சதவீதம் கொடுப்பதில்லை. அப்படிப்பட்ட சம்பவங்கள் இனிமேல் நிகழாமல் இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாணவர்களுக்கு கல்விச் சலுகை 1,500 ரூபாய் என்று வரம்பு இருந்ததை 2,000 ரூபாய் உயர்த்தியதற்காக நம்முடைய அமைச்சரவைக்கு நான் என்னுடைய வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் பல ஒன்றிப்பு மன்றங்களில் மதிய உணவுத் திட்டம் நடத்தப்பட்டு உணவு வழங்கப்படுகிறது. உண்மையிலேயே மதிய உணவுத் திட்டம் என்பது எழுத்து அளவில்தான் இருக்கிறதே தவிர, உணவு வழங்கப்படவில்லை. சில ஆசிரியர்கள், தலைமையாசிரியர்கள் ஊராட்சித் தலைவரின் பயத்தின் காரணத்தால் அச்ச உணர்வோடு வழங்காமல், உணவைப் போட்டதாக ஏடுகளில் பதிவு செய்கிறார்கள். மதிய உணவுத் திட்டத்தை அரசாங்கம் எடுத்துக்கொண்டு ஏழை எளிய மாணவர்களுக்கு உணவு வழங்கினால் நலமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு எனக்கு வாய்ப்புக் கொடுத்ததற்காக நன்றியைத் தெரிவித்துக்கொண்டு நான் என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **THIRU. K. S. KOTHANDARAMIAH :** Mr. Deputy Speaker, Sir, I express my thankfulness to you for giving me an opportunity been to speak a few words on the Demand that has been moved by the Hon. Minister for Education for the year 1967–68.

Sir, I wish to congratulate the Hon. Minister for having raised the allotments for education in this Budget by a considerable amount and also for taking care to distribute the amount in proportion to the various items of education which has been mentioned in the Report relating to Education. This clearly shows that the Hon. Minister has shown forethought, farsightedness, interest and also generosity for education. I wish to state that though the present Ministry assumed Office only three months ago, there are a number of evidences to prove that they have been able to carry on the administration of this most advanced State efficiently and intelligently. I find that their efforts are proceeding in the right direction and their efforts have already yielded some good fruits and one of such fruits, I wish to state, is the concession granted to the economically backward children reading in the P.U.C. Class. Sir, education is the only subject on which members of all Parties whether they belong to the ruling party on the opposition party or

any other party show eagerness to co-operate without giving room for much commotion, heat or discussion because there is a personal element in it because every Member irrespective of his party saffiliation, desires that his son or daughter must get sound education, disciplined education and useful education.

Therefore even though the Hon. Minister moves a Demand for a larger amount, nobody grudges, everybody co-operates with him and puts his seal of approval on the Demand.

The portfolio of education is really sacred and envious when compared to other portfolios. Education in recent times has expanded considerably and has assumed gigantic proportions, and for this subject the entire time, the entire concentration of a Minister is needed. If the Education Minister is burdened with other portfolios, he will not be able to devote the entire time which he wants to devote to Education, though he might take interest in other portfolios.

We have been spending enormous amounts on education. Are we getting the maximum benefit out of it ? Nowadays we find many ills among students such as indiscipline, failure in examinations agitations, etc.. Colleges and schools have become the arena of political battles. What is the reason for all these ills ? When ever defects are noticed, educationists immediately form committees and go on finding out the causes for the defects. I think the chief reason for all these troubles is defects found in elementary education, which our educationists do not try to understand or attend to. If elementary education, which is the foundation of all education is kept on sound lines, if we make it more attractive, if we make it not a burden on the boys but a joyous experience in the minds of young men, if we provide them with conditions congenial for unfolding their innate genius, then I think elementary education will pave the way for secondary education and secondary education to university education, and thus the happy process will go on. With regard to Elementary Education, further I wish to point out certain defects. First is the selection of teachers. We are not selecting the right type of teachers. We pay attention only to academic qualifications. We must see that they have an aptitude and a desire for, and a spirit of devotion to the teaching profession. We should also see that they are paid well. Otherwise they will not do their duty wholeheartedly.

Coming to the materials supplied to schools for teaching work I wish to say a few words. Nowadays we find that no suitable material is supplied. We do not find even maps. The Government introduced Social Studies in the schools, sometime back at the cost of history and geography. But for the last twenty years they have not been able to supply even a single map for teaching Social Studies with the result that the teachers have been purchasing maps sold in bazaars incorrectly prepared and unwanted in schools. Therefore I say that the Government must pay more attention to elementary education and put it on a sound basis. It must be removed from the authority of the Panchayat Union Councils and entrusted to the Education Department.



Coming to the difficulties of the Telugu people, I wish to say a few words. At first I want to express my gratitude to the Government of Madras for giving us a lot of facilities. Yet there are some more difficulties. We want some more colleges where Telugu is taught. In some of the libraries started by the Panchayat Union Councils, or the local Library Authority, we do not have many books in Telugu. In Hosur we have got a training school for Telugu Boys. But we do not have a training school for Telugu Girls. The matter is under the consideration of the Government and we request the Government to sanction a section for Telugu girl students immediately.

For research work in post-graduate courses we want more facilities.

There are a number of writers in Telugu in the Madras State itself. The Madras State Sangitha Nataka Sangam is paying some pension and giving aid in other forms to eminent scholars in Tamil. I think this aid may be extended to Telugu writers also.

I request the Hon. Minister to set apart a reasonable amount for the development of Telugu in the Madras State so that Telugu people also can develop their language on a par with the other languages.

Next, coming to . . . . . (The time bell was rung.)

***திரு. மா. இராசாங்கம்** : மன்றத் தலைவர் அவர்களே, இங்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் கல்வி மானியத்தை வரவேற்று என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்த அறிக்கையின் பல அம்சங்கள் மிகத் தெளிவாகவும், விளக்கமாகவும் அதே நேரத்தில் எல்லோருக்கும் நன்மையாகவும் இருப்பதைப் பார்த்து இந்த மானியத்தை வரவேற்கிறேன். கல்வி முறை மெள்ள மெள்ள மாறவேண்டிய ஒன்று. அமைச்சர் அவர்கள் அதை உறுதியாகச் செய்து கொண்டு வருகிறார்கள் என்று நம்புகிறேன். தமிழகத்திலுள்ள கல்வி முறை பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் பேசும்போது இப்போதிருக்கிற முறை மாற வேண்டுமென்று சொன்னார்கள். வெள்ளைக்காரன் நம்மை ஆள்வதற்கேற்ற வகையில் இந்தக் கல்வி முறை வந்தது, அப்படிப்பட்ட இந்தக் கல்வி முறையை மாற்றியா வேண்டும் என்பதுதான் பல பெரியவர்களுடைய கருத்து. வெள்ளையர்கள் ஆளுகிறபோது இந்திய மக்கள் அவர்களுடைய ஆட்சிக்கு உறுதுணையாக இருக்கவேண்டுமென்ற ஒரே குறிக்கோளோடு ஏற்படுத்தப்பட்ட கல்விமுறையை நம்முடைய சுதந்திர நாட்டுக்குத் தக்கவாறு மாற்றியமைக்கவேண்டுமென்பதுதான் பல பெரியவர்கள், அறிவுள்ளவர்கள், படித்தவர்களுடைய கருத்தாக இருக்கிறது. சுதந்திர நாட்டுக்குத் தக்கபடி இந்தக் கலவி முறை இல்லை. இந்தக் கல்வி முறை எப்படி இருக்கிறது என்றால், பிரேதப் பெட்டி தயாரித்துப் பழகிப் போன ஒருவனைத் தாலாட்டுத் தொட்டில் செய்யச் சொன்னால், அது பிரேதப் பெட்டி வடிவத்திலேயே இருக்கும் என்பது போல் அமைந்திருக்கிறது. அடிமைத்தன கால கல்வி முறை சுதந்திர காலத்திற்கு ஒத்து வராத முறையாக இருக்கிறது. ஆகவே, பழைய கல்வி முறையை மாற்ற வேண்டிய அளவுக்கு மெள்ள மெள்ள முழுதாக மாற்றிவிட்டால் எதிர்கால சுதந்திர குடிமக்களுக்கு நன்றாக இருக்கும்.

யாராக இருந்தாலும் எந்த ஒரு திறமையும் இல்லாமல் பிறப்பதில்லை. ஒவ்வொருவருக்கும் ஏதாவது ஒரு திறமை இருக்கிறது. ஒருவருக்கு எதிலே திறமை இருக்கிறதோ, அது சம்பந்தப்பட்ட பாடத்தை எடுத்துப் படிக்க வாய்ப்பு ஏற்பட்டால்தான் அவருடைய திறமையை நன்றாகக் காட்ட முடியும். மயிலை ஆடச் சொன்னால் நன்றாக இருக்கும், அதைப் பாடச் சொன்னால் எப்படி இருக்கும்.? அதுபோல் எதிலே இடம் கிடைக்கிறதோ அதைத்தான் படிக்க வேண்டுமென்ற நிலை இருந்தால் அது மயில் பாடினால் எப்படி இருக்குமோ அந்த நிலையில்தான் இருக்கும். கூடுமானவரை இந்தச் சர்க்கார் எல்லோருக்கும் இடம் கிடைக்க வழி செய்ய முயற்சித்துக் கொண்டிருக்கிறது என்பது தெரியும். வெகு விரைவில் எல்லோருக்கும் இடம் கிடைக்க முயல வேண்டும். யாரைப் பார்த்தாலும் இன்று பொறியியல் கல்லூரியில் இடம் வேண்டும், மருத்துவக் கல்லூரியில் இடம் வேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள். ஆனால் இவர்கள் ஆசைப்படுகிற அளவுக்கு எல்லோருக்கும் எப்படி இடம் கிடைக்க முடியும் ? இவர்களுக்கு இந்த ஆசை நிராசையாகப் போய்விடுமோ என்ற பயம் இருக்கிறது. குறிப்பாக, ஒரு குறிப்பிட்ட படிப்புக்கே எல்லோருக்கும் போக வேண்டுமென்று நினைத்தால் மற்றைய துறைகளின் நிலை என்ன? ஜப்பான் போன்ற நாடுகளிலே நல்ல கல்வி முறையை வைத்திருக்கிறார்கள். இளமையிலேயே அவனுக்கு எதிலே பிடிப்பு, திறமை என்று பார்த்து அதற்கேற்றவாறு பிரித்து விடுகிறார்கள். கல்வி சம்பந்தமான நிபுணர் ஒருவரைச் சந்தித்தபோது சொன்னார்—ஜப்பான் நாட்டில் சிறு வயதிலேயே ஒருவனுக்கு என்ன திறமை இருக்கிறது என்று பார்த்து அதற்கேற்ற வகையில் அவனுக்குக் கல்வி போதிக்க வாய்ப்பு இருக்கிறது. நம்முடைய கல்வி முறையிலும் பத்தாவது படித்த முடித்த பிறகு எதிலே திறமை இருக்கிறது என்று பார்த்து அந்தத் துறையிலே திருப்பிவிடும் வகையில் மேலே கற்றுக் கொடுக்கலாம்.

குறிப்பாக நான் சொல்ல விரும்புவது, மதுரைப் பல்கலைக் கழகத்தைப் பொறுத்தவரையில் அதற்கு நிலத்திற்கு ஏராளமான பணம் செலவாகியிருக்கிறது. மதுரையைப் பொறுத்தவரையில் நாகமலையில் அந்தப் பல்கலைக் கழகக் கட்டடத்தைக் கட்டினால் சர்க்காருக்கு பணம் மிச்சமாகும். சர்க்கார் இடமே அங்கிருக்கிறது. கிறிஸ்தவர்களுக்கும், பிற்பட்ட மக்களுக்கும் அவர்களுக்கு கிடைக்கவேண்டிய கல்விச் சலுகைகள் கிடைக்காமலிருக்கிறது. கிறிஸ்தவர்களாக ஆகிவிட்டார்கள் என்பதற்காக அவர்கள் மதம்தான் மாறியிருக்கிறதே தவிர அவர்களது பொருளாதாரத்தில் அதனால் மாற்றம் ஏற்படவில்லை. ஆகவே மதம் மாறியதால் அவர்களுக்குக் கொடுக்கவேண்டிய கல்விச் சலுகைகளைக் கொடுக்காமல் இருப்பது அவர்களுக்கு ஏமாற்றத்தை அளிக்கிறது.

***திரு. என். வரதராஜன்**: சட்டமன்ற உதவித் தலைவர் அவர்களே, கல்வியை நல்லதொரு நோக்கத்திற்கு உபயோகப்படுத்துவதற்குப் பதிலாக ஒரு வியாபார நோக்கத்தோடு அதை உபயோகப்படுத்துகிற ஒரு நிலை நம் நாட்டில் வளர்ந்து வருகிறது. அதை தவிர்க்கும் முறையில் அது பற்றி ஆலோசிக்க வேண்டும் என்பது என் வேண்டுகோள். தனியார் துறைப் பள்ளிகளில் ஆசிரியர்களுக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கும் சம்பளம் கொடுப்பதில்லை. ஓரளவிற்குக் குறைத்துக் கொடுத்து நிறையக் கொடுத்தோம் என்று எழுதி வாங்கிக் கொள்கிற பழக்கம் இன்றும் இருக்கிறது. அதே போல் வேலையில் சேர்க்கும்போது கூட ஒரு குறிப்பிட்ட அளவிற்கு பணம் பெற்றுத்தான் சேர்ப்பது என்ற நிலையும் நீடிக்கிறது. ஒரு ஆண்டிற்கு என்று ஒப்பந்தம் எழுதி வாங்கிக் கொண்டு ஒரு வருடத்திற்குப் பின்னால் அந்த ஆசிரியரை விரட்டி விடுவது என்ற நிலையும் நீடித்துக் கொண்டிருக்கிறது. அதேபோன்று இன்று தனியார் துறையில் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் வைத்திருக்கிறார்கள். அந்தப் பள்ளிக்கூடங்களில் எப்படி மாணவர்களை எடுக்கிறார்கள் என்றால், நம் துறையில் உள்ள பள்ளிக்கூடங்களில் கூட கமிட்டிகள் அமைக்கிறோம். ஆனால் அவர்கள், அவர்களது இஷ்டம்போல் யாரை வேண்டுமானாலும் எடுக்கிறார்கள். அப்படி எடுப்பதை நான் ஆட்சேபிக்கிறேன். அதற்குரிய ரேட், இன்று



மார்க்கெட்டில் விலை எப்படி ஏறிக் கொண்டிருக்கிறதோ அதேபோன்று ரேட் உயர்ந்து கொண்டிருக்கிறது. அதுவும் இந்த வருடத்திலும் என்பதை தங்கள் ஞாபகத்திற்குக் கொண்டு வருகிறேன். ஆகவே ஆசிரியர்களைச் சேர்ப்பதில் பணம், மாணவர்களைச் சேர்ப்பதில் பணம், பள்ளிக்கூட ஆசிரியர்களுக்குக் கொடுக்கும் சம்பளத்தில் சிறிது பிடித்து வைத்துக் கொள்வதில் பணம் என்று இப்படி தனியார் துறையில் உள்ள கொடுமைகளை நீக்க நாம் பெரு முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். சர்க்காரே அந்தத் துறையை மேற்கொள்ளுகிற முறையில் முயற்சி எடுக்க வேண்டும். இன்றே உடனடியாக அவ்வாறு செய்யாவிட்டாலும் ஒரு கண்காணிப்பு கொண்டு வர முயற்சி செய்ய வேண்டும். நம் ஆசிரியர்கள் மாணவர்களுக்கு லைஷலக் பற்றி கதை சொல்லிக் கொடுப்பார்கள். ஆனால் அவர்களே லைஷலக் தன்மைக்கு உள்ளாக வேண்டிய நிலை இருக்கிறது. சில மானேஜ்மெண்ட் பெரிய லைஷலக்களாக நடந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே ஆசிரியர்கள் தங்கள் குறைகள் தீர இந்த மன்றத்தையும், இந்த அமைச்சரவையையும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆசிரியர்களின் வாழ்க்கைத்தரத்தை ஓரளவு உயர்த்துவதற்கு கோத்தாரி கமிஷன் சொல்லியிருக்கும் முடிவுகளை அமுல்படுத்த நாம் முயற்சி செய்ய வேண்டும். பொதுவாகச் சொல்ல வேண்டுமானால் பழைய காலத்தில் இயங்கி வந்ததில் ஓரளவு மாறுதல் ஏற்பட முயற்சி செய்ய வேண்டும். அதற்கு ஒன்றிரண்டு சம்பவங்களை சுட்டிக்காட்டினால் உதவியாக இருக்கும். எனது தொகுதியில் வடுகம்பாடியில் ரோசாமேரி என்பவருக்கு ஏழு வருடங்கள் ஆகியும் இன்னும் ஓய்வு ஊதியம் கிடைக்கவில்லை. ஓய்வு ஊதியம் கொடுப்பது என்பதே அவர்கள் தங்கள் வாழ்க்கையை ஓரளவு சமாளிப்பதற்காகத்தான். அவர்கள் உயிர் நீத்துக் கொள்ளும்போதுதான் இந்த ஓய்வு ஊதியம் கிடைக்கும் போல் இருக்கிறது நிலைமை. திண்டுக்கல்லில் காரட்டழகன்பட்டி என்ற ஊரில் ஒரு ஆசிரியருக்கு 17 மாதமாக சம்பளம் கிடைக்கவில்லை என்ற தகவல் வந்திருக்கிறது. ஆகவே இப்படிப்பட்ட முறைகேடுகளை எல்லாம் களைந்தெறிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்று காலை கூட ஒரு கடிதம் வந்தது எனக்கு. திண்டுக்கல் மாவட்ட கல்வி அதிகாரி ஒரு பள்ளிக்கூடத்திற்கு மதிய உணவிற்கு பணம் கொடுக்க வேண்டுமென்று உத்தரவு போட்டு பதினைந்து நாட்கள் ஆகின்றன. ஒரு டெப்டி இன்ஸ்பெக்டர் சும்மா உட்கார்ந்திருக்கிறார், கல்லுப் பிள்ளையார் மாதிரி. இது சாதாரணமாக புறக்கணிக்கக் கூடிய ஒன்றல்ல. ஆகவே இதைக் கவனித்து நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கீழேயிருந்து மனுக்கள் வந்தால் அவற்றைப் புறக்கணிக்கக் கூடாது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மணி அடிக்கப்பட்டது). நம் போதனா மொழிபற்றி காலையில் மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு ம.பொ.சி. அவர்கள் சொன்ன கருத்துதான் சரியான நிலை. அதை அமைச்சர் அவர்கள் கவனத்தில் எடுத்துக்கொண்டு நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நம் மதிப்பிற்குரிய கல்வி அமைச்சர் அவர்கள் பேசியதாக பத்திரிகைகளில் வரும் செய்திகள் சில சமயங்களில் பயத்தை விளைவிக்கிறது. அதைத் தெளிவுபடுத்தும் முறையில் காலையில் சொன்னதுபோல் அவ்வப்போது தெளிவுபடுத்த வேண்டும். கல்வி இயக்குனரில் ஒருவரான திரு. சிட்டிபாபு அவர்களை வரவேற்கிற கூட்டத்தில் அமெரிக்க கல்விமுறைதான் சிறந்தது என்று அமைச்சர் அவர்கள் பேசியதாக செய்தி வந்திருக்கிறது. டெண்டகள் கல்லூரிப் படிப்புபற்றி அவர்கள் ஏதோ சொன்னதாகப் பத்திரிகைகளில் செய்திகள் வந்துள்ளன. [illegible] தவிர்க்க வேண்டும்.

***திரு. க. ந. இராமச்சந்திரன்**: மாண்புமிகு உதவித் தலைவர் அவர்களே, எனக்கு பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். கல்வி மான்யக் கோரிக்கை பல நன்மைகள் பயக்கத்தக்க முறையில் அமைந்துள்ளது. அதை வரவேற்கிற வகையில் நான் சில கருத்துக்களைச் சொல்லலாம் என்று கருதுகிறேன். நம் அரசு கல்விக்காக 54 கோடி ரூபாய்க்குக் குறையாத தொகையை

வழங்கியுள்ளது. சென்ற அரசு 1966–67-ல் கல்விக்காக 43 கோடி ரூபாயே வழங்கியிருந்தார்கள். ஆக அவர்களை விட 11 கோடி ரூபாய் நம் அரசு கல்விக்காக அதிகப்படுத்திக் கொடுத்திருப்பதற்காக தமிழ் நாடு மக்கள் சார்பாக நன்றி செலுத்த நாம் கடமைப்பட்டிருக்கிறோம். 1,500 ரூபாய் வரை சம்பளம் பெறுகிறவர்கள் எந்த இனத்தைச் சார்ந்தவராக இருந்தாலும் அவர்கள் குழந்தைகளுக்கு இலவசக் கல்வி அளிக்கப்பட்டுள்ளது. புத்தகங்களும் இலவசமாக வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும் "கேர்" மதிய உணவுத் திட்டத்தின் கீழ் பதினைந்து மைல்கள் சுற்றளவிற்கு உட்பட்ட கிராமங்களில் அமைந்துள்ள பள்ளிகளுக்கு மோட்டார் வாகனம் மூலம் மாணவர்களுக்கு உணவு வழங்க, பள்ளிக்கூடங்களை சமையல்கூடங்களாக ஆக்காத நிலையில் புதிதாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதுவும் பாராட்டத் தக்கதேயாகும். முதியோர் கல்விக்காக சென்ற அரசு செய்த திட்டத்திற்கு தொடர்ந்து ஆதரவு அளித்து வருகிறது நம் அரசு. ரஷ்யா நாட்டில் கூட—நல்ல வளர்ச்சி அடைந்துள்ள நாட்டில் கூட முதியோர் கல்வியை போற்றி வளர்க்கிறார்கள். அதை மேற்கொண்டு நடத்துவது பாராட்டத் தக்கதே. எதிர்கட்சியினர் குறை கண்ட இடத்தில் திருத்தியும், நிறை கண்ட இடத்தில் அதைப்போற்றும் தன்மையையும் நாம் காணவில்லை. திரு. மார்டின் அவர்களும், நேற்று பேசிய முன்னாள் அமைச்சர் அவர்களும் நம் திட்டங்களைப்பற்றி பேசும்போது பண்போடும் அன்போடும் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் காட்டுகிற கொள்கையைக் கடைப்பிடிக்காது பேசுகிற தன்மையைக் கண்டோம். இன்று மெடிக்கல் காலேஜ் ரிசல்ட் பற்றி கூறினார்கள். அடிக்கடி ஆசிரியர்களை இரண்டு ஆண்டு காலத்தில் மூன்று முறை மாற்றி விடுவதாகச் சொன்னார்கள். நான் ஆறு மாத காலத்தில் மூன்று முறை இப்படி பாதிக்கப்பட்டேன் என்பதை முன்னாள் அமைச்சர் அவர்கள் இங்கில்லாததால் கனம் நண்பர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். செப்டம்பரில் புதுக்கோட்டையிலிருந்து சென்னைக்கு மாற்றப்பட்டு, பின்னர் சேலத்திற்கு ஜனவரியில் மாற்றப்பட்டு, கடைசியில் என் ராஜிநாமாவை ஏற்றுக் கொள்ளாத அளவிற்கு பல தொல்லைகளுக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறேன் என்பதை முன்னாள் அமைச்சர் அவர்கள் அறிய மாட்டார்கள். மேலை நாடுகளில் அங்குள்ள பள்ளிக்கூடங்களில் தேர்வுகள் முடிந்து விடுமுறை ஆரம்பிப்பதற்கு முன்னால் முடிவுகளை அறிவித்து விடுகிறார்கள். அதனால் பள்ளி மாணவர்கள் மேற்கொண்டு எந்தத் துறைகளுக்குப் போகலாம் என்று முடிவு செய்து படிப்பதற்குள்ள வசதியை ஏற்படுத்திக் கொடுக்கிறார்கள். அந்த முறையை நம் நாட்டிலும் ஏற்படுத்த கல்வி அமைச்சர் அவர்கள் துரிதமான நடவடிக்கைகள் எடுத்தால் அது நமக்கு நன்மை பயப்பதாக இருக்கும். எமர்ஜன்ஸி காலத்தில் ஆசிரியர்களிடம் இருந்து கம்பல்சரி டெப்பாசிட் பிடித்துக் கொண்டிருந்தார்கள். எமர்ஜென்ஸி முடிந்த பிறகும் கூட அந்தத் தொகையை இன்னும் பிடித்துக்கொண்டிருக்கிறார்கள். விலைவாசிகள் ஏறியிருக்கும் இந்தக் காலத்தில் ஆசிரியர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே அப்படி பிடிக்கக் கூடிய தொகையை இனியாவது பிடிக்காமல் இருக்க நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டும். போலீஸ் துறையில் உள்ளதுபோன்று, ஆசிரியர்களை திடீர் திடீர் என்று மாற்றுகிறபோது அவர்கள் வீட்டு வசதி இன்றி கஷ்டப்படுவதால் அவர்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். பிற துறைகளில் உள்ள சலுகைகள் ஆசிரியர்கள் துறையில் இல்லை. கடந்த ஆண்டு என்.ஜி.ஓ.க்கள் முதல் அமைச்சர் அவர்களிடம் முறையிட்டிருக்கிறார்கள். ஜனவரியில் ஆயிரம் ரூபாய், அல்லது மூன்று மாதம் அல்லது ஆறு மாத சம்பளத்தைச் சேர்த்துக் கொடுத்தால் அப்போது குறைவான விலையில் ஒரு ஆண்டுக்கு வேண்டிய பொருள்களை வாங்கி வைத்துக் கொள்ள முடியும் என்றும் மாதந்தோறும் 100 ரூபாய் பிடித்துக் கொண்டாலும் ஆட்சேபிக்கமாட்டோம் என்றும் அதற்கான ஏற்பாட்டைச் செய்யவேண்டுமென்று கோரியிருக்கிறார்கள். அந்த உதவி ஆசிரியர்களுக்கு கிடைப்பதற்கு ஏற்பாடு செய்தால் மிகவும் பயன் உள்ளதாக இருக்கும்.



அடுத்தபடியாக, கோவாப்பரேட்டிவ் சொசைட்டி மூலமாக, அவர்கள் கேட்கிற பொருள்கள் அத்தனையும் குறைந்த விலையில் கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று ஆசிரியர்கள் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

கல்லூரிகளில் இருக்கிற ஆசிரியர்களுக்கு, சிறப்பாக தமிழ் ஆசிரியர்களுக்கு, தமிழகத்தில் தமிழுக்கு முதலிடம் கொடுக்கும் தமிழக அரசில், சிறந்த இடம் கொடுக்கவேண்டும். புதிதாகத் தொடங்கும் கல்லூரிகளில் தமிழ்ப் பேராசிரியர்கள் கெஜெட் பதிவு பெற்றவர்களாக இல்லை. நமது மாநிலத்தில் அந்த மாதிரி ஏறத்தாழ 10 கல்லூரிகள் இருக்கும் என்று கருதுகிறேன். அவர்களுக்கு கெஜெட் பதவி அளிக்காதது குறையாக இருக்கிறது. கல்லூரிகளில் ஆங்கிலப் பேராசிரியர்கள் இருக்கிறார்கள். மாநிலக் கல்லூரியில் மூன்று ஆங்கிலப் பேராசிரியர்கள் இருக்கிறார்கள். தமிழுக்கு இரண்டு பேர்கள்தான் இருக்கிறார்கள். இந்தக்குறைகளைப் போக்க ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது).

*DR. H. V. HANDE: Honourable Deputy Speaker, Sir, at the very outset I want to emphasize to this House that this is a very important Demand because practically whatever we earn through the Sales Tax is spent on education. It is the most important Demand which we should appreciate properly. In this context, I wish to point out very clearly with a sense of dissatisfaction the scandalous way in which the Office of the Director of Public Instruction is working. Now I want to cite a scandalous thing which I shall not be able to dilate upon, due to paucity of time. Here are excerpts from the letter written by the Principal of the Loyaal College :—

'All Staff members :

Implementation of New Scales of pay from 1st April 1966.

In spite of our repeated requests to the Education Department to give us a clear and firm direction as to fixing the post, scales of pay and the number of posts recognised for purposes of grant, we have not yet received any reply so far. The reply is expected to reach us soon and till such time we are unable to proceed any further in implementing the new scales of pay. This seems to be the general concensus of opinion of the Principals of Colleges in Madras, and a soon as a reply from the Office of the Director of Public Instruction is received the funds made available to us will be disbursed.

REV. G. FRANCIS, S.J.,
*Principal.*'

This is the scandalous way in which things have been done in thi office. This has been the legacy which has been inherited from the British and the Congress Government for the last twenty years. I hope the present D.M.K. Government will thoroughly overhaul this office and do the needful in the matter.

Another scandalous thing which has happened is ... wire ardt the placing of orders for the scientific equipments with the scientific companies. The orders for the supply of these scientific equipment must be placed by the Headmasters of schools or principals of olleges. But this time this usual practice has not been ellowed.

The enquiry made at the office of the Director of Public Instruction reveals that this year they have deviated from the usual practice and they themselves have placed orders for these equipments on behalf of 187 selected schools. Why they have done like this, this year, is the question which has to be answered.

Then, I want to point out another scandalous thing. The text-book committees have not been functioning properly in any part of the State for the past several years. I will now read an excerpt from a petition :—

"I feel that the Text Book Committee though it initially advertised that it will accept only books presented to it before 20th January 1967, it ultimately accepted books presented up to 24th of January 1967 ...."

Why they have accepted books presented after 20th January, that is, after four days ? In the case of the petitioner referred to above, his book has not been accepted. Why should there be this distinction ?

Now, I would refer to another scandalous way in which the Office of the Director of Public Instruction is functioning. This concerns a poor pupil who is living in my constituency. This is what he has written to me—

"I am an ex-student of the Hindu Union Committee High School, Choolai, Madras-7. I appeared as a private candidate for the S.S.L.C. examination held in October 1966, at the Centre, M.Ct. Muthiah Chettiar High School, Madras-7 and failed. My register No. was 32688 (October 1966). So far I have not received my S.S.L.C. book with the result I could not appear for the examination held in March 1967......"

Sir, the whole Department is replete with delays and red tapism and something should be done immediately to see that it is throughly overhauled. Why should the poor student to denied the S.S.L.C. Book ? Because of that, he could not appear for the examination held in March 1967. I hope the Honourable Minister for Education will look into this matter.

Finally, I want to refer to one other matter. Now, the girl students are being given a chance to appear privately for the S.S.L.C. Examination but the boys students have not been given such a chance. So, I request the Hon. Minister to reconsider the matter and see that the boy students also are given a chance to appear for the examination privately.

Thanking you, Sir.

* **திரு. க. முருகேசன் :** மாண்புமிகு உதவி சபாநாயகர் அவர்களே, 1967–68-ம் ஆண்டுக்கான கல்வி மான்யக் கோரிக்கையின் மீது இன்று நடைபெறும் விவாதத்திலே, வெட்டுப் பிரேரணையை ஆதரித்துச் சில வார்த்தைகள் பேச அனுமதியளித்ததற்காக எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம் தமிழக அரசைப் பொறுத்தமட்டில் கல்வியில் முன்னேற்றம் சென்றிருக்கிறோம் என்பதை யாரும் மறுக்க முடியாது. கொடுத் திருக்கும் புள்ளிவிவரப்படி, முதல் திட்டத்தில் 4·93 கோடி ரூபாயும்





இரண்டாவது திட்டத்தில் 11·40 கோடி ரூபாயும், மூன்றாவது திட்டத்தில் 31·21 கோடி ரூபாயும் செலவிட்டு, நான்காவது திட்டத்தில் 54·74 கோடி ரூபாய் செலவிட இருப்பதிலிருந்து இதை நன்கு உணரலாம்.

தொடக்கக் கல்வியைப் பொறுத்தமட்டில் ஊர்தோறும் ஓராசிரியர் பள்ளி ஏற்படுத்தி, கிராமங்களில் கல்வியைப் பரப்பியதன் மூலம் படித் தோரின் தொகை உயர்ந்திருப்பது கண்கூடு. 300-க்கு மேற்பட்ட மக்கள் வாழும் கிராமங்களிலும், ஒரு மைலுக்கு மேல் உள்ள ஊர்களிலும் பள்ளிகள் திறக்கலாம் என்று சர்க்கார் உத்தரவு உள்ளது. அந்த அளவுக்குக் குறைவாக உள்ள கிராமங்களில் பள்ளிகளைத் திறப்பது கடின மாக இருக்கிறது. அந்த உத்தரவின் காரணமாக, அதற்குக் குறைவாக இருந்தால் பள்ளிகளைத் திறக்க தாராளமாக அனுமதி கிடைப்பது இல்லை. ஏனென்றால், மாணவன் செல்லும் வழியில் பல இடைஞ்சல்கள் இருப்பதாகக் கூறினாலும், அதைப் பொருட் படுத்தாது அந்த ஊர்களில் பள்ளிகளை ஏற்படுத்த அரசாங்கம் உத் தரவிடுவது இல்லை. உதாரணமாகச் சொல்லப்போனால், பெரிய பஞ் சாயத்துக்களிலும், முனிஸிபாலிட்டிகளிலும் வார்டுக்கு ஒரு பள்ளி இருக் கிறது. கிராமங்களில் 35 மாணவர்கள் படிக்கக்கூடிய இடத்தில் ஓராசிரியர் பள்ளியைக் கட்டாயம் ஏற்படுத்தவேண்டுமென்று இந்தச் சமயத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். சென்ற ஆண்டு நல்லபள்ளி பஞ்சாயத்து யூனியனிலும், பெண்ணாகரம் பஞ்சாயத்து யூனியனிலும் பள்ளிகளைத் திறப்பது குறித்து எழுதியும், அவைகளைத் திறப்பதற்கான உத்திரவு வராததைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, உயர் ஆரம்பப் பள்ளிகள் ஏற்படுத்துவதிலும் [illegible] கவனம் செலுத்தவேண்டுமென்று கூறிக்கொள்கிறேன். உயர்நிலைப்பள்ளிகள் இருக்கும் இடத்தைச் சுற்றி மூன்று மைல் [illegible] இங்கு எந்த உயர் ஆரம்பப் பள்ளிகளும் திறக்க அனுமதிக்கக் கூடாது. ஏனென்றால் மாணவன் எட்டாம் வகுப்பு வரை படித்துவிட்டு உயர் நிலைப் பள்ளிக்குப் போனால் அதே ஸ்டாண்டர்டு இருப்பதில்லை. மற்ற மாணவர்களைக்காட்டிலும் அவனுடைய தரம் குறைந்திருப்பதைப் பார்க் கிறோம். அவன் சரியானபடி படிப்பை முடிக்காமல் போக ஏதுவாக இருக்கிறது.

உயர்நிலைப் பள்ளிகளைத் திறக்கும்போது 10,000 ரூபாய் நன்கொடையாக வாங்கும் பணத்தை, அந்தப் பள்ளியின் அபிவிருத் திக்கே செலவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒரு குடும்பத்திற்கு மூன்று குழந்தைகளுக்கு மேல் இருந்தால் குடும்பக் கட்டுப்பாட்டை வலியுறுத்த அதிகமான குழந்தைகளுக்குக் கல்விச் சலுகை அளிக்கக்கூடாது என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

உயர்நிலைப் பள்ளிகளுக்கு ஸீனியர் கிரேட் ஆசிரியர்களைத் தேர்ந் தெடுக்கும்போது, யூனியனில் பணியாற்றுகிற தேர்ச்சிபெற்ற ஆசிரியர் களுக்கு முதலிடம் தரப்பட வேண்டுமென்றும், நேரடியாகத் தேர்ந்தெடுக்கும் முறை திருத்தப்பட வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

யூனியனில் வேலைசெய்யும் எலிமெண்டரி எஜுகேஷன் [illegible] அதிகாரிகளையும் [illegible] ஏற்றுக்கொள்ள வேண்டும். கட்டடத்திற்காக [illegible] 4,000 ரூபாயை 6,000 ரூபாயாக உயர்த்தி மான்யமாக வழங்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

தர்மபுரி மாவட்டத்தில் இன்னும் இருபால் ஆசிரியர் பள்ளிகள் [illegible] வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தர்மபுரியில் [illegible] காலேஜில் பெண்கள் சேர்த்துக்கொள்ளப்படுவதில்லை. அந்தக் காலேஜிலே பெண்களும் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும்; அல்லது அவர்களுக்குத் தனியாக ஒரு காலேஜையாவது ஏற்படுத்தவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தர்மபுரி மாவட்டத்தில் ஒரு பாலிடெக்னிக்கும், இண்டஸ்ட்ரியல் ட்ரெய்னிங் ஸ்கூலும் ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக்கொள்ளுகிறேன். வணக்கம்.

* **திரு. எம். ஆர். கண்ணன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கல்வி மான்யக் கோரிக்கையை நான் முழுமனதுடன் ஆதரித்து என்னுடைய கருத்துக்களைச் சில சொல்ல விழைகின்றேன். கல்வியின் அவசியம்பற்றி யாரும் சொல்லவேண்டிய அவசியம் கிடையாது. இருக்கின்ற செல்வங்களுள் மிக மிக முக்கியமான செல்வம் கல்விச் செல்வம் என்பதை எல்லோரும் அறிவார்கள். ஆகவேதான் பல மேல்நாடுகளிலெல்லாம் கல்வியை ஒரு மூலதனமாகக் கருதி, அதற்காக அதிகப்படியான பணத்தைச் செலவழிக்கின்றனர். அப்படிச் செலவழிப்பதன் மூலம் மக்களுக்கு நல்ல அறிவு ஏற்படுகிறது. உண்மையிலேயே இன்றுள்ள ஜனநாயக அமைப்பில் கல்வி மிக முக்கியமான இடத்தை வகிக்கிறது. கல்வி எந்த அளவுக்கு மனிதனுக்கு நல்ல முறையில் பயன்பட்டு நல்ல பகுத்தறிவு ஏற்படுகிறதோ அந்த அளவுக்கு நாட்டுக்கு நல்ல பலன் ஏற்படும். ஜனநாயகம் நல்ல முறையில் வாழ வேண்டும் வளரவேண்டும் என்றால், நிச்சயமாகக் கல்வி ஒரு முக்கியமான சிறந்த இடத்தைப் பெறவேண்டும். அத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த கல்விக்குத் தமிழக அரசு ஒதுக்கியுள்ள தொகை மிகவும் வரவேற்கத் தக்கது. சென்ற 20 ஆண்டுக் காலத்தில், காங்கிரஸ் கட்சி, அரசாங்கத்தை ஆண்ட காலத்தில் கல்வித் துறையில் எத்தனையோ கோளாறுகள் ஏற்பட்டிருக்கின்றன. அதிலும் குறிப்பாகக் கல்வியில் அவர்கள் செய்துள்ள மாறுதல்கள், தேவையற்ற சில விஷயங்கள் ஆகிவற்றின் காரணமாக நாட்டில் கல்வியின் முன்னேற்றம் தகுந்த நிலையில் அமையவில்லை இப்பொழுது 20 ஆண்டுகளில் ஏற்பட்ட கோளாறுகள் ஓரளவுக்கு நீங்கி, நல்ல முறையில் கல்வி பகுத்தறிவை வளர்ப்பதற்கேற்ற முறையில் பயன்படவேண்டும் என்ற அளவுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. கல்வி மிக மிகச் சிறப்பானது என்று ஏற்றுக் கொண்டு, கல்வியை முதலீடாகக் கருதி, அதற்காகச் செலவழிக்கும் பணம் எத்தனை கோடியானாலும், அது நாட்டு அபிவிருத்திக்கு, நாட்டு மக்களுடைய அறிவாற்றலைப் பெருக்குவதற்கு, நல்ல பண்பை வளர்ப்பதற்கு ஏதுவாக இருக்கும் என்ற அந்த அடிப்படையில் கல்விக்காக இன்னும் அதிகமாகப் பணம் ஒதுக்கினாலும் நல்லது என்று நான் கருதுகிறேன்.

இப்பொழுது கல்வி இருக்கும் நிலைமையிலே என்னுடைய எண்ணம் என்னவென்றால், எஸ்.எஸ்.எல். ஸி. வரைக்கும் இடையிலே யாரையுமே நிறுத்தக்கூடாது. அதுதான் என்னுடைய தாழ்மையான கருத்து. ஆரம்பக் கல்வி வகுப்பிலிருந்து எஸ்.எஸ்.எல்.ஸி. வரைக்கும் ஒவ்வொரு வகுப்பிலும் மாணவர்கள் குறிப்பிட்ட அளவு நாட்கள் வந்து தீரவேண்டும் என்ற கட்டாயம் இருக்கவேண்டும். ஒரு குறிப்பிட்ட அளவு நாட்களுக்குத் தான் வராமல் இருக்கலாம். இப்பொழுது ஏறக்குறைய ஒரு ஆண்டில் 200, 220 நாட்களுக்குக் கல்வி போதிக்கப்படுகிறது. அதிலே ஒரு குறிப்பிட்ட சதவிகிதம் நாட்கள் அவர்கள் வராமல் இருக்கலாம், மற்ற நாட்களில் அவசியம் வரவேண்டும், அவர்கள் வந்து கல்வியை ஒழுங்காகப் பெற வேண்டும், ஒவ்வொரு பீரியடிலும் மாணவர்கள் இருக்கிறார்களா என்று அட்டெண்டன்ஸ் எடுக்கவேண்டும். அப்படி எடுத்து, அவர்களுக்கு எஸ்.எஸ்.எல்.ஸி. வரைக்கும் எந்தவிதமான தேர்வும் இல்லாமல், எஸ்.எஸ்.எல்.ஸி. தேர்வு மட்டும் வைத்து, அதிலே அவர்கள் எந்த அளவுக்கு மார்க்குகள் வாங்கிறார்களோ அதை அடிப்படையாகக்கொண்டு, மேற்கொண்டு அவர்களுக்குக் கல்வி அறிவைப் புகட்ட ஏற்பாடுகள் செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் நாட்டிலே பெற்றோர்களுக்குப் பணம் விரயம் ஆவது கூடக் கொஞ்சம் குறையும். மாணவர்கள் 7, 8 அல்லது 9-வது வகுப்பில் பாஸ் செய்யாவிட்டால் அவர்களுடைய எண்ணமும், முயற்சியும் தடைபடுகிறது. குழந்தைகளுக்கு நல்ல முறையில் கல்வி புகட்டவேண்டுமென்றால், எஸ்.எஸ்.எல்.ஸி. வரைக்கும் எந்த விதமான தேர்வும் இல்லாமல், எஸ்.எஸ்.எல்.ஸி. நிலையில் மட்டும் எக்ஸாமினேஷன் வைத்து, அவர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களை



அந்தத் தேர்வில் வாங்குகின்ற மார்க்குகளைக்கொண்டு மேற்கொண்டு அவர்கள் படிப்பதற்கு வழிவகைகள் செய்தால், மிகவும் நன்றாக இருக்கும் என்று கருதுகிறேன்.

அடுத்தபடியாக, மதிய உணவுத் திட்டத்தை ஸ்கூல்களில் வைத்திருக்கிறோம். ஒரு விதத்தில் பார்க்கப்போனால் அது நம்முடைய நாட்டிற்கே இழிவுதான். உணவு கொடுக்கக்கூட வழியில்லாமல் நமது சமுதாயத்தில் குழந்தைகள் இருக்கின்றன என்று சொல்லிக்கொள்வதே மானக்கேடான நிலைதான். அதற்குக்கூட அன்னிய நாடுகளிடம் கையேந்தி, அவர்களிடமிருந்து உணவை வாங்கி, அதை வைத்து குழந்தைகளுக்குக் கொடுக்கக் கூடிய நிலையில் இருக்கிறோம். ஏற்கனவே அன்னிய ஆட்சி இருந்தது. சுதந்திரம் வந்த பிறகு சென்ற 20 ஆண்டுகளாகக் காங்கிரஸ் ஆட்சி இருந்தது. அப்படியிருந்தும் கூட இந்த நிலை மாற்றப்படவில்லை. இதற்கு வேறு வழி கிடையாது. அந்த அளவுக்கு நமது சமுதாயத்தில் ஏழை எளியவர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய குழந்தைகளுக்கு உணவு கொடுத்தாகிலும் கல்வியைப் புகட்டவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. அந்த நிலை மாறவேண்டும். இப்பொழுது இருக்கக்கூடிய ஏற்பாட்டை மாற்ற வேண்டும் என்று நான் சொல்லவரவில்லை. இருந்தாலும், இந்த முறை நாட்டுக்கு உகந்தது அல்ல, நாட்டிற்கு மதிப்பு அளிக்கக்கூடியதல்ல என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சீருடை. பள்ளிக்கு வரும் குழந்தைகள் பலவிதமான ஆடைகளை அணிகிறார்கள். ஒரு ஏழைக் குழந்தை இருக்கிறது. ஒரு பணக்காரக் குழந்தை இருக்கிறது. பணக்காரக் குழந்தை படாடோபமான உடைகளை அணிந்து வருகிறது. ஏழைக் குழந்தை சாதாரண உடைகளை அணிந்து வருகிறது. அடிப்படைக் கல்வி கற்கும் பொழுதே குழந்தைகளிடையே வெவ்வேறு மாதிரியான உடை அணிந்திருப்பதால் மன மாச்சரியம் ஏற்படுகிறது. அந்த நிலை இல்லாமல், மூன்றாவது பாரம் வரைக்கும் குழந்தைகளுக்கு ஒரே மாதிரியான சீருடை இருப்பது மிகவும் நல்லது. அந்த அளவுக்கு மேற்பட்டு, குழந்தைகளுக்குப் பகுத்தறிவு வளர்ந்துவிடுகிறது. அவரவர்களுக்குத் தங்கள் தங்கள் குடும்ப நிலை தெரியும். அப்பொழுது அவர்களுக்கு ஒரு மன மாச்சரியம் ஏற்படுவதற்கு வழி இல்லை. ஆகவே, அந்த நிலை வரைக்குமாவது மாணவர்களுக்குச் சீருடை வழங்குவது மிகவும் நல்லது என்று கருதுகிறேன். அதே மாதிரி உபாத்தியாயர்களுக்கும் ஒரு யூனிபாரம், சீருடை வழங்குவது மிகவும் சிறந்ததாக இருக்கும் என்று நினைக்கிறேன். ஏனென்றால் இப்பொழுது உபாத்தியாயர்கள் பலவிதமான ஆடைகளை அணிந்து கொண்டு வருகிறார்கள். ஆதலால் அவர்களுக்குள்ளே சில வித்தியாசங்கள் ஏற்படுகிறது. அம்மாதிரி வித்தியாசம் இல்லாமல் எல்லா உபாத்தியாயர்களுக்கும் ஒரே மாதிரியான உடை வழங்குவது நல்ல ஒழுக்கமும், பண்பும், ஒழுங்கும் வளரக்கூடிய நிலையை உருவாக்கும். ஆகவே, அதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மணி அடிக்கப்பட்டது.)

* **திரு. எஸ். ராமச்சந்திரன்:** சட்டமன்ற துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கல்வி மான்யக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழக சர்க்கார் கொண்டு வந்திருக்கிற கல்வி மான்யத்திற்காக ஏற்கனவே இருந்ததை விட அதிகமாக ரூ. 10 கோடி செலவழிக்க முன் வந்திருப்பது, கல்வியின் பால் எந்த அளவுக்கு அக்கறையும், கவனமும் இந்தச் சர்க்காருக்கு இருக்கிறது என்பதையும் காட்டுகிறது. மேலும் ஒரு நாளைக்கு நாம் பள்ளிகள் மூலமாக ரூ. 25 லட்சம் செலவழிக்கிறோம் என்று எண்ணுகிற பொழுது, அது ஒரு பெருமையையும் நமக்குத் தருகிறது. பள்ளிக் கூடம் என்று கேட்டுவிட்டு, பள்ளிக்கூடத்திற்கு மட்டும் அனுமதி தந்து விட்டு, பள்ளிக்கூடத்திற்குக் கட்டடமும், அதை நடத்துவதற்கு ஆசிரியர்களும், பாடங்களைச் சொல்லித் தருவதற்கு விஞ்ஞானக் கருவிகளும் இல்லாமல் எத்தனையோ பாடசாலைகள் இருக்கின்றன என்பதை நாம் அறிவோம். அங்கெல்லாம் பள்ளிக்கூடங்களை ஏற்படுத்திவிட்டார்கள்,

[திரு. எஸ். ராமச்சந்திரன்] [1967 ஜூலை 1

எந்த காரணத்திலும், மாணவர்கள் தொடர்ந்து கல்வியை நல்ல முறையிலே பெறவேண்டும் என்று கருதி, அந்தப் பள்ளிக்கூடங்களுக்கு நல்ல ஆசிரியர்களை நியமிப்பதற்கும், நல்ல விஞ்ஞானக் கூடங்களையும் அமைத்து, இத்தகைய சீரான பணியை மேற்கொள்வதற்காக அதிகமான தொகையை ஒதுக்கியிருப்பது மிகவும் பாராட்டத்தக்கதாகும்.

கல்வித் துறையை எடுத்துக்கொண்டால் நம்முடைய மாநில வரவு செலவுத் திட்டத்தில் மிகப் பெரும்பாலான பங்கைக் கல்விக்காக நாம் செலவழிக்கிறோம் என்பது பெருமைக்குரியது. இந்தத் தொகையை இன்னும் ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்துக்கொண்டே போவதற்கு ஒரு நல்ல வருவாய் துறையைப் பற்றி நாம் கருதவேண்டியிருக்கிறது. நம் நாட்டினுடைய வரவுசெலவுத் திட்டத்தில் கிட்டத்தட்ட நான்கில் ஒரு பங்கைக் கல்விக்காகச் செலவழித்து வருகிறோம். இந்நிலைமை வளர்ந்தால் அபிவிருத்தித் திட்டங்களுக்கான முயற்சிகளில் ஈடுபடுவது வருங்காலத்தில் கஷ்டமாக இருக்கும்.

மேலும் நாம் மேற்கொள்ளும் அபிவிருத்தித் திட்டங்களால் நாளுக்கு நாள் வருமான வரி செலுத்துவோர் எண்ணிக்கை அதிகமாகிக்கொண்டே வருகிறது. இத்தகைய வசதி படைத்தோர்கள் செலுத்தும் வருமான வரியின் மீது குறிப்பிட்ட ஒரு செஸ் தொகையை கல்விக்காகச் சர்க்கார் வசூலிக்க முன்வரவேண்டும். இக் கல்வி செஸ் மூலம் வரும் வருவாயைக் கொண்டு, கல்வித்துறையில் நல்ல முன்னேற்றத்தை மேற்கொள்ளலாம். மேல்நாடுகளில்கூட பணக்காரர்களுக்கும் தொழிலதிபர்களுக்கும் இத்தகைய கல்வி செஸ் (Education cess) விதித்து, கல்வித்துறையை விரிவு படுத்துகிறார்கள். வருமான வரி செலுத்துபவர்கள் அதிகரிக்க அதிகரிக்க, அந்தத் தொகையும் அதிகரிக்க அதிகரிக்க, கல்வி வசதியை நாள் தோறும் பெருக்குகின்ற ஒரு நல்ல சீரான வளர்ச்சியையும் நாம் மேற்கொள்ளலாம். கல்விக்காக நாம் செலவழிக்கின்ற தொகையைக் கணக்கிடுகிறபொழுது, இனனும் மற்ற அபிவிருத்தி திட்டங்களுக்கும் நாம் செலவழிக்க வேண்டியதை உணர்கிறபொழுது இத்தகைய தாங்கக்கூடிய வர்கள் மீது கல்வி செஸ் என்ற ஒன்றை விதித்து, கல்வியை எல்லோருக்கும் இலவசமாக்குவது எந்த விதத்திலும் தவருகாது என்பதைக் கருத்தில் கொள்ளவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் தேர்வு முறையிலே மாணவர்களுடைய ஊக்கத்தையும், திறமையையும் உடன்கொண்டு ஆராய்ந்து, எந்தத் துறையில் அவர்களுக்கு ஊக்கம் இருக்கிறது, எந்தத் துறையில் அவர்களுடைய நாட்டம் செல்கின்றது, எந்தத் துறையில் அவர்களுடைய அறிவை வளர்க்க முடியும் என்பதையும் கருத்தில்கொண்டு, அவர்களைப் பயிற்றுவிக்கும் ஆசிரியர்கள் அவ்வப்போது வாரந்தோறும் அல்லது மாதந்தோறும் நடைபெறுகின்ற தேர்வுகளின் மூலம் அவர்களுடைய திறமையையும் நிர்ணயிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யவேண்டும். அந்த முறையில் நம்முடைய பரீட்சை முறையை மாற்றுவதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக்
பி.ப. கொள்ளவேண்டும் என்று நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சர்
4-00 அவர்கள் பல இடங்களில் தெரிவித்தது போற்றி வரவேற்கத்தக்க ஒன்றாகும். அதையும் மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணி அடிக்கப்பட்டது).

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** கனம் துணைச் சபாநாயகர் அவர்களே, சர்க்கார் கொண்டுவந்திருக்கும் இந்த மானியத்திலே போதிய அளவு சௌகரியங்கள் கொடுக்கப்படவில்லை என்று என் கட்சியைச் சேர்ந்த திரு. காசிராமன் கொடுத்திருக்கும் வெட்டுப் பிரேரணையை ஆதரிக்கும் [illegible], சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

"அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்,
ஆலயம் பதினாயிரம் நாட்டல்,
அன்னயாவினும் புண்ணியகோடி,
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறி வித்தல்"

[illegible] பாரதியார் பாடினர். ஆகையினால், எல்லாவற்றையும் [illegible] [illegible], மிக முக்கியமானது, மனித வர்க்கத்திற்கே சிறப்பானது



1967 ஜூலை 1] [திரு. பி. ஜி. கருத்திருமன்]

கல்வி என்பது யாரும் ஏற்றுக் கொள்ளவேண்டிய விஷயம். ஆனல், இந்தக் கல்வி விஷயத்திலே, இதுவரை எந்த மற்ற மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு, தமிழகம் முன்னேறியிருக்கிறது என்பது இந்தப் பாரத நாட்டில் மட்டுமல்ல, உலகத்திலேயே எல்லாப் பக்கத்திலும் ஏற்றுக் கொண்டிருக்கிற விஷயம். குறை சொல்வார்கள், அது பழக்கமாகிவிட்டது. காங்கிரஸ் சர்க்கார் கெடுத்துவிட்டது, காங்கிரஸ் சர்க்கார் கெடுத்துவிட்டது, கெடுத்து விட்டுப் போய்விட்டார்கள் என்று சொல்வது வழக்கமாகிவிட்டது என்றாலும், நிச்சயமாக, மனச்சாட்சியைத் தொட்டுப் பார்த்தால் தெரியும், எந்த அளவுக்குத் தமிழகம் முன்னேறியிருக்கிறது என்பது தெரியும். மின்சார வசதிகளைப் பெருக்குவதிலும், கல்வியைப் பரப்புவதிலும் நாம் வெகுவாக முன்னேறியிருக்கிறோம் என்பதைப் பெருமையுடன் சொல்ல முடியும். இன்றைக்குச் சுதந்தரா கட்சியைச் சார்ந்த திரு. ஹாண்டே அவர்கள் பேசும்போது, ஊழல், ஊழல் என்று சொல்லி, அவர் பேசியதைப் பார்த்தால், வெறும் ஊழல் நிறைந்த நிர்வாகம் தான் இருந்திருக்கிறது என்பதுபோலப் பேசினர்கள். ஆனல், அவர்கள் ஓட்டுப் போடும்போது, ஊழல் நிறைந்த சர்க்காருக்கு, ஊழல்களுக்கு, ஆதரித்து ஓட்டுப் போடப்போகிருர்கள். அவர்கள் ஊழலைப் போக்க எங்களுடைய வெட்டுப் பிரேரணையை ஆதரிக்கவேண்டும். இல்லையென்ருல், அந்த ஊழல்களை அவர் ஆதரிக்கிருர்கள் என்றுதான் பொருள், என்பது தான் என்னுடைய தாழ்மையான வேண்டுகோள்.

இந்தக் கல்வி மானியத்தில் பேசும்போது ஒன்றைக் கேட்கவிரும்புகிறேன். கடந்த பத்து வருஷத்தில் என்ன என்ன நடந்திருக்கிறது என்று நினைத்துப் பார்க்கவேண்டும். சர்க்கார் கொண்டுவருவதெல்லாம், தப்பு, தப்பு என்று சொல்லுவது அவ்வளவு முறையானது அல்ல. நல்லதைப் போற்ற வேண்டும் என்று முதல் அமைச்சர் சொன்னர்கள். போற்றுகிறோம். தவறு ஏற்படாதா? ஏதோ சில சந்தர்ப்பங்களிலே தவறுகள் ஏற்பட்டால், அதற்காகக் கல்வி அதிகாரிகள் எல்லோருமே மோசம் என்று சொல்வது சரியாகாது. அதிகாரிகளெல்லாம் ஊழல்கள் செய்துவிட்டார்கள் என்பதும் சரியாகாது. கல்வித் துறையில் அவர்களுக்குச் சிறப்பும், அந்தஸ்தும், பாதுகாப்பும் கொடுக்க வேண்டும். கௌரவம் கொடுக்க வேண்டும். அப்பொழுதுதான் அவர்கள் திறமையுடன் பணிபுரிய முடியும். மரியாதையுடன் நடத்தப்பட்டால்தான் அவர்களுக்கும் ஊக்கம் இருக்கும். அப்படி நாம் செய்தால்தான் நாட்டில் இருக்கும் அறியாமையைப் போக்க முடியும். என் கட்சியைப் பொறுத்தமட்டில், நாட்டிலிருந்து வறுமை ஒழியவேண்டும், அறியாமை ஒழிய வேண்டும் என்ற இரு தத்துவங்களைத்தான் கொள்கையாகக் கொண்டிருக்கிறோம். திராவிட முன்னேற்றக் கழகமும் அப்படித்தான் செயல்படுகிருர்கள். நாங்கள் சமதர்மம் என்று சொன்னல், அவர்கள் தீவிர சோஷலிசம் அமல் படுத்தப்படவேண்டும் என்று சொல்லுகிருர்கள். அந்த முறையில் கல்வி மிக மிக முக்கியமானது.

கல்வி எல்லோருக்கும் கொடுக்கப்படவேண்டும். எல்லா வசதிகளையும் கொடுக்க வேண்டும். அப்படிக் கொடுக்கும்போது, ரூ. 55 கோடி நம்முடைய மொத்த வருமானத்தில் கிட்டத்தட்ட 30, 35 சதவிகிதம் ஆக இருக்கிறது. கல்வியின் தரம் குறையாமல் பார்த்து கொள்ள வேண்டும். அதை நல்ல முறையில் செய்ய வேண்டும் என்ருல், சர்க்காரின் கொள்கை திட்டமானதாக இருக்கவேண்டும், உறுதியானதாக இருக்க வேண்டும், ஒரு நிலையான கொள்கையாக இருக்க வேண்டும். போன தடவை தேர்தலுக்கு முன்னல், எங்களுடைய அறிக்கையில் நாங்கள் பதவிக்கு வந்தால், கல்லூரிப் படிப்பை இலவசமாக்குவோம் என்றும், உடனடியாக பி. யு. சி.-க்குச் செய்கிறோம் என்றும் சொன்னோம். பதவிக்கு வந்தவுடனே, திராவிட முன்னேற்றக் கட்சி கல்லூரிப் படிப்பு இலவசமாக்கமுடியாது என்ருர்கள். அப்படி அறிவித்தார்கள். ஆனல், அதற்குப் பின்னல், நாங்கள் அதை எடுத்துச் சொன்னதும், மக்கள் அது பற்றிச் சொன்னவுடன், ரூ. 1,500 வருமானத்திற்குக் குறைவாக உள்ளவர்களுக்குப் புகுமுக வகுப்பில் இலவசமாக்குகிறோம், மற்றவர்கள்பற்றி பின்னல் யோசிக்கலாம் என்று சொல்லியிருக்கிருர்கள். முதல் அமைச்சர்

[திரு. பி. ஜி. கருத்திருமன்] [1967 ஜூலை 1

அவர்களை விளக்கட் கேட்டபோது, காங்கிரஸ் சர்க்காரும் படிப்படியாகத் தானே செய்தார்கள், முதலில் மூன்றாம் படிவம் வரையிலும், பிறகு, எஸ். எஸ். எல். சி. வரை என்றுதானே செய்தார்கள், அதே போல நாங்களும் படிப்படியாகச் செய்வோம் என்கிறார்கள். அது வாதத்திற்குப் பொருந்துமே தவிர, இன்றைக்கு 1,500 ரூபாய் வருமானம் உள்ளவர்கள் எவ்வளவு பேர் என்று பார்க்கவேண்டும். என்னுடைய கட்சியைச் சேர்ந்தவர்கள் சொன்னதுபோல, லோயர் டிவிஷன் குமாஸ்தாவுக்குக் கூட ரூ. 1,500-க்கு மேல் சம்பளம் வரும். மிக மிகக் கடை நிலையில் இருப்பவர்களுக்குத்தான் அந்த வசதி கிடைக்கும். பாக்கி யாருக்கும் நிச்சயமாக அந்த வசதி கிடைக்காது. ஆகவே 1,500 ரூபாய் வருமானம் என்கிற அடிப்படையில் செய்திருப்பதைப் பாராட்ட முடியவில்லை என்பதை வருத்தத்துடன் சொல்ல வேண்டியிருக்கிறது. ஜாதிபேதம் அற்று, எல்லாவற்றையும் மறந்து, எல்லோருக்கும் கல்வியளிக்க வேண்டும் என்ற உண்மையான கொள்கை அரசுக்கு இருந்தால் எல்லோருக்கும் இலவசக் கல்வி அளிக்க வேண்டும். ஏற்கனவேயே ஸ்காலர்ஷிப், மானியம் இவை கொடுப்பதால், புதுவிதமாகக் கொடுக்கிறோம் என்பது சாக்குக்காகச் சொல்லிக் கொள்ளலாம், நாங்கள் அக்கறை காட்டுகிறோம், சலுகைகள் கொடுக்கிறோம் என்று சொல்லிக்கொள்ளலாம், ஆனால் அதில் பெருமையில்லை.

அடுத்தபடியாக, கல்வியின் தரம் குறைந்துவிட்டது என்று சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. நாங்கள் படிக்கின்ற காலத்தில், 20 வருஷங்களுக்கு முன்னால், படிப்பு அதிகமாக இருந்தது உண்மைதான். நாங்கள் நான்கு ஷேக்ஸ்பியர், மூன்று ப்ரோஸ் என்று படித்தோம். ஆனால், இப்பொழுதும்கூட எனக்குத் தெரிந்திருக்கும் அளவுக்கும் மேலாக என்னுடைய கடைசிப் பிள்ளைக்குப் பொது அறிவு இருக்கிறது. அவ்வளவு தூரம் கல்வி உயர்ந்திருக்கிறது. என்னுடைய பையன் 14 வயது ஆனவன். அவனிடத்தில் இருக்கும் பொது அறிவு எனக்குக் கூட இன்றைக்கு இல்லை. அந்த அளவுக்கு வெளி அறிவு சிறப்பான சீரான முறையில் இப்பொழுது இருக்கிறது என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

இன்னொன்று. கல்வியில் ஒரு திடமான கொள்கை வேண்டும். ஆதாரக் கல்வியா அல்லது வேறு கல்வியா என்று திட்டமாக இருக்க வேண்டும். ஆதாரக் கல்வியின் அடிப்படைத் தத்துவத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும். அது மட்டமான கல்வி என்று தள்ளிவிடுவது சரியாகாது. வெளிநாடுகளுக்குப் போயிருந்தேன். அமெரிக்கா சென்று இருந்தேன். உலகத்தில் பல நாடுகளுக்கும் சென்றிருந்தேன். அங்கே உள்ள கல்வியின் நிலை என்னவென்றால், கல்லூரியில், உயர்நிலைப் பள்ளியில் படிக்கும்போதே, தொழிலையும் கற்கவைத்து, அவர்கள் படிக்க ஆகும் செலவை, தொழில் மூலம் அடையும் வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. அந்த நிலையில் கல்வி ஒரு பாட்டனக, பாரமாக இல்லாமல் இருக்கிறது. ஆகவே, ஆதாரக் கல்வியைச் சரியான முறையில் புரிந்து கொண்டு கையாண்டால், இப்பொழுது இருக்கும் சங்கடங்களில் பாதி சங்கடங்கள் குறைந்து போகும் என்ற திடமான நம்பிக்கை இருக்கிறது.

இன்னொன்று. கீழே இருக்கும் பள்ளிக்கூடப் படிப்பிற்கும், மேலே கல்லூரிப் படிப்பிற்கும் தொடர்பு இருப்பதாகத் தெரியவில்லை. கல்லூரிக்குப் போனவுடன் பெரிய ஏணியில் பத்துப்படி போனது போல இருக்கிறது. கல்லூரியில் ஆங்கிலத்தில் படிக்கிறார்கள். இப்பொழுதுதான் தமிழிலே என்று செய்துகொண்டு வருகிறோம். மாணவர்களிடம் ஆங்கிலத்தில் படித்தால்தான் சிறப்பாக இருக்கும் என்கிற பிரமை இருக்கிறது. இன்றைக்கு இருக்கும் நிலை என்னவென்றால், ஆங்கிலமும் இல்லாமல் தமிழும் இல்லாமல் திரிசங்கு சொர்க்கமாக இருக்கிறோம். சர்க்காருக்குத் திடமான கொள்கையிருக்கவேண்டும் என்பதைச் சொல்ல விரும்புகிறேன். இதுவரையில் இருந்த தமிழக சர்க்கார்—முன்னால் இருந்த சர்க்கார்—பெரியதொரு பணியைச் செய்திருக்கிறது என்று திட்டமாகச் சொல்ல முடியும். இல்லை என்று யாராவது சொன்னால், அல்லது யாராவது அதை மறுத்தால், அப்படிச் சொல்பவர்கள் பாவத்தைத் தேடிக்கொள்ளத்தான் சொல்லுகிறார்கள் என்று வருத்தத்தோடு சொல்லுவேன்.



1967 ஜூலை 1] [திரு. பி. ஜி. கருத்திருமன்]

இப்பொழுது இருக்கும் கல்வி நிலையை மாற்றியமைக்க வேண்டும். சர்வகலாசாலை என்பது ஒரு ஆடானமஸ் பாடி. அவர்களும் நம் முயற்சிகளில் ஒத்துழைக்க வேண்டும். பள்ளிக்கூடங்கள் பொறுத்தவரையில், என்னுடைய ஆலோசனை ஒன்றைக் கூற விரும்புகிறேன். சர்க்காரே எல்லாப் பள்ளிக்கூடங்களையும் எடுத்து நடத்தவேண்டும். அப்படிப்பட்ட நிலை உருவாகவேண்டும். இன்றைக்குத் தனியார் பள்ளிகளில் நல்ல தேர்வு முடிவுகள் வந்தாலும், முனிசிபல் பள்ளிகளில் 2 சதவிகிதம் தேர்வு முடிவுகள்கூட வருவதில்லை.

ஆகவே, இதை ஒரே சீரமைப்பாக, ஒரு இலாக்காவிலேயே நிர்வகிக்க வேண்டிய பொறுப்பு வரும். என்னைக் கேட்டால் ஒரு கார்ப்பொரேஷன், மெட்ராஸ் எலெக்ட்ரிஸிட்டி போர்டு இருப்பதுபோல், தனியாக, அரசியல் வாதிகள் இல்லாத ஒரு கார்ப்பொரேஷனாக அமைத்து, அவர்களாகவே தனித்தியங்கக்கூடிய ஒரு நிலையைச் செய்வது அவசியம். கல்லூரிகளிலே, பள்ளிக்கூடங்களிலே சிக்கல்கள், ஊழல்கள்பற்றி டாக்டர் ஹாண்டே அவர்களும் சொல்லிவிட்டார்கள். அந்த ஊழல்களையும் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். பள்ளிகளிலே அதிகமான வசதியைச் செய்துதர வேண்டும். முதலிலே ஆரம்பப் பள்ளிகளை மாத்திரம் எடுத்துகொள்வதாகச் சொல்லி, அப்புறம் 5, 10, 70, 75 உயர்நிலைப் பள்ளிகளாகத் திறக்க வேண்டுமென்று சொன்னார்கள். அதிலும் டெக்னிக்கல் எஜுகேஷனுக்கு அதிக வசதி செய்து தரப்பட வேண்டும். கைத்தறி மிக அவசியம். அதைப்போல பாலிடெக்னிக்குகள் இன்னும் விரிவாக 10, 15 பாலிடெக்னிக்குகள் ஆரம்பித்து, படித்து வந்த மாணவர்களுக்கு, சர்க்கார் உத்தியோகம் என்று இல்லாமல் இருந்தாலும், தனிப்பட்ட தொழில் ஆரம்பிக்க, தொழில் செய்ய வசதி செய்துதர வேண்டும். இதில் தொழில் கல்விக்கு ஆக்கமும், ஊக்கமும் தரப்படவில்லை. பின்னால் எதிர்காலத்திலே நமது சந்ததியினர் நாம் துள்ளித்திரிகின்ற காலத்திலே இதுமாதிரி நமக்குத் தொழில் கல்வி கொடுப்படவில்லையே, என்னும்படியான நிலை ஏற்படாத வகையிலே, மேற்கொண்டு முன்னால் செய்த திட்டங்களை முன்னோடியாக வைத்து நல்லமுறையில் செய்யவேண்டும் என்று கேட்டு, கல்வி மான்ய வசதிகள் போதவில்லை என்று திரு. காசிராமன் கொண்டுவந்த வெட்டுப் பிரேரணையை நான் ஆதரிக்கிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** மதிப்பிற்குரிய துணைத் தலைவரவர்களே, நான் கொண்டுவந்துள்ள கல்வி மானியக் கோரிக்கையின் மீது 28 உறுப்பினர்கள் கலந்துகொண்டு தங்களுடைய கருத்துக்களை வழங்கியிருப்பது மிக்க மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும். இன்றையதினம் நாம் விவாதித்துக் கொண்டிருப்பது கல்வி மானியம் என்ற காரணத்தினாலேயே இந்த விவாதம் காலையிலும் மாலையிலும் நடைபெறுகிறது. பள்ளிக்கூடங்கள் காலை வேளையிலும், மாலை வேளையிலும் நடக்கும். அதைப் போல விவாதமும் காலை வேளையும், மாலை வேளையும் நடைபெறுவது மகிழ்ச்சிக்குரியது.

இந்த மானியக் கோரிக்கை, இந்த மன்றத்திலே கோரப்படுகின்ற கோரிக்கைகளிலெல்லாம் மிகப்பெரிய கோரிக்கையாகவும், நிதி மிகுந்த கோரிக்கையாகவும், மிக முக்கியமான கோரிக்கையாகவும் உள்ள தன்மையை நாம் அறிகிறோம். கல்வியைப் பொறுத்தவரையில் அத்தனை பேரும் ஆர்வத்தோடும், அக்கறையோடும் அதை மேலும் மேலும் வளர்க்கின்ற முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறோம் என்பதிலே ஐயப்பாடு இல்லை. உறுப்பினர்கள் பலர் கூறிய கருத்துக்களிலிருந்து கல்வித்துறையில் எப்படிப்பட்ட நிலையிலிருந்து எப்படிப்பட்ட நிலைமைக்கு வந்திருக்கிறோம் என்பதையும், கல்வித் துறை எப்படி இருக்கவேண்டும் என்பதையும், அதைப் பொறுத்து நாம் எடுத்துக்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் எப்படி இருக்க வேண்டுமென்பதையும் தெளிவாக அறிகிறோம். அத்தனை பேர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இந்தத் துறையினுடைய இன்றியமையாத தன்மையை இந்த அரசு உணர்ந்து வருகிறது. இதற்கு முன்னால் இருந்த அரசும் உணர்ந்திருந்தது. அதை மறுக்கவில்லை. நாங்கள் எதிர்க்கட்சி வரிசையி

விருந்தபொழுதும், கல்வித்துறை மானியக் கோரிக்கை வந்தபொழுது பாராட்டப்பட வேண்டியவற்றைப் பாராட்டினோம்; சுட்டிக்காட்டப்படவேண்டிய குறைகளைச் சுட்டிக் காட்டினோம்; களையப்பட வேண்டியவற்றைக் களையச் சொன்னோம். நிறைகுறைகளை உணர்ந்து எடுத்துச் சொல்லி வந்திருக்கிறோம். அந்த முறையிலே செலவழிக்க வேண்டிய இன்றியமையாத கட்டம் இருக்கிறது. 54 கோடி ரூபாய் செலவழிக்க முடிவுக்கு வந்தபோதிலும் இது போதுமா என்று கேட்டால், போதாதுதான். வயிற்றுப் பசியைப் போக்கவேண்டியது எவ்வளவு இன்றியமையாததோ அவ்வளவு இன்றியமையாதது இன்று அறிவுப்பசியைப் போக்க வேண்டுமென்பதை நாடு நல்ல முறையில் உணர்ந்திருக்கிறது. இன்றியமையாத தன்மையைக் கருதித்தான் 54 கோடி ரூபாய், மொத்தத்தில் 25 சதவிகிதம் இதற்காகச் செலவழிக்க வேண்டிய கட்டத்தில் இருக்கிறோம்.

ஆகவே, இந்த ஆண்டில் எதுவும் செய்யப்படவில்லை என்று சில உறுப்பினர்கள், எல்லோரும் அல்ல, சிலர் எதுவும் செய்யப்படவில்லை என்ற வகையிலே எடுத்துத் தெரிவித்திருக்கின்றார்கள். இந்தப் புதிய அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்று ஒரு மாதத்திற்குள்ளாக, இந்தப் பணிகளை ஏற்றுச் செய்கின்ற வகைகளிலே, எந்த அளவுக்குச் செய்ய முடியுமோ அந்த அளவுக்குச் செய்யப்பட்டு வருகிறது. 1966-67-ல் கல்விக்காக 44 கோடியே சொச்சம் ரூபாய் என்று போட்டு, 1967–68 ஆண்டுக்கு 54 கோடி ரூபாய் என்று திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது என்றால் இந்த ஆண்டிலே 10 கோடி ரூபாய்க்கு அதிகமான பல பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்தப் புள்ளி விவரங்களைத் தொகுத்துப் பார்த்தாலே தெளிவாகத் தெரியும். 44 கோடி ரூபாயாக இருந்தது இந்த ஆண்டு 10 கோடி ரூபாய் அதிகமாக விரிவுபடுத்தப்படுகிறது. ஆக, 54 கோடியே சொச்ச ரூபாய் அளவிற்கு விரைவில் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஆகவே, 25 சதவிகிதத்துக்கு மேற்பட்ட அளவில், இந்தப் பணிகளைச் செய்ய இந்த அரசு முன்வந்திருக்கிறது என்பதை அந்தப் புள்ளி விவரம் காட்டும்.

உறுப்பினர்கள் கருத்துத் தெரிவிக்கும்பொழுது புதிதாக எதுவும் ஏற்றம் காணப்படவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். பத்துக் கோடி ரூபாய்க்கு ஏற்றம் தருகிற முறையிலே இந்த மானியக் கோரிக்கை இந்த மன்றத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. கல்வித் துறைக்காகப் பல சலுகைகள் தரப்படவில்லை என்று சொல்கிறார்கள். தரப்பட வேண்டிய அளவுக்குத் தரப்பட்டிருக்கிறது. கல்வித் துறையைப் பொறுத்தமட்டில் நூற்றாண்டுக் காலத்திற்கு முன்பிருந்த முறையை, அது அறுந்து படாமல், தொடர்பு அற்றுப்போகாத வகையில், உடைவும் ஏற்படாத அளவுக்கு சிறுகச்சிறுக முன்னேற்றம் கண்டு வருகிறதே தவிர, வேறு பல துறைகளிலே காணப்படும் முன்னேற்றங்களைப்போல் கல்வித்துறை முன்னேற்றம் காணமுடியாது. வேறு பல துறைகளில், மின்சாரத் துறையில், வேளாண்மைத் துறையில், தொழில் துறையில் வேறுபல துறைகளில் மிக்க விரைவான மிகப் பெருத்த அளவுக்கு மாற்றங்களைக் காண முடியும். ஆனால் 100 ஆண்டுகளுக்கு முன்பிருந்த கல்வி வரலாற்றை எடுத்து வைத்துக்கொண்டு பார்த்தோமேயானால், பிரிட்டிஷார் நாட்டை ஆண்ட காலத்தின் கல்வி வரலாற்றை வைத்துக்கொண்டு பார்த்தோமேயானால், 20 ஆண்டுக் காலமாக காங்கிரஸ் அரசாட்சியிலிருந்த வரையில் கல்வியின் தொடர்பு அறுந்து படாமல் சில பல மாற்றங்களைச் செம்மைப்படுத்தி இருக்கின்றார்களே தவிர, புதிய, புரட்சிகரமான அதிக அளவுக்கு காணப்படுகின்ற முறையிலே அந்தத் துறை அமைந்திருக்கிறதா? எனவே இதிலே யாருக்கும் ஆர்வம் இல்லையென்றோ அக்கறையில்லை என்றோ சொல்ல முடியாது. அந்த அளவுக்குத் தான் இந்தத் துறையில் இடம் தரமுடியும். இதில் காலதாமதம் ஏற்படலாம்—செய்யவேண்டிய ஒன்றைக் காலந்தாழ்த்திச் செய்தாலும்கூட பரவாயில்லை, செய்யக்கூடாத ஒன்றை அவசரப்பட்டுச் செய்யக்கூடாதென்ற தன்மையிலேதான் நான் இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறேன். அதைப்பற்றிய பிரச்சினைகளை ஆராய்ந்து, எதையெதைச் செய்ய முடியுமென்று யோசித்து, அவற்றைச் செய்ய நான் முயற்சித்து வருகின்றேன்.





இந்தக் கல்வித் துறையைப் பொறுத்தவரையிலும், பல்வேறு கருத்துக்கள் எடுத்துச் சொல்லப்பட்டன. இதிலே அதிக சலுகைகள் தரப்படவில்லை என்று சொன்னார்கள். 1,500 ரூபாய் வருமானம் உடையவர்களுடைய பிள்ளைகளுக்குச் சம்பளமே இல்லை என்ற சலுகை இருந்தது. ஏற்கெனவே 1,500 ரூபாய்வரை சம்பளம் பெற்றவர்களுக்கு இருந்த சலுகையை, இரண்டாயிரம் ரூபாய் வரையில் வருமானம் உடையவர்களுக்கு என்று இந்த அரசு உயர்த்தித் தந்திருக்கிறது. இதற்கு முன்பு தாழ்த்தப்பட்டவர்களோ, பழங்குடி மக்களோ 1,500 ரூபாய் வருமானம் உடையவர்களாக இருப்பார்களானால், அவர்கள் முழுச் சலுகை பெற்று வந்த நிலை இருந்து வந்தது. 1,500 ரூபாய் அளவிற்கு வருமானம் உடைய பிற்பட்ட வகுப்புக் குடும்பங்களுக்கு அரைச் சம்பளச் சலுகை மட்டுமே இதற்கு முன்னால் தரப்பட்டு வந்தது. இப்பொழுது இந்த அரசு, மேற்கொண்டு புதிய சலுகை அளிக்கும் வகையில், 1,500 ரூபாயாக இருந்த வரம்பினை இரண்டாயிரம் ரூபாயாக ஆக்கி, தாழ்த்தப்பட்டவர்களுக்கும் பழங்குடி மக்களுக்கும் முழுச் சம்பளச் சலுகை தருவதோடு மட்டுமில்லாமல், அரைச் சம்பளச் சலுகை மட்டுமே பெற்றுக்கொண்டிருந்த பிற்பட்ட மக்கள் இரண்டாயிரம் ரூபாய் வருமான வரம்பு உள்ளவர்கள் முழுச் சலுகை பெறக்கூடிய வசதியை இப்பொழுது செய்து தந்திருக்கிறது.

ஆயிரத்து ஐநூறு ரூபாய் என்பது சம்பளத்தின் அடிப்படையில் கணக்கிடப்படுகிறது. அது போதவில்லை என்று கனம் எதிர்க்கட்சித் தலைவர்கள்கூடக் குறைப்பட்டுக் கொண்டார்கள். நேற்று வரையில் அதே முறையைத்தான் நீங்கள்—காங்கிரஸ் சர்க்கார்—கடைப்பிடித்து வந்தீர்கள். அப்பொழுதும் அதே கணக்குத்தான். இப்பொழுதும் அதே கணக்குத்தான். நேற்று வரையிலும் எந்த நிலை இருந்து வந்ததோ, அதே நிலையைத்தான் இப்பொழுதும் இந்த அரசு கடைப்பிடித்து வருகிறது. குறைந்த நிலையாக இருந்த அளவில், 1,500 ரூபாய் வருமானம் என்று இருந்ததை இரண்டாயிரம் ரூபாய் என்ற அளவிற்குத் தூக்கியதன் காரணமாக, வேறு சில குடும்பங்களும் பயன்பெறும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அரைச் சம்பளம் பெற்ற பிற்பட்ட வகுப்பினர் முழுச் சம்பளச் சலுகை பெறும் வசதி பெறுகிறார்கள். 1,500 ரூபாய் வரையிலும் வருமானம் உள்ள ஏழைகள்—ஆனால் முற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்ற காரணத்தால்—சலுகை பெறாமல் இருந்தார்கள். இப்பொழுது அத்தகைய ஏழைக் குடும்பங்களும் இந்தச் சலுகையைப் பெறுவார்கள்.

எல்லோருக்குமே இலவசக் கல்வி சலுகை தரவேண்டும் என்றார்கள். அது நோக்கமாக இருக்கலாம். என்றேனும் ஒரு நாளைக்கு, கல்லூரி, பல்கலைக் கழக இறுதிப் படிப்பு வரையிலும் இந்த நாட்டு மக்களுக்கு இலவசக் கல்வி கிடைக்கும் காலம் வந்தே தீரவேண்டும். அது நம் ஆசையும் நோக்கமும் ஆக இருக்கலாம். இருக்கவேண்டும். அந்த இடம் நோக்கித்தான் நகர்ந்து கொண்டிருக்கிறோம். அந்த இடம் நோக்கித்தான் மெல்ல மெல்ல நகர்ந்துகொண்டு வருகிறோம். அந்த நிலைமையில், இப்பொழுதிருக்கும் நிதி வசதிகளுக்கு ஏற்ப, நமது அரசாங்கத்திற்கு இருக்கும் நிதி வசதிகளுக்கேற்ப, மக்களுக்கு இருக்கும் வசதிகள் வாய்ப்புகளுக்கேற்ப, யார் யாருக்குச் சலுகை அளிக்கப்படவேண்டுமோ அவர்களுக்குச் சலுகை அளிக்கப்படவேண்டும் என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டு இருக்கிறோம். எல்லோருக்குமே கல்விச் சலுகை என்ற நிலைமை இல்லாமல், யார் தாங்க முடியாதவர்களாக இருக்கிறார்களோ, யார் கல்லூரி வரையில் தங்களுடைய பிள்ளைகளைப் படிக்க வைக்க வாய்ப்பு வசதி அற்றிருக்கிறார்களோ அவர்களுக்குச் சலுகை தருவதுதான் எனக்குத் தெரிந்த வரையில் சிறந்த சமதர்மத்திற்கு எடுத்துக்காட்டாகும். சமதர்மம் என்றால், எல்லாத் தரப்பினருக்கும் ஒரே படியாக, ஏழை—பணக்காரர், முதலாளி—தொழிலாளி, பரதை—பஞ்சை, ஆண்டான்—அடிமை, ஆக அப்படி அப்படியே வைத்துக்கொண்டு, கொடுக்கின்ற உரிமைகள், சலுகைகள் ஆகிய அத்தனையும் எல்லோருக்கும் சமமாகவே தரவேண்டும் என்பது உண்மையிலேயே சமதர்மம் ஆகாது. எல்லோரையும் ஒன்றாக ஆக்கிவிட்டு, வேண்டுமென்றால், உரிமை; சலுகை எல்லாவற்றையும் எல்லோருக்கும் சமமாக ஆக்கலாமே தவிர, பணக்காரன்—

ஏழை, முதலாளி—தொழிலாளி, பரதை—பஞ்சை, என்று வேறுபாடுகளை வைத்துக்கொண்டு, தரப்படுகிற உரிமைகள், சலுகைகள் ஆகியவற்றை அத்தனை பேருக்கும் சமமாகத் தரவேண்டுமென்றால், எதிர்பார்க்கப்படுகிற சமதர்மம் அங்கே ஏற்பட வழியில்லை. எதிர்பார்க்கப்படுகிற சமதர்மம் ஏற்பட வேண்டும் என்றால், ஏழை எளியவர்களுக்கு மட்டுமே அந்தச் சலுகை அளிக்கப்படவேண்டும்.

கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்கூட, பாரதியார் பாட்டை எடுத்துச்சொல்லுகிற சமயத்தில் அதை ஒப்புக்கொண்டார். ஆனால், அவர்கள் விளக்கம் தருவதன் மூலமாக அதை ஒப்புக்கொள்ளவில்லை. பாடல் மூலமாக ஏற்றுக்கொண்டார்.

"அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்,
ஆலயம் பதி னாயிரம் நாட்டல்;
அன்ன யாவினும் புண்ணியம் கோடி,
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறி வித்தல்"

"ஏழைக்கு" என்று சொல்லியிருக்கிறாரே தவிர, "பணக்காரருக்கு" என்று சொல்லவில்லை. அன்னசத்திரம் ஆயிரம்+ஆலயம் பதினாயிரம்=ஏழைக்கு எழுத்தறிவித்தல். இப்படித்தான் பாரதியார் கூறினார். இப்படிப் பார்க்கும்போது, ஆயிரம் அன்ன சத்திரங்களும், பத்தாயிரம் ஆலயங்களும் கட்டுவதற்கு என்ன விலை மதிப்பு ஆகிறதோ, அந்த மதிப்பு ஒரு ஏழைக்கு எழுத்து அறிவிக்கும்போது வந்து விடுகிறது. வருமான வரம்பை இந்த அரசு உயர்த்தியிருப்பதன் மூலமாக எத்தனையோ ஏழைகள் அறிவு பெற இருக்கிறார்கள். அந்தக் கணக்கைப் பார்த்தால், பல கோடிக்கணக்கான கோயில்களும், அன்ன சத்திரங்களும் கட்டுவதற்குரிய விலை மதிப்பிற்குச் சமானம் என்ற நிலை ஏற்பட்டுவிடுகிறது என்ற நிலைமைகள் தான் ஏற்பட முடியும். அந்த வகையிலே சலுகைகளை அளிக்க, இருக்கும் நிலைமையை உத்தேசித்து, இந்த அரசு மேற்கொண்டு, அதை நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கான முயற்சியில் ஈடுபட்டிருக்கிறது.

இந்த ஆண்டுகூட, கல்வியைப் பொறுத்தவரையில், இடங்கள் ஏற்படுத்தவில்லை என்று கூட கருத்துக்கள் எடுத்துச் சொன்னார்கள். சென்ற ஆண்டு வரையிலும் இருந்த கல்லூரிகளில்—சென்னைப் பல்கலைக் கழகம், மதுரைப் பல்கலைக் கழகம் இவற்றின் கீழ் உள்ள கல்லூரிகளில்—கிட்டத்தட்ட ஐம்பதாயிரம் இடங்கள் இருந்தன. ஆனால், 47 ஆயிரம் இடங்கள் நிறைவு செய்யப்பட்டு 3,000 இடங்கள் நிறைவு செய்யப்படாமல் இருந்தன. இந்த ஆண்டு பள்ளி இறுதி வகுப்பில் வெற்றி பெற்று வருகிற மாணவர்களில், பல்வேறு துறைகளுக்குச் சென்று கல்லூரிப் படிப்புப் பெறத் தகுதியுள்ளவர்கள், எத்தனை பேர்கள் இருப்பார்கள் என்று கல்வித் துறையினர் புள்ளிவிவரம் கணக்கிட்ட அளவிற்கு, கிட்டத்தட்ட 57,000-இலிருந்து 60,000 பேர்கள் இந்த ஆண்டு புகு முக வகுப்பிற்கு வருவதற்கு ஆவலுடையவர்களாக இருக்கக்கூடும் என்று கணக்கெடுத்திருக்கிறார்கள். ஐம்பதாயிரம் இடங்கள் மட்டுமே சென்ற ஆண்டு இருந்தன. இந்த ஆண்டில் புதிய கல்லூரிகள் எட்டு திறப்பதன் மூலமாக—தனியார்க் கல்லூரிகள் ஆறு, அரசாங்கக் கல்லூரிகள் இரண்டு—வாய்ப்பை ஏற்படுத்துவதன் மூலமாகவும், சில பல கல்லூரிகளில் சில பல இடங்களைக் கொஞ்சம் அதிகப்படுத்துவதன் மூலமாகவும், ஐம்பத்தாறாயிரம் மாணவர்களுக்குப் புகு முக வகுப்புகளில் இட வசதி செய்து தரப்பட்டிருக்கிறது. ஆகவே, இதன் மூலம் சென்ற ஆண்டைவிட ஒன்பதாயிரம் மாணவர்கள் கூடச் சேர்வதற்கான வாய்ப்புகள் இந்த ஆண்டுத் துவக்கத்தில் ஏற்படுத்தித்தரப்பட்டிருக்கின்றன. ஏற்கெனவே ஐம்பதாயிரம் இடங்கள் இருந்தன. அவற்றிலே நிறைவு செய்யப்படாமல் மூவாயிரம் இடங்கள் இருந்தன. இப்பொழுது ஆறாயிரம் இடங்கள் புதிதாக ஏற்படுத்தித் தந்திருக்கிறோம். ஆக, ஒன்பதாயிரம் இடங்களுக்கு வசதி செய்யப்பட்டிருக்கிறது. இந்த நிலையிலே மேலும் வசதி செய்யவேண்டும். மேலும் நெருக்கடி இருக்கும் என்பதையும் அரசாங்கம் உணர்ந்து இருக்கிறது. ஆனால், இதில் அரசாங்கமே அந்த இடங்களைப் அதிகப்படுத்துவதற்கான அதிகாரம்





படைத்ததல்ல. இதைப் பல்கலைக் கழகம் செய்யவேண்டும். துணைவேந்தருடைய அனுமதி பெற்று புதிய வகுப்புகள் தொடங்குவதற்கும், மேற்கொண்டு இடங்களை உருவாக்குவதற்கும் முடியும். அதற்கேற்ற இட வசதி, ஆசிரியர் வசதி இருந்தால்தான் அந்த அனுமதியைப் பல்கலைக் கழகமும் துணைவேந்தரும் அளிப்பார்கள். ஆனால், இப்பொழுது இருக்கும் நெருக்கடி நிலையில், கல்லூரிகளில் மேலும் சில பல இடங்களை ஏற்படுத்த வேண்டும். குறிப்பாக, சென்னையில் இருக்கிற அரசினர் கலைக் கல்லூரியில் இடம் ஏற்படுத்த வேண்டும் என்று எண்ணி, இரண்டு வகுப்புகளைத் துவங்க இட வசதி இருக்குமானால், அனுமதி தரலாம் என்று பல்கலைக் கழகத் துணை வேந்தர் கூறியிருக்கிறார். அதைப்போன்று வேறு பல கல்லூரிகளும் கேட்டிருக்கின்றன. சேலம் கல்லூரி, புதுக்கோட்டை கல்லூரி, கும்பகோணம் கல்லூரி, இராணி மேரி கல்லூரி ஆகிய கல்லூரிகள் கேட்டிருக்கின்றன. அந்த விண்ணப்பங்களைப் பல்கலைக் கழகத்திற்கு அனுப்பி, அதற்கான வசதியை ஏற்படுத்தக்கூடிய முயற்சிகளைச் செய்யவேண்டும் என்று துணைவேந்தரை இந்த அரசு கேட்டிருக்கிறது.

ஷிப்ட் ஸிஸ்டம் ஏற்படுத்தலாம் என்பதையும் பல்கலைக் கழகத் துணைவேந்தர் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது இருக்கிற நிதி வசதிகள், வேறு பல நிலைகள் இவற்றைப் பார்க்கின்றபோது, ஷிப்ட் ஸிஸ்டம் மூலமாக எதிர்காலத்தில் வரும் அதிகமான எண்ணிக்கையுள்ள மாணவர்களைக் கல்லூரிகளில் சேர்க்கத்தக்க அளவு நிலைமைகள் செய்ய முடியும் என்றும் பல்கலைக் கழகத் துணைவேந்தர் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். பல கல்லூரி முதல்வர்கள், கல்லூரி முதல்வர்கள் மாநாட்டிலும் இத்தகைய கருத்தைத் தெரிவித்தார்கள். அவர்கள் தெரிவித்ததெல்லாம் உடனடியாக இட வசதி தேவைப்படும். ஆய்வுக் கூடங்கள் ஏற்படுத்துவதற்கு வசதிகள் செய்யவேண்டும். அதைத் தவிர, பல்கலைக் கழகத் துணைவேந்தர் தெரிவித்த கவலையெல்லாம், போதுமான அளவு ஆசிரியர்கள் தேவைப்படுகிறார்கள் என்பது தான். தகுதி மிக்க, தரம் மிக்க, திறமை மிக்க ஆசிரியர்கள் இருப்பார்களானால், உடனடியாகக் கூடச் சில பல செக்ஷன்களைத் துவங்க முடியும். இப்பொழுதிருக்கும் கவலையெல்லாம் அதைப் பொறுத்திருக்கிறது என்று கூறினார்கள். என்றாலும்கூட, அடுத்த ஆண்டு முன்கூட்டியே திட்டமிட்டு, சில பல கல்லூரிகளைத் திறப்பதற்கு, சில பல கல்லூரிகளில் போதுமான இடங்கள் ஏற்படுத்தி, போதுமான வசதிகள் ஏற்படுத்தி, பேராசிரியர்கள் வசதி, மற்ற வசதி இவற்றைச் செய்தால், அடுத்த ஆண்டு வருகின்ற கஷ்டங்களை ஓரளவிற்குத் தவிர்க்க முடியும். இந்த ஆண்டு எப்படியும் சமாளித்து விடலாம் என்ற நம்பிக்கையைத்தான் பல்கலைக் கழகத் துணைவேந்தர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அப்படி எதிர்பாராத நெருக்கடி ஏற்பட்டால், உடனடியாக இடங்களை விரிவுபடுத்தும் முயற்சியிலேதான் கவனம் செலுத்தவேண்டும் என்று துணைவேந்தர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அதையும் நான் இங்கே குறிப்பிட ஆசைப்படுகிறேன்.

பள்ளிகளைப் பொறுத்தவரையில், அவற்றை விரிவுபடுத்தவில்லை என்ற நிலைமை இல்லை. இந்த ஆண்டு அறுபது, எழுபதுக்கு மேல்பட்ட உயர் நிலைப் பள்ளிகளைத் துவக்குவதற்கான அனுமதியை இந்த அரசு தர முன் வந்திருக்கிறது. புதிய பள்ளிகளைத் திறக்கமாட்டோம் என்பதல்ல. எங்கெங்கு தேவையோ, அத்தகைய இன்றியமையாத இடங்களில், அவசியப்படுகிற இடங்களில், அவசியத்தை ஒட்டியே பள்ளிகள் துவக்கப்படும் என்றுதான் குறிப்பிட்டேனே தவிர, புதிய பள்ளிகள் எதுவுமே திறக்கப்படமாட்டாது என்ற அடிப்படையில் கூறவில்லை. ஏனென்றால், ஏற்கெனவே துவக்கப்பட்ட பள்ளிகளில் உள்ள நிலைமைகளைத் கணக்கெடுத்துப் பார்த்தால், 9-வது, 10-வது, 11-வது ஆகிய மூன்று வகுப்புகளில் எண்ணிக்கை 60 மாணவர்களுக்கும் குறைந்துவிட்டது. குறைந்த பட்சம் 60-லிருந்து 75 மாணவர்கள் இருக்கவேண்டும் என்ற நியதி இருக்கிறது. 60-க்குக் குறைந்து 31 மாணவர்கள், 37 மாணவர்கள், 42 மாணவர்கள், 45 மாணவர்கள் என்ற அளவிற்குச் சில வகுப்புகளில் இருக்கும் பள்ளிகள் கிட்டத்தட்ட 41 உயர்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. ஆகவே, 9-வது வகுப்பிலே எட்டு மாணவர்கள் இருக்கிறார்கள். பத்தாவது வகுப்பிலே

பத்து மாணவர்கள் இருக்கிறார்கள். சில பல வகுப்புகளில் 15 மாணவர்கள் மட்டுமே இருக்கிறார்கள். பக்கத்து ஊரில் பள்ளி இருந்தாலுங் கூட எங்கள் ஊருக்கும் உயர்நிலைப் பள்ளி வந்துவிடவேண்டுமா என்ற ஆர்வத்தின் அடிப்படையில், சிலபல பள்ளிகளைத் துவக்கியிருப்பதன் காரணமாக அத்தகைய நிலைமைகள் ஏற்படுகின்றன. அத்தகைய பள்ளிகளை நிறுத்துவதாக இல்லை. தொடர்ந்து நடைபெறும் அளவுக்குத் தான் ஆக்கப் பூர்வப்படுமே தவிர, மூடும் நிலை இல்லை. என்றாலும், இருக்கும் நிலைமையைச் சுட்டிக்காட்டினேன். 41 பள்ளிகள் அறுபதுக்கும் குறைவாகவே மாணவர்களின் எண்ணிக்கையைச் சில வகுப்புகளில் வைத்துக்கொண்டிருக்கும் நிலைமைகள் இருக்கின்றன. 24, 25 இப்படிப்பட்ட எண்ணிக்கையில் மாணவர்களைக் கொண்ட வகுப்புகள் கூட சில பள்ளிகளில் இருக்கின்றன. அவற்றைக்கூட மேலும் ஊக்குவிக்கவேண்டும் என்று எடுத்துச்சொல்லப்பட்டிருக்கிறது. புதிதாக அறுபது உயர்நிலைப் பள்ளிகளுக்குத் தேவைப்படுகிற, இன்றியமையாத இடங்கள் என்று கருதப்படுகிற நிலைமைகளை ஒட்டி அனுமதி தரப்பட்டிருக்கிறது. ஐந்து மைலுக்கிடையில் வேறு உயர்நிலைப்பள்ளி இருந்தால், அதைப் பாதிக்கும் அளவிற்கு புதிய உயர்நிலைப் பள்ளிக்கு அனுமதி தரக்கூடாது என்று

பி.ப. 4-30

ஏற்கனவே விதிமுறை இருந்து வருகிறது. ஒரு மைலுக்குள்ளே ஆரம்பப் பள்ளி இருக்குமானால் அதற்கிடையில் வேறொரு ஆரம்பப் பள்ளிக்கு இடம் தரக்கூடாது என்றும் விதிமுறை இருக்கிறது. இரண்டு, மூன்று மைல்களுக்குள்ளாக உயர் துவக்கப்பள்ளி இருக்குமானால் அங்கே உயர் துவக்கப்பள்ளிக்கு இடமளிக்கக்கூடாது என்றும் விதிமுறை இருக்கிறது. என்றாலுங்கூட, நிலைமையை உத்தேசித்து, அதிகமான மக்கள் எண்ணிக்கை உடையதாக இருக்குமானால், எட்டாவது வகுப்புக் கணக்கைப் பார்த்து, மாணவர்கள் அத்தனைபேரும் ஒன்பதாவது வகுப்பிற்குச் செல்லக்கூடும் என்ற வகை இருந்தால், மைல் கணக்கைக் கூடக் கணக்கிடவேண்டாம், 45, 60 மாணவர்கள் எட்டாவது வகுப்பில் இருந்து, 40 பேர்களாவது ஒன்பதாவது வகுப்பிற்கு வருவார்கள் என்ற நிலை இருக்குமானால், மைல் கணக்கைக்கூடப் பார்க்காமல், ஒரு மைல், அரை மைலுக்குள் இருந்தாலும், அனுமதி வழங்கும் முறையை ஏற்றுக்கொண்டு, அறுபது பள்ளிகளுக்கான அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. அந்த வகையிலே தான் நிலைமை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

சென்ற ஆண்டு 10, 11-ம் வகுப்புகளிலே இடங்கள் துவக்கப்பட்டு, 291 புதிய வகுப்புகளைத் துவக்கவேண்டிய கட்டம் அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருக்கிறது. 60 பள்ளிகளில் 9-வது வகுப்பையும், 130 அல்லது 140 பள்ளிகளில் 10-வது வகுப்பையும் 180 பள்ளிகளில் 11-வது வகுப்பையும் துவக்கவேண்டிய பொறுப்பாக இருக்கிறது. துவக்கப்படுகிற இடத்திற்கு நிலைமையை யொட்டி, தேவைப்படுகிற வசதிகளைச் செய்து தரும் நிலையிலே இந்த அரசு இருந்து வருகிறது. என்ஜினியரிங் கல்லூரியைப் பொறுத்த வரையில், நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே ஓரிரு கல்லூரியைத் துவக்கலாம் என்று அரசு இருந்து வருகிறது. தனியார் துறையில் கூட இரண்டு கல்லூரிகளைத் துவக்கவேண்டுமென்ற விருப்பத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். அதற்கான வழிவகை ஆராயப்பட்டு மத்திய அரசுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. மத்திய அரசாங்கம், போதுமான என்ஜினீயரிங் கல்லூரிகள் இருப்பதன் காரணத்தாலும், வெளியில் இருப்பவர்கள் பெரிய, பெரிய திட்டங்களில் வேலை செய்து, தற்போது வேலை வாய்ப்பிழந்து தவிப்பதை உத்தேசித்தும், இந்த விஷயத்திலே மிகுந்த ஜாக்கிரதையாக இருக்கவேண்டுமென்று ஆலோசனை கூறியிருக்கிறது. புதிய வகுப்புகளைத் திறப்பதிலே காலதாமதம் காட்ட வேண்டுமென்று இந்திய அரசு கூறியுள்ளது. ஆனால், நிலைமைகளையொட்டி, தேவையையொட்டி, நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே துவக்கலாம் என்று மத்திய அரசுக்குத் தெரிவித்து இருக்கிறேன்.

அடுத்தபடியாக, பாலிடெக்னிக்குகளைப் பொறுத்தவரையில், இந்திய அரசாங்கத்தினுடைய மானியமும் அவற்றுக்கு கிடைக்கிறது. மாநில அரசாங்கத்தின் மானியமும் கிடைக்கின்றது. நாம் பாலிடெக்னிக் வகுப்பு-



V2'',31'N67
N67.3-4

களை நடத்தி வருகிறோம். புள்ளிவிவரங்களைப் பார்த்தால், இந்த ஆண்டுக்குப் புதிதாக திறக்க வேண்டாமென்று நிதி நிலைக்குழு கருத்து தெரிவித்திருக்கிறது. பாலிடெக்னிக்குகளைத் துவக்கலாம் என்ற வாய்ப்பு இரண்டு தனியார் துறைக்கும் அளிக்கப்பட்டிருக்கிறது. ஒன்று, ஏ. வி. எம். சாரிட்டிஸ் மற்றொன்று கோத்தாரி சாரிட்டிஸ், இவைகளின் சார்பில் புதிதாகத் துவக்கப்பட இருக்கின்றன. இந்திய அரசாங்கத்தினுடைய— கோரிக்கையின் அடிப்படையிலே இந்த பாலிடெக்னிக்குகளைக் கூட அடுத்த ஆண்டு துவக்கலாம் என்று இருக்கிறோம். ஏனெனில் தற்போது பாலிடெக்னிக்குகளில் பல இடங்கள் இன்னும் காலியாகவே இருக்கின்றன. வெளியில் இருப்பவர்கள் உணர்ந்து மறுபடியும் விண்ணப்பித்துச் சேர மாணவர்கள் வர வேண்டும். நாங்கள் இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னர் பத்திரிகைகளிலும் இன்னின்ன பாலிடெக்னிக்குகளில் இடம் இருக்கிறதென்பதை விளம்பரப்படுத்தியிருக்கிறோம். நான் இதை ஏன் இந்த மன்றத்தில் கூறுகிறேன் என்றால், புதிதாக பாலிடெக்னிக் இந்த ஆண்டு துவக்க வேண்டிய இன்றியமையாமை இல்லையென்பதைக் கூறுதற்காகவே தான் அறிவிக்கிறேன். உதாரணமாக.—

| | | இடங்கள். |
|---|---|---|
| 1. | பி. ஏ. சி. ராமசாமி ராஜா பாலிடெக்னிக், ராஜபாளையம். | [illegible]0 |
| 2. | ராஜகோபால் பாலிடெக்னிக், குடியாத்தம் .. .. | [illegible] |
| 3. | அழகப்பா பாலிடெக்னிக், காரைக்குடி .. .. | 76 |
| 4. | முத்தையா பாலிடெக்னிக், அண்ணாமலைநகர் .. | 40 |
| 5. | ஸ்ரீனிவாச சுப்பராய பாலிடெக்னிக், [illegible] | 55 |
| 6. | வி. எஸ். வெள்ளைச்சாமி நாடார் பாலிடெக்னிக், விருதுநகர். | 123 |
| 7. | பக்தவத்சலம் பாலிடெக்னிக், காஞ்சீபுரம் .. | 30 |
| 8. | முருகப்ப செட்டியார் மெமோரியல் பாலிடெக்னிக், ஆவடி. | 25 |
| 9. | கவெர்ன்மென்ட் பாலிடெக்னிக், வேலூர். .. | 40 |

64970

ஆக, இவ்வளவு இடங்கள் காலியாகவே இருக்கின்றன. மாணவர்கள் சேருவதற்கு இன்னமும் வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது.

அடுத்தபடியாக மீண்டும் விண்ணப்பம் செய்துகொள்ளும் மாணவர்களுக்கு அந்த பாலிடெக்னிக்குகளில் சேர வாய்ப்பு தரப்பட்டுள்ளது. சில மாணவர்களுக்கு ஒரு சில மார்க்குகள் குறைவாக இருந்த காரணத்தால் அவர்கள் சேர வாய்ப்பு இல்லாமல் போனது. ஆகவே, மார்க்குகளை 100 அல்லது 50 என்ற அளவுக்குச் சிறிது தளர்த்தினால் கூடுதலான மாணவர்கள் சேரக்கூடுமா ? மார்க்குகளைத் தளர்த்தலாமா என்பது பற்றியும் யோசித்து வருகிறோம். மேலும், பாலிடெக்னிக் வகுப்பில் ஓராண்டு படித்துவிட்டு, நேராக என்ஜினியரிங் கல்லூரியில் சேர்த்துக்கொள்ளப்படலாம் என்று விதியை மாற்றலாம் என்பதையும் யோசித்து வருகிறோம். பாலிடெக்னிக்கின் ஓராண்டுப் படிப்பு பி.யூ.சி. வகுப்பின் தரத்தோடு ஒத்திடவேண்டும். ஓராண்டு பாலிடெக்னிக்கில் படித்துவிட்டு, நேராகக் கல்லூரியில் சேர்ந்து, என்ஜினியரிங், பி. எஸ்.ஸி. போன்ற கல்லூரி படிப்புக்கு செல்லும் வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. எதிர்காலத்திலே மேற்கொண்டு பாலிடெக்னிக்குகளை ஏற்படுத்துவதற்கான வழிகளை வகுத்துக் கொள்ளவேண்டும். நாட்டிலே தொழில் வளர்ச்சி பெருகவேண்டும் ; அதற்கேற்ற வகையில் மக்கள் தொழில் நுணுக்க விற்பன்னர்களாக வேண்டும். பாலிடெக்னிக் படிப்பை பி.யூ.சி.க்கு ஈடாகக் கொண்டு தால் நல்லது என்ற முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. அதற்கான நடவடிக்கைகளும் தொடர்ந்து எடுக்கப்படும்.

மேலும், ஐந்தாண்டுத் திட்டத்தின் அளவு குறுக்கிட்டிருப்பதால், நாம் நெருக்கடிக்கு ஆளாகியிருக்கிறோம். நாம் கல்விக்காக 54 கோடி ரூபாய் செலவழிக்க முன் வந்தாலும், திட்டச் செலவுகளில் நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே நமக்கு 75 கோடி ரூபாய் கொடுத்தார்கள். ஆனால், முன்னால் இருந்த அரசிடம் 52 கோடி ரூபாய் தான் கொடுத்தார்கள். ஆனால், மீண்டும் கல்வி அமைச்சர் எடுத்துக்கொண்ட முயற்சியினால் இது 54 கோடி ரூபாய் என்று முடிவு செய்யப்பட்டது. ஆண்டொன்றுக்கு 10½ அல்லது 11 கோடி ரூபாய் செலவழிக்கின்ற நிலைமை வந்தால், ஐந்தாண்டுக் காலத்திலே வாய்ப்பும் வசதிகளும் ஏற்படும். இந்திய அரசு நிதி நெருக்கடி நிலைமையைக் காட்டி, நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் ஆண்டில் 1966–67-ல் 5·6 கோடி ரூபாய் என்று திட்டமிட்டுள்ளது. போன ஆண்டு 6.55 கோடி ரூபாய் செலவிடத் திட்டமிட்டது. எனவே, 1½ கோடி ரூபாய் திடீரென்று குறைக்கவேண்டுமென்றும், திட்டத்தில் வெட்டுகளைச் செய்யவேண்டுமென்றும் கூறியிருக்கிறார்கள்.

நம் கல்வித் திட்டத்தின் அடிப்படையில் 6 வயதுக்கும் 11 வயதுக்கும் இடைப்பட்ட மாணவர்களில் 100-க்கு 100 பேரை படித்தவர்களாக ஆக்குவது; 11 வயது முதல் 14 வயது வரையுள்ள மாணவர்களில் 80 சத விகிதத்தினரை கல்வியுடையவர்களாக ஆக்குவது; 14 வயது முதல் 17 வயதுள்ள மாணவர்களில் 60 சத விகிதத்தையாவது கல்வியறிவுடையவர்களாக்குவது என்ற அடிப்படையில் தான் திட்டமிட்டுச் செயலாற்றி வந்திருக்கிறோம். 1½ கோடி ரூபாய் துண்டு விழும் நிலையில் 6—11 வயது மாணவர்களைப் பள்ளிக்குக் கொண்டுவரும்படியான சூழ்நிலை ஏற்படக்கூடும். ஆகவே 11 கோடி ரூபாய்க்கு மேல் கேட்க வேண்டிய இன்றியமையாமை இருந்தும், 6 கோடியிலும், 1½ கோடி ரூபாயை விட்டு 5.5 லட்சம் ரூபாய் தருவதன் மூலமாக பல திட்டங்களை நிறைவேற்றமுடியாத நிலைமை ஏற்படும் என்ற அச்சத்தை இந்த அரசு கொண்டிருக்கிறது என்பதை மத்திய அரசுக்குத் தெரிவித்திருக்கிறோம். அரசாங்கம் 54 கோடி ரூபாய் செலவழிக்கின்ற நிலை ஏற்பட்டாலும், கல்லூரிகள் போதுமான அளவுக்கு வசதியைப் பெற்றிருக்கின்றனவா என்றால் இல்லையென்றே கூறவேண்டும் என்பதை இந்த மன்றத்திலுள்ள உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆகவே, கட்டடங்கள் கட்டுவதா, எல்லோரையும் எழுதப்படிக்கத் தெரிந்தவர்களாக்க வசதிகள் இல்லாவிட்டாலும் எல்லா இடங்களிலும் பள்ளிகளைத் திறப்பதா, ஆசிரியர்களுக்கு சம்பளத்தை உயர்த்தித் தருவதா என்கிற எல்லாப் பிரச்சினைகளையும் எடுத்துக்கொண்டால் எதை எதை முதலில் இருந்து படிப்படியாக எடுத்து நிறைவேற்ற வேண்டும் என்பதை நாம் தீர்மானித்துக்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். கட்டடங்கள் இருக்கிறதோ இல்லையோ, வேறு பல வசதிகள் இருக்கின்றனவோ இல்லையோ எல்லோரையும் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களாக்க ஆங்காங்கே பள்ளிகளைத் துவக்கி வருகிறோம். அதன் காரணமாகத்தான் சிலபல உறுப்பினர்கள் குறிப்பிட்டபடி ஆரம்பப்பள்ளிகள் ஆலமரத்தடியில் நடக்கின்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. பலவிடங்களில் ஆரம்பப்பள்ளியாக இருப்பதை உயர்நிலைப்பள்ளியாக மாற்றவேண்டும் என்கிற ஆர்வம் ஏற்பட்டு தேவைப்படுகிற நிதியை எப்படியாவது வசூல் செய்துவிடலாம் என்கிற நம்பிக்கையின் அடிப்படையில் நடுத்தரப் பள்ளியைத் துவக்கி இப்போதைக்கு ஆரம்பப்பள்ளியை ஆலமரத்தடிக்கு அனுப்பிவிடலாம் என்கிற அளவில் ஆரம்பப்பள்ளிக்கட்டடத்தில் நடுத்தர பள்ளியையும், ஆரம்பப்பள்ளியை ஆலமரத்தடியிலும் நடத்துவதைப் பார்க்கிறோம். அதுபோலவே நடுத்தரப் பள்ளியை ஆரம்பப்பள்ளிக் கட்டடத்திலும் உயர்நிலைப் பள்ளியை நடுத்தரப்பள்ளிக் கட்டடத்திலும் நடத்துவதைப் பார்க்கிறோம். சில இடங்களில் உயர் நிலைப் பள்ளியை கல்லூரியாகத் துவக்கி உயர்நிலைப் பள்ளி கட்டடத்தில் கல்லூரி நடைபெறுவதைப் பார்க்கிறோம். அந்த வகையில் கும்பகோணத்தில் கூட ஒரு பெண்கள் கல்லூரியை ஒரு சத்திரத்தில் ஆரம்பித்து, வர இருக்கிற மகாமகத்தை உத்தேசித்து அந்தக் கட்டிடம் தேவைப் படுவதால் அவர்கள் காலி



செய்யும்படி வற்புறுத்த, அதற்காக பெண்கள் கல்லூரிக்கான கட்டிடத்தை உடனடியாகக் கட்டவேண்டிய நிலையில் அரசு இருக்கிறது. இதற்கெல்லாம் காரணம் தற்போது போதுமான பண வசதி இல்லாதது தான். இருக்கிற பணத்தையும் நாம் எதற்கு முதல் முக்கியத்துவம் கொடுப்பது, எதற்கு அடுத்த முக்கியத்துவம் கொடுப்பது என்பதாக வரையறுத்துக்கொண்டு செயல்பட வேண்டிய நிலையில் இருக்கிறோம்.

ஒதுக்கப்படுகிற பணம் குறைவாக இருப்பதன் காரணத்தினால் தான் படிப்படியாக அவரவர்களைத் திருப்தி செய்கின்ற அளவிலும் முறையாக எடுத்து நிறைவேற்றுகின்ற நிலைமையில் இருக்கிறதே தவிர எல்லாவற்றையும் எடுத்துக்கொள்ளக்கூடியனவாக அமையவில்லை. நம்முடைய எண்ணம் ஆரம்பப்பள்ளியில் படித்து வெளியே வருகிறவர்கள் அத்தனை பேரையும் நடுத்தரப்பள்ளிக்கு ஈர்த்துக்கொள்கிற அளவில் நடுத்தர பள்ளிகளையும், நடுத்தரப் பள்ளிகளில் படித்து வெற்றி பெறுகிறவர்கள் அத்தனை பேர்களையும் உயர்நிலைப் பள்ளியில் ஈர்த்துக்கொள்கிற அளவில் உயர்நிலைப் பள்ளிகளையும், உயர்நிலைப் பள்ளியில் படித்து தேர்ச்சி பெறுகிற அத்தனை பேர்களையும் கல்லூரிகளுக்கு ஈர்த்துக்கொள்கிற அளவில் போதுமான கல்லூரிகளையும் இதிலே தொழில் பயிற்சிக்குச் செல்கின்றவர்களுக்கு அதற்கேற்ற வசதி வாய்ப்புகளையும், கலைக்கல்லூரிகளுக்குச் செல்கிறவர்களுக்கு அதற்கேற்ற வசதி வாய்ப்புகளையும் ஏற்படுத்தித் தருவதோடு படித்து வெளியே வருகிறவர்களுக்கு போதுமான வேலை வாய்ப்புக் கிடைக்கும்படியான வகையிலும் நாம் திட்டமிட வேண்டியவர்களாக இருக்கிறோம். இதன் காரணமாகத்தான் எட்டாவது வகுப்பை ஒரு நிலையாக வைத்துக்கொண்டு இந்த நாட்டில் வாழ்கிற 3½ கோடி மக்கள் அடிப்படை மொழியியலையும், ஓரளவு கணிதத்தையும்; நில இயல் வரலாற்று இயலையும் தெரிந்துகொள்கிற சூழ்நிலையை ஏற்படுத்தித்தரவேண்டும். அதன்மேல் தொழில் துறையில் ஈடுபடுகிறவர்களுக்கு தொழில்துறையில் பயிற்சிபெற வாய்ப்புகளையும், மேலே படிக்க விரும்புகிறவர்களுக்கு படிப்பதற்கான வசதிகளையும் ஏற்படுத்தித் தரலாம் என்ற அடிப்படையில் எட்டாவது வகுப்பு வரை படித்து தொழில்துறையில் ஈடுபட விரும்புகிறவர்களுக்கு தொழில் பயிற்சி கொடுத்து பல இடங்களில் தொழில்பெற வாய்ப்பை ஏற்படுத்த ஐ.டி.ஐ. என்று ஏற்படுத்தி 3,000 பேர்களுக்கு இடமளிக்கத் திட்டமிட்டோம். பிறகு அது 2,000 ஆக்கப்பட்டு, மீண்டும் 1,008 இடமாக்கப்பட்டு இந்த ஆண்டே அதைத் துவக்கவேண்டாம் என்று மத்திய அரசு கேட்டுக்கொள்ள நாம் ஏற்கனவே 600 பேர்களுக்கான இடத்தையும், மற்ற வசதிகளையும் ஏற்படுத்திவிட்டதால் இந்த 600 பேர்களைக் கொண்டாவது இந்த ஐ.டி.ஐ. இவ்வாண்டே துவக்கப்பட அனுமதி அளிக்கவேண்டுமென்று இந்திய அரசுக்கு எழுதியிருக்கிறோம்.

இன்றைக்கு நம்முடைய தேவைகளோ அதிகம். அவற்றை நிறைவேற்ற நிதி வசதி குறைவாக இருக்கிறது. அதன்காரணமாகத்தான் பொதுமக்களுடைய உதவியை நாடவேண்டியதாக இருக்கிறது. இன்றைக்கு வேறு எந்தத் துறையை எடுத்துக் கொண்டாலும் ஒரு போலீஸ் ஸ்டேஷன் ஏற்படுத்தவேண்டுமென்றால் பொதுமக்களிடம் நிதி உதவி கேட்பதில்லை. ஒரு சப் ரிஜிஸ்திரார் ஆபீஸ் ஏற்படுத்த வேண்டுமென்றால் பொதுமக்களிடம் நிதி உதவி கேட்பதில்லை, இரண்டே இரண்டு வகையில் தான் பொதுமக்களுடைய உதவி வேண்டப்படுகிறது. ஒன்று கல்வி, மற்றொன்று மருத்துவம். இரண்டும் மக்களுக்கு இன்றியமையாதவை. மக்கள் அத்தனைபேர்களுக்கும் கிடைக்கச் செய்தாக வேண்டிய நிலைமையும் இருக்கிறது. நம்முடைய தேவைகளோடு பார்க்கிறபோது அரசாங்கம் தன்னுடைய நிதி ஆதாரத்தை மட்டும் வைத்து அந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்வது என்றால் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் ஆனாலும்—மக்களுடைய தேவை, செய்யப்பட்டிருக்கிற காரியங்கள் இவை இரண்டுக்கும் இடையில் உள்ள வெளி ஏராளமாகத்தான் இருக்கும். நம் நாட்டில் இன்றைக்கு எழுதப் படிக்கத் தெரியாதவர்கள் 64 சதவீதம் இருக்கிறார்கள். 36 சதவீதம்

தான் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் இருக்கிறார்கள். எல்லோரையும் எழுதப்படிக்கத் தெரிந்தவர்களாக்க அரசாங்கத்தின் நிதி ஆதாரங்களைக் கொண்டே செயல்பட இன்றைக்கு வசதி இல்லாத காரணத்தினால் தான் பொதுமக்களுடைய நன்கொடையை வரவேற்கின்ற நிலைமையில் இருக்கிறோம். ஆகவே, எல்லா உறுப்பினர்களும் பொதுமக்களுடைய ஆதரவைத் தேடித்தர முன்வரவேண்டும். ஆங்காங்கு இப்போது பலவிடங்களில் பொதுமக்களுடைய உதவி கிடைத்து வருகிறது. மேற்கொண்டும் கிடைக்கச் செய்ய, நம்முடைய நோக்கம் பூரணமாக நிறைவேற வாய்ப்பும், வசதியும் பெருகச் செய்ய எல்லோரும் ஆதரவு கொடுத்து ஊக்கமளிக்கவேண்டும், ஒத்துழைக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கல்லூரியில் பயிற்சி மொழியைப் பற்றி திரு. ம. பொ. சிவஞானம் குறிப்பிட்டார்கள். மற்றவர்களும் குறிப்பிட்டார்கள். இந்த அரசும் திட்டவட்டமாக உறுதி கொண்டிருக்கிறது. ஏற்கனவே இருந்த அரசும் செய்த முடிவு தான். தமிழகத்தில் உள்ள எல்லா பல்கலைக் கழகக் கல்லூரிகளிலும் போதனமொழி தமிழாகத் தான் இருக்கவேண்டும் என்பதில் யாருக்கும் ஆட்சேபணை கிடையாது. அதுதான் அரசின் இறுதியான முடிவும். அந்தக் கொள்கையைத்தான் படிப்படியாகச் செயலாற்றிக்கொண்டு வருகிறோம். அந்த முடிவு அண்மையில் நடந்த கல்வி அமைச்சர்கள் மகாநாட்டிலும் வற்புறுத்தப்பட்டது. நமது இந்திய அரசுக் கல்வி அமைச்சர் திரு. திருகுணசென் அவர்களும் கூட அந்தக் கருத்தைத்தான் தெரிவித்தார்கள். அந்தக் கருத்தைப் பொறுத்த வரையில் எல்லோரும் ஏற்றுக்கொண்டார்கள். கல்வி அமைச்சர்கள் மகாநாட்டில் ஏதாவது ஒரு தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது என்றால் தாய்மொழியிலேயே கல்லூரியில் போதனை நடைபெறவேண்டும் என்பது ஒன்றுதான் என்று தெரிவித்துக்கொள்கிறேன். ஐந்தாண்டுக்குள் இதைக் கொண்டு வந்துவிடவேண்டும் என்றார்கள் சிலர், ஐந்தாண்டுக்குள் கொண்டுவருவது சிரமமாக இருக்கும், ஆகவே, கால நிர்ணயம் வேண்டியதில்லை என்பதாகவும் பேசப்பட்டது. ஆனால் மத்திய கல்வி அமைச்சர் திரு. திருகுணசென் அவர்கள் ஐந்தாண்டுக்குள் என்ற காலவரம்பு இருக்கத்தான் வேண்டும். போதவில்லை என்றால் பிறகு காலத்தை நீட்டிக்கொள்ளலாம். இப்போது இத்துறையில் ஊக்கத்துடன் ஆக்கமாகச் செயல்பட வேண்டுமென்றால் ஐந்தாண்டு என்கிற காலவரை இருக்கத் 5 ! வேண்டும் என்றார்கள்.

அந்த வகையில் தான் நாமும் தமிழை கல்லூரிகளில் போதனமொழியாக ஆக்குவதற்கு வேண்டிய எல்லா நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறோம். அந்த முறையில் பி.யூ.ஸி. வகுப்பில் வரலாற்று இயல், பொருளாதாரம் போன்றவைகளையாவது தமிழிலேயே போதிக்க வேண்டுமென்று எல்லாக் கல்லூரிகளையும் கேட்டுக்கொண்டிருக்கிறோம். 72 கல்லூரிகள் இன்றையதினம் அவ்வாறு தமிழிலேயே போதனை அளிக்க முன் வந்திருக்கின்றன. இந்த ஆண்டு உத்தரவின் மூலமாக பி.ஏ. வகுப்பில் வரலாறு, பொருளாதாரம் நிலவியல் போன்ற பாடங்களை தமிழிலேயே போதிக்கவேண்டுமென்று உத்தரவிடப்பட்டு மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. சென்ற ஆண்டு கூட பல்வேறு இடங்களில் உள்ள கல்லூரிகளில் 4,200 மாணவர்கள் தமிழிலேயே பாடம் பயின்றிருக்கிறார்கள். இந்த ஆண்டு 7,000-க்கும் அதிகமான பேர்கள் தமிழிலேயே போதனை பெறுவதற்கு ஆவலாக முன் வந்திருக்கிறார்கள். நான் ஆங்காங்கு போகிறபோது விசாரித்து வருகிறேன். இந்த நிலை படிப்படியாகத்தான் பூரணமாக வரும். அந்த நோக்கத்தில் சிறிதும் மாறுபாடில்லை. மாணவர்களாக ஆவலோடு தமிழில் படிக்க முன் வரும் அளவில் அவர்களை ஈர்த்துக்கொண்டாக வேண்டிய சூழ்நிலையை உருவாக்க வேண்டும். அதற்கான முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும். மேற்கொண்டு அந்தந்தப் பாடங்களைப் போதிப்பதற்கான நூல்களை தமிழிலே உருவாக்கவேண்டும். ரெஃபரன்ஸ் நூல்கள் உருவாக்குவதற்கு காலம் ஆகலாம் என்றாலும், பயிற்று



விப்பதற்கான பாட நூல்களை உருவாக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். மூன்றாவதாக இதைச் சொல்லிக் கொடுக்கத்தக்க அளவுக்கு போதுமான ஆசிரியர்களை உருவாக்க வேண்டிய கட்டாயமும் இருக்கிறது. இப்பொழுது ஆங்கிலத்திலே சொல்லிக் கொடுக்கக் கூடிய நிலைமையும் இருக்கின்றது. பிஸிக்ஸை எடுத்துக்கொண்டால் ஆங்கிலத்திலேதான் இப்பொழுது சொல்லிக்கொடுக்க வேண்டும், பிஸிக்ஸ், கெமிஸ்ட்ரி, பையாலஜி, பையோ கெமிஸ்ட்ரி, டிரிக்னாமிட்ரி, அல்ஜீப்ரா, கால்குலஸ், மெடபிஸிக்ஸ், சிவில் என்ஜினியரிங், எலக்ட்ரிகல் என்ஜினீயரிங், மெக்கானிக்கல் என்ஜினீயரிங், ரேடியோ என்ஜினீயரிங் ஆகியவற்றை ஆங்கிலத்தில் சொல்லிக்கொடுப்பதற்கு அறிந்தவர்கள் இருக்கிறார்கள். ஆனால், அவற்றை தமிழிலே சொல்லிக்கொடுப்பதற்கான அறிவோடு உள்ளவர்கள் இப்பொழுது இருப்பது கடினமாக இருக்கிறது. தமிழிலே அவற்றைச் சொலலிக்கொடுக்க முடியாது என்று சொல்லவில்லை, என்றைக்கேனும் ஒரு நாள் அப்படிப்பட்ட நிலை வந்தே தீரும், அதிலே எந்தவிதமான ஐயப்பாடும் இல்லை. ஆனால் மெள்ள மெள்ள அதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு—விரைவிலே உடனடியாக தமிழிலே சொல்லிக் கொடுக்கின்ற ஆசிரியர்களையும், நூல்களையும் உருவாக்குவதற்கு நிலைமை கடினமாக இப்பொழுது இருக்கிறது—எல்லாப் பாடங்களையும் தமிழிலே சொல்லிக்கொடுக்க வேண்டிய காலம் வந்தால் அப்பொழுது அது எல்லோரும் மகிழ்ச்சியடையக் கூடிய காலமாக இருக்கும்.

ஊட்டியிலே கூடிய கல்வி மாநாட்டில்கூட நிகழ்ச்சிகளையெல்லாம் தமிழிலேயே நடத்த வேண்டுமென்று சொல்லப்பட்டு, பேசுகின்றவர்கள் எல்லாம் தமிழிலேயே பேசவேண்டும் என்றும், முடியாதவர்கள் ஆங்கிலத்திலே பேசலாம் என்று சொல்லப்பட்டு, அங்கே வந்திருந்த கல்லூரி முதல்வர்கள் பலர் தமிழிலே அவர்களுடைய விளக்கங்களை தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். தமிழிலே முடியாதவர்கள் ஆங்கிலத்திலே பேசினார்கள். அங்கே வந்திருந்த அத்தனை முதல்வர்களும் தமிழில் சொல்லிக்கொடுக்கவேண்டுமென்ற கருத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. 36, 37 பேர்கள் முக்கியமான கல்லூரிகளிலிருந்து, லயோலா கல்லூரி, செயின்ட் ஜோசப் கல்லூரி, கிறிஸ்துவ கல்லூரி போன்றவற்றின் முதல்வர்கள் வந்திருந்தார்கள். எல்லோரும் அந்தக் கருத்தை ஏற்றுக்கொண்டார்கள். ஆசிரியர்கள் தமிழிலே பயிற்சிபெற்றவர்கள் இருக்கிறார்களா என்பதையும் பார்க்கவேண்டும். வரலாறு, பொருளாதாரம், நில இயல் போன்ற பாடங்களில் இருக்கிறார்கள், ஆனால் அறிவு இயல் பாடங்களை உடனடியாகக் கொண்டுவருவது கடினமாக இருக்கிறது. அதையும் கொண்டுவர வேண்டுமென்றுதான் சொல்கிறார்கள். வேண்டாமென்று சொல்லவில்லை. தொடர்ந்து வருகின்ற நேரத்தில் அந்தந்தத் துறை பற்றிய பேராசிரியர்களை அழைத்து, அந்தந்தப் பாடங்களில் தமிழ் நூல்கள் இருக்கின்றனவா, இல்லையென்றால் அப்படியிருக்கச் செய்வதற்கு என்ன செய்யலாம் என்று கண்டறிந்து, அடுத்த ஆண்டு எந்த எந்தப் பாடங்களை தமிழிலே கொண்டுவரலாம் என்பதையும் கண்டறிந்து அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். பிஸிக்ஸ், கெமிஸ்ட்ரி போன்ற பாடங்களின் பேராசிரியர்களை அழைத்துவைத்து, தமிழில் நூல்கள் இருக்கின்றனவா இல்லையென்றால் உருவாக்கவேண்டுமென்று கருதுகிறார்களா, அப்படி உருவாக்க வேண்டுமென்றால் எவ்வளவு காலத்தில் உருவாக்க முடியும் என்று கண்டறிந்து, தகுதியும் திறமையும் படைத்தவர்கள் எத்தனை பேர்கள் தமிழிலே சொல்லிக் கொடுக்கின்றவர்கள் இருக்கிறார்கள் என்பதையும் கண்டறிந்து, அப்படிப்பட்டவர்கள் இல்லையென்றால் அவர்களையும் உருவாக்கி, மெள்ள மெள்ள முயற்சிகளை மேற்கொள்ளலாம், எப்பொழுது வாய்ப்பும் வசதியும் ஏற்படுகிறதோ அப்பொழுது மேற்கொள்ளலாம் என்ற திட்டத்தை அரசாங்கம் வைத்துக் கொண்டிருக்கிறது.

கல்லூரி முதல்வர்கள் மாநாட்டில் பேசும்பொழுது நான் குறிப்பிட்டேன். தேவையான பாட நூல்கள் தமிழிலேயே இருக்கிறது என்றால் ரெஃபரன்ஸ் நூல்கள் வேண்டுமென்றால் நீங்கள் அதற்காகக்

காத்துக்கொண்டு இருக்காதீர்கள், ரெஃபரன்ஸ் நூல்களை நீங்கள் ஆங்கிலத்திலே படித்துக்கொள்ளுங்கள், மாணவர்களுக்கு தமிழிலே நடத்துங்கள், நோட்ஸ் கொடுங்கள், குறிப்புகள் கொடுங்கள் என்று சொன்னேன். ஹானர்ஸ் வகுப்பிலே முன்பெல்லாம் புத்தகம் இருப்பதில்லை. ரெஃபரன்ஸ் நூல்களை வைத்துக்கொண்டு பேராசிரியர் குறிப்புகளை மாணவர்களுக்குக் கொடுப்பார், மாணவர்கள் எழுதிக்கொண்டு அவற்றைப் படித்து பயிற்சி பெற்றார்கள், அந்த அளவுக்குச் செய்யுங்கள் என்று சொல்லியிருக்கிறேன். மாணவர்களும் தமிழிலே கூடியவரை எழுதுவதற்கு பயிற்சியைப்பெற்றுக் கொள்ளவேண்டும், தமிழிலேயே எங்கெங்கே எழுத முடியவில்லையோ அப்படிப்பட்ட இடங்களிலே மாத்திரம் தமிழிலே எழுதிக்கொள்ளுங்கள் என்று சொன்னேன். செண்டர் ஆப் கிராவிடி என்ற வார்த்தைக்கு தமிழ்சொல் தெரியாவிட்டால் செண்டர் ஆப் கிராவிடி என்றே எழுதுங்கள், பின்னால் தெரிந்தபிறகு "ஈர்க்கும் ஆற்றல்" என்று எழுதிக்கொள்ளுங்கள், மைக் என்று இருக்கிறது என்றால் தமிழ்வார்த்தை தெரியாவிட்டால் மைக் என்றே எழுதுங்கள். ஒலி பெருக்கி என்று தெரிந்தபிறகு எழுதிக்கொள்ளலாம். ஸ்டாண்ட் என்பதற்கு தமிழ் தெரியவில்லை என்றால் ஸ்டாண்ட் என்றே எழுதுங்கள். பிறகு தண்டு என்று தமிழிலே எழுதிக்கொள்ளுங்கள். நட்டு என்பதற்குத் தமிழ் தெரியவில்லையென்றால் நட்டு என்றே எழுதுங்கள். பிறகு மறை என்ற தமிழ்ச் சொல்லைப் பயன்படுத்தலாம். டைட் என்பதற்குத் தமிழ் தெரியவில்லை என்றால் டைட் என்றே எழுதுங்கள். பிறகு தமிழிலேயே முடுக்கு என்று தெரிந்து கொண்டு எழுதிக்கொள்ளலாம் என்று தெரிவித்தேன்.

**Dr. HABIBULLAH BAIG :** Just now the Minister for Education was telling us that education would be imparted in Tamil. If we start imparting education in Tamil up to the High school classes, students who go to B.Sc. and M.Sc. classes will find it difficult to learn in English subjects like biology, physics, chemistry, abstract science, concrete science and descriptive science. Books on these subjects must be translated into Tamil. Otherwise the students will face very great difficulty.

**மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர் :** விளக்கம் கேட்கின்ற முறைக்கு ஒரு முறை இருக்கிறது. அமைச்சர்கள் பேசின பிறகு சந்தேகம் கேட்கிற நேரத்தில் ஒன்றிரண்டு கேள்விகள் கேட்கலாம், இடையே குறுக்கிடவேண்டாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** கனம் உறுப்பினர் கூறிய முறையிலே துவக்கப் பள்ளியிலே, உயர் நிலைப் பள்ளியிலே தமிழ் சொல்லிக்கொடுக்கப்பட்டு பிறகுதான் புகுமுக வகுப்பிலே அவர்கள் தமிழ் வகுப்பிலே ஈர்த்துக்கொள்ளப்படுகிறார்கள், புகுமுக வகுப்பிலே அப்படித் தமிழிலே படித்தபிறகு அப்படியே பி.ஏ. போன்ற மேல் வகுப்புகளுக்கு அவர்கள் ஈர்த்துக்கொள்ளப்படுவார்கள். அதை வளர்ச்சி என்றுதான் சொல்லமுடியும். குழந்தை பிறக்கிறது என்றால் 2 மாதம், 3 மாதம் என்று வளர்ந்து படிப்படியாக பிறகு 10 ஆண்டு, 20 ஆண்டு என்று வளர்ந்துதான் அது வளர்ச்சியடையவேண்டும். அப்படியில்லாமல் உடலிலே சதையிருக்கவேண்டுமென்பதற்காக, ஆட்டுக்கெடாவை வெட்டி அதிலேயிருந்து இரண்டு பவுண்ட் சதையை எடுத்து மனிதனின் உடலில் வைத்துக் கட்டிவிட்டால் அது வளர்ச்சியாகாது, வீக்கம்தான். ஆகவேதான் புகுமுக வகுப்பிலே தமிழிலே தொடங்கிவிட்டால், பிறகு படிப்படியாக பி.ஏ. வகுப்பிலே அவர்கள் தமிழிலே படிப்பதற்கு ஆற்றல் உள்ளவர்களாக வந்துவிடுவார்கள். அதற்காக என்று நாம் 10, 15 ஆண்டுகள் காத்திராமல் தேவைப்படும்பொழுது அங்கங்கே ஆங்கிலத்தைப் பயன் படுத்திக்கொண்டால் எதிர்காலத்திலே வருகின்ற தலைமுறையினர் நல்ல தமிழ் சொற்களை அந்த இடங்களிலே போட்டுவிடக்கூடிய நிலைமை ஏற்படும்.





மொழிகளைப் பற்றி கல்விக் குழு, ஆளுங் கட்சி, எதிர்க்கட்சி என்ன என்ன அடிப்படைகளைச் சொன்னார்களோ அந்த அடிப்படையில்தான் கல்வி அமைச்சர்கள் மாநாட்டிலும் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. கல்வியைப் போதிப்பதிலே தமிழைத்தான் ஏற்றுக்கொள்ளக்கூடிய நிலையில் இந்த மாநிலம் இருக்கிறது. 9, 10, 11-வது வகுப்புகளிலே மொழிப் பாடமாக, அதாவது முதலாவது பாடமாக தமிழ்தான் என்றும், அதாவது வட்டார மொழி அல்லது தாய்மொழி என்ற அளவிலேயும், தமிழ்தான் வைக்கப்பட்டிருக்கிறது. இரண்டாவதாக ஹிந்தி அல்லது எனி அதர் இண்டியன் லாங்குவேஜ் என்று வைத்திருக்கிறோம். மூன்றாவதாக இங்கிலீஷ் ஆர் எனி அதர் ஃபாரின் லாங்குவேஜ் என்று இருக்கிறது. இரண்டாவது மொழியைப் பொறுத்த வரையில் எந்தவிதமான கட்டாயமும் இல்லை. தேர்வு எழுதலாம். ஆனால், எண்கள் வாங்கவேண்டுமென்ற அவசியம் இல்லை. மாடரேஷனுக்கு வேண்டுமானால் அந்த எண்களை கணக்கெடுத்துக் கொள்ளலாம் என்ற அளவுக்குத்தான் விருப்ப மொழியாகத்தான் வைக்கப்பட்டிருக்கிறது. ஹிந்தியிலே நல்ல எண்கள் வாங்கவில்லை ஜீரோதான் வாங்குகிறார்கள் என்ற குறைபாட்டைக்கூட சொன்னார்கள். கல்வி மாநாட்டில் குறிப்பிட்ட அடிப்படையில் இரண்டாவது பாடத்தை எடுக்கும் பொழுது அட்வான்ஸ்டு தமிழும் கொடுக்கப்பட்டிருக்கிறது. தமிழை நல்ல விரிவாகப் படித்து அதிலேயே பயிற்சி பெற விரும்புகிறவர்களுக்கு அட்வான்ஸ்டு தமிழ் ; அட்வான்ஸ்டு தமிழ் ஆர் ஹிந்தி ஆர் எனி அதர் இண்டியன் லாங்குவேஜ் என்று இருக்கிறது. ஹிந்தியைப் படித்து வடநாட்டுக்குச் செல்லவேண்டுமென்று நினைப்பவர்கள் ஹிந்தியைப் படிக்கலாம் என்ற அளவுக்குத்தான் வகை செய்யப்பட்டிருக்கிறது. ஹிந்தி மட்டுமல்ல, ஏதாவது ஒரு இந்திய மொழியைப் படிக்கலாம் என்பதற்கும் வாய்ப்பு இருக்கிறது. தமிழிலே பயிற்சிபெற்று தமிழைத்தான் எதிர்காலத்தில் எடுத்துப் படிக்கப்போகிறேன் என்று சொல்கிறவர்கள் சாதாரணமாக இருக்கக்கூடிய தமிழை அல்லாமல் சற்று விரிவான முறையிலே தமிழை, அட்வான்ஸ்டு தமிழை எடுத்துப் படிக்கலாம் என்ற அளவுக்கு இடம் இருக்கிறது. அந்த வகையிலே படிக்க வேண்டுமானாலும் வாய்ப்பு இருக்கிறது. மூன்று மொழிகளுக்கும் இடம் கொடுத்திருக்கிறோம். ஆங்கிலம் படித்துக்கொள்ளலாம், ஹிந்தியைப்படித்துக்கொள்ளலாம், ஸான்ஸ்கிரீட் படித்துக்கொள்ளலாம், என்ற அளவிலே வாய்ப்புக்கள் தரப்பட்டிருக்கின்றன. ஏற்கனவே இருந்த முறையை ஒட்டி மேற்கொள்ளலாம் என்ற அளவுக்குத்தான் இந்த அரசு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

மதுரைப் பல்கலைக் கழக நிலைமையைப் பற்றி ஒரு கருத்தைத் பி.ப.
தெரிவித்தார்கள். சென்ற ஆண்டு 7 லட்சம் ரூபாய் நிதி வழங்கப்பட்டது. 5-00
இந்த ஆண்டு 6 லட்சம் ரூபாய்தான் நிதி வழங்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். சென்ற ஆண்டு 7 லட்சம் ரூபாய் என்று ஒதுக்கிய காரணம் அட்ஹாக் கிராண்டு என்ற வகையில்தான். என்ன செலவு ஏற்படும் என்று தெளிவு இல்லாத நிலையிலே அட்ஹாக் கிராண்டாக 7 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. இந்த ஆண்டில் 6 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தாலும் அதற்கு மேல் செலவானால் ரிவைஸ்டு எஸ்டிமேட்டில் இந்த அரசு தொகை ஒதுக்கத் தயாராக இருக்கிறது. மேலும் புகுமுக வகுப்பின் மூலம் அவர்களுக்கு வரக்கூடிய வருமானமும் அவர்களுக்கு வர இருக்கிறது. அதிலேயே செலவினங்கள் கட்டுபடியாகக் கூடும். அதற்கு மேலும் செலவாகும் நிலைமை ஏற்பட்டால் அதற்குக் கிராண்ட் வழங்க இந்த அரசு ஆயத்தமாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

புத்தக வெளியீட்டைப் பற்றிச் சொன்னார்கள். அரசாங்கமே ஒவ்வொரு பகுதியாகத் தமிழ் ஆங்கிலம் ஆகிய பாட புத்தகத்தைப் போடவேண்டுமென்ற முறையை மேற்கொண்டிருக்கிறது. பல வகுப்புகளுக்கும் அவ்வாறு பாடப் புத்தகத்தைப் போடுவதன் மூலம் வரக்கூடிய வருமானத்தை மதிய உணவுத் திட்டத்திற்குப் பயன்படுத்தலாம் என்ற நோக்கம் இருந்து வருகிறது.

கனம் உறுப்பினர்கள் கூறிய கருத்துக்களை அடிப்படையாகக்கொண்டு மதிய உணவுத் திட்டத்தில் இருக்கின்ற குறைபாடுகள் களையப்படும். மதிய உணவுத் திட்டத்தைப் பொறுத்த வரை அதைக் கவனிக்க வேண்டு மென்று ஆசிரியர்களைக் கட்டாயப்படுத்தக் கூடாது. ஆசிரியர் சமைக்க வேண்டுமென்றே, பரிமாற வேண்டுமென்றோ கட்டாயம் இருக்கக் கூடாது. தொண்டு செய்ய வேண்டுமென்ற மனப்பான்மையில் தாங்க ளாகவே முன்வருகிற ஆசிரியர்கள் அவற்றை கவனித்துக்கொள்ளலாம். அவர்களைக் கட்டாயப் படுத்துகிறார்கள் என்ற குற்றச்சாட்டுக்கு இடம் அளிக் கக் கூடாது. இந்த மதிய உணவுத் திட்டத்திற்காக இரண்டு கோடி ரூபாய் வரை அரசாங்கம் செலவு செய்கிறது. அரசாங்கம் 6 காசு கொடுக்கிறது; மக்களிடமிருந்து 2 காசு திரட்ட வேண்டும்; 2 காசை ஊராட்சி மன்ற ஒன்றிப்பு தரவேண்டும்.

'கேர்' புரோகிராம் மூலம் வருகிற உதவியைக் கொண்டு பரீட்சார்த்த மாக ஒரு திட்டம் பூந்தமல்லியில் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இடத்தை யும், வேலை செய்ய ஆட்களையும் தந்து பணிபுரிவதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்தித் தருவார்களேயானால், கட்டடத்தைக் கட்டி, பாத்திரங்களை வழங்கி, மூன்று வான்களைத் தந்து, நன்கொடைகளாகத் தந்து 46 கிரா மங்களில் இருக்கும் பள்ளிகளுக்கு அன்றாடம் தூய்மை செய்யப்பட்ட, நல்ல சத்துள்ள உணவை எடுத்துச் சென்று பரிமாற திட்டம் போட்டிருக் கிறார்கள். இந்தத் திட்டம் பூந்தமல்லி பிர்க்காவில் பரீட்சார்த்தமாக எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. இது வெற்றி பெறுமானால், 325 ஒன்றிப்புகளிலும் திட்டத்தை விரிவுபடுத்தும் அளவுக்கு உதவி தரு கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள்.

பெண் கல்வியைப் பற்றிக் கூறினார்கள். நான் பெண் கல்வியே வேண்டாம் என்று சொன்னதாகப் பத்திரிகையில் வந்தது என்று சொன் னார்கள். அவ்வாறு நான் பேசியதாகப் பத்திரிகையில் வந்தது என்று சொன்னதில் பேசிய இடம் ஒரு பெண்கள் பள்ளியில். அப்போது அந்தப் பள்ளியின் தலைமை ஆசிரியை இருந்தார்; பெண் ஆசிரியைகள் இருந் தார்கள். பெண் மாணவிகள் அத்தனை பேரும் என் எதிரில் இருந்தார் கள். அங்கே நான் அப்படிச் சொல்லியிருந்தால் என்னை வெளியே வர விட்டிருப்பார்களா? நான் வேண்டாம் என்று சொல்லவில்லை. அறி வுரை என்ற முறையிலே ஒன்றைச் சொன்னேன். ஒரு பெண் கல்லூரியில் எந்தப் பிரிவை எடுத்துக்கொள்ள வேண்டுமென்பதில், பாட்டனியா, மாத மாடிக்ஸா, கெமிஸ்ட்ரீயா, பிசிக்ஸா, ஹிஸ்ட்ரியா, ஜியாகிரபியா என்று எடுத்துக்கொள்வதில் எதை எப்படி எடுத்துக்கொள்ள வேண்டுமென்பதில் அறிவுரை என்ற முறையில் சொன்னேன். பி.எஸ்.ஸி. எடுத்துப் படிக்க வருகிற பெண்கள் அதிகமாக இருக்கிறார்கள். பி.எஸ்.ஸி. படித்துவிட்டு எதிர்காலத்திலே அந்தத் துறையிலே பணியாற்றக்கூடிய நிலை இருந்தால் அதை எடுத்துப் படிக்கலாம். குடும்ப வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டுமென்று விரும்புகிற பெண்கள் வரலாறு போன்றவற்றை எடுத்து பி.ஏ. படிக்கலாம். அவர்களுடைய படிப்பு நாட்டுக்குப் பயன்படாத முறை யில் பி.எஸ்.ஸி. படிப்பை மேற்கொண்டு லேபரேடரியைப் பயன்படுத்தி, கெமிகல்ஸ் எல்லாம் வீணாக்கி அது நாட்டுக்குப் பயன்படாமல் குடும்ப வாழ்க்கையை மேற்கொள்ள விரும்புகிறவர்கள் பி.ஏ. போன்ற வகையில் படிக்கலாம். அந்தத் துறையிலே பணியாற்ற விரும்புகிறவர்கள் பி.எஸ்.ஸி. எடுத்துப் படிக்கலாம். நிச்சயம் வேலைக்குப் போவதில்லை என்பவர்களைத் தவிர, கொஞ்சம் சந்தேகமாக இருக்கிறவர்கள்கூட பி.எஸ்.ஸி. படிக்கலாம் என்று அறிவுரை கூறும் வகையில்தான் சொன் னேனே தவிர, அவர்களுக்கு வேண்டவே வேண்டாம் என்று சொல்ல வில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சீருடையைப் பற்றிச் சொன்னார்கள். அது வற்புறுத்தப்பட்டு வரு கிற, ஆதரிக்கப்பட்டு வருகிற ஒன்று. கூடுமான வரை அதை நடை முறைக்குக் கொண்டுவரும் நோக்கத்தோடு திட்டம் போட்டுக்கொண்டிருக் கிறோம். மேலும் பல கருத்துக்களை உறுப்பினர்கள் சொல்லியிருக்கிறார் கள். அவற்றுக்கெல்லாம் ஒவ்வொன்றாகப் பதில் சொல்லுவது என்றால் நேரம் இடம் தராது.





வேறு எந்தத் துறையையும் விட இந்தத் துறை குழப்பங்கள்
நிறைந்த துறை; அதிகமான பிரிவுகள் இருக்கிற துறை; பல்வேறு
வகைகள், தரங்கள் இருக்கிற துறை; தனியார் பள்ளி, முனிசிபல் பள்ளி,
அரசாங்கப் பள்ளி, டிஸ்ட்ரிக்ட் போர்டு பள்ளி என்று பல பிரிவுகள்;
அவற்றிலே பணி புரிகின்ற ஆசிரியர்களுடைய நிலை; அவர்களுடைய
சம்பள விகிதத்திலே உள்ள வித்தியாசங்கள்; அடிப்படைச் சம்பளங்கள்;
ஓய்வு பெறும் வயது ஐம்பத்தெட்டா, அறுபத்தி ஒன்றா என்ற குழப்பங்
கள் இப்படி பல பிரச்சினைகள் இருக்கின்றன. இவைகளைப் பற்றியெல்லாம்
முடிவை அவசரப்பட்டுச் செய்துவிட்டால் பல இடுக்கண்கள், தொல்லைகள்,
ஏற்படும். ஓராண்டுக் காலத்தில் தீர்க்கக்கூடிய பிரச்சினைகள், இரண்டாண்டு
காலத்திலே தீர்க்கக்கூடிய பிரச்சினைகள், ஐந்தாண்டுக் காலத்திலே தீர்க்கக்
கூடிய பிரச்சினைகள் என்று பலவிதமாகப் பிரித்து அவை பற்றி ஆராய்ந்து
முடிவு எடுக்க வேண்டும். நான் ஏற்கனவே சொல்லியபடி கல்விப் பரிந்
துரைக் குழு ஒன்றை அமைத்து, அதிலே கல்வி வல்லுநர்களையும், சட்ட
மன்ற உறுப்பினர்களையும், மேலவை உறுப்பினர்களையும் இடம்பெறச்
செய்து, விவாதிக்கும்போது, பல பிரச்சினைகளை நேருக்கு நேராக விவா
திக்கும்போது தெளிவு பெறலாம் என்று கருதுகிறேன். எஸ்.எஸ்.எல்.ஸி.
படிப்போடு சிலரை நிறுத்தி, சிலரை எலிஜிபிலிடி ஃபார் காலேஜ் கோர்ஸ்
என்று ஆக்கலாமா என்பது பற்றியும் முடிவு எடுக்கலாம் என்ற கருத்தும்
இருக்கிறது. கடைசியாக நடக்கிற பரீட்சையில் 100 மார்க்குக்கு எவ்வளவு
வாங்கினான் என்பதை மட்டும் கணக்குப் பார்க்காமல் அந்த ஓராண்டுக்
காலத்திலே அவனுடைய நிலைமைக்கு 50 மார்க்கும், இறுதிப் பரீட்சைக்கு
50 மார்க்கும் என்று போட்டு—ஏதோ இறுதிப் பரீட்சையின்போது டைஃபா
யிடினால் பாதிக்கப்பட்ட காரணத்தால் சரியாகப் பரீட்சை எழுதாது நன்
றாகப் படிக்கிற மாணவன் 25 மார்க்குகளே பெறக்கூடிய நிலைமைகள்
ஏற்படுவதைத் தவிர்க்க—இரண்டையும் சேர்த்துக் கணிக்கலாமா என்ற
கருத்தும் இருந்து வருகிறது. இவற்றையெல்லாம் நாம் கூடிக் கலந்து
பேசி முடிவு செய்வதற்கான வகையில் பரிந்துரை ஆய்வுக் குழு பணி
யாற்ற வேண்டும். அந்த வகையில் இந்த மன்ற அங்கத்தினர்கள், கல்வி
வல்லுநர்களுடைய ஒத்துழைப்பு கிடைக்குமென்று நம்புகிறேன்.

இந்த மன்றத்தில் உறுப்பினர்கள் பலரும் எடுத்துக்கூறிய கருத்துக்
கள் அவ்வப்போது கவனிக்கப்பட்டு அதற்கான வழிமுறைகள் வகுக்கப்படும்.
அந்த வகையில் தமிழகத்தின் கல்வித் தரம் உயரவும், ஓங்கு புகழை
நிலைநாட்டவும், சிறந்த அறிவுடையவர்கள், மற்றும் உலகத்தார் மதிக்கும்
அளவுக்குக் கல்வி தரத்தை வளர்க்கவும், மன்றத்தின் முழு ஒத்துழைப்
பும், பொது மக்களின் முழு ஒத்துழைப்பும், கல்வி வல்லுநர்களின் முழு
ஒத்துழைப்பும் உறுதியாகத் தேவை.

இந்த மானியக் கோரிக்கைக்கு வெட்டுப் பிரேரணைகள் கொடுத்திருந்
தாலும், அவை இதைப் பற்றி விவாதிப்பதற்கு ஒரு வாய்ப்பாகத்தான் தரப்
பட்டனவே தவிர, நோக்கம், தெரிவித்த கருத்துக்கள் அத்தனையும்
இதற்கு மானியத்தைக் கூட்ட வேண்டுமென்ற முறையில் அமைந்திருந்
ததே தவிர, வெட்ட வேண்டுமென்ற நிலையில் இல்லாமையால்
வெட்ட வேண்டுமென்று கோராமல் வளர்ப்பதற்கு வாய்ப்பு ஏற்படுத்தி
தரும் வகையில் இந்த மானியக் கோரிக்கையை ஏற்றுக்கொள்ள
வேண்டும். அதில் பல்வேறு நிலைமைகள், குழப்பங்கள் இருப்பதால் ஏற்
படுகிற காலத் தாழ்வை நீக்கி, விரைவுபடுத்தவும், செம்மைப்படுத்தவும்,
தொடர்ந்து நடவடிக்கைகள் எடுக்கிறேன். டெக்ஸ்ட் புக்ஸ் பற்றி ஆராய்ந்து
நல்ல பல முடிவுகளை எடுக்கலாம் என்று கருதிக்கொண்டிருக்கிறேன்.
அது பற்றி முடிவுகள் எடுக்க அங்கத்தினர்களின் சீரிய ஆலோசனைகள்
பயன்படும் என்று கூறிக்கொண்டு விவாதத்தில் கலந்துகொண்டு கருத்
துரைகள் வழங்கிய அனைவருக்கும் எனது பாராட்டுதல்களையும் போற்றுதல்
களையும் தெரிவித்துக்கொண்டு இந்த மானியக் கோரிக்கையை ஏற்றுக்
கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

**திரு. ம. பொ. சிவஞானம் :** கல்வி அமைச்சர் அவர்களிடம் ஒரு விளக்கம் எதிர்பார்க்கிறேன். பயிற்சி மொழியைப் பொறுத்த வரையில் பல்கலைக் கழகங்களின் முடிவு அமைய வேண்டுமானால் அதற்குப் பல்கலைக் கழகங்களின் ஒத்துழைப்பு இல்லாமல் ஆட்சி ஒன்றும் செய்ய முடியாத நிலை இருக்கிறது. அரசாங்கக் கல்லூரிகளில்கூட பயிற்சி மொழியை மாற்ற பல்கலைக் கழகத்தின் அனுமதி தேவை. கல்வி அமைச்சர் அவர்கள் சொல்லக்கூடிய விளக்கம், சமாதானம், படிப்படியாகச் செல்வது எல்லாம் உண்மை என்று வைத்துக்கொண்டாலும்கூட அதற்குப் பல்கலைக் கழகங்கள் ஒத்துழைக்குமா என்று தெரிய வேண்டும். சில வாரங் களுக்கு முன்பு சென்னைப் பல்கலைக் கழக துணை வேந்தர் அவர்கள் பயிற்சி மொழி ஆங்கிலம்தான் என்றென்றும் இருக்க வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். செனட்டில் கூட அது பற்றிய தீர்மானங்கள் தோற் கடிக்கப்பட்டிருக்கின்றன. இது பற்றி விளக்கம் தேவை.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இப்போதுள்ள சட்ட திட்ட முறைப்படி பல்கலைக் கழகம் அனுமதி பெற்றுத்தான் நடத்தவேண்டிய நிலை இருக்கிறது. நாம சிபார்சு செய்ய வேண்டிய நிலைமையில்தான் இருக்கிறோம். அதுபற்றி முடிவுகள் எல்லாம் எடுத்து நடைமுறைக்குக் கொண்டுவர என்ன செய்யலாம் என்பது பற்றி கல்விப் பரிந்துரைக் குழுவில் வைத்து விவாதிப்பதின் மூலம் என்ன நடவடிக்கைகள் எடுக்க லாம் என்பது பற்றி, என்ன நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டால், இந்த நோக்கம் நிறைவேற வழிவகை ஏற்படும் என்று தெரிந்துகொண் டால் அதற்கேற்றபடி பல்கலைக் கழகச் சட்டத்தை திருத்த வேண்டிய ஏற்பாடு வரும்போது அதைத் திருத்த தக்க முடிவுகள் எடுத்துக் கொள்ளலாம்,

**திரு வி. கே. கோதண்டராமன்:** மாணவர்கள் ஸ்காலர்ஷிப் பெற வருட வருமானம் 1,500 ரூபாய் என்றிருப்பதை 2,000 ரூபாய் ஆக ஆக்கி யிருப்பதை வரவேற்கிறேன். நன்றி. இருந்தாலும் இன்றுள்ள சூழ் நிலையில் கீழ் மட்டத்தில் வேலை பார்க்கும்......

**மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர் :** பேச்சு பற்றித்தான் விளக் கம் தேவை என்றால் கேட்கலாம். அவர்கள் கருத்தைக் கூற இந்த சமயத்தைப் பயன்படுத்தக் கூடாது.

**திரு வி. கே. கோதண்டராமன் :** இன்று சாதாரணமாகத் தொழிற் சாலையில் வேலை செய்யக்கூடிய தொழிலாளிகூட சம்பளம், பஞ்சப் படி இவை இரண்டும் சேர்ந்து ரூ. 200 பெறுகிறான். ஆகவே இந்த 2,000 ரூபாய் என்பதைக் கணக்கெடுப்பது அடிப்படைச் சம்பளம் மட்டுமா அல்லது பஞ்சப் படியையும் சேர்த்தா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** வருமானம் என்றிருக்கிற காரணத்தால் பஞ்சப் படியும் சேர்த்துத்தான்.

**Dr. HABIBULLAH BAIG** : There are schools with Tamil medium, Urdu medium, etc. Students who pass the S.S.L.C. Examination through the Indian language medium will find it difficult to cope with the English medium when they enter the Pre-University Class. If the medium of instruction in the Pre-University Class is changed to Tamil, the Tamil medium students will find it difficult to cope with the English medium in the B.A. and B.Sc. classes. Hence the medium of instruction in these classes also should be changed to Tamil so that students may not feel any difficulty.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அந்த முயற்சிதான் மேற்கொள்ளப்படுகிற சென்ற ஆண்டு தமிழைப் பயிற்சி மொழியாகக் கொண்டு புகுமுக வகுப்பில் படித்தவர்களுக்கு வாய்ப்பு ஏற்படுத்தும்





முறையில் பி. ஏ.யில் ஒரு பிரிவு ஏற்படுத்த வேண்டுமென்றிருக்கிறது. எதை எதை புகுமுக வகுப்பில் தமிழ் மயமாக்குகிறோமோ அதை அடுத்த வருடம் உடனே பி.ஏ.யில் தமிழ் மயமாக்குகிறோம்.

வெட்டுத் தீர்மானங்கள் யாவும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டன.

**மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர் :** பேரவை முன் உள்ள கேள்வி :

" மானியக் கோரிக்கை எண் XIII—கல்வி என்ற தலைப்பின் கீழ் ரூ. 54,53,58,600-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது. பி. ப. 5 15

**மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர் :** இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவடைகின்றன. பேரவை மீண்டும் 3–7–1967 காலை 9 மணி அளவில் கூடும்.

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

D 1
Y211. 31 N67
N67-3-4

### 5. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. Statutory Rules and Orders.

218. Notification issued with Roc. No. 18357/66-F-2, dated the 20th March 1967, regarding the classification of Kadiyapatti Town Panchayat in Tiruchirappalli district as village panchayat, with effect from 1st April 1967. [*Laid on the table of the House under section* 179(4) *of the Madras Panchayats Act,* 1958 (*Madras Act XXXV of* 1958).]

### B. Reports, Notifications and other papers.

*56. The Madras District Municipalities (Amendment) Bill, 1967 (L.A. Bill No. 2 of 1967) as passed by the Legislative Assembly with annexure containing the amendments made by the Legislative Council.

64970

* Despatched to all Members on 30th June 1967.

**திரு. ம. பொ. சிவஞானம் :** கல்வி அமைச்சர் அவர்களிடம் ஒரு விளக்கம் எதிர்பார்க்கிறேன். பயிற்சி மொழியைப் பொறுத்த வரையில் பல்கலைக் கழகங்களின் முடிவு அமைய வேண்டுமானால் அதற்குப் பல்கலைக் கழகங்களின் ஒத்துழைப்பு இல்லாமல் ஆட்சி ஒன்றும் செய்ய முடியாத நிலை இருக்கிறது. அரசாங்கக் கல்லூரிகளில்கூட பயிற்சி மொழியை மாற்ற பல்கலைக் கழகத்தின் அனுமதி தேவை. கல்வி அமைச்சர் அவர்கள் சொல்லக்கூடிய விளக்கம், சமாதானம், படிப்படியாகச் செல்வது எல்லாம் உண்மை என்று வைத்துக்கொண்டாலும்கூட அதற்குப் பல்கலைக் கழகங்கள் ஒத்துழைக்குமா என்று தெரிய வேண்டும். சில வாரங்களுக்கு முன்பு சென்னைப் பல்கலைக் கழக துணை வேந்தர் அவர்கள் பயிற்சி மொழி ஆங்கிலம்தான் என்றென்றும் இருக்க வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். செனட்டில் கூட அது பற்றிய தீர்மானங்கள் தோற்கடிக்கப்பட்டிருக்கின்றன. இது பற்றி விளக்கம் தேவை.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இப்போதுள்ள சட்ட திட்ட முறைப்படி பல்கலைக் கழகம் அனுமதி பெற்றுத்தான் நடத்தவேண்டிய நிலை இருக்கிறது. நாம சிபார்சு செய்ய வேண்டிய நிலைமையில்தான் இருக்கிறோம். அதுபற்றி முடிவுகள் எல்லாம் எடுத்து நடைமுறைக்குக் கொண்டுவர என்ன செய்யலாம் என்பது பற்றி கல்விப் பரிந்துரைக் குழுவில் வைத்து விவாதிப்பதின் மூலம் என்ன நடவடிக்கைகள் எடுக்கலாம் என்பது பற்றி, என்ன நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டால், இந்த நோக்கம் நிறைவேற வழிவகை ஏற்படும் என்று தெரிந்துகொண்டால் அதற்கேற்றபடி பல்கலைக் கழகச் சட்டத்தை திருத்த வேண்டிய ஏற்பாடு வரும்போது அதைத் திருத்த தக்க முடிவுகள் எடுத்துக் கொள்ளலாம்,

**திரு வி. கே. கோதண்டராமன்:** மாணவர்கள் ஸ்காலர்ஷிப் பெற வருட வருமானம் 1,500 ரூபாய் என்றிருப்பதை 2,000 ரூபாய் ஆக ஆக்கியிருப்பதை வரவேற்கிறேன். நன்றி. இருந்தாலும் இன்றுள்ள சூழ்நிலையில் கீழ் மட்டத்தில் வேலை பார்க்கும்......

**மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர் :** பேச்சு பற்றித்தான் விளக்கம் தேவை என்றால் கேட்கலாம். அவர்கள் கருத்தைக் கூற இந்த சமயத்தைப் பயன்படுத்தக் கூடாது.

**திரு வி. கே. கோதண்டராமன் :** இன்று சாதாரணமாகத் தொழிற்சாலையில் வேலை செய்யக்கூடிய தொழிலாளிகூட சம்பளம், பஞ்சப் படி இவை இரண்டும் சேர்ந்து ரூ. 200 பெறுகிறான். ஆகவே இந்த 2,000 ரூபாய் என்பதைக் கணக்கெடுப்பது அடிப்படைச் சம்பளம் மட்டுமா அல்லது பஞ்சப் படியையும் சேர்த்தா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** வருமானம் என்றிருக்கிற காரணத்தால் பஞ்சப் படியும் சேர்த்துத்தான்.

DR. HABIBULLAH BAIG : There are schools with Tamil medium, Urdu medium, etc. Students who pass the S.S.L.C. Examination through the Indian language medium will find it difficult to cope with the English medium when they enter the Pre-University Class. If the medium of instruction in the Pre-University Class is changed to Tamil, the Tamil medium students will find it difficult to cope with the English medium in the B.A. and B.Sc. classes. Hence the medium of instruction in these classes also should be changed to Tamil so that students may not feel any difficulty.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அந்த முயற்சிதான் மேற்கொள்ளப்படுகிற சென்ற ஆண்டு தமிழைப் பயிற்சி மொழியாகக் கொண்டு புகுமுக வகுப்பில் படித்தவர்களுக்கு வாய்ப்பு ஏற்படுத்தும்



முறையில் பி. ஏ.யில் ஒரு பிரிவு ஏற்படுத்த வேண்டுமென்றிருக்கிறது. எதை எதை புகுமுக வகுப்பில் தமிழ் மயமாக்குகிறோமோ அதை அடுத்த வருடம் உடனே பி.ஏ.யில் தமிழ் மயமாக்குகிறோம்.

வெட்டுத் தீர்மானங்கள் யாவும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டன.

**மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர் :** பேரவை முன் உள்ள கேள்வி :

"மானியக் கோரிக்கை எண் XIII—கல்வி என்ற தலைப்பின் கீழ் ரூ. 54,53,58,600-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது. பி. ப. 5 15

**மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர் :** இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவடைகின்றன. பேரவை மீண்டும் 3–7–1967 காலை 9 மணி அளவில் கூடும்.

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

D 1
V211. 31 N67
N67-3-4

## 5. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. Statutory Rules and Orders.

218. Notification issued with Roc. No. 18357/66-F-2, dated the 20th March 1967, regarding the classification of Kadiyapatti Town Panchayat in Tiruchirappalli district as village panchayat, with effect from 1st April 1967. [*Laid on the table of the House under section* 179(4) *of the Madras Panchayats Act*, 1958 (*Madras Act XXXV of* 1958).]

### B. Reports, Notifications and other papers.

*56. The Madras District Municipalities (Amendment) Bill, 1967 (L.A. Bill No. 2 of 1967) as passed by the Legislative Assembly with annexure containing the amendments made by the Legislative Council.

64970

* Despatched to all Members on 30th June 1967.